



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறைவாரியான அறிவிப்புகள்

(29.05.2018 முதல் 09.07.2018 வரை)



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறை வாரியான அறிவிப்புகள் (29.05.2018 முதல் 09.07.2018 வரை)

சிறப்பு வெளியீடு எண் 23

# தமிழரசு

இலவச வெளியீடு

ஆகஸ்ட் 2018

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மானியக்கோரிக்கைகள் மீதான விவாதத்தின்போது அறிவிக்கப்பட்ட துறை வாரியான அறிவிப்புகள் (29.05.2018 முதல் 09.07.2018 வரை)


| வ. எண். | மானியக் கோரிக்கை எண் | துறையின் பெயர் | பக்க எண் |
|---|---|---|---|
| | | **உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை** | |
| 1. | 22 | காவல் | |
| 2. | 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 1 |
| 3. | 21 | **நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை** | 21 |
| | | **பொதுப்பணித்துறை** | |
| 4. | 39 | கட்டடங்கள் | |
| 5. | 40 | பாசனம் | 30 |
| 6. | 38 | **பொதுத்துறை** | 40 |
| 7. | 16 | **நிதித்துறை** | 45 |
| 8. | 26 | **வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை** | 55 |
| | | **சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை** | |
| 9. | 54 | வனம் | 69 |
| 10. | 43 | **பள்ளிக் கல்வித்துறை** | 81 |
| | | **கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை** | |
| 11. | 12 | கூட்டுறவு | 92 |
| 12. | 14 | **எரிசக்தித்துறை** | 102 |
| | | **உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை** | |
| 13. | 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை | 108 |

| வ. எண். | மானியக் கோரிக்கை எண் | துறையின் பெயர் | பக்க எண் |
|---|---|---|---|
| 14. | 34 | **நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை** | 114 |
| 15. | 42 | **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை** | 135 |
| | | **கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை** | |
| 16. | 7 | மீன்வளம் | 153 |
| 17. | 35 | **பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை** | 171 |
| 18. | 33 | **சட்டத்துறை** | 178 |
| | | **உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை** | |
| 19. | 3 | நீதி நிருவாகம் | |
| 20. | 24 | சிறைச்சாலைகள் | 179 |
| 21. | 20 | **உயர்கல்வித்துறை** | 186 |
| 22. | 45 | **சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை** | 202 |
| | | **சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை** | |
| 23. | 52 | மாற்றுத்திறனாளிகள் நலத்துறை | 210 |
| 24. | | **தொழில்துறை** | |
| | 27 | சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் | 222 |
| | | **சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை** | |
| 25. | 15 | சுற்றுச்சூழல் | 228 |
| | | **கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை** | |
| 26. | 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 242 |
| | | **கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த்துறை** | |
| 27. | 17 | கைத்தறி மற்றும் துணிநூல் | 254 |

| வ. எண். | மானியக் கோரிக்கை எண் | துறையின் பெயர் | பக்க எண் |
|---|---|---|---|
| | | **கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை** | |
| 28. | 6 | கால்நடை பராமரிப்பு | 263 |
| 29. | 19 | **மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை** | 273 |
| 30. | 5 | **வேளாண்மைத்துறை** | 334 |
| | | **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை** | |
| 31. | 28 | செய்தி மற்றும் விளம்பரம் | 355 |
| 32. | 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு | 361 |
| | | **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை** | |
| 33. | 41 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | |
| 34. | 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 372 |
| | | **சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை** | |
| 35. | 29 | சுற்றுலா | 390 |
| | | **வணிக வரி மற்றும் பதிவுத்துறை** | |
| 36. | 10 | வணிக வரிகள் | |
| 37. | 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு | 394 |
| | | **கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை** | |
| 38. | 8 | பால்வளம் | 401 |
| | | **ஊரகத் தொழில் துறை** | |
| 39. | 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | 413 |
| 40. | 32 | **தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை** | 418 |

| வ. எண். | மானியக் கோரிக்கை எண் | துறையின் பெயர் | பக்க எண் |
|---|---|---|---|
| 41. | 48 | **போக்குவரத்துத் துறை** | 429 |
| 42. | 25 | **உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை**<br>இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம் | 450 |
| 43. | 31 | **தகவல் தொழில்நுட்பவியல் துறை** | 462 |
| 44. | 4 | **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை** | 468 |
| 45. | 46 | **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை**<br>தமிழ் வளர்ச்சி | 477 |
| 46. | 29 | **சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை**<br>கலை மற்றும் பண்பாடு அருங்காட்சியகங்கள் தொல்லியல் | 499 |
| 47. | 18 | **ஊரகத் தொழில் துறை**<br>பட்டுவளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள் | 518 |
| 48. | 18 | **கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை**<br>கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 524 |
| 49. | 47 | **சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை**<br>இந்து சமய அறநிலையத்துறை | 531 |
| 50. | 9 | **பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை** | 537 |
| 51. | 49 | **இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை** | 547 |


❖ ❖ ❖

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## 22. காவல்துறை மற்றும்

## 23. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

### மானியக் கோரிக்கை எண் 22 & 23

## காவல்துறை

1. **மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 30 வயதுக்கு மேற்பட்ட காவல் ஆளிநர்களுக்கு முழு உடல் பரிசோதனை, ஓய்வு பெற்ற காவல் அதிகாரிகளுக்கான நலவாரியம் ஆகிய காவலர் நலன் காக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.**

**(Welfare of Police Personnel)**

1. 30 வயதிற்கு மேற்பட்ட காவல் ஆளிநர்களுக்கு முழு உடல் பரிசோதனை இலவசமாக மேற்கொள்ளப்படும்.
2. ஓய்வுபெற்ற காவல் அதிகாரிகளுக்கான நலவாரியம் ஒன்று உருவாக்கப்படும்.

2. **மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல் துறையில் புதிய பதவிகள் 13.51 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

**(Creation of new posts in Police Department at a cost of Rs.13.51 Crore)**

3. 44.71 இலட்சம் ரூபாய் செலவில், காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் காவல் கண்காணிப்பாளர் (அலுவலக கணிணிமயமாக்கல்) பதவி ஒன்று புதிதாக தோற்றுவிக்கப்படும்.

4. 12.02 கோடி ரூபாய் செலவில், உயர்நீதி மன்ற மதுரைக் கிளைக்கு புதியதாக 3 கூடுதல் ஆயுதப்படை பிரிவுகள் உருவாக்கப்படும்.

5. 1.04 கோடி ரூபாய் செலவில், உயர்நீதி மன்ற மதுரைக் கிளைக்கு புதியதாக உருவாக்கப்படவுள்ள 3 கூடுதல் ஆயுதப்படை பிரிவுகளுக்கு அமைச்சுப் பணியாளர்கள் பதவி உருவாக்கப்படும்.

**3. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், 1,397 புதிய காவல் வாகனங்கள் 119.73 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும்.**

**(Purchase of 1,397 Police Vehicles at a cost of Rs.119.73 Crore)**

6. 2.20 கோடி ரூபாய் செலவில், 10 கலவர தடுப்பு வஜ்ரா வாகனங்கள் காவல் துறையின் சிறப்பு பயன்பாட்டிற்காக வாங்கப்படும்.

7. 1.76 கோடி ரூபாய் செலவில், 8 கலவர தடுப்பு வஜ்ரா வாகனங்கள் காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் காவல் துறையின் சிறப்பு பயன்பாட்டிற்காக வாங்கப்படும்.

8. 6.50 கோடி ரூபாய் செலவில், 10 கலவர தடுப்பு வருண் வாகனங்கள் காவல் துறையின் சிறப்பு பயன்பாட்டிற்காக வாங்கப்படும்.

9. 3.25 கோடி ரூபாய் செலவில், 5 கலவர தடுப்பு வருண் வாகனங்கள் காவல் துறை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் காவல் துறையின் சிறப்பு பயன்பாட்டிற்காக வாங்கப்படும்.

10. 100 கோடி ரூபாய் மதிப்பில், கழிவு செய்யப்பட்ட 2,601 எண்ணிக்கையிலான பலவகை வாகனங்களுக்கு பதிலாக 1,340 புதிய வாகனங்கள் வாங்கப்படும். (ஈப்பு ஊர்தி – 274, பேருந்து – 13, சிறிய பேருந்து – 61, வேன் – 101, ஆம்புலன்ஸ் – 5, இரு சக்கர வாகனம் – 838, லாரி – 35, தண்ணீர் லாரி – 1 (6,000 லிட்டர்), தண்ணீர் லாரி – 1 (9,000 லிட்டர்), கைதி பாதுகாவல் வேன் – 1, மீட்பு ஊர்தி – 10).

11. 6.02 கோடி ரூபாய் செலவில், ஆறு காவல் ஆணையரகங்கள், சென்னை நகரத்திலுள்ள நான்கு சட்டம் மற்றும் ஒழுங்கு மண்டலங்கள், இரண்டு போக்குவரத்து மண்டலங்கள் ஆகியவற்றின் உபயோகத்திற்காக 24 நடமாடும் கழிப்பறை வாகனங்கள் வாங்கப்படும்.

**4. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல் கண்காணிப்பாளர், கடலோர பாதுகாப்பு பிரிவின் தலைமையிடம் நாகப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு மாற்றப்படும்.**

### (Change of Headquarters)

12. கடலோர பாதுகாப்பு பிரிவின் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் தலைமையிடம் நாகப்பட்டினத்திலிருந்து சென்னைக்கு மாற்றப்படும்.

**5. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாநில குற்ற ஆவணக் காப்பக காவல் துறை தலைவர் பதவி காவல்துறை தலைவர் (பொது) என மறு பெயராக்கம் செய்யப்படும்.**

### (Change of Nomenclature)

13. சென்னை மாநில குற்ற ஆவணக்காப்பகத்தில் உள்ள காவல் துறை தலைவர் பதவியை, காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்திற்கு மாற்றி காவல்துறை தலைவர் (பொது) என மறு பெயராக்கம் செய்யப்படும்.

**6. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, திருப்பூர் மாநகரம் திருமுருகன் பூண்டி, சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் ஆகிய 3 இடங்களில் புதிய காவல் நிலையங்களும் மற்றும் வாழப்பாடியில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையமும் 15.79 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

**(Formation of Four New Police Stations at a cost of Rs.15.79 Crore)**

14. 5.73 கோடி ரூபாய் செலவில், உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும்.

15. 3.35 கோடி ரூபாய் செலவில், சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும்.

16. 5.48 கோடி ரூபாய் செலவில், திருப்பூர் மாநகரம், அனுப்பர்பாளையம் காவல் நிலையத்தைப் பிரித்து திருமுருகன் பூண்டியில் புதிய காவல் நிலையம் உருவாக்கப்படும்.

17. 1.23 கோடி ரூபாய் செலவில், சேலம் மாவட்டம் வாழப்பாடியில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையம் உருவாக்கப்படும்.

**7. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல் வாத்தியக்குழுக்கள் 3.31 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

**(Creation of Police Band Party at a cost of Rs.3.31 Crore)**

18. 3.31 கோடி ரூபாய் செலவில், அனைத்து மாவட்ட மற்றும் சிறப்பு படைப்பிரிவுகளில் காவல் வாத்தியக் குழுக்கள் உருவாக்கப்படும் (30 மாவட்டங்கள், 14 சிறப்பு படைப்பிரிவுகள் மற்றும் 1 மாநகரம்).

**8. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல்துறைக்கு ரெமிங்டன் கன், சப் மெஷின் கன் போன்ற 19 வகை சிறப்பு படைக்கலன்கள் 4.20 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும்.**

**(Purchase of various Special Weaponry at a cost of Rs.4.20 Crore)**

19. 4.20 கோடி ரூபாய் செலவில், காவலர்களின் பயிற்சிக்காக ரெமிங்டன் கன், அன்டர் பேரல் கிரினேடு லான்ஞ்சர், மல்டி செல் லாஞ்சர், கேஸ் கன், சப் மெஷின் கன் போன்ற 19 வகையான சிறப்பு படைக்கலன்கள் வாங்கப்படும்.

**9. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, திருப்பூர் மாநகரம் திருமுருகன் பூண்டி, சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் ஆகிய 3 இடங்களில் புதிய காவல் நிலைய கட்டடங்கள், வாழப்பாடியில் அனைத்து மகளிர் காவல் நிலைய கட்டடம் மற்றும் 3 காவல் துணை கண்காணிப்பாளர்களுக்கு முகாம்**

**அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் 38.34 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.**

**(Construction of Police Buildings at a cost of Rs.38.34 Crore)**

20. 2.67 கோடி ரூபாய் செலவில், தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர், நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் மற்றும் கடலூர் மாவட்டத்திலுள்ள நெய்வேலி ஆகிய 3 காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கான முகாம் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டப்படும்.

21. 89 இலட்சம் ரூபாய் செலவில், சேலம் மாவட்டம் வாழப்பாடியில் புதியதாக அமைக்கப்படவுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கான கட்டடம் கட்டப்படும்.

22. 31.44 கோடி ரூபாய் செலவில், ஆவடியிலுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 13ஆம் அணிக்கு (தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை) நிருவாக அலுவலக கட்டடம், பாளையங்கள், ஆயுத வைப்பறை, மேற்கூறையுடன் கூடிய வாகனம் நிறுத்துமிடம் மற்றும் பணிமனை ஆகியவை கட்டப்படும்.

23. 91.61 இலட்சம் ரூபாய் செலவில், சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் புதியதாக அமைக்கப்படவுள்ள காவல் நிலையத்திற்கான கட்டடம் கட்டப்படும்.

24. 1.28 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு உயர் காவல் பயிற்சியகத்திற்கு புதிய கோட்டைச்சுவர் கட்டப்படும்.

25. 1 கோடி ரூபாய் செலவில், திருப்பூர் மாநகரம், திருமுருகன் பூண்டியில் புதியதாக அமைக்கப்படவுள்ள காவல் நிலையத்திற்கான கட்டடம் கட்டப்படும்.

26. 13.67 இலட்சம் ரூபாய் செலவில், நாகப்பட்டினம் மாவட்டம், ஆயுதப்படை காவலர் குடியிருப்பு வளாகத்தில் புதிய பாதாள கழிவுநீர் வடிகால் குழாய் அமைக்கப்படும்.

**10. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல் ஆளிநர்களின் பாதுகாப்பு, இரகசிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளை சிறப்பாக மேற்கொள்ள 135 நவீன சாதனங்கள் 1.96 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும்.**

(Purchase of 135 Security Equipments at a cost of Rs.1.96 Crore)

**27.** 50 இலட்சம் ரூபாய் செலவில், நேரியல் அல்லாத சந்தி கண்டுபிடிக்கும் 5 கருவிகள் (Non Linear Junction Detectors) வாங்கப்படும்.

**28.** 45 இலட்சம் ரூபாய் செலவில், வெடிகுண்டுகளை கண்டுபிடிக்கும் 3 கருவிகள் (Explosive Vapour Detectors) வாங்கப்படும்.

**29.** 12 இலட்சம் ரூபாய் செலவில், ஆழமாக புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை கண்டுபிடிக்கும் 4 கருவிகள் (Deep Search Metal Detectors) வாங்கப்படும்.

**30.** 34 இலட்சம் ரூபாய் செலவில், ஊடுகதிர் மூலம் கண்டறியும் 2 கருவிகள் (X-Ray Baggage Scanners) வாங்கப்படும்.

**31.** 1.50 இலட்சம் ரூபாய் செலவில், கையடக்க வாயிற்படி உலோக கண்டுபிடிப்பிற்கான 3 கருவிகள் (Portable Door Frame Metal Detector) வாங்கப்படும்.

**32.** 25 இலட்சம் ரூபாய் செலவில், வாயிற்படி உலோக கண்டுபிடிப்பிற்கான 5 கருவிகள் (Multi Zone Door Frame Metal Detector) வாங்கப்படும்.

**33.** 45 ஆயிரம் ரூபாய் செலவில், 5 நீட்டிப்பு கண்ணாடிகள் (Extention Search Mirror) வாங்கப்படும்.

**34.** 3.15 இலட்சம் ரூபாய் செலவில், 35 புரோடர் கருவிகள் (Prodder) வாங்கப்படும்.

**35.** 98 ஆயிரம் ரூபாய் செலவில், வாகனத்தின் கீழ் தேடும் 14 கண்ணாடிகள் (Under Vehicle Search Mirror) வாங்கப்படும்.

**36.** 4.95 இலட்சம் ரூபாய் செலவில், 55 தேடுதல் பணிக்கான விளக்குகள் (Search Light) வாங்கப்படும்.

**37.** 3 இலட்சம் ரூபாய் செலவில், 2 பகல் நேர கண்காணிப்பு தொலைநோக்கு கருவிகள் (Day Vision Binocular) வாங்கப்படும்.

**38.** 15.60 இலட்சம் ரூபாய் செலவில், 2 இரவு நேர கண்காணிப்பு தொலைநோக்கு கருவிகள் (Night Vision Binocular) வாங்கப்படும்.

**11. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், அதிவிரைவு படைக்கான, எண்ம முறையிலான முழுத் தகவல் தொடர்பு சாதனங்கள், கையடக்க வாக்கி டாக்கி, மற்றும் தடய அறிவியல் ஆய்வக உபகரணங்கள் 31.63 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும்.**

(Purchase of Communication Equipments for Striking Force at a cost of Rs.31.63 Crore)

**39.** 5.05 கோடி ரூபாய் செலவில், பணித்திறன் மேம்பாட்டிற்காக 250 காவல் நிலையங்களுக்கென அடிப்படைச் சாதனங்கள் (Field Policing Package) வாங்கப்படும்.

**40.** 12.20 கோடி ரூபாய் செலவில், 9 சென்னை மாநகர காவல் படை, 6 மற்ற மாநகர காவல் படை, 31 மாவட்ட காவல் படை மற்றும் 9 தமிழ்நாடு சிறப்பு காவல் படை ஆகமொத்தம் 55 இடங்களில் உள்ள அதிவிரைவு படைக்கு 14 வகையான சாதனங்கள் வாங்கப்படும்.

**41.** 4.07 கோடி ரூபாய் செலவில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் எண்ம முறையிலான முழு தகவல் தொடர்பு சாதனங்கள் நிறுவப்படும்.

42. 4.08 கோடி ரூபாய் செலவில், திருவள்ளூர் மாவட்டத்தில் எண்ம முறையிலான முழு தகவல் தொடர்பு சாதனங்கள் நிறுவப்படும்.

43. 4.37 கோடி ரூபாய் செலவில், மதுரை மாவட்டத்தில் எண்ம முறையிலான முழு தகவல் தொடர்பு சாதனங்கள் நிறுவப்படும்.

44. 55 இலட்சம் ரூபாய் செலவில், 100 எண்ம முறையிலான 800 மெகா ஹெர்ட்ஸ் கையடக்க (Walkie-Talkie) சாதனங்கள் வாங்கப்படும்.

45. 15 இலட்சம் ரூபாய் செலவில், 25 எண்ம முறையிலான 800 மெகா ஹெர்ட்ஸ் மொபைல் சாதனங்கள் வாங்கப்படும்.

46. 12 இலட்சம் ரூபாய் செலவில், 15 எண்ம முறையிலான 800 மெகா ஹெர்ட்ஸ் கையடக்க மறுகூட்டல் பாகங்கள் வாங்கப்படும்.

47. 24 இலட்சம் ரூபாய் செலவில், 3 எண்ம முறையிலான 800 மெகா ஹெர்ட்ஸ் மறுகூட்டல் பாகங்கள் வாங்கப்படும்.

48. 80 இலட்சம் ரூபாய் செலவில், தமிழ்நாடு காவல் அகாடமிக்கு அனைத்து வகையான தடய அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வாங்கப்படும்.

**12. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கலவரத் தடுப்பு முன்னெச்சரிக்கை மென்பொருள் திட்டம் 1.32 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

(Creation of Predictive Engine for Crowd Formation and movement at a cost of Rs.1.32 Crore)

49. பொது மக்கள் அதிகமாக கூடும் இடங்களில், கலவரங்களைத் தடுக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நுண்ணறிவுப் பிரிவு மூலம் கூட்டம் கூடுவதை அறிந்து, அதனை கண்காணிக்கும் விதமாக மென்பொருள் திட்டம் ஒன்று, 76 இலட்சம் ரூபாய் செலவில், சென்னையில் உள்ள இந்திய தகவல் தொழில் நுட்ப கழகம் மூலம் உருவாக்கப்படும். இத்தொகை முதல் வருடத்திற்கு தொடரா செலவினமாக (Non recurring expenditure வழங்கப்படும். இரண்டாம் வருடம் முதல், வருடந்தோறும் 56 இலட்சம் ரூபாய் தொடர் செலவினமாக (Recurring expenditure வழங்கப்படும்.

**13. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காவல் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்கு செய்வதற்கான உபகரணங்கள் 3 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும்.**

(Purchase of Movable Barricades for Traffic Regulation at a cost of Rs.3 Crore)

50. 3 கோடி ரூபாய் செலவில், சட்டம் ஒழுங்கு மற்றும் போக்குவரத்து நெரிசலை ஒழுங்குபடுத்த வேண்டி 2,000 நகரும் தடுப்புகள் வாங்கப்பட்டு, சென்னை மாநகரம் உட்பட அனைத்து நகரங்கள் மற்றும் மாவட்டங்களுக்கும் காவல்துறையின் பயன்பாட்டிற்காக வழங்கப்படும்.

**14. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கேமராவுடன் கூடிய உட்சுற்று தொலைக்காட்சி சாதனங்கள் மற்றும் மொபைல் உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்கள் 21.27 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும்.**

(Purchase of Surveillance Equipments at a cost of Rs.21.27 Crore)

51. 14.25 கோடி ரூபாய் செலவில், காவல் நிலையங்களின் செயல்பாட்டைக் கண்காணிப்பதற்காக 475 காவல் நிலையங்களுக்கு, படிமுறையில் இணையதள முறைமை கேமராவுடன் கூடிய உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்கள் வாங்கப்படும்.

52. 3.15 கோடி ரூபாய் செலவில், காவல் நிலையங்களின் செயல்பாட்டைக் கண்காணிப்பதற்காக 105 காவல் நிலையங்களுக்கு, இணையதள முறைமை கேமராவுடன் கூடிய உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்கள் வாங்கப்படும்.

53. ரூபாய் 3.87 கோடி செலவில், புல காவலிற்கான 129 மொபைல் உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்கள் (Mobile CCTV System for Field Policing) வாங்கப்படும்.

## தடய அறிவியல் துறை

**15. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தடய அறிவியல் துறையில் சிறந்து விளங்கும் 2 அறிவியல் அறிஞர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் செலவில் "தமிழ்நாடு முதலமைச்சரின் தடய அறிவியல் துறையில் சிறந்தோருக்கான விருது" இந்தாண்டு முதல் வழங்கப்படும்.**

**(Award of Chief Minister's Medal for Excellence in Forensic Science)**

**54.** பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி, ஒவ்வொரு வருடமும், தடய அறிவியல் துறையில் சிறந்து விளங்கும் இரண்டு அறிவியல் அறிஞர்களுக்கு **30,000** ஆயிரம் ரூபாய் செலவில் "தமிழ்நாடு முதலமைச்சரின் தடய அறிவியல் துறையில் சிறந்தோருக்கான விருது" இந்தாண்டு முதல் வழங்கப்படும்.

**16. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தடய அறிவியல் துறைக்கு வாயு இயல்பை அறியும் கருவி, அகச்சிவப்பு மற்றும் புறஊதா புகைப்பட கருவி, எளிய நுண்ணோக்கிகள், மாற்று ஒளி ஊற்றுகள் போன்ற புதிய உபகரணங்கள் 8.31 கோடி ரூபாய் செலவில் வாங்கப்படும்.**

(Purchase of various new equipments for Forensic Science Department at a cost of Rs.8.31 Crore)

**55. 4.50** இலட்சம் ரூபாய் செலவில், **9** வாயு இயல்பை அறியும் கருவிகள் வாங்கப்படும்.

56. 34 இலட்சம் ரூபாய் செலவில், 34 அகச்சிவப்பு மற்றும் புறஊதா புகைப்பட கருவிகள் வாங்கப்படும்.

57. 17 இலட்சம் ரூபாய் செலவில், 34 இலக்க முறை சான்றுகள் சேகரிக்கும் பெட்டிகள் வாங்கப்படும்.

58. 8.50 இலட்சம் ரூபாய் செலவில், 34 மைனஸ் நான்கு டிகிரி செல்ஷியஸ் குளிரூட்டும் பெட்டிகள் வாங்கப்படும்.

59. 22.50 இலட்சம் ரூபாய் செலவில், துப்பாக்கி குண்டு செல்லும் பாதையை கண்டறியும் மூன்று லேசர் சாதனங்கள் வாங்கப்படும்.

60. 34 இலட்சம் ரூபாய் செலவில், 34 எளிய நுண்ணோக்கிகள் வாங்கப்படும்.

61. 3.40 இலட்சம் ரூபாய் செலவில், 34 கண்ணாடி வில்லைகள் வாங்கப்படும்.

62. 1.7 கோடி ரூபாய் செலவில், 34 அகச்சிவப்பு புறஊதா விளக்குகள் வாங்கப்படும்.

63. 13.60 இலட்சம் ரூபாய் செலவில், 34 தடயவியல் ஆய்வு பணிக் கருவி பெட்டிகள் வாங்கப்படும்.

64. 4.50 இலட்சம் ரூபாய் செலவில், 9 மாற்று ஒளி ஊற்றுகள் வாங்கப்படும்.

65. 36 இலட்சம் ரூபாய் செலவில், 3 புற ஊதா அகச்சிவப்பு வருடி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு வாங்கப்படும்.

66. 40 இலட்சம் ரூபாய் செலவில், குற்ற நிகழ்விட வருடி ஒன்று வாங்கப்படும்.

67. 60 இலட்சம் ரூபாய் செலவில், இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு குற்ற நிகழ்விடம் பார்வையிடும் 3 ஊர்திகள் வாங்கப்படும்.

68. 90 இலட்சம் ரூபாய் செலவில், ஒப்புமை நுண்ணோக்கி ஒன்று வாங்கப்படும்.

69. 77 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தின் 5 பிரிவுகள் மற்றும் 9 வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு 14 மென்படல வண்ணப்படிவுப் பிரிகை கருவி பெட்டிகள் வாங்கப்படும்.

70. 12 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு 3 மது பகுப்பாய்வு கருவிகள் வாங்கப்படும்.

71. 45 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை தடய அறிவியல் துறைக்கு நுண்நிறமாலை கருவி ஒன்று வாங்கப்படும்.

72. 70 இலட்சம் ரூபாய் செலவில், மதுரை மற்றும் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களுக்கு எச்பிஎல்சி கருவி வாங்கப்படும்.

73. 50 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை தடய அறிவியல் துறைக்கு நீர்ம அழுத்த பளு மின்தூக்கி ஒன்று வாங்கப்படும்.

74. 21.11 இலட்சம் ரூபாய் செலவில், விரல் ரேகை பதிவுக்கூட மேம்பாட்டுக்காக 43 பிளாட் படுக்கை ஸ்கேனர்கள் வாங்கப்படும்.

75. 18.24 இலட்சம் ரூபாய் செலவில், விரல் ரேகை பதிவுக்கூட மேம்பாட்டுக்காக 43 எண்ணியியல் படக்கருவிகள் வாங்கப்படும்.

## தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை

**17. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கட்டட பராமரிப்புப் பணிக்காக 8 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கப்படும்.**

(Allocation of additional funds for maintenance of Fire & Rescue Services Department)

76. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கட்டடப் பராமரிப்புப் பணிக்கு சிறப்பு நேர்வாக ஒருமுறை 8 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**18. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அமைச்சுப் பணியாளர்களுக்கும் காவலர் அங்காடி வசதிகள் விரிவுபடுத்தப்படும்.**

(Extension of Police Canteen facilities to the Ministerial Staff of Fire & Rescue Services Department)

77. காவல்துறையில் உள்ளதைப் போன்று காவலர் அங்காடி வசதி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அமைச்சுப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

**19. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்கு நீள்பணி சிறப்பூதியம் திருத்தி அமைக்கப்படும்.**

(Revision of Long Service Special Pay to the personnel working in Fire & Rescue Services Department)

78. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், 10 வருடம், 15 வருடம் மற்றும் 20 வருடம் எவ்வித தண்டனையும் இன்றி பணியாற்றும் பணியாளர்களுக்கு ரூபாய் 5, 8 மற்றும் 10 என வழங்கப்பட்டு வரும் நீள்பணி சிறப்பூதியம் முறையே ரூபாய் 100, 160 மற்றும் 200 என உயர்த்தி வழங்கப்படும். இதன் தொடர் செலவினம் 42 இலட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டத்தின் மூலம் 2,155 பணியாளர்கள் பயனடைவர்.

**20. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், காஞ்சிபுரம் மாவட்டம் மகேந்திரா வேர்ல்டு சிட்டி, திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறை, சேலம் மாவட்டம் கருமந்துரை மற்றும் நங்கவள்ளி மற்றும் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆகிய இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் 6.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

(Formation of new Fire & Rescue Services Stations)

79. காஞ்சிபுரம் மாவட்டம், மகேந்திரா வேர்ல்டு சிட்டி நிறுவனத்தின் வளாகத்தில் ஒருங்கிணைந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் 1.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

80. சேலம் மாவட்டம், கருமந்துறையில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் 1.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

81. திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறையில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் 1.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

82. மதுரை மீனாட்சியம்மன் கோவில் அருகில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் 1.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

83. சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், நங்கவள்ளியில் ஒரூர்தி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் 1.25 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**21. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி மற்றும் தல்லாகுளம், திருவாரூர் மாவட்டம் திருவாரூர் ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கும் மற்றும் சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், நங்கவள்ளியில் புதியதாக அமைக்கப்படவுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் ஆக மொத்தம் 7.39 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

(Construction of buildings for the Fire & Rescue Services Stations)

84. மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் 1.25 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

85. திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் 1.80 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

86. மதுரை மாவட்டம், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் தல்லாகுளம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் 3.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

87. சேலம் மாவட்டம், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், நங்கவள்ளியில் புதியதாக அமைக்கப்படவுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதியகட்டடம் 123.70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

**22. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நாகப்பட்டினம் மாவட்டம் தலை ஞாயிறு மற்றும் தரங்கம்பாடி ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடம், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் 7.26 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.**

(Construction of buildings and quarters for the officers, personnel of Fire & Rescue Services Department)

88. நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதியகட்டடம், துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் 3.63 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

89. நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதியகட்டடம், துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் 3.63 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**23. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரை மாவட்டத்தில் தென்மண்டல பயிற்சிக்கழகம் அமைப்பதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்திற்கு 53.19 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.**

(Construction of compound wall to the land allocated to Fire & Rescue Services Department to establish Regional Training Centre for Southern Region, Madurai)

90. மதுரை மாவட்டத்தில் தென்மண்டல பயிற்சிக் கழகம் அமைப்பதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்திற்கு முதல்கட்டமாக 53.19 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

# நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

### மானியக் கோரிக்கை எண் 21

**1. புறவழிச்சாலைகள் அமைத்தல்**

Formation of Bypasses

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாநகரங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, கடலூர் மாவட்டம் திட்டக்குடி, பெரம்பலூர் நகரம், நாமக்கல் மாவட்டம் இராசிபுரம், நீலகிரி மாவட்டம் உதகை மற்றும் குன்னூர், கோயம்புத்தூர் மாவட்டம் காரமடை, தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம், விருதுநகரில் மாநில நெடுஞ்சாலை 41இல் இணைப்புச் சாலை, திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு ஆகிய நகரங்களில் புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.4.68 கோடியில் தயாரிக்கப்படும்.

**2. மாநகராட்சிகளில் சாலை மேம்பாடு செய்தல்**

Upgradation of Roads in Corporations

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, மதுரை ஆகிய மாநகராட்சிகளில், மாநகராட்சிப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளை இறுதி வரை அகலப்படுத்தி நடைபாதையுடன் கூடிய வடிகால் வசதி அமைத்து, சாலைச் சந்திப்பு மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கை ரூ.5 கோடியில் தயாரிக்கப்படும்.

**3. ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல்**

Construction of High Level Bridges across Rivers

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், விழுப்புரம் மாவட்டம் கடலூர்—சித்தூர் சாலையில் தென்பெண்ணையாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் மற்றும் வேலூர் மாவட்டம் காங்கேயநல்லூர் – சத்துவாச்சாரி கிராமங்களை இணைத்து பாலாற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.50 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

**4. பாலங்களை நீட்டித்தல்**

Extension of Flyovers

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கோயம்புத்தூர் மாவட்டம் காந்திபுரத்தில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலத்தில் புதிதாக ஒரு கிளை அமைத்தல் மற்றும் உக்கடம் உயர்மட்டப் பாலத்தில் உக்கடம் நோக்கி செல்லும் பாலத்தை நீட்டிப்பு செய்தல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.10 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

**5. மதுரை மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

Developing Infrastructure Facilities in Madurai District

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரை, எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் முதல் கூடல் நகர் ரேடியோ

நிலையம் வரை புதிய நான்கு வழி இணைப்புச் சாலைகள் ரூ.50 கோடி மதிப்பில் ஒருங்கிணைத்து அமைக்கப்படும்.

வைகை ஆற்றின் செல்லூர் இரயில்வே மேம்பாலத்தில் குளமங்கலம் பகுதியை அடைய சேவை பாலம் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மேலும் மதுரை நத்தம் சாலை முதல் மதுரை உள்வட்டச் சாலை வரை இணைப்பு சாலை அமைக்கும் பணி மற்றும் மாடக்குளம் ஏரி முதல் திருப்பரங்குன்றம் புறவழிச் சாலையில் உள்ள இரயில்வே மேம்பாலத்தின் பசுமலை நோக்கி செல்லும் கிளைப் பாலத்தை இரு வழித் தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்துதல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.80 இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்படும்.

## 6. இரயில்வே மேம்பாலங்கள் புதிதாக கட்டுதல் மற்றும் அகலப்படுத்துதல்

Construction and Widening of Railway Over Bridges

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவள்ளூர் மாவட்டத்தில் மவுண்ட் – பூந்தமல்லி – ஆவடி சாலை கி.மீ. 20/8–ல் உள்ள இரயில்வே மேம்பாலம் ரூ.12 கோடி மதிப்பில் அகலப்படுத்தப்படும். காஞ்சிபுரம், நாகப்பட்டினம், வேலூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் புதிதாக 7 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சென்னை – திருத்தணி சாலையில் மேலும் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைத்தல் ஆகிய பணிகளுக்கான

விரிவான திட்ட அறிக்கை ரூ.2.80 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

## 7. அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்

Construction of Office Buildings

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலைத் துறையின் பயன்பாட்டிற்காக பழநியில் கோட்ட அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு, புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர், திருமயம் மற்றும் ஆலங்குடி ஆகிய இடங்களில் உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம், திருநெல்வேலி மாவட்டம் சேரன்மாதேவி மற்றும் ஆலங்குளம் ஆகிய இடங்களில் உதவிப் பொறியாளர் அலுவலகம் ஆகியவை ரூ.2.65 கோடி மதிப்பில் கட்டப்படும்.

## 8. பயிற்சி மையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

Infrastructure Facility to Training Center

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலைத் துறை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி மையத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.3.50 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும். மேலும் இப்பயிற்சி மையத்தின் மூலம் விக்ரோட்ஸ், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியின் மூலம்

**20** பொறியாளர்கள் இரண்டு குழுக்களாக வெளிநாடுகளில் பயிற்சி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

**9. சென்னை பெருநகர மாநகராட்சியில் இணைப்புச் சாலை அமைத்தல்**

Formation of Link road in Chennai Extended Corporation Area

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கிரீன்வேஸ் சாலை மற்றும் துர்காபாய் தேஷ்முக் சாலைகளை தமிழ்நாடு இசைக் கல்லூரி வழியாக இணைக்கும் வகையில் **650**மீ. நீளத்திற்கு இணைப்புச் சாலை ரூ.**30** கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

**10. சென்னை மற்றும் திருப்பூரில் சாலை மேம்பாலம் மற்றும் நடைமேம்பாலம் அமைத்தல்**

Construction of Fly Over and Foot Over Bridge in Chennai and Tiruppur.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு சர்தார் பட்டேல் சாலை மற்றும் ராஜீவ் காந்தி சாலை ஆகியவற்றை இணைக்கும் மத்திய கைலாஷ் பகுதியில் சாலை மேம்பாலம் அமைத்தல், சென்னை உள்வட்டச் சாலையில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளி அருகில் நடை மேம்பாலம் அமைத்தல் மற்றும் திருப்பூர் மாநகராட்சியில் போக்குவரத்து நெரிசலை குறைக்க புஷ்பா தியேட்டர் முதல் பாண்டியன் நகர் வரை உயர்மட்ட பாலம் அமைத்தல் ஆகிய பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ரூ.**3** கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

## 11. நபார்டு வங்கி உதவியுடன் பாலங்கள் கட்டுதல்

Construction of Bridges using Nabard Fund

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாவட்டங்களில் உள்ள **1,213** கிராமங்களில் வசிக்கும் **59,09,084** மக்கள் பயனடையும் வகையில், ரூ.**638.50** கோடி மதிப்பீட்டில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் **188** ஆற்றுப் பாலங்கள் நபார்டு வங்கி கடனுதவியுடன் நடப்பாண்டில் கட்டப்படும்.

## 12. ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல்

Upgradation of Panchayat/ Panchayat Union Roads

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், **2,000**கி.மீ. நீள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தி ரூ.**800** கோடி மதிப்பில் மேம்பாடு செய்யப்படும்.

## 13. நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களின் பயன்பாட்டிற்காக வாகனங்கள் கொள்முதல்

Providing Vehicles for Highways Engineers

சாலை பணிகளின் தரத்தினை கண்காணிக்க கண்காணிப்புபொறியாளர் நிலையில் உள்ள அலுவலர்களின் தற்போதைய பயன்பாட்டில் உள்ள **13** பழுதடைந்த சீருந்துகளுக்கு பதிலாக புதிய சீருந்துகள் ரூ.**1.30** கோடி மதிப்பில் வாங்கப்படும்.

## 14. மேம்பட்ட சாலை பராமரிப்பிற்காக இயந்திரங்கள் கொள்முதல்

Purchase of Machineries for Enhancement of Road Maintenance

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நவீன தொழில்நுட்பங்களை அரசுத் துறைகளில் செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. நெடுஞ்சாலைத்துறையின் சாலையின் பராமரிப்பை இயந்திரமயமாக்க மற்றும் சாலைகளை சீரிய முறையில் பராமரிக்க, நொடிகளை சீர் செய்யும் இயந்திரங்கள் (pot hole repairing machine) கொள்முதல் செய்யப்படும். இவ்வாண்டு, முதற்கட்டமாக மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத்துறை சாலைகளைப் பராமரிக்க நொடிகளை சீர் செய்யும் 12 நகரும் இயந்திரங்கள் ரூ.8.40 கோடி மதிப்பில் மூன்று ஆண்டு பராமரிப்பு செலவுடன் சேர்த்து கொள்முதல் செய்யப்படும்.

## 15. பாலங்கள் தகவல் அமைப்பை உருவாக்குதல்

Forming Bridge Information System

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாநிலத்தில் உள்ள நெடுஞ்சாலைத்துறையின் அனைத்துப் பாலங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய தன்மைகளை ஆய்வு செய்து, பாலங்களின் தன்மைகளை உள்ளடக்கிய பாலங்கள் தகவல் அமைப்பு, துறையின் பாலங்களை பராமரிக்க ஏதுவாக உருவாக்கப்படும்.

## 16. தயார் நிலை திட்ட தொகுப்பு

Readiness of shelf of Projects

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சாலை உள்கட்டமைப்புகளுக்கான தேவை அதிகரிப்பதை கருத்தில்கொண்டு, பல்வேறு மேம்பாட்டுப்பணிகளை உள்ளடக்கிய திட்டத் தொகுப்பும், அதற்கான விரிவானதிட்ட அறிக்கையும் தயார் நிலையில் வைத்திருப்பது அவசியமாகிறது. மேலும், இத்தகைய தயார் நிலை விரைவான திட்ட செயலாக்கம் மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி, உலக வங்கி போன்ற வெளி நிதி ஆதாரத்தை விரைவாக பெறுவதற்கு உதவுகிறது. அதனடிப்படையில், சுமார் 3,319 கி.மீ. சாலைகளை, ரூ.30,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு ஏதுவாக ரூ.133 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

## 17. சாலைப் பாதுகாப்பு மேம்பாட்டுத் திட்டம்

Road Safety Enhancement Project

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சிறந்த சாலைக் கட்டமைப்பு, பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கை, புதிய வாகனங்களின் திறன், நகரமயமாக்கல், ஆகியவை பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டினாலும், அதிக அளவிலான வாகன விபத்து உயிரிழப்புகள் மாநிலத்திற்கு பெரும் சுமையாகவே இருந்து வருகிறது. சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்காக கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.1,360 கோடி மதிப்பிலான பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்வாண்டு, கூடுதலாக ஒருங்கிணைந்த

சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.200 கோடியும் சாலைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.100 கோடியும் ஆக மொத்தம் ரூ.300 கோடி மதிப்பிலான சாலைப் பாதுகாப்பிற்கான பிரத்யேக பணிகள் எடுத்துக்கொள்ளப்படும். இது தவிர, சாலைப் பாதுகாப்பை மேம்படுத்தி விபத்துகளை தடுக்கும் பொருட்டு காவல், சுகாதாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறையின் கூட்டு முயற்சியோடு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக செயல்படுத்தப்படும். மேலும், கிழக்கு கடற்கரைச் சாலையில், தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, போக்குவரத்து மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் ரூ.8 கோடி மதிப்பில் மேம்படுத்தப்பட்டு சாலைப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

**18. நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு தொழில்நுட்பக் கையேடு வழங்குதல்**

Providing Ready Reckoner to Highways Department Engineers.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் அனைத்து பொறியாளர்களுக்கும் நெடுஞ்சாலைத்துறையின் தொழில்நுட்பங்கள் மற்றும் துறையின் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியவாறு கையேடு தயாரிக்கப்பட்டு வழங்கப்படும்.

# பொதுப்பணித்துறை

## கட்டடங்கள் மற்றும் பாசனம்

### மானியக் கோரிக்கை எண் 39 & 40

**1. கால்வாய்ப் புனரமைப்புப் பணிகள்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், பாசன வாய்க்கால்களின் திறனை மேம்படுத்த, கீழ்க்கண்ட இடங்களில் உள்ள பாசனக் கால்வாய்கள் மற்றும் அதைச் சார்ந்த அமைப்புகளைப் புனரமைக்கும் பொருட்டு,

திருவள்ளூர் மாவட்டம் – ஊத்துக்கோட்டை வட்டம் – கண்டலேறு பூண்டி கால்வாயின் எல்.எஸ் 3.88 கி.மீ முதல் 10 கி.மீ வரையுள்ள கரைகளில் சரிந்த மற்றும் பாதிப்படைந்த பகுதிகள் ரூபாய் 27 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம் – தெற்கு வட்டம் – திருப்பரங்குன்றம் அவனியாபுரத்தில் உள்ள அயன்பாப்பாகுடி கண்மாயின் கால்வாய் ரூபாய் 7 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம் – உளுந்தூர்பேட்டை மற்றும் திருக்கோவிலூர் வட்டம் – திருக்கோவிலூர் அணைக்கட்டு எல்.எஸ். 0 மீ முதல் 2,400 மீ வரை மலட்டாறு வாய்க்கால் மற்றும் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டம் – உளுந்தூர்பேட்டை மற்றும் பண்ருட்டி வட்டம், மலட்டாறு கால்வாயின் எல்.எஸ். 24,000 மீ முதல் எல்.எஸ், 40,000 மீ வரை ரூபாய் 23 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம்– மண்ணச்சநல்லூர் வட்டம் உப்பாறு நீர்த்தேக்கத்தின் வரத்து வாரிகளான ஓமாந்தூர் ஏரி உபரி நீர் வாய்க்கால் மற்றும் பெரமங்கலம் ஏரி உபரி நீர் வாய்க்காலினை ரூபாய் 1 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம் – கோபிச் செட்டிப்பாளையம் வட்டம், அரக்கன்கோட்டை கால்வாயின் மைல் 1/2 இல் இருந்து 20/1 வரை உள்ள பாசன மதகுகள் மற்றும் கிளைக் கால்வாய்களை ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம் – பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், புத்திரக்கவுண்டன்பாளையம் கிராமத்தில் புத்திரக்கவுண்டன் பாளையம் ஏரி வரத்து வாய்க்கால் எல்.எஸ். 0 மீ முதல் 980 மீ வரை ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 2. அணை மற்றும் படுகை அணை புனரமைப்புப் பணி

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், கண்டியூர் கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே நெடுகை 102.170 கி.மீ இல் உள்ள செல்லூர் அணைக்கட்டினை ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், அமராவதி கிராமத்தில் வெட்டாற்றின் குறுக்கே நெடுகை 95.630 கி.மீ இல் உள்ள மாத்தூர் படுகை அணை ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 3. ஏரிகளைப் புனரமைக்கும் பணி.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் வட்டம் பனங்குடி ஏரியை தூர்வாரும் பணி ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம் – முடிகொண்டான் கண்மாயினை சீரமைக்கும் பணி ரூபாய் 66 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம் – எருமைக்குளம் ஏரிக்கு தடுப்புச்சுவர் அமைத்து மற்றும் தமராக்கி சாலைப்பாலத்தின் கீழ்ப்புறத்தில் உப்பாற்றின் கரைகளை மேம்படுத்தும் பணி ரூபாய் 89 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம் – தென்காசி வட்டம் – தென்காசி கிராமத்தில் சீவலப்பேரி குளத்தின் வழிப் பாதையினை செப்பனிடும் பணி ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம் – கங்கை கொண்டான் கிராமத்தில் அமைந்துள்ள பராக்கிரம பாண்டியன் குளத்தினை புனரமைக்கும் பணி ரூபாய் 43 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கன்னியாகுமரி மாவட்டம் – தோவாளை வட்டம் – தோவாளை பெரியகுளத்தின் மதகு மற்றும் உபரிநீர்ப் போக்கியினை சீரமைக்கும் பணி ரூபாய் 91 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

## 4. புனரமைக்கும் பணிகள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், பாசன வாய்க்கால்களின் திறனை மேம்படுத்த, பாசனம் சார்ந்த கட்டுமானங்கள் மற்றும் அமைப்புகளை புனரமைக்கும் பொருட்டு,

காஞ்சிபுரம் மாவட்டம் – ஸ்ரீபெரும்புதூர் வட்டம் – செம்பரம்பாக்கம் ஏரியில் உள்ள 19 கதவுகளில் ரோலர் அமைப்பு, பக்கவாட்டு மற்றும் அடிப்பக்க சீல் அமைப்புகளை பழுதுபார்த்து சீரமைத்தல் மற்றும் 24 நீர்ப்போக்கி கதவுகளை ரூபாய் 2 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம் – நிலக்கோட்டை வட்டம் – அணைப்பட்டியில் பேரணை ரெகுலேட்டர், பெரியாறு பிரதான கால்வாய் மற்றும் இணைப்புக் கால்வாயில் உள்ள கதவுகளை மின் வசதி மூலம் இயக்குவதற்கான வழி செய்தல் மற்றும் கதவுகளை மேம்படுத்தும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம் – ஆத்தூர் வட்டம் – மருதாநதி அணையின் இடதுபுற பிரதான கால்வாய் மற்றும் வலதுபுற பிரதான கால்வாயில் உள்ள ஆற்று மதகு மற்றும் பாசன மதகுகளின் கதவுகளை செப்பனிடும் பணி ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம் – வால்பாறை வட்டம் – சோலையாறு அணையின் மின் நிலையம் 2 நுழைவாயில் குப்பைத் தடுப்பான் வடிவமைத்து தயாரித்து போக்குவரத்து செய்து புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம் – வால்பாறை வட்டம் – மேல் நீராறு அணையின் 3ஆம் எண் நீர்ப்போக்கியில் உள்ள அரிக்கப்பட்ட ஆரவடிவ வழிந்தோடியை மாற்றுதல் மற்றும் சுற்றுமானிகள், மின்காந்த தடுப்புக் கருவி, ஆய்வு மேடை ஆகியவற்றை வடிவமைத்து உருவாக்கி தளத்திற்கு கொண்டு சென்று பொருத்தும் பணி ரூபாய் 3 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பாலக்காடு (கேரள மாநிலம்) – பரம்பிக்குளம் அணையின் குகைப்பாதை கால்வாயின் தொடக்கத்தில் உள்ள பழைய குப்பைத் தடுப்பானுக்குப் பதிலாக புதிய குப்பைத் தடுப்பான் வடிவமைத்து உருவாக்கி தளத்திற்கு கொண்டு சென்று பொருத்தும் பணி மற்றும் எல்.எஸ். 4,000 மீட்டரில் உள்ள கதவுகளுக்கு மின் இயக்கு வசதி ஏற்படுத்தும் பணி ரூபாய் 5 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம் – உப்பாறு ஓடை ரெகுலேட்டரின் பழைய துருப்பிடித்த கதவுகளை சீரமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம் – திருமங்கலம் வட்டம் – அரசப்பட்டி அணைக்கட்டில் இருந்து குறையூர் அணைக்கட்டு வரை கவுண்ட நதி ஆற்றைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி வட்டம் – அசுவமாநதி ஆற்றின் 0 மீ முதல் 12,500 மீ வரை புனரமைக்கும் பணி ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம் – உப்பாற்றின் குறுக்கே உள்ள குறுக்குக் கட்டுமான அமைப்புகளை புனரமைத்தல் மற்றும் உப்பாற்றினை சீரமைக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம் – அவிநாசி நகரத்தில் நல்லாற்றின் கரைகளை சீரமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**5. புதிய தரைப்பாலம் மற்றும் நடைபாலம் கட்டுதல்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கிராம மக்கள் மற்றும் மாணவர்கள் பயனடையும் வகையில்,

வேலூர் மாவட்டம் – ஆம்பூர் வட்டம் – ஆம்பூர் நகரம் மளிகை தோப்பு பகுதியிலிருந்து துத்திப்பட்டு கிராமத்திற்கு இடைப்பட்ட பாலாற்றில் தரைப்பாலம் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம், திருக்காம்புலியூர் கிராமத்தில் கட்டளை மேட்டு வாய்க்கால் மைல் 1/7 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம், பிச்சாம்பட்டி கிராமத்தில் கட்டளை மேட்டு வாய்க்கால் மைல் 2/2 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம், கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் தென்கரைக் கால்வாய் மைல் 3/7 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம், திருக்காம்புலியூர் கிராமத்தில் தென்கரைக் கால்வாய் மைல் 1/3 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம் – கிருஷ்ணராயபுரம் வட்டம், கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் (வலையபாளையம்) தென்கரைக் கால்வாய் மைல் 3/4 இல் நடைபாலம் அமைக்கும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

## 6. நீர் நிலைகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசடைதல் குறித்த விரிவான ஆய்வுப்பணி மேற்கொள்ளுதல்

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நீர்நிலைகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசடைதல் குறித்து 8 ஏரிகளில் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 7. உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல் – பாசனப் பிரிவு

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், பொதுப்பணித்துறையில், பின்வரும் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மதுரை, திருநெல்வேலி, திருச்சியில் உள்ள திட்டம் மற்றும் வடிவமைப்பு, சுற்றுச்சூழல் குழும கோட்ட அலுவலகங்கள் மற்றும் உபகோட்ட அலுவலகங்களுக்கான சிறப்பு மராமத்துப் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டத்தில் உள்ள தரக்கட்டுப்பாடு உபகோட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், கீழ் வைகை வடிநில உப கோட்ட அலுவலகங்கள் மற்றும் அதன் இருபிரிவு அலுவலகங்களுக்கு புதிதாக கட்டடம் கட்டும் பணி ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம் – பாசன மேலாண்மை பயிற்சி நிலைய அலுவலக கட்டடம் புதுப்பிக்கும் பணி ரூபாய் 1 கோடியே 3 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் உள்ள நீரியல் நீர் நிலையியல் மற்றும் நீராய்வு மையத்தின் பாசன அமைப்புகளின் மாதிரி வடிவுகள், ஆய்வு மாளிகை மற்றும் பூங்கா ஆகியவற்றை மேம்படுத்தி பராமரிக்கும் பணி ரூபாய் 1 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

**8. பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத் துறை, தலைமைப் பொறியாளர்களுக்கு மகிழுந்துகள் வழங்குதல்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நீர்வள ஆதாரத் துறையிலுள்ள தலைமைப் பொறியாளர்கள் திட்டத் தளங்களை செவ்வனே ஆய்வு செய்யும் பொருட்டு,

நீர்வள ஆதாரத் துறையில் தலைமைப் பொறியாளர்களின் பழுதடைந்த மகிழுந்துகளுக்குப் பதிலாக புதிய 3 மகிழுந்துகள் ரூபாய் 36 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 9. உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துதல் – கட்டடப் பிரிவு

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம் அலுவலகத்திற்கு கழிவு செய்யப்பட்ட கணினி மற்றும் உபரி பாகங்களுக்குப் பதிலாக புதிய கணினிகள் மற்றும் உபரி பாகங்கள் ரூபாய் 41 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கட்டடத்துறையின் கீழ் இயங்கும் உபகோட்டத்தில் பணிபுரியும் உதவி செயற்பொறியாளர்களுக்கு கழிவு செய்யப்பட்ட ஈப்புகளுக்குப் பதிலாக புதிய 21 ஈப்புகள் ரூபாய் 1 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கட்டடத் துறையின் தலைமைப் பொறியாளர்களின் பழுதடைந்த மகிழுந்துகளுக்குப் பதிலாக புதிய 3 மகிழுந்துகள் ரூபாய் 36 இலட்சம் மதிப்பீட்டிலும் வழங்கப்படும்.

மதுரை மாவட்டம், மதுரையில் அரசு அலுவலர்களுக்கான 100 எண்ணிக்கை கொண்ட 'சி' வகை குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி ரூபாய் 25 கோடி மதிப்பீட்டிலும்,

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பாரம்பரியமிக்க புராதன கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

சென்னை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சென்னை மண்டலம், சென்னை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் பணி ரூபாய் 25 கோடி மதிப்பீட்டிலும்,

சென்னை, அடையாறில் மாண்புமிகு அமைச்சர்களுக்கான **4** எண்ணிக்கை குடியிருப்புகள் கட்டும் பணி ரூபாய் **9** கோடியே **86** இலட்சம் மதிப்பீட்டிலும்,

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள தீயினால் பாதிக்கப்பட்ட பாரம்பரியமிக்க புராதன கட்டடமான ஹுமாயுன் மஹாலை புனரமைக்கும் பணி ரூபாய் **36** கோடியே **38** இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

# பொதுத்துறை

## மானியக் கோரிக்கை எண் 38

**1. புதுதில்லியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தில் 57 கோடி ரூபாய் செலவில் புதிய விருந்தினர் இல்லம் கட்டப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், புதுதில்லியில் ஐந்து கட்டட தொகுப்புகளைக் கொண்ட வைகை தமிழ்நாடு இல்லத்தில், பிரதான விருந்தினர் இல்ல கட்டடம் தவிர, இதர கட்டடங்கள் உறுதியற்ற தன்மையுடன் உள்ளதால் அக்கட்டட தொகுப்புகளை இடித்து, நவீன வசதிகளுடன் கூடிய புதிய விருந்தினர் இல்ல கட்டடம் 57 கோடி ரூபாயில் மேற்கொள்ளப்படும்.

**2. வைகை தமிழ்நாடு இல்லத்தில் தற்போதுள்ள பிரதான விருந்தினர் இல்ல கட்டடம் 2.50 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு பணிகள் செய்யப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், வைகை தமிழ்நாடு இல்லத்தில் முதல் மற்றும் இரண்டாவது தளங்களில் 25 இரண்டு படுக்கையறைகளை கொண்ட சாதாரண அறைகளும் (Standard rooms), 5 உயர்தர வசதிகள் கொண்ட அறைகளும் (Suite rooms) உள்ளன. இவ்வறைகளை புதுப்பித்து 2.50 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**3. தலைமைச் செயலகத்தில் செயல்பட்டுவரும் நாமக்கல் கவிஞர் மாளிகையில் பாதுகாப்பை பலப்படுத்தும் பொருட்டு 90 இலட்சம் ரூபாய் செலவில் நவீன கண்காணிப்பு கேமராக்கள் (CCTV Cameras) நிறுவப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தலைமைச் செயலகத்தில் பாதுகாப்பை பலப்படுத்தும் பொருட்டு, நாமக்கல் கவிஞர் மாளிகை மற்றும் பிரதான கட்டடத்தின் அனைத்து முக்கிய நுழைவு வாயில்களிலும் மற்றும் அனைத்து தளங்களிலும் 90 இலட்சம் ரூபாய் செலவில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிப்பு பணிகள் மேம்படுத்தப்படும்.

**4. தாயகம் திரும்பியோர் (Repatriates) பயன்பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 1,000 வீடுகள், தாயகம் திரும்பியோருக்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 1,000 வீடுகள், தாயகம் திரும்பியோருக்காக ஒதுக்கீடு செய்யப்படும்.

இத்திட்டத்திற்கான செலவினம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் 2018–2019ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**5. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் முன்னாள் படைவீரர்கள் நல அலுவலகத்துடன் கூடிய மையத்திற்கு 70.75 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருநெல்வேலி மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலனுக்காக, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் முன்னாள் படைவீரர்கள் மையம் மற்றும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் 70.75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

இதற்கான செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**6. விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் முன்னாள் படைவீரர்கள் நல அலுவலகத்துடன் கூடிய மையத்திற்கு 62 இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், விருதுநகர் மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலனுக்காக விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூரில் முன்னாள் படை வீரர்கள் மையம் மற்றும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகம் 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

இதற்கான நிதிச் செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நல நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. கோயம்புத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் முன்னாள் படைவீரர் பயன்பாட்டிற்காக சமுதாயக் கூடம் கட்டப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், முன்னாள் படைவீரர்களின் பயன்பாட்டிற்காக கோயம்புத்தூர் மாவட்டம் சௌரிப்பாளையத்தில் உள்ள 0.43 ஏக்கர் நிலத்தில் சுமார் 1,500 சதுர அடி பரப்பளவில் சமுதாயக் கூடம், மற்றும் வேலூர் மாவட்டத்தில் அப்துல்லாபுரத்தில் 6.35 ஏக்கர் நிலத்தில் 1,500 சதுர அடி பரப்பளவில் சமுதாயக் கூடம், ஆகியன மொத்தம் 30 இலட்சம் (15 இலட்சம் + 15 இலட்சம்) ரூபாய் செலவில் கட்டப்படும்.

மேற்படி சமுதாயக் கூடங்கள் அமைப்பதன் மூலம் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வசிக்கும் சுமார் 74,000 முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர்களும் பயன்பெறுவர்.

இதற்கான நிதிச் செலவினம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

**8. உயர்கல்வி பயிலும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் கல்வித் தொகை, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து இளங்கலை மற்றும் முதுநிலை பாடத்திட்டங்களுக்கும் உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளின் பிள்ளைகளுக்கு

உயர் கல்வி பயில வழங்கப்படும் கல்வித் தொகையினை உயர்த்தி, அங்கீகரிக்கப்பட்ட அனைத்து இளங்கலை மற்றும் முதுநிலை பாடத்திட்டங்களுக்கும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| வ. எண். | படிப்பு விபரம் | உயர்த்தி வழங்கப்படும் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| I. | பட்டயப்படிப்பு | 2,500/– |
| II. | இளநிலை கலை மற்றும் அறிவியல் | 3,000/– |
| III. | முதுநிலை கலை மற்றும் அறிவியல் | 4,000/– |
| IV. | இளநிலை தொழிற்கல்வி படிப்புகள் | 5,000/– |
| V. | முதுநிலை தொழிற்கல்வி படிப்புகள் | 6,000/– |

இந்நிதிச் செலவினம் இலங்கைத் தமிழர் நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

# நிதித் துறை

## மானியக் கோரிக்கை எண் 16

**1. சென்னை, நந்தனத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதித்துறை கட்டடத்தில் 10.98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 50,000 சதுர அடி பரப்பளவில் இரண்டு கூடுதல் தளங்கள் கட்டப்படும். நிதித்துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் மீன்வளத் துறையைச் சார்ந்த கட்டடங்கள் அமைந்துள்ள இவ்வளாகத்திற்கு 'அம்மா வளாகம்' என பெயரிடப்படும்.**

சென்னை, நந்தனத்தில் **36.33** கோடி ரூபாய் செலவில் **1,69,138** சதுர அடிபரப்பளவில் **4** தளங்கள் கொண்ட ஒருங்கிணைந்த நிதித்துறை கட்டடம் கட்டப்பட்டு, அதில் தற்போது நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள **10** அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மேலும் அரசு மின் அங்காடி (GeM), சிறுசேமிப்புத் துறை, அரசு புள்ளிவிவரத் தொகுப்பு மையம், நிதித்துறைக்கென பிரத்யேக பயிற்சி மையம், பொது நிதி மேலாண்மைத் திட்ட அலுவலகம் மற்றும் மாம்பலம் – கிண்டி சார் கருவூலம் ஆகிய நிதித்துறை அலுவலகங்களுக்கு இடமளித்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்ஆணையின்படியும், **10.98** கோடிரூபாய் செலவில் சுமார் **50,000** சதுர அடி பரப்பளவில் இரண்டு கூடுதல்தளங்கள் கட்டப்படும்.

மேலும், ஒருங்கிணைந்த நிதித்துறை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அலுவலகக் கட்டடங்கள் அமைந்துள்ள இவ்வளாகத்திற்கு 'அம்மா வளாகம்' என பெயரிடப்படும்.

**2. திருநெல்வேலி மாவட்டக் கருவூலத்திற்கு சுமார் 21,400 சதுர அடி பரப்பளவில் 3.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.**

நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமையான திருநெல்வேலி மாவட்டக் கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல் மற்றும் ஒய்வூதியதாரர்களுக்கு கூடுதல் வசதிகள் ஏற்படுத்திடும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், சுமார் 21,400 சதுர அடி பரப்பளவில், 3.52 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சொந்தக்கட்டடம் கட்டப்படும்.

**3. கருவூலக் கணக்குத் துறை பயன்பாட்டிற்கு 2.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 புதிய ஈப்புகள் வழங்கப்படுவதுடன் 38 புதிய ஓட்டுநர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்படும்.**

கருவூலக் கணக்குத் துறை அலுவலர்களின் செயல்திறனை ஊக்குவித்து மேம்படுத்துவதற்கான முயற்சியாக, மாநிலத்தில் உள்ள 243 சார் கருவூலங்களை அந்தந்த மாவட்ட கருவூல அலுவலர்கள் ஆய்வு செய்யவும், களப்பணிகளை மேற்கொள்ளவும், சம்பளக் கணக்கு அலுவலர்கள் தங்கள் பணிகளை செவ்வனே குறித்த காலத்திற்குள் செய்து முடிக்கவும், ஆய்வுக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும் ஏதுவாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், 2.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 புதிய ஈப்புகள் வழங்கப்படுவதுடன் 38 புதிய ஓட்டுநர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்படும். இதனால் ஏற்படக்கூடிய ஓட்டுநர் ஊதியம் மற்றும் எரிபொருள் ஆகிய தொடரும் செலவினங்களுக்காக ஆண்டிற்கு 1.56 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**4. சார் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடங்களில் புதிய சார் கருவூலங்கள் அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்ககுழு அமைக்கப்படும்.**

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள நிலையில் “ஒரு வட்டம் – ஒரு சார் கருவூலம்” என்ற கொள்கையின்படி, சார் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடங்களில் புதிய சார் கருவூலங்கள் அமைப்பது குறித்து ஆராய்ந்து, அரசுக்குப் பரிந்துரை அளிப்பதற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், மாவட்டஆட்சியர், மண்டல கருவூலக் கணக்குத்துறை இணை இயக்குநர் மற்றும் மாவட்டக் கருவூல அலுவலர் உள்ளடங்கிய குழு அமைக்கப்படும்.

**5. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென தனி இணையதளம் உருவாக்கப்படும்.**

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பயன்பாடுகளுக்காக, மாண்புமிகு

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், இத்துறைக்கென தனி இணையதளம் (Website) உருவாக்கப்படும்.

i. இத்துறையின் மூலம் ஓய்வூதியம் பெறுவோர், ஓய்வூதிய ஒப்பளிப்பு தொடர்பான விவரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ளுதல்.

ii. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 இன் படி தமிழக சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தொகுப்பு தணிக்கை அறிக்கையை இணையதளத்தில் வெளியிடுதல்.

iii. உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வகை நிறுவனங்களின் நிலுவைத் தணிக்கைத் தடைகளை வெளியிடுதல்.

iv. தணிக்கை வழிகாட்டுதலுக்கான அரசாணைகள் மற்றும் இயக்குநரால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளை உடனுக்குடன் பதிவேற்றம் செய்தல்.

v. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தணிக்கைக்கு உட்பட்ட அமைப்புகளின் சட்டங்கள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றை வெளியிடுதல்.

vi. உள்ளாட்சி அமைப்புகளின் வரவு செலவுக் கணக்குகளை பொதுமக்களின் பார்வைக்கு வெளியிடுதல்.

**6. உள்ளாட்சி அமைப்புகளைச் சார்ந்த ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் உள்ளிட்டவற்றை மின்னணுமுறையில் அனுமதித்தல் பயன்பாட்டிற்கு கணினி 'சர்வர்' (Server) வழங்கப்படும்.**

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் மூலம் சுமார் 31,000 ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் சுமார் 50 கோடி ரூபாய் அளவில் ஆண்டுக்கு சுமார் 600 கோடி ரூபாய் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியமாக மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள கணினி 'சர்வர்' (Server) மேற்குறிப்பிட்டுள்ள பணியினை மேற்கொள்ள போதுமான திறன் உடையதாக இல்லை என்பதால் ஓய்வூதியம் அனுமதிக்கும் பணிகளில் தொய்வு மற்றும் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, பழைய கணினி சர்வருக்குப் பதிலாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உயர் திறன் 'சர்வர்' வழங்கப்படும்.

**7. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தணிக்கையாளர்களுக்கு 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 165 புதிய மடிக்கணினிகள் வழங்கப்படும்.**

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் தணிக்கை தரத்தினை மேம்படுத்துவதற்காக கணினி வழி தணிக்கைத்

தகவல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக **89.68** இலட்சம் ரூபாய் செலவில் **242** மடிக்கணினிகள் **16.04.2018** அன்று தணிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள தணிக்கையாளர்களுக்கும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், **66** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **165** புதிய மடிக்கணினிகள் வழங்கப்படும்.

**8. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியர் அடையாள அட்டை வழங்கப்படும்.**

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு / அலுவலர்களுக்கு கருவூலக் கணக்குகள் துறை ஆணையரகம் மூலம் ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர் அடையாள அட்டை வழங்கப்பட்டு வருவதைப் போன்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மூலம் ஓய்வூதியம் பெறும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் ஓய்வூதியர் அடையாள அட்டை வழங்கப்படும்.

**9. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் தணிக்கையின் போது கண்டறியப்பட்ட நிதி முறைகேடுகள், நிதி இழப்புகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் ஆண்டறிக்கையாகத் தயாரிக்கப்படும்.**

பன்மாநிலக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர 14 நிருவாக பதிவாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை, கூட்டுறவுத் தணிக்கைத் துறையினால் மேற்கொள்ளப்பட்டு தணிக்கை அறிக்கை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்களுக்கு, மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. தணிக்கையின்போது கண்டறியப்பட்ட நிதி முறைகேடுகள், நிதி இழப்புகள் குறித்து நிருவாகத்துறை செயல் பதிவாளர்களால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை கண்காணித்து உறுதி செய்யும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஆண்டுதோறும் விரிவான அறிக்கை தயாரிக்கப்படும்.

**10. கூட்டுறவுத் தணிக்கைத்துறை தணிக்கையாளர்களுக்கு 62.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 250 புதிய மடிக்கணினிகள் வழங்கப்படும்.**

கூட்டுறவு தணிக்கைத் துறையில் தணிக்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக கணினி வழி தணிக்கைத் தகவல் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 2 ஆவது கட்ட மாக தணிக்கையாளர்களுக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்

நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், 62.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 250 புதிய மடிக்கணினிகள் வழங்கப்படும்.

**11. பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கைப் பணிகளை கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது குறித்து ஆய்வு செய்து உரிய முடிவு எடுக்கப்படும்.**

பால் கூட்டுறவு தணிக்கைத் துறையானது தனித்துறையாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பினும், இதற்கென தனியே தணிக்கையாளர்கள் எவரும் இல்லை.

நிருவாகத் துறை அலுவலர்களே பால் கூட்டுறவுத் தணிக்கையினை மேற்கொள்கின்றனர். இதனால் நிருவாகமும், தணிக்கையும் ஒரே துறையின் கீழ் உள்ள சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, சுதந்திரமான தணிக்கையமைப்பு என்பதை உறுதி செய்யும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பால் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை, சிறப்பான பயிற்சி பெற்ற கூட்டுறவு தணிக்கையாளர்களைக் கொண்ட கூட்டுறவு தணிக்கைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது குறித்து ஆய்வுசெய்து, உரியமுடிவு எடுக்கப்படும்.

**12. அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் சார்நிலை அலுவலகங்களுக்கு 23.21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புதிதாக தலா 36 கணினிகள், அச்சுப்பொறிகள்,**

**ஸ்கேனர்கள் மற்றும் தடையற்ற மின் வழங்கும் கருவிகள் வழங்கப்படும்.**

அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையின் சார்நிலை அலுவலகங்களில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ள பழமையான கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகளுக்குப் பதிலாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், புதிதாக தலா 36 கணினிகள், அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள் மற்றும் தடையற்ற மின் வழங்கும் கருவிகள் 23.21 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**13. அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறையில் ஆய்வாளர் நிலையில் இயங்கிவரும் 10 மாவட்ட அலுவலகங்கள் உதவி இயக்குநர் நிலைக்கு தரம் உயர்த்தப்படும்.**

அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத்துறையின் மாவட்ட அளவிலான அலுவலகங்களில் 21 அலுவலகங்கள் உதவி இயக்குநர்கள் தலைமையில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 11 மாவட்ட அளவிலான அலுவலகங்கள், ஆய்வாளர்கள் தலைமையில் இயங்கிவருகின்றன.

மாவட்ட அளவிலான தணிக்கை நிருவாகத்தினை மேம்படுத்தவும், உயர்நிலை நேரடிக் கண்காணிப்பின் மூலம் தணிக்கைப் பணிகளை துரிதப்படுத்தவும், தணிக்கையை

விரைந்து முடித்து தணிக்கை அறிக்கைகளை குறித்த காலத்தில் வெளியிடவும் ஏதுவாக, எஞ்சியுள்ள 11 மாவட்டங்களில் நீலகிரி மாவட்டம் நீங்கலாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், 10 மாவட்ட அலுவலகங்களிலுள்ள ஆய்வாளர் பணியிடங்கள் உதவி இயக்குநர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்படும்.

# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

**மானியக் கோரிக்கை எண் 26**

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

**1. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் – 2023 குடிசைப் பகுதிகளற்ற நகரங்களை உருவாக்கும் திட்டத்தின்கீழ் நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ரூ.58,356.40 கோடி மதிப்பீட்டில் 9.08 இலட்சம் குடியிருப்புகள் / வீடுகள், மைய / மாநில அரசு நிதியுதவியுடன் கட்டப்படும்.**

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023 குடிசைப் பகுதிகளற்ற நகரங்கள் திட்டத்தின்கீழ், நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், ரூ.58,356.40 கோடி செலவில் 9.08 இலட்சம் குடியிருப்புகள் / வீடுகள் 2023ஆம் ஆண்டுக்குள் கட்டப்பட்டு தமிழகத்தில் உள்ள நகரங்கள் குடிசைப்பகுதிகளற்றதாக மேம்படுத்தப்படும். இவற்றில் 4.80 இலட்சம் குடியிருப்புகள் / வீடுகள், மைய / மாநில அரசு நிதியுதவியுடன் கட்ட ரூ.19,537.67 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 4.28 இலட்சம் குடியிருப்புகள்/வீடுகள் ரூ.38,818.73 கோடி மதிப்பீட்டில் மைய / மாநில அரசு நிதியுதவியுடன் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2. பழுதடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்துவிட்டு மறுகட்டுமானம் கட்டும் திட்டத்தின்கீழ் ரூ.4,247.87 கோடி செலவில் 38,617 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.**

சென்னை மற்றும் இதர நகரங்களில் பழுதடைந்த நிலையில் உள்ள குடியிருப்புகள் தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மறுகட்டுமானம் செய்யப்படுகிறது. அவ்வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், 17,239 அடுக்குமாடிக் குடியிருப்புகள் இடிக்கப்பட்டு அதிகபட்ச தரைப்பரப்புக் குறியீட்டினை பயன்படுத்தி ரூ.4,247.87 கோடி செலவில் 38,617 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அடுத்த 3 ஆண்டுகளில் கட்டப்படும். இத்திட்டத்தின்கீழ் புதிதாக 21,378 அடுக்குமாடிக் குடியிருப்புகள் நகர குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. உலகவங்கியின் நிதியுதவியுடன் ரூ.4,648 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர ஏழைகளுக்கான வீட்டுவசதி மற்றும் உறைவிட மேம்பாட்டிற்குப் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.**

சென்னை நகரில், நதிகளின் கரையோரங்களில் வாழும், குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களின் பாதுகாப்பு மற்றும் நலனைக் கருத்தில் கொண்டும், அப்பகுதிகளைப் பசுமைப் பகுதிகளாக மேம்படுத்தவும், நதிகளின் கரையோரங்களில் அமைந்துள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு

அனைத்து வசதிகளுடன் கூடிய **38,000** அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல், குறைந்த வருவாய் பிரிவினருக்கான வீட்டுவசதி மாதிரி திட்டங்களை உருவாக்கி முன்னோடி திட்டங்களாகச் செயல்படுத்துதல், நிலப்பயன்பாடு மற்றும் வெளிசார்ந்த திட்டமிடுதல் ஆகிய பணிகளுக்கான தொழில்நுட்ப உதவி பெறுதல், போன்ற பணிகளைச் செயல்படுத்த மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், ரூ.**4,648** கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு உலக வங்கி உதவி பெற மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிக்கு உலக வங்கியின் நிதியுதவி ரூ.**3,348** கோடி மற்றும் மாநில அரசின் பங்களிப்பு ரூ.**1,300** கோடி ஆகும்.

**4. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட 72,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மேம்படும் வகையில் ரூ.70 கோடி செலவில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்குக் கூரைத்தளங்கள், தரைத்தளங்கள், மேல்தளங்கள் மற்றும் படிக்கட்டுகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்தல், மேற்கூரையில் ஒடுகள் பதித்தல், குடிநீர்க் குழாய்கள், கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் கழிப்பறை பீங்கான் மாற்றுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், 72,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மேம்படும் வகையில் ரூ.70 கோடி செலவில் இரண்டாண்டுகளில் செயல்படுத்தப்படும். இந்நிதியாண்டில் இப்பணிகளுக்காக ரூ.35 கோடி செலவிடப்படும்.

## தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

**5. சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ரூ.274.74 கோடி மதிப்பீட்டில் 1,792 குடியிருப்புகள் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், மக்களின் வீட்டுவசதித் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர், சேலம், கிருஷ்ணகிரி, திருச்சி, கரூர், மதுரை, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 1,792 பல்வேறு வகை குடியிருப்பு அலகுகள் ரூ.274.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**6. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் சென்னை அரும்பாக்கத்தில் 7.14 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.690 கோடி மதிப்பீட்டில் வணிகவளாகம் மற்றும் குடியிருப்புகள் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், சென்னையின் பிரதான

இடமான அரும்பாக்கத்தில் 7.14 ஏக்கர் நிலப்பரப்பில் வணிகவளாகம் மற்றும் குடியிருப்புகள் ரூ.690 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும்.

**7. சொந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் இத்துறையின்கீழ் இயங்கிவரும் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்காக சென்னை பாடிகுப்பத்தில் 182 பன்னடுக்கு மாடிக்குடியிருப்புகள் ரூ.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், அரசு ஊழியர் மற்றும் பணியாளர்களுக்கு சொந்த வீடு கட்டும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், இத்திட்டத்தின்கீழ் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் இத்துறையின்கீழ் இயங்கிவரும் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், சென்னை பாடிகுப்பத்தில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் 182 பன்னடுக்கு மாடிக்குடியிருப்புகள் கட்டப்படும்.

**8. தனியார் நிலங்களைப் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் நில உரிமையாளர்களிடமிருந்து பெற்று அதனை ஒருங்கிணைத்து அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தி, பின்னர் நிலத்தின் விலை மற்றும் அபிவிருத்தி விலையைக் கருத்தில் கொண்டு மேம்படுத்தப்பட்ட**

**நிலத்தினை பகிர்ந்து கொள்ளும் திட்டம் (Land Pooling) செயல்படுத்தப்படும்.**

புதிய நிலமெடுப்புச் சட்டத்தின்படி நில உரிமையாளர்களிடமிருந்து நிலங்களைக் கையகப்படுத்தி வீட்டுவசதி வாரிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாததை கருத்தில் கொண்டு தனியார் நிலங்களை ஒருங்கிணைத்து தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நில சேர்மத்தினை (Land Pooling) உருவாக்க உத்தேசித்துள்ளது.

இத்திட்டமானது, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், வாரியம், தனியார் நில உரிமையாளர்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அதன் மூலம் நிலங்களைப் பெற்று அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் அந்நிலங்களை மேம்படுத்தி, பின்னர் நிலத்தின் விலை மற்றும் அபிவிருத்தி விலையைக் கருத்தில் கொண்டு மேம்படுத்தப்பட்ட நிலங்கள் பகிர்ந்து கொள்ளப்படும்.

**9. சென்னையின் பிரதான இடமான பட்டினப்பாக்கத்தில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகம் கட்டப்படும்.**

சென்னை பட்டினப்பாக்கத்தில் அரசு மற்றும் வாரியத்திற்குச் சொந்தமான 25.16 ஏக்கர் நிலத்தில் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுமுயற்சி திட்டத்தின்

அடிப்படையில் புதிய நகரியம் அமைக்க திட்டமிட்டிருந்த நிலையில், தனியார் நிறுவனங்களிடமிருந்து போதிய வரவேற்பின்மை காரணத்தினால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், சென்னையில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் பயனடையும் வகையில் பட்டினப்பாக்கத்தில் 15 ஏக்கர் நிலப்பரப்பில் 2,000 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் ரூ.550 கோடி மதிப்பீட்டில் அரசின் நிதியுதவியினைப் பெற்று தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும். மேலும், எஞ்சியுள்ள நிலங்களில் வணிக வளாகம் கட்டி வருவாய் ஈட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**10. தேனி, விருதுநகர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில், அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டப்படும்.**

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அரசு ஊழியர்கள் பயன்பெறும் வகையில் வாடகைக் குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், வடவீரநாயக்கன்பட்டி கிராமத்தில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், அரசுக்குச் சொந்தமான 2.51 ஏக்கர் நிலத்தில் 120 அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் ரூ.24.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். மேலும், சிதலமடைந்த அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு, விருதுநகர் மாவட்டத்தில் புதிதாக 222 வாடகைக் குடியிருப்புகள் ரூ.49.64 கோடி

மதிப்பீட்டிலும் அரியலூர் மாவட்டத்தில் 72 வாடகைக் குடியிருப்புகள் ரூ.18.60 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

## நகர் ஊரமைப்பு இயக்ககம்

**11. தொழிற்சாலைகளுக்கு மனை அடைப்பு 50 விழுக்காடு என உள்ளதை 75 விழுக்காடாகவும் தரைப்பரப்பு குறியீட்டினை 1–லிருந்து 1.5 ஆகவும் உயர்த்தப்படும்.**

தொழிற்சாலைகளுக்கு தற்போது மனை அடைப்பு 50 விழுக்காடு எனவும் தரைப்பரப்பு குறியீடு 1 எனவும் அனுமதிக்கப்பட்டு கட்டுமானம் மேற்கொள்ளப்படுகிறது. வளர்ந்துவரும் தொழிற்சாலைகளின் தேவையை கருத்தில் கொண்டும், தொழிற்சாலைகளை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் கருதியும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், தற்போது அனுமதிக்கப்படும் அதிகபட்ச மனைஅடைப்பு (Plot Coverage) 50 விழுக்காடு என உள்ளதை 75 விழுக்காடு ஆகவும், தரைப்பரப்பு குறியீடு (Floor Space Index) 1 என உள்ளதை 1.5ஆகவும் உயர்த்தப்படும்.

**12. தஞ்சாவூர் உள்ளிட்ட 15 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் நகர் ஊரமைப்புத் துறையின் 23 சார்நிலை அலுவலகங்களுக்கு ரூ.35.22 கோடி செலவில் சொந்த அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.**

தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, கன்னியாகுமரி,

தூத்துக்குடி, கடலூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், தருமபுரி மற்றும் விழுப்புரம் ஆகிய 15 மாவட்டங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் நகர் ஊரமைப்புத் துறையின் 23 சார்நிலை அலுவலகங்கள், சொந்த கட்டடத்தில் இயங்க ஏதுவாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், ரூ.35.22 கோடி செலவில் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும். இதற்கான நிதி ஆதாரம் உள்ளூர் திட்டக்குழும நிதி மற்றும் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

## சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

### 13. வெளிவட்டச் சாலையை (Outer Ring Road) ஒட்டியுள்ள நிலங்களுக்கான ஒருங்கிணைந்த மனைப்பிரிவு மேலாண்மைத் திட்டம் உருவாக்கப்படும்.

வெளிவட்டச் சாலையை ஒட்டியுள்ள பகுதிகள் தற்போது வளர்ச்சியடைந்து வருகின்றன. இப்பகுதிகளில் முறையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், சிறிய அளவு மனைப்பிரிவுகளுக்கு பதில் பெரிய அளவு மனைப்பிரிவு திட்டங்களை நில உரிமையாளர்களின் விருப்பத்துடன் நிலங்களை ஒருங்கிணைத்து ஒரு முன்மாதிரி திட்டமாகச் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தயாரிக்கும்.

**14. கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் (CMBT) மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கான போக்குவரத்து மேம்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

பெருகிவரும் மக்கட்தொகையின் காரணமாக சென்னையில் போக்குவரத்து நெரிசல் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம், மொத்த அங்காடி வளாகம், மெட்ரோ இரயில் நிலையம் ஆகிய பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் சாலை வசதிகளை மேம்படுத்தவும், போக்குவரத்து மேம்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**15. நில உபயோகத் தகவல் தொகுப்பு (Land Use Information System) முற்றிலுமாக கணினிமயமாக்கப்படும்.**

பொதுமக்கள் தங்கள் நிலங்களின் வளர்ச்சிகளுக்கு விண்ணப்பிக்கும்போது முழுமைத் திட்டம் (Master Plan) குறித்த விவரங்கள் தேவைப்படுகின்றன. இந்த விவரங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அலுவலகத்திற்கு சென்று பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும்,

பொதுமக்கள் பயன்படும் வகையில் மேற்படி தகவல்கள் கணினிமயமாக்கப்பட்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் இணையதளத்தில் அளிக்கப்படும். மேலும், நிலம் கையகப்படுத்துதல் குறித்த தகவல்கள் மற்றும் வழக்குகள் குறித்த விவரங்கள், பொதுமக்கள் அளிக்கும் ஆட்சேபணைகள் குறித்த விவரங்களும் இந்த நில உபயோகத் தகவல் தொகுப்பின் மூலம் அளிக்கப்படும்.

**16. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடர்பான நீதிமன்ற வழக்குகளைக் கூராய்வு செய்ய ஏதுவாக ஒருங்கிணைந்த வழக்குகள் கண்காணிப்பு முறை (CCMS) அமைக்கப்படும்.**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் நிலை குறித்து அறிந்து கொள்ள வேண்டியதும் அவ்வழக்குகளை முடிவுக்கு கொண்டு வர ஏதுவாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தொடர்பான வழக்குகள் குறித்த விவரங்கள் கணினிமயமாக்கப்படும்.

**17. சென்னைப் பெருநகர் பகுதியில் அமைந்துள்ள கிராமங்களுக்குப் பின்னல்வலைச் சாலை (Grid of Roads) அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கப்படும்.**

சென்னைப் பெருநகரப் பகுதி **245** கிராமங்களைக் கொண்டது. இதில் **53** கிராமங்களுக்குப் பின்னல்வலைச்

சாலைகள் அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மீதமுள்ள கிராமங்களுக்கும் இத்திட்டம் தயாரிப்பது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், மீதமுள்ள 192 கிராமங்களுக்கும் இந்த பின்னல்வலைச் சாலை அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**18. வளர்ச்சி உரிமைமாற்றச் சான்றிதழ் டிமேட் (Demat) படிவத்தில் வழங்கப்படும்.**

வளர்ச்சி உரிமைமாற்றச் சான்றிதழ்கள் தற்போது தாள் வடிவில் வழங்கப்படுகின்றன. இச்சான்றிதழ்கள் அதிக மதிப்புடைய டிமேட் (Demat) படிவத்தில் வழங்கப்பட்டால் அந்த ஆவணங்களைப் பாதுகாப்பது எளிதாகவும் பேருதவியாகவும் இருக்கும். இதனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், இச்சான்றிதழ்கள் கணினிமயமாக்கப்பட்டு, பங்கு சான்றிதழ் போல் டிமேட் படிவத்தில் வழங்கப்படும்.

**19. ஒப்புதல் பெற்ற மனைப்பிரிவில் அடுக்குமாடிக் கட்டடங்கள் (MSB) கட்டுவதற்கு திட்ட அனுமதி வழங்கப்படும்.**

ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவுகளில் தற்போது அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்ட விதிகளின்படி அனுமதி பெற இயலாத நிலை உள்ளது. அதிகரித்துவரும் நகர மக்கட்தொகையைக் கருத்தில் கொண்டும் பெருகிவரும் நகர வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டும், அதிக வளர்ச்சியினை ஊக்குவித்தல் அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி, ஒப்புதல் பெறப்பட்ட மனைப்பிரிவில் அடுக்குமாடிக் கட்டடங்கள் கட்டுவதற்குத் திட்ட அனுமதி வழங்கப்படும்.

**20. 10,000 சதுர அடிக்கு உட்பட்ட வளர்ச்சிகளுக்கு திட்ட அனுமதி 30 நாட்களில் வழங்கப்படும்.**

திட்ட அனுமதி வழங்குவதை விரைவுபடுத்தவும் திட்ட அனுமதி பெறுவதினை ஊக்குவிக்கவும் இந்த அரசு உத்தேசித்துள்ளது. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், 10,000 சதுர அடிக்கு உட்பட்ட வளர்ச்சிகளுக்கு திட்ட அனுமதி 30 நாட்களில் வழங்கப்படும்.

**21. சாலைகள் அகலப்படுத்தும் திட்டங்களில் பெறப்படும் உயர்தளப்பரப்பு குறியீட்டுக்கு செலுத்தப்படும் கட்டணங்களின் ஒரு பகுதியினை சாலைகள் மேம்பாட்டிற்கு பயன்படுத்தும் வகையில் வழிமுறைகளை வகுக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

சாலைகள் அகலப்படுத்தும் திட்டத்தினால் அச்சாலைகளை ஒட்டியுள்ள நில உரிமையாளர்கள் உயர்த்தப்பட்ட தளப்பரப்பு குறியீட்டு (Higher FSI) பயனைப் பெறுகின்றனர். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், அச்சாலைகளை ஒட்டியுள்ள நில உரிமையாளர்கள், வளர்ச்சிகளுக்கு விண்ணப்பிக்கும்போது உயர்த்தப்பட்ட தளப்பரப்பு குறியீட்டுக்கு செலுத்தும்

கட்டணங்களின் ஒரு பகுதியினை அச்சாலைகள் அகலப்படுத்தும் திட்டத்திற்கு உபயோகப்படுத்த உரிய வழிமுறைகள் வகுக்கப்படும்.

**22. மெட்ரோ இரயில் வழித்தடங்களை ஒட்டி போக்குவரத்து சார்ந்த வளர்ச்சிகளை (Transit Oriented Development) ஊக்குவிக்க சிறப்பு வளர்ச்சி விதிகள் செயல்படுத்தப்படும்.**

உலகெங்கும் மெட்ரோ இரயில் தடங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் அதிக வளர்ச்சிகள் அனுமதிக்கப்படுகின்றன. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படியும், சென்னை மெட்ரோ இரயில் வழித்தடங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் அதிக தளப்பரப்பு குறியீடு (FSI) வழங்கப்படும். இந்த அதிக தளப்பரப்பளவை வளர்ச்சி விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ள வளர்ச்சி உரிமைமாற்றம் (TDR) மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## வனம்

### மானியக் கோரிக்கை எண் 54

**1. காட்டுயானைகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களை தவிர்ப்பதற்கு தேனீ கூடுகள் மூலம் வேலி அமைத்தல்**

கோயம்புத்தூர் வனக்கோட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவில் யானைகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. 120 கி.மீ நீள வன எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சுமார் 110 கிராமங்கள் மனித–வன உயிரின மோதல்களால் பாதிப்புக்குள்ளாகின்றன.

தேனீ கூடு மூலம் வேலி அமைத்து விவசாயப் பயிர்களை அழிக்கும் யானைகளை தடுக்கும் இப்புதுமை திட்டம் ஆப்பிரிக்க நாடுகளில் பலனளிக்கும் வகையில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் செலவு குறைவானதாகவும், இயற்கை சூழலுக்கு உகந்ததாகவும் உள்ளதால், விவசாயிகள் பயன்படுத்துவதற்கு எளிதாக இருக்கும்.

எனவே, 2018–2019ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் வனக்கோட்டத்தில் மனிதன் மற்றும் யானைகளுக்கு இடையேயான மோதலை தவிர்க்கும் பொருட்டு இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1.28 கோடி செலவில் "பயிர்களை சேதம் செய்யும் யானைகளை தடுக்கும் பொருட்டு தேனீ கூடுகள் மூலம் வேலி அமைத்தல்" என்ற திட்டம் செயல்படுத்தப்படும்.

## 2. வனத்துறையில் அசாதாரண சூழ்நிலைகளை எதிர்கொள்ள உயர்நிலைப் படை (ELITE FORCE) அமைத்தல்

வனத்துறை களப்பணியாளர்கள் அவரவர் பதவிக்கேற்ப சாதாரண மற்றும் கடினமான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் செவ்வனே பணிபுரிந்து வந்தாலும், திடீரென நிகழும் கடத்தல் சம்பவம், ஆக்கிரமிப்பு, பெருமளவிலான காட்டுத் தீ மற்றும் மனித – வனஉயிரின மோதல் போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் அவற்றினை எதிர்கொள்ள, அவர்களது திறனை மேம்படுத்துவது அவசியமாகிறது. இத்தகைய தருணங்களில், நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட, அனைத்து வகை உபகரணங்கள் உள்ளடக்கிய, நிலைநிறுத்தப்பட்ட ஒரு குழுவின் உதவி அத்தியாவசியமாகின்றது. எனவே, ஒட்டுமொத்த மாநிலத்தின் தேவையினைப் பூர்த்தி செய்யும் விதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பணியிடங்களை மறுபகிர்வு செய்து மாநிலத்தில் இரண்டு இடங்களில் உயர்நிலைப்படைகள் அமைக்கப்படும். அப்படைகளுக்கு பயிற்சி அளிக்கவும் மற்றும் உபகரணங்களுக்காகவும் ரூபாய் 50 இலட்சம் செலவிடப்படும்.

## 3. கம்பியில்லா தொலைதொடர்பினை தற்போதைய அமைப்பிலிருந்து மின்னணு முறைக்கு மாற்றுதல்

கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்தியதில் தமிழ்நாடு வனத்துறை முன்னோடியாக விளங்குகிறது. தமிழ்நாடு வனத்துறையில் தற்போது வழக்கமான கம்பியில்லா

தொலை தொடர்பு வசதி உள்ளது. தற்போது கைபேசியின் வருகையினால், வனவிலங்குகள் தொடர்பான தகவல்கள் பெறுதல் மற்றும் கைபேசி அலைவரிசை பெறாத நிலை உள்ள தொலைதூர பகுதிகளில் தொடர்பு கொள்ளுதல் தவிர, இவ்வசதி பெரும்பாலும் உபயோகப்படுத்தப்படுவதில்லை.

சாதாரண காலங்களிலும் மற்றும் நெருக்கடியான காலங்களிலும் தொடர்பு மேற்கொள்ள வனத்துறைக்கென ஒரு தனி கம்பியில்லா தொலைத்தொடர்பு அமைப்பு மிக முக்கியமானதாகும். மின்னணு தொலைத்தொடர்பு முறையின் நன்மைகளாவன – (i) அதிக மற்றும் துல்லியமான ஒலி (ii) இரட்டிப்புத் திறன், (iii) மேம்பட்ட பரப்பு, (iv) ஒருங்கிணைந்த குரல் மற்றும் தகவல் திறன்கள் (v) உயர்த்தப்பட்ட கட்டுப்பாடு அம்சங்கள், (vi) அதிக ஆயுள் கொண்ட மின்கலம், (vii) பொருந்தும் தன்மை (viii) பாதுகாப்பு ஆகியவையாகும். எனவே தற்போதைய அமைப்பிலிருந்து மின்னணு முறை கம்பியில்லாத் தொலைத்தொடர்பு முறைக்கு மாற்றம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019ஆம் ஆண்டில் ரூ.5 கோடி செலவில் மின்னணு கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

## 4. மாநில வனக்கொள்கையினை வடிவமைத்தல்

தேசிய வனக் கொள்கை மத்திய அரசால் 1988ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இதனை அடியொற்றி, அந்தந்த மாநிலத்தில் நிலவும் சுற்றுச்சூழலினை கருத்திற்கொண்டு அம்மாநிலங்களுக்கான வனக் கொள்கையினை வடிவமைத்துக் கொள்ளுமாறு அனைத்து மாநிலங்களையும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. அதற்கொப்ப

தமிழ்நாட்டில் நிலவும் பன்முக உயிர்த்தன்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மக்களின் பொருளாதார மேம்பாட்டினை கருத்திற் கொண்டு, தமிழ்நாடு மாநில வனக்கொள்கையினை உருவாக்க வேண்டியுள்ளது. தமிழ்நாட்டின் வனங்கள், பண்பாடு மற்றும் சமயங்களின் அடையாளமாக உள்ளன. மக்களின் நல்வாழ்வினை காக்கும் பொருட்டு, வனங்கள் புதுப்பிக்கத்தக்க இயற்கை வளங்கள் மற்றும் தேசிய சொத்தாகக் கருதி நிலைத்த பயன்பாட்டிற்காக பாதுகாக்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மாநில வனக்கொள்கை அறிவிக்கப்படும்.

**5. ஆனைமலை புலிகள் காப்பகத்தில் ஆர்கிட் மரச்செடி அரங்கம் அமைத்தல்**

ஆனைமலை புலிகள் காப்பகம் பன்முகத்தன்மை கொண்ட பல வண்ண மலர்த்தாவரங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. சுற்றுலா பயணிகளும், ஆராய்ச்சியாளர்களும் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள பல வண்ண மலர்த்தாவரங்களை ஒரே இடத்தில் பார்க்கும் வாய்ப்புகள் தற்போது இல்லை. எனவே, இத்தகைய பன்முகத் தன்மையுடைய பல வண்ண மலர்த்தாவரங்களை ஒரே இடத்தில் அமைப்பது சிறப்பானதாகும். எனவே கல்வி, பொழுதுபோக்கு மற்றும் அறிவியல் ரீதியிலான பல வண்ணமலர்த் தாவரங்கள் கொண்ட அரங்கம் ஒன்று ஆனைமலையில் அமைக்கப்படும். இதன் பொருட்டு நாற்றங்கால் எழுப்புதல், பராமரிப்பு மற்றும் பல வண்ண மலர் அரங்கம் உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள **2018–2019** மற்றும் **2019–2020** ஆண்டுகளில் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.46.90 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 6. திருப்பத்தூர் வனக்கோட்டத்தில் உள்ள வனப்பள்ளிகளில் கணினி முறை வகுப்புகள் ஏற்படுத்துதல்

பள்ளிகளில் ஆசிரியர்கள் கற்பிக்கும் முறை மற்றும் மாணவர்கள் கற்கும் திறனை நவீன தொழில்நுட்பம் மூலம் மாற்றத்தை விரைவுபடுத்த இப்புதிய நெறிமுறை வழிவகுக்கும். மாணவர்களுக்கு தரமான கல்வி அளிப்பதோடு, உயர்தரமான கருத்துக்களை உருவாக்குதல், கற்றல் திறனை மேம்படுத்தல் மற்றும் கல்வி சார்ந்த சாதனைக்கு இத்தகைய கல்விமுறை வழிவகுக்கும். நெறிப்படுத்தும் குறிப்பேடு, முப்பரிமாண உயிரியக்க முறை தொகுதிகள் (அனிமேட் மாடுல்ஸ்), காணொளி மற்றும் செயல்பாடு மூலம் கல்வி கற்றல் இம்முறையில் உபயோகப்படுத்தப்படுகிறது. வனத்துறை பள்ளிகளில் பெரும்பாலும் பழங்குடியின மாணவர்கள் பயில்கின்றனர். இதன்மூலம் வனத்துறை மற்றும் பழங்குடியினருக்கு இடையேயான உறவு முறை மேலும் பலப்படுத்தப்படும். வன உயிரினங்கள் மற்றும் காடுகள் குறித்து உள்ளூர் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் வளமான கல்வி மையங்களுக்கு கணினி முறை வகுப்புகள் மூலம் இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019ஆம் ஆண்டில் ரூ.15.24 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 7. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட காடுகளின் எல்லைகளில் கம்பிக் கயிறு வேலி அமைப்பதன் மூலம் வனவிலங்குகள் வெளியே வருவதை தடுத்தல்

வனப்பகுதிகளுக்குள் யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியினை விட்டு வெளியேறி, அருகில் உள்ள விளைநிலங்களில் சேதம் ஏற்படுத்துவதை தடுக்கும் பொருட்டும் வேலிகள் அமைக்க வேண்டியுள்ளது. உள்ளூர் மக்களை சாந்தப்படுத்துவதுடன், அவர்களது ஒத்துழைப்புடன் வன உயிரினங்களை பாதுகாத்திட இது உதவுகிறது. பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் விளைநிலங்களில் யானைகள் புகுவதை முழுமையாக தடுக்க இயலாத நிலை உள்ளது. யானைகள் நடமாட்டத்தை தடுப்பதற்கு ஓரடுக்கு தடுப்பு போதுமானதாக இல்லை. மேலும், பாதிப்புக்கு உள்ளாகும் பகுதிகளை கண்டறிந்து பல்வகை அடுக்கு தடுப்பு அமைப்புகள் (யானைபுகா அகழிகள் மற்றும் சூரிய மின்வேலி / சிறப்பு கட்டமைப்புகள்) ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே, வலுவான மற்றும் எளிதில் பராமரிப்பு செய்யும் வகையில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் தூண்களுடன் கூடிய கம்பிக்கயிறு வேலி அமைக்கும் புதுமையான திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019 முதல் 2020–2021 வரையில் ரூ.2.62 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

## 8. களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் சூழல்சார் சுற்றுலாவிற்கென சூரிய மின்சக்தி மூலம் இயங்கும் படகுகள் அமைத்து அதன் மூலம் சுற்றுச் சூழல் விழிப்புணர்வினை விரிவுபடுத்துதல்

களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், அம்பாசமுத்திரம் கோட்டத்தில் அமைந்துள்ள, காரையாறு அணை தமிழ்நாடு மின்சாரம் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திற்கு குடிநீர் வழங்குதல் மற்றும் நீர் மின்சக்தி திட்டத்திற்கும் காரையாறு அணை பயன்படுகிறது. சுற்றுச்சூழல் மாசுபடுவதால், சுற்றுலாவிற்கு தனியார் மூலம் இயக்கப்பட்ட டீசல் படகுகள் ஜூலை 2012 முதல் நிறுத்தப்பட்டது. எனவே, காரையாறு முதல் பானதீர்த்தம் வரை செல்வதற்கு சுற்றுசூழலுக்கு மாசு ஏற்படுத்தாமலும், ஒலி எழுப்பாத வகையில், சூரிய மின்சக்தி மூலம் படகு இயங்கும் வகையில் இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019ஆம் ஆண்டில் ரூ.2.25 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

## 9. கோடியக்கரை வனஉயிரின சரணாலயத்தில் நீர்மேலாண்மை யுக்தியினை மேம்படுத்துதல்

கோடியக்கரை வன உயிரின சரணாலயத்தில் உள்ள நீர் மேலாண்மை தனித்தன்மை வாய்ந்த ஒன்றாகும். இச்சரணாலயம், தமிழ்நாட்டின் ஆண்டுச் சராசரி மழைப் பொழிவில் 25 விழுக்காட்டிற்கு மேல் மழை நீரைப் பெறுகின்ற போதிலும், கோடையின் உச்சகாலங்களில் சரணாலயத்தில் நீர் இருப்பு பற்றாக்குறையாகவே உள்ளது. ஒவ்வொரு

ஆண்டும் மார்ச் முதல் செப்டம்பர் வரையிலான காலங்களில் நீண்ட வறட்சியினால் ஏற்படும் கடுமையான நீர் பற்றாக்குறை மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லையெனில் வன விலங்குகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து சரிவு ஏற்படும் நிலை உண்டாகும்.

எனவே, கோடையின் உச்ச காலங்களில் கோடியக்கரை வன உயிரின சரணாலயத்தில் வன விலங்குகளின் எண்ணிக்கையை நலமுடன் தக்க வைத்துக் கொள்ள, நீர் மேலாண்மையின் கீழ் குறுகிய கால திட்டத்தில் லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கவும், தண்ணீர் தொட்டிகள் கட்டுதல் மற்றும் சூரிய ஒளி மூலம் உப்பு நீக்கும் நீண்டகால திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019ஆம் ஆண்டில் 27.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 10. ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள மலைப்பாங்கான புல்வெளி நிலங்களின் மீதான நீண்டகால கூர்ந்தாய்வு

ஆனைமலையில் உள்ள மலைச்சார்ந்த புல்வெளியில் நீண்டகால கூர்ந்தாய்வுப் பணிகளை மேற்கொள்ள ஆராய்ச்சி மையம் உருவாக்குவதன் மூலம் மலைசார்ந்த புல்வெளிப்பகுதிகளை அடையாளம் கண்டு, உரிய நில வரைபடம் தயாரித்து, அப்பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தாவர இனங்களின் தொகுப்பு மற்றும் மேலாண்மையினை செம்மைப்படுத்த வழிவகுக்கும்.

இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019 முதல் 2019–2020வரை ரூ.17.87 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**11. அமிர்தி சிறு உயிரியல் பூங்காவில் சுற்றுச்சூழல் அமைப்புடன் கூடிய உணவகம் அமைத்தல்**

வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலைபகுதியின் அடிவாரத்தில் தெள்ளை ஒதுக்கு காட்டில் அமைந்துள்ள அமிர்தி சிறு உயிரியல் பூங்காவில் உள்ள விலங்குகள், சுற்றுலாப் பயணிகளை கவர்வதாக உள்ளன.

2018–2019ஆம் ஆண்டில், அமிர்தி சிறு உயிரியல் பூங்காவை மேம்படுத்தும் விதமாக சுற்றுலாப்பயணிகள் காற்றோட்ட வசதி கொண்ட பாதுகாப்பான சூழ்நிலையில் ஒரே நேரத்தில் சுமார் 100 நபர்கள் ஒன்றாக அமர்ந்து உணவு உட்கொள்ள ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி உணவகம் ஒன்று ரூ.10 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**12. அமிர்தி சிறு உயிரியல் பூங்காவில் முதலைகளுக்கான புதிய விலங்குக்கூடம் அமைத்தல்**

வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதியின் அடிவாரத்தில் தெள்ளை ஒதுக்கு காட்டில் அமிர்தி சிறு உயிரியல் பூங்காவில் மான்கள், மலைப்பாம்பு, கட்டுவிரியன் மற்றும் விஷம் இல்லா பாம்பு வகைகள், மயில், கழுகு, ஆந்தை, கிளிகள் உள்ளிட்ட பல பறவை இனங்கள், வாத்து, அன்னம் உள்ளிட்ட நீர் பறவைகள் மற்றும் முதலை உள்ளிட்ட வனவிலங்குகள்

பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பூங்கா மாணவர்களுக்கு கல்வி விழிப்புணர்வு அளிப்பதோடு மக்களை மகிழ்விப்பதாக அமைந்துள்ளது.

2018–2019ஆம் ஆண்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அமிர்தி சிறு உயிரியல் பூங்காவை மேம்படுத்தும் விதமாக முதலைகளுக்கான விலங்குக்கூடம் ஒன்று ரூ.15 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**13. கிண்டி சிறுவர் பூங்காவில் தற்போதுள்ள விலங்குக் கூடங்களை புதுப்பித்தல்**

கிண்டி சிறுவர் பூங்கா 1959ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இப்பூங்காவை ஆண்டுதோறும் 9.50 இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கண்டு களிக்கிறார்கள்.

தற்பொழுதுள்ள பெரும்பாலான விலங்குக் கூடங்கள் மிகவும் பழமையானவை. கிண்டி சிறுவர் பூங்காவில் உள்ள வன உயிரினங்களின் இருப்பிடங்கள் அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்பின்படி வன உயிரினங்கள் இயற்கையான சூழலில் செயல்படவும், ஆரோக்கியமாக வாழ்ந்திட ஏதுவாக இவற்றை புதுப்பிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019ஆம் ஆண்டில் 4 விலங்குக் கூடங்கள் ரூ.40 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

**14. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் நவீன முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் அமைப்பு ஏற்படுத்துதல்**

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு வருகை புரியும் பார்வையாளர்களுக்கு தமிழ்நாடு

குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பூங்காவிலுள்ள திறந்தவெளி கிணறுகள் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது பூங்காவிற்கு அதிகளவில் பார்வையாளர்கள் குறிப்பாக குழந்தைகள் மாணவ, மாணவியர்கள் வருகை புரிகின்றனர். அவர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டும், ஒருங்கிணைந்த நவீன முறையில் சுத்திகரிக்கப்பட்ட (RO Water) குடிநீர் அமைப்பு ஏற்படுத்தப்படுவதால் பார்வையாளர்களுக்கு போதியளவில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வழிவகை ஏற்படும். எனவே அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஒருங்கிணைந்த நவீன முறையில் சுத்திகரிக்கப்பட்ட (RO Water) குடிநீர் வசதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.25 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**15. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இறக்கும் வன உயிரினங்களை எரியூட்டுவதற்கு நவீன மின் எரியூட்டு வசதி ஏற்படுத்துதல்**

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 176 இனங்களை சார்ந்த பாலூட்டிகள், பறவைகள் மற்றும் ஊர்வன வகையை சார்ந்த 2,471 விலங்குகள் உள்ளன. இவைகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வயது முதிர்வு, நோய்வாய்ப்படுதல் மற்றும் இதர காரணங்களால் இறந்து விடுகின்றன. இது போன்ற இறந்து போன உயிரினங்களின் உடல்களை தற்போது திறந்தவெளியில் எரியூட்டப்படுகிறது. இதனால் பூங்கா பகுதியிலுள்ள வனம் மற்றும் அரசு சொத்துகள் நெருப்பினால் பாதிப்பு ஏற்பட்டு இழப்பு ஏற்படாமல் தடுக்கவும்,

நோயினால் இறந்து போன வன உயிரினங்களிலிருந்து தொற்று நோய் ஏற்படாமல் தடுப்பதற்கும் நவீன மின் எரியூட்டு வசதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019ஆம் ஆண்டில் சுமார் ரூ.20 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

### 16. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஏற்படும் கழிவுகளை மறுசுழற்சி முறையில் அழிக்க நிலையம் ஒன்று ஏற்படுத்துதல்

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு தினசரி 7,000 பார்வையாளர்களுக்கு மேல் வருகை புரிகின்றனர். பார்வையாளர்கள் வருகை புரிவதன் மூலம் ஏற்படும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள், இயற்கை முறையில் மறுசுழற்சி செய்தும், திறந்த வெளியில் எரித்தும் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. சுகாதாரமான அறிவியல் தொழில்நுட்ப முறையில் அப்புறப்படுத்தும் விதமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.75 இலட்சம் செலவில், உயிரியல் பூங்காவில் சேகரமாகும் குப்பைகளான தாவரப் பொருட்கள், விலங்குகளின் உணவுக் கழிவுகள், எச்சங்கள் மற்றும் காகிதப் பொருட்கள் ஆகியவற்றை நுண்ணுயிரி ஜீரணம் முறையில் மறுசுழற்சி செய்யும் நிலையம் அமைக்கப்படும்.

# பள்ளிக் கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண் 43

### 1. ஆசிரியர்களுக்கு தொட்டுணர் கருவி (Biometric) முறையில் வருகை பதிவு செய்தல்

அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வருகைப் பதிவிற்கு தொட்டுணர் கருவி முறை நடைமுறைப்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.9 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

### 2. அரசுப் பள்ளிகளில் நூலகங்கள் அமைத்தல்

தன்முனைப்பு, படைப்பாற்றல் மற்றும் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கும் மையங்களாக செயல்படும் நூலகங்களின் சேவை, மாணவர்களைப் பல்திறன் கொண்ட செயல் விரர்களாக உருவாக்கும். இளம் பருவத்திலேயே வாசித்தலை நேசிக்கும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அரசுப் பள்ளிகளில் ரூ.6.23 கோடி மதிப்பில் நூலகங்கள் அமைக்கப்படும்.

### 3. தொழிற்கல்வி

மாணவர்கள் தங்களுடைய பாடத்திட்டத்தோடு திறன் சார்ந்த கல்வியைப் பெறும் வகையில் தொழிற்கல்வித் திட்டம் 2018–2019ஆம் கல்வி ஆண்டில் 67 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3.55 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**4. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் சிறந்த முறையில் பயிற்சி வழங்க கணினி உபகரணங்கள் மற்றும் இதர வசதிகளுடன் கூடிய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, முதற்கட்டமாக இந்த கல்வியாண்டில் 12 மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3.53 கோடி செலவிடப்படும்.

**5. கல்வித் தரத்தை மேம்படுத்த அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் சிறந்த வனங்களைப் பயன்படுத்துதல்**

கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கும் அது குறித்து பிற மாநிலங்களில் பின்பற்றப்படும் சிறந்த செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் உள்ள சிறந்த வளங்கள் பயன்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.150 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**6. கன்னிமாரா பொது நூலகத்தைப் புதுப்பித்தல்**

1896ஆம் ஆண்டு கட்டப்பட்ட 122 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த, கன்னிமாரா பொது நூலகமானது பேரறிஞர் அண்ணா, கணி மேதை இராமானுஜம் மற்றும் நோபல் பரிசு பெற்ற டாக்டர் சர்.சி.வி.ராமன் போன்ற அறிஞர்

பெருமக்களால் பயன்படுத்தப்பட்ட நூற்றாண்டு கண்ட நூலகமாகும். மேற்படி தொன்மை வாய்ந்த நூலகக்கட்டடம், அரிய வகை நூல்கள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாக்கும் வண்ணம்குளிர்சாதனவசதியுடன்புதுப்பிக்கப்படும்.மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1.50 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**7. மூன்று நூலகங்களை மாதிரி நூலகங்களாக மேம்படுத்துதல்**

குழந்தைகள், படித்த இளைஞர்கள், மகளிர், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த நூலகச் சேவை வழங்க காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள மூன்று நூலகங்கள் நவீன வசதியுடன் கூடிய மாதிரி நூலகங்களாக மேம்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1.50 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**8. இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக மாணவர்களைப் பள்ளிகளுக்கு ஈர்த்தல்**

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் ஒரு முன்னோடித் திட்டமாக, மாணவர்களின் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு மாணவர்களைப் பள்ளிகளுக்கு ஈர்க்கும் திட்டம் காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி ஆகிய

7 மாவட்டங்களில் செயல்படுத்தி வெற்றி கண்டுள்ளது. இத்திட்டம் வரும் கல்வி ஆண்டில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1.28 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 9. மாணவர்களுக்கான ஆதார் சேர்க்கை மையங்களை ஏற்படுத்துதல்

அனைத்து ஒன்றியத் தலைமையிடங்களிலும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஆதார் சேர்க்கை மையங்கள் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 10. விளையாட்டு மேம்பாட்டு பள்ளிகளை ஏற்படுத்துதல்

மாணவர்களின் கல்வி அறிவோடு அவர்களது விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் தேவையா உபகரணங்களை வழங்கி சிறப்புப் பயிற்சிகள் அளிக்க ஏதுவாக ஒரு மாவட்டத்திற்கு ஒரு பள்ளி வீதம் 32 விளையாட்டு மேம்பாட்டுப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.96 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 11. பார்வையற்ற வாசகர்களுக்கு நூலகத்தில் தனிப்பிரிவு தொடங்குதல்

பார்வையற்ற மற்றும் பார்வைக் குறைபாடு உள்ளவர்களின் நலனுக்காக கணினிகள் மூலமாக நவீன தொழில்நுட்பத்துடன்

பேசும் கருவி, பேசும் புத்தகம், மென்பொருள், கற்றல் உபகரணம், தொடுதிரை, தொடுகை வரைபடம், சிறப்பு விசைப்பலகை மற்றும் ஒலிப்புத்தகம் பயன்படுத்தும் வசதிகள் கொண்ட தனிப்பிரிவு தமிழகமெங்கும் மாவட்ட மைய நூலகங்களில் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.96 இலட்சம் செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

## 12. பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்துதல்

கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில், பெற்றோர் ஆசிரியர் கூட்டம் நடத்துதல் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. வரும் கல்வி ஆண்டிலிருந்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒவ்வொரு மாதமும் பெற்றோர் ஆசிரியர் கூட்டம் முறையாக நடத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.90.97 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 13. நூறு முழு நேர நூலகங்களுக்கு அச்சு – ஸ்கேன் – நகலெடுக்கும் கருவி வழங்குதல்

பொது நூலகங்களுக்கு வருகை புரியும் வாசகர்கள் குறிப்பாகப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் போட்டித் தேர்வுக்கு தயாராகும் போட்டியாளர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் தனித்துவத்துடன் கூடிய சேவையினை அளிக்க முதற்கட்டமாக 100 முழு நேர நூலகங்களுக்கு அச்சு – ஸ்கேன் – நகலெடுக்கும் கருவி வழங்கப்படும். மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்திட்டத்திற்கு ரூ.75 இலட்சம் செலவிடப்படும்.

## 14. அரசுப் பள்ளிகளை உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைத்தல்

உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள ஆய்வகங்கள், நூலகங்கள் மற்றும் பேராசிரியர்களின் வழிகாட்டல் ஆகியவற்றை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையிலும் புதிய படைப்புகளை உருவாக்கவும், அரசுப் பள்ளிகள் உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைக்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.67 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 15. நூலகங்களை கணினிமயமாக்குதல்

வட்ட அளவில் வாசகர் பயன்பாடு அதிகமாக உள்ள 30 நூலகங்களைத் தேர்வு செய்து, மாவட்ட மைய நூலகத்திலுள்ள நூலகச் சிறப்பு மென்பொருளைப் பயன்படுத்தி நூல்கள் வழங்குதல் மற்றும் திரும்பப் பெறுதல் போன்ற பல்வேறு பணிகளை மேம்படுத்தவும், நூலகங்களை ஒருங்கிணைக்கவும் மற்றும் வாசகர்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை அதிவிரைவாக பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டத்திற்கு ரூ.50 இலட்சம் செலவிடப்படும்.

### 16. பிற மாநில அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார்ந்த தேசிய நிறுவனங்களைப் பார்வையிட வாய்ப்பு ஏற்படுத்துதல்

தமிழகத்திலுள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில், இடைநிலைக் கல்வி பயிலும் திறன் மிக்க மாணவர்கள் பிற மாநிலங்களிலுள்ள அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார்ந்த தேசிய நிறுவனங்களைப் பார்வையிட வாய்ப்பு ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.40.20 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 17. அனைத்து மாவட்ட மைய நூலகங்களை நவீன மயமாக்குதல்

மாவட்ட மைய நூலகங்களுக்கு வருகை தரும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் சென்னையில் உள்ள நூலகங்களில் நடைபெறும் கருத்தரங்குகள், இலக்கிய நிகழ்ச்சிகள், போட்டித் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள், புகழ்பெற்ற எழுத்தாளர்கள், துறை வல்லுநர்களின் கருத்துரைகள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு Smart TV (அல்லது) LED Projector வசதி அனைத்து மாவட்ட மைய நூலகங்களிலும் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.32 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 18. அனைத்து மாவட்ட நூலக வலைத்தளங்களை மேம்படுத்துதல்

பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் மாவட்ட நூலக ஆணைக்குழு வலைத்தளங்களை, அனைத்து வாசகர்களுக்கும் பயன்படும் வகையில் மேம்படுத்தி வலைதள சேவை விரிவுபடுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டத்திற்கு ரூ.19.20 இலட்சம் செலவிடப்படும்.

## 19. மாவட்ட மைய நூலகங்களைத் திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்துதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மைய அரசின் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு தேர்வுகள் மற்றும் பல்துறை சார்ந்த போட்டித் தேர்வுகளுக்குத் தேவைப்படும் நூல்கள் அனைத்தையும் பதிவிறக்கம் செய்து கொள்ளவும், மாநில, தேசிய மற்றும் உலகளாவிய செய்தித்தாள்கள், இதழ்கள் மற்றும் பல்வகையான நூல்களைப் படிக்கவும் ஏதுவாக அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் திறன்மிகு நூலகங்களாக மேம்படுத்தப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டத்திற்கு ரூ.16 இலட்சம் செலவிடப்படும்.

## 20. நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்

மாறிவரும் தொழில் நுட்பங்களுக்கேற்ப வாசகர்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் நூலகர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளித்து அதன் மூலம் நூலகங்களை

மேம்படுத்துதல், பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் போன்றவைகளை நடத்துவதற்காக சென்னையில் நூலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டத்திற்கு ரூ.10 இலட்சம் செலவிடப்படும்.

## 21. உதவிக் கணக்கு அலுவலர் பணியிடம் உருவாக்குதல்

பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்தின் கீழ் ரூ.160.90 கோடி திட்ட மதிப்பீட்டில் கற்கும் பாரதம் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட வரவுசெலவு நிதி விவரங்களை நிருவகித்திடவும், திட்ட உள்தணிக்கை செயல்பாடுகளை விரைவாக மேற்கொள்ளவும் ஒரு உதவிக் கணக்கு அலுவலர் பணியிடம் புதிதாகத் தோற்றுவிக்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இதற்கென ரூ.10 இலட்சம் செலவிடப்படும்.

## 22. படித்த இளைஞர்கள் போட்டித் தேர்வுகள் குறித்த விவரங்களைப் பெற மென்பொருள் உருவாக்குதல்

படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதில் பொது நூலகங்களில் குடிமைப்பணித் தேர்வுகள் உட்பட அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் தயாராகும் போட்டியாளர்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான அனைத்து விவரங்களும் உரிய நேரத்தில் சென்றடையும் வகையில் மென்பொருள் உருவாக்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டத்திற்கு ரூ.5 இலட்சம் செலவிடப்படும்.

## 23. மாவட்டங்கள் தோறும் "சிறந்த வாசகர் வட்ட விருது" வழங்குதல்

மக்களிடையே நூல் வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தும் பணியில் பொது நூலகங்களுடன் இணைந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை செயல்படுத்தி வரும் வாசகர் வட்டத்தினரை சிறப்பிக்கும் வண்ணம் நூலக ஆர்வலர் விருது தலா ரூ.5,000 வீதம் 32 மாவட்டங்களுக்கும் தலா ஒரு விருது வழங்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டத்திற்கு ரூ.1.60 இலட்சம் செலவிப்படும்.

## 24. முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருதின் பரிசுத் தொகையினை உயர்த்துதல்

அர்ப்பணிப்பு உணர்வுடன் சிறப்பாகச் செயலாற்றி வரும் நூலகர்களைப் பாராட்டி, கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் சிறந்த நூலகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.2,000 பரிசுத் தொகை மற்றும் வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டன. வரும் ஆண்டு முதல் முனைவர் எஸ்.ஆர். அரங்கநாதன் விருது, வெள்ளிப்பதக்கத்துடன் பரிசுத்தொகை ரூ.5,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இத்திட்டத்திற்கு ரூ.0.99 இலட்சம் செலவிடப்படும்.

## 25. நூலகங்களில் Wi-Fi– வசதி ஏற்படுத்துதல்

நூலகங்களில் வாசகர்களின் வருகையினை அதிக அளவில் ஈர்த்திடும் வகையில் முதல் கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கோயம்புத்தூர் மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி Wi-Fi வசதி ஏற்படுத்தப்படும்

## 26. மாணவ, மாணவியருக்கான "இளம் படைப்பாளர் விருது" வழங்குதல்

மாணவ, மாணவியர்களின் சிந்தனைத் திறன், நற்பண்புகள், பேச்சாற்றல் மற்றும் எழுத்தாற்றல் கொண்ட புதிய படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பேச்சு, கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தி மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவ, மாணவியருக்கு "இளம் படைப்பாளர் விருது" வழங்கப்படும்.

## 27. தமிழ்நாடு அரசு கேபிள் தொலைத்தொடர்பு மூலம் கல்வி ஒளிபரப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு அரசு கேபிள் தொலைத்தொடர்பு மூலம் மாணவர்களுக்குப் பயன்தரும் பல்வேறு பாடப் பிரிவுகளைச் சார்ந்த 5,000 காணொளிக்காட்சிகள் தொகுக்கப்பட்டு ஒளிபரப்பப்டும். தொடக்கத்தில் இது ஒரு மணி நேரத்திற்கு ஒளிபரப்பப்படும். பின்னர் தேவையின் அடிப்படையில் ஒளிபரப்பு நேரம் நீட்டிக்கப்படும்.

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

## கூட்டுறவு

### மானியக் கோரிக்கை எண் 12

**1. 14 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடங்களை விரிவாக்குதல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட சேவையினை நவீன வசதிகளுடன் வழங்க, 14 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் தற்போதைய அலுவலகக் கட்டடங்கள் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் விரிவாக்கப்படும்.

**2. 32 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.98.44 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாப்பு வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்**

கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு 10 கூட்டுறவு நிறுவனங்களில் வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகங்கள் ரூ.32.70 இலட்சம் மதிப்பீட்டிலும், 9 கூட்டுறவு நிறுவனங்களில் நவீன உயர்தர பாதுகாப்புப் பெட்டகங்கள் ரூ.37.53 இலட்சம் மதிப்பீட்டிலும், 13 கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு பெட்டகங்கள் ரூ.28.21 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 32 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.98.44 இலட்சம்

மதிப்பீட்டில் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

### 3. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான சேவையை மேம்படுத்தும் பொருட்டு, கல்குளம் – விளவங்கோடு மற்றும் திண்டுக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் சின்னகல்ராயன் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றிற்கு ரூ.61.70 இலட்சம் மதிப்பில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், திருப்பூர், தாராபுரம், பல்லடம், திருச்செங்கோடு மற்றும் பழனி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் அலுவலகக் கட்டடங்களை ரூ.49.60 இலட்சம் மதிப்பில் நவீனமயமாக்குதல், சத்தியமங்கலம் மற்றும் கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ரூ.35 இலட்சம் மதிப்பில் ஏலக்களத்திற்கு மேற்கூரை அமைத்தல், ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் திண்டல் கிளையில் ரூ.11.40 இலட்சம் மதிப்பில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை அமைத்தல், திருப்பெரும்புதூர் மற்றும் மதுராந்தகம் தாலுக்கா வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு ரூ.39 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகிய பணிகள் மொத்தம் ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 4. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு 4 வாகனங்கள் ரூ.69.41 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குதல்.

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் பசுமை சமையல் கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் ஆகியவற்றை பிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வதற்கும், பொது விநியோகத்திட்ட பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யவும் இரண்டு வாகனங்கள் மற்றும் சத்தியமங்கலம் மற்றும் பவானி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு பொது விநியோகத்திட்ட பொருட்களை நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்திட தலா ஒரு வாகனம் என மொத்தம் ரூ.69.41 இலட்சம் மதிப்பீட்டில் 4 வாகனங்கள் வாங்கப்படும்.

## 5. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் பாமணி உர ஆலையை ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்தல்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்குச் சொந்தமாக, திருவாரூர் மாவட்டம், பாமணி என்ற இடத்தில் செயல்படும் உரத்தயாரிப்பு ஆலை பாமணி 17:17:17 என்ற குருணை வடிவிலான உரத்தினை உற்பத்தி செய்து வருகிறது. மேற்படி உர ஆலையின் செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 6. சத்தியமங்கலம் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் பதனிடும் அலகு நிறுவுதல்

பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தி, மதிப்பினைக் கூட்டி விற்பனை செய்து விவசாய பெருங்குடி மக்கள் மற்றும் மலைவாழ் மக்கள் அதிக இலாபம் பெற்று, தங்களது வாழ்வாதாரத்தினை வளமாக்கிக் கொள்ள, சத்தியமங்கலம் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில், சிறுதானியங்களில் உமி, தூசி நீக்கும் அலகு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

## 7. கடலூர் மாவட்ட சரவணபவா நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் கட்டுப்பாடற்ற பொருட்கள் கொள்முதல் மற்றும் விற்பனைக்காக நடைமுறை மூலதனக் கடனாக ரூ.50 இலட்சம் வழங்கப்படும்.

கடலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும், கடலூர் மாவட்ட சரவணபவா நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு, கட்டுப்பாடற்ற பொருட்களை கொள்முதல் செய்து, நுகர்வோருக்கு விற்பனை செய்ய ஏதுவாகவும், நுகர்வோர் சேவைகளை மென்மேலும் பெருக்கவும் நடைமுறை மூலதனக் கடன் ரூ.50 இலட்சம் வழங்கப்படும்.

## 8. திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்

திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு சொந்தமான இடத்தில்

பண்டகசாலையின் வியாபார வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக, 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும், சுற்றுச்சுவர் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**9. காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் கேழ்வரகு மற்றும் கோதுமை மாவு அரைக்கும் இயந்திரம், பேக்கிங் மெஷின் கன்வேயர் மற்றும் அரவைக் கூடத்தினை நவீனமயமாக்கும் பணிகள் ரூ.23.94 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

நுகர்வோர்களுக்கு தரமான நுகர் பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதற்கு ஏதுவாக, காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில், கேழ்வரகு மாவு அரைக்கும் இயந்திரம் ரூ.1.48 இலட்சம் மதிப்பீட்டிலும், அதற்கான மாவு பேக்கிங் மெஷின் மற்றும் கன்வேயர் ரூ.7.15 இலட்சம் மதிப்பீட்டிலும், கோதுமை அரைக்கும் இயந்திரம் ரூ.1.48 இலட்சம் மதிப்பீட்டிலும், அதற்கான மாவு பேக்கிங் மெஷின் மற்றும் கன்வேயர் ரூ.7.15 இலட்சம் மதிப்பீட்டிலும், மேற்படி அரவைக் கூடத்தினை நவீனமயமாக்கும் பணிகளை ரூ.6.68 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் மேற்படி பணிகள் அனைத்தும் ரூ.23.94 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**10. நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்படும் மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் ஏற்கெனவே செயல்படும் கட்டடத்தை அகற்றிவிட்டு புதிய அலுவலகக் கட்டடம் மற்றும் வணிக வளாகம் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்படும், மயிலாடுதுறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் உறுப்பினர்களுக்கான சேவையை மேம்படுத்தும் பொருட்டு, புதிய அலுவலகக் கட்டடம் மற்றும் வணிக வளாகம் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**11. திருப்பூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் சுயசேவைப் பிரிவினை நவீனமயமாக்கும் பணிகள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

பொதுமக்களுக்கும், நுகர்வோர்களுக்கும் தரமான நுகர்பொருள்களை நியாயமான விலையில் வழங்கி, விலைவாசி உயர்வினை கட்டுப்படுத்துவதில் பெரும்பங்காற்றி வரும் கூட்டுறவு பண்டகசாலையின் சேவையினை மேலும் மேம்படுத்திட ஏதுவாக, திருப்பூர் மாவட்டத்தில் செயல்படும் திருப்பூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் உள்ள சுயசேவைப் பிரிவினை ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**12. திருவாரூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையில் கிடங்கு கட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் ரூ.12.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

திருவாரூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்குச் சொந்தமான இடத்தில், புதிய கிடங்கு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். மேலும் பண்டகசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் நீர்சுத்திகரிப்பு கருவி அமைக்கவும் மற்றும் கண்காணிப்புக் கேமிரா ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் பொருத்தவும் ஆக மொத்தம் ரூ.12.40 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**13. விருதுநகர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் புதிய சுயசேவைப்பிரிவு ரூ.9.86 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

வாடிக்கையாளர்களின் சேவையை மேம்படுத்தும் விதமாக, விருதுநகர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்குச் சொந்தமான இடத்தில், புதிய சுயசேவைப்பிரிவு ரூ.9.86 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**14. சென்னை மத்திய கூட்டுறவு வங்கியில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் தானியங்கி பாதுகாப்பு பெட்டக வசதி ஏற்படுத்துதல்**

சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் அண்ணா நகர் இரண்டாவது அவென்யூ கிளையில் வாடிக்கையாளர்களின்

மதிப்பு மிக்க பொருட்களை பாதுகாக்கும் பொருட்டு, நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட தானியங்கி வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் 24 மணி நேரமும் கடவுச் சொல்லினை (Password) பதிவு செய்து பாதுகாப்பு பெட்டக வசதியை பயன்படுத்த இயலும். இந்த தானியங்கி பாதுகாப்பு பெட்டகம் உயர்தர பாதுகாப்பும், துல்லிய சேவையையும் வழங்கக் கூடியவை.

**15. 133 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.7.01 கோடி மதிப்பீட்டில் சூரிய ஒளி மின்கலம் அமைத்தல் மற்றும் பணியாளர்கள், வாடிக்கையாளர்களுக்காக 11 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்**

கூட்டுறவு நிறுவன வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவையினை தடையின்றி வழங்கவும், கூட்டுறவு நிறுவனங்களில் மின் செலவினத்தைக் குறைக்கவும், 2018–2019ஆம் ஆண்டில், 133 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.7.01 கோடி மதிப்பீட்டில், சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் அலகுகள் நிறுவப்படும்.

மேலும், கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திரங்கள், 11 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 16. 6 கூட்டுறவு நிறுவனங்களில் ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம் கட்டுதல்

கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள காலி இடங்களில் வணிக வளாகம் மற்றும் திருமண மண்டபம் கட்டுவதன் மூலம், சங்கங்களின் வருவாயினைப் பெருக்க, முடியும் என்பதால், 5 கூட்டுறவு நிறுவனங்களில் வணிக வளாகமும், 1 கூட்டுறவு நிறுவனத்தில் திருமண மண்டபமும் ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் இவ்வாண்டில் பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக கட்டப்படும்.

இதனால் இச்சங்கங்களில் உள்ள காலி இடங்களை முழுமையாகப் பயன்படுத்தி, இந்த வளாகங்களை வாடகைக்கு விடுவதன் மூலமாக சங்கங்களின் நிதிநிலை உயரும்.

## 17. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நவீன பணம் செலுத்தும் இயந்திரம் (Cash Deposit Machine) மற்றும் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (Automated Teller Machine) நிறுவுதல்

வணிக வங்கிகளுக்கு இணையாக நவீன தொழில்நுட்ப சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் பொருட்டு, சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் அண்ணா நகர் இரண்டாவது அவென்யூ கிளை மற்றும் பாண்டிபஜார் கிளைகளில் வாடிக்கையாளர்கள், 24 மணி நேரமும் பணம் செலுத்த மற்றும் பணம் பெற ஏதுவாக பணம் செலுத்தும் இயந்திரம் (Cash Deposit Machine), தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (Automated Teller Machine) மற்றும்

கணக்கு புத்தக அச்சு இயந்திரம் ஆகியன ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

மேலும், வங்கியின் வாடிக்கையாளர்கள் பணம் பெற ஏதுவாக, முத்தியால்பேட்டை மற்றும் இராயபுரம் கிளைகளில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு இச்சேவைகளை வழங்க ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**18. நகர்மயமாதல் மற்றும் தொழில்மயமாதல் காரணமாக நகர்ப்புறத்திற்கு அருகில் செயல்பட்டு வரும் 12 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களை நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றியமைத்தல்**

நகர்மயமாதல் மற்றும் தொழில்மயமாதல் காரணமாக நகர்ப்புறத்திற்கு அருகில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை, நகர மக்களின் வங்கித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மாற்றியமைப்பது அவசியமாகிறது. இதனை கருத்தில் கொண்டு, **2018–2019**ஆம் ஆண்டில், **12** தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றியமைக்கப்படும்.

# எரிசக்தித் துறை

## மானியக் கோரிக்கை எண் 14

1. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி நாமக்கல் மின் பகிர்மான வட்டத்திற்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிய மத்திய அலுவலகக் கட்டடம் அமைக்கப்படும்.

2. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மயிலாப்பூர் 230 கி.வோ. துணை மின் நிலைய வளாகத்தில் ரூ.16 கோடி செலவில் ஒருங்கிணைந்த கணினி மின்தடை நீக்கும் மையம், ஸ்கேடா மையம், புதிதாக அமையவிருக்கும் மேற்பார்வை பொறியாளர் (சென்னை வளர்ச்சி வட்டம்/திட்டங்கள்) அலுவலகம், தலைமைப் பொறியாளர் (மின்பகிர்மானம்/வடக்கு) அலுவலகம் மற்றும் மேற்பார்வை பொறியாளர் (சென்னை வளர்ச்சி வட்டம்) அலுவலகம் ஆகியவற்றிற்கான புதிய கட்டடம்அமைக்கப்படும்.

**3. நேரடி பணி நியமனம்**

அ) இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மண்டலத்திற்கு மொத்தம் 1,000 கள உதவியாளர் மற்றும் பிற மண்டலங்களுக்கு

1,000 கள உதவியாளர் பதவிகளுக்கான தகுதியான நபர்கள் வெளிப்படையான முறையில் (Transparent) எழுத்து தேர்வு மூலமாக தேர்வு செய்யப்பட்டு, எழுத்து தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இன, இட ஒதுக்கீடு அடிப்படையில், நேரடி பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

ஆ) இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் 150 உதவி பொறியாளர் (மின்னியல்), 25 உதவி பொறியாளர் (சிவில்), 25 உதவி பொறியாளர் (இயந்திரவியல்) மற்றும் 250 இளநிலை உதவியாளர் (கணக்கு) பதவிகளுக்கான தகுதியான நபர்கள் வெளிப்படையான முறையில் (Transparent) எழுத்து தேர்வு மூலமாக தேர்வு செய்யப்பட்டு, எழுத்து தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் இன, இட ஒதுக்கீடு அடிப்படையில் நேரடி பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

**4. புதிய மின் பகிர்மான வட்டம் மற்றும் கோட்டம் உருவாக்குதல்.**

அ) இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி திருவண்ணாமலை மின் பகிர்மான வட்டத்தை இரண்டாக பிரித்து ரூபாய் 8.77 கோடி மதிப்பீட்டில் ஆரணியில் புதிய வட்டம் அமைக்கப்படும்.

ஆ) இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி மேற்பார்வை பொறியாளர் (சென்னை வளர்ச்சி வட்டம்/திட்டங்கள்) என்ற ஒரு புதிய வட்டம் சென்னையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணிக்க ரூபாய் 4.31 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

இ) இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அதிகமான மின் பகிர்மான கட்டமைப்பை கொண்டுள்ள உதகமண்டல மின் பகிர்மான கோட்டத்தை இரண்டாக பிரித்து, கூடலூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மின் பகிர்மான கோட்டம் ரூபாய் 1.83 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஈ) இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தாம்பரம் மின் பகிர்மான கோட்டத்தை இரண்டாக பிரித்து, பல்லாவரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மின் பகிர்மான கோட்டம் ரூபாய் 1.83 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

உ) பத்திற்கும் மேற்பட்ட பழைய புனல் மின் நிலையங்களின் ஆயுட்காலத்தை மேலும் 25 ஆண்டுகள் நீட்டித்து நிறுவு திறனை மேம்படுத்தும் வேலைகளை (Renovation, Modernisation and Uprating) செவ்வனே மேற்கொள்ள, மேற்பார்வை பொறியாளர் (புனல்/சீரமைத்தல், நவீன மயமாக்கல் மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்துதல் (RMU), கோயம்புத்தூர் கட்டுப்பாட்டில் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி ரூபாய் 1.75 கோடி வருடாந்திர செலவில் கோட்டங்கள் மற்றும் உபகோட்டங்கள் உருவாக்கப்படும்.

5. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விவசாய மின் இணைப்பு பெற காத்திருப்பு பட்டியலிலுள்ள விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் விரைந்து விவசாய மின் இணைப்பைப் பெறும் வகையில் விரைவு (தட்கல்) மின்னிணைப்பு வழங்கல் திட்டத்தின் மூலம் 5 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், 7.5 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் இரண்டு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம், 10 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் மூன்று இலட்சம் மற்றும் 15 குதிரைத் திறனுள்ள மின் மோட்டார்களுக்கு ரூபாய் நான்கு இலட்சம் வீதம் ஒரு முறை கட்டணம் செலுத்தும் 10,000 விண்ணப்பதாரர்களுக்கு இந்த வருடமும் இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்படும்.

6. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநிலத்தின் பின்தங்கிய கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காக, குறைந்தப்பட்சமாக 20 மெகா வாட் நிறுவு திறன் கொண்ட சிறிய கிராமப்புற சூரிய பூங்காக்களை அமைப்பதற்கான மாநில முகமை நிறுவனமாக, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை திகழும். இத்திட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு,

குறைந்தபட்சம் ஒரு ஏக்கருக்கு, ஆண்டொன்றுக்கு ரூ.10,000 வீதம் வருவாய் கிடைக்கப்பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

7. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநிலத்திலுள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு, அதிக அளவில் வருமானம் ஈட்டும் தொழில் முனைவோருக்குரிய வாய்ப்புகளை உருவாக்கித்தருவதற்கும், வேலையில்லா இளைஞர்கள் ஒரு மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தி மின் நிலையங்களை நிறுவுவதற்கும், தேவையான ஊக்கம் மற்றும் வசதிகளை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்து கொடுக்கும்.

8. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மின்சார உற்பத்தியின் பொருளாதார நன்மைகளை விவசாயிகளுக்குக் கொண்டு சேர்ப்பதற்கும், அவர்களின் வருமானத்தை மேம்படுத்தவும், எரிசக்தித் திறனை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையானது விவசாயிகள் தங்களது சொந்த நிலத்தில் சூரிய மின் உற்பத்தி செய்து அதனைத் தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்கும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் இதர தேவைப்படுவோருக்கும் விற்பனை செய்வதற்கும் தேவையான ஊக்கத்தையும், உதவிகளையும் செய்யும்.

9. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்க, சொந்த நிலங்களை உடைய பல்கலைக்கழகங்கள், அறக்கட்டளை நிறுவனங்கள், அறக்கட்டளைகள் மற்றும் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சங்கங்கள் ஒவ்வொன்றும் அதிகபட்சம் 5 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட சூரியசக்தி மின் நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்படுவர்.

10. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சூரிய எரிசக்திக் கொள்கையில் அறிவித்துள்ளபடி தெரு விளக்குகளை மின்னூட்டுதல் மற்றும் சூரிய எரிசக்தி மூலம் இயங்கும் நீர் இரைப்பான்கள், அரசு கட்டடங்களின் மேற்கூரையில் நிறுவப்படும் சூரிய அமைப்புகளுக்கு உத்வேகம் அளிக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்காக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, தமிழ்நாடு வெளிப்படை தன்மை சட்டத்தின் கீழ் மாநில முகமையாக விளங்கும் மற்றும் அரசுத்துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், சங்கங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சேவை நிறுவனமாக செயல்படும். இந்த நோக்கத்திற்காக தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை ஒரு சிறப்பு நோக்கு அமைப்பாக செயல்படுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை

### மானியக் கோரிக்கை எண் 37

**1. கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் கள்ள மதுபானத் தொழிலில் ஈடுபட்டு மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதி வழங்குதல்**

**Providing Assistance for Rehabilitating persons who have been weaned away from illicit distillation and illicit liquor trade**

தமிழ்நாட்டில், கள்ளச்சாராயம் காய்ச்சுதல் மற்றும் அதன்மூலம் ஏற்படும் தீமைகளை முற்றிலும் களையவும், இறக்குமதி செய்யப்பட்ட அயல்நாட்டு மதுபானங்களை கள்ளத்தனமாகக் கடத்துதல், விற்பனை செய்தல், போலி மற்றும் ஆயத்தீர்வை செலுத்தப்படாத இந்தியத் தயாரிப்பு அயல்நாட்டு மதுபானங்களைக் கள்ளத்தனமாக விற்பனை செய்தல், தெளிந்த சாராவி கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல், கள்ளச்சாராயம் காய்ச்சுதல், கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றங்களுக்கு சிறைத்தண்டனை பெற்று விடுதலையாகி, மனம் திருந்துபவர்களின் பொருளாதார மறுவாழ்வுக்காகவும், அவர்கள் மீண்டும் இத்தொழிலைத் தொடராமல் வேறு தொழில்களை மேற்கொள்ள உதவுவதற்காகவும், 2011–2012ஆம் ஆண்டு முதல் ரூ.5 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டிலும்,

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.5 கோடி மானியமாக மறுவாழ்வு நிதி வழங்கப்படும்.

## 2. குடிப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்

## Conducting Awareness Campaigns against Consumption of Liquor

குடிப்பழக்கத்திற்கு மக்கள் அடிமையாகாமல் இருக்கவும், அவ்வாறு குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள், அப்பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனும், குடிப்பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ள, மாவட்டந்தோறும் போலி மதுபானங்கள் மற்றும் கள்ளச்சாராயத்தினால் ஏற்படும் தீமைகளைப்பற்றி, விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்த, 2011ஆம் ஆண்டு முதல் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியானது, 2015–2016ஆம் ஆண்டு முதல் ரூ.3 கோடியாக உயர்த்தப்பட்டது. மேலும், 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018ஆம் ஆண்டுகளில் ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியாண்டிலும், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குதல்

## Pay increase for TASMAC Retail Vending Personnel

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் (டாஸ்மாக்) 26,463 சில்லறை விற்பனைப் பணியாளர்கள் உள்ளனர். இவர்கள் தொகுப்பு ஊதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். டாஸ்மாக் நிறுவனத்தில் பணியாற்றும் சில்லறை விற்பனை பணியாளர்களான மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு, 2011, 2012, 2013, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆகிய ஏழு ஆண்டுகளிலும் முறையே ரூ.500, ரூ.400 மற்றும் ரூ.300 என ஒவ்வொரு ஆண்டும் தொகுப்பு ஊதியமானது உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் உதவி விற்பனையாளர்களுக்கு மாத தொகுப்பு ஊதியம் முறையே ரூ.750, ரூ.600 மற்றும் ரூ.500 என உயர்த்தி வழங்கப்படும். இந்த ஊதிய உயர்வுகள், செப்டம்பர் 2018 முதல் நடைமுறைப்படுத்தப்படும் இதனால் டாஸ்மாக் நிறுவனத்தில் பணிபுரியும் 7,287 மேற்பார்வையாளர்களும், 15,532 விற்பனையாளர்களும் மற்றும் 3,644 உதவி விற்பனையாளர்களும் பயன்பெறுவர். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.19.93 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. தமிழ்நாடு மாநில வாணிபக் கழக சில்லறை விற்பனை பணியாளர்களுக்கு குடும்ப நல நிதி (குழு காப்பீட்டுத் திட்டம்) உதவித் தொகையை ரூ.1.50 இலட்சத்தில் இருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்**

**Enhancement of benefit from Family Benefit Fund (Group Insurance Scheme-GIS) from Rs.1.50 lakh to Rs.3 lakh**

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் சில்லறை விற்பனைப் பணியாளர்கள் தொகுப்பு ஊதிய முறையில் பணியாற்றி வருகிறார்கள். இதில் மரணம் அடைந்த பணியாளர்களின் குடும்பத்தாருக்கு ரூ.1.50 இலட்சம், குடும்ப நல நிதி (குழு காப்பீட்டுத் திட்டம்)–யிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக, ஒவ்வொரு மாதமும் ரூ.30 பணியாளர்களின் தொகுப்பு ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த ஆண்டு முதல், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி குடும்பநல நிதியிலிருந்து வழங்கப்படும் உதவித்தொகையானது ரூ.1.50 இலட்சத்திலிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக பணியாளர்களின் தொகுப்பு ஊதியத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் ரூ.60 பிடித்தம் செய்யப்படும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு கூடுதலாக ரூ.1.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5. மதுவிலக்கு அமலாக்கப்பிரிவின் 24 சோதனைச் சாவடி வாகனங்களின் மேற்புறத்தில் பொருத்துவதற்கு புகைப்படக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல்

## Providing top mounted Cameras & Accessories for the 24 check post vehicles of Prohibition Enforcement Wing

மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுக்கு 24 சோதனைச் சாவடி வாகனங்கள் உள்ளன. சாலைகளின் வழியாக கள்ளச்சாராயம், தெளிந்த சாராவி, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபானங்கள் கடத்தப்படுவதைக் கண்டுபிடிக்கவும், மாநிலத்தின் எல்லையோரப் பகுதிகளில் இது சம்பந்தமான கண்காணிப்பை மேம்படுத்தவும், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு சோதனைச் சாவடி வாகனங்களின் மேற்புறத்தில் பொருத்த, இரவுப் பார்வையுடன் (Night vision) கூடிய புகைப்படக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கும், மேலும் சோதனைச் சாவடி வாகனங்களைக் கண்காணிக்க நவீன கட்டுப்பாட்டு அறை அமைக்கவும், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.43.57 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. தெளிந்த சாராவி, போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபான வகைகள் கடத்தல்களை கண்டுபிடித்து கைப்பற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு அலுவலர்களுக்கும் மற்றும் அவர்களுக்கு உதவும் உள்ளூர் காவலர்களுக்கும் பண வெகுமதிகள் வழங்குவதற்கான ஊக்கநிதித் திட்டம் உருவாக்குதல்.**

**Incentive Scheme for giving Monetary rewards to Prohibition Enforcement Wing Officials and local police who help in seizure of smuggled Rectified Spirits, spurious and non-duty paid liquor.**

தமிழ்நாட்டில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவின் கீழ் **96** அலகுகள் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் ஆணையரகங்களில் இயங்குகின்றன. தெளிந்த சாராவி கடத்தல்கள், போலி மற்றும் தீர்வை செலுத்தப்படாத மதுபான வகைகள் கடத்தல்களைக் கண்டுபிடித்துக் கைப்பற்றும் இந்த அலகுகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் அவர்களுக்கு உதவும் உள்ளூர் காவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு பண வெகுமதிகள் வழங்குவதற்கு ஊக்கநிதித் திட்டம் ஒன்று உருவாக்கி, செயல்படுத்த இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மானியக் கோரிக்கை எண் 34

**1. பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி பகுதியில் புழல் ஏரி உபரி நீர் வடிகால்வாயின் குறுக்கே ஆமுல்லைவாயில், வடபெரும்பாக்கம் மற்றும் பர்மா நகர் ஆகிய இடங்களில் ரூ.44.25 கோடி மதிப்பீட்டில் பாலங்கள் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் மணலி பகுதியில் மழைக் காலங்களில் தரைப் பாலங்களை பயன்படுத்த இயலாத வகையில் மழைநீர் சூழ்ந்து பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருவதை கருத்தில் கொண்டு, பொதுமக்களின் சிரமங்களை போக்கும் வகையில் ஆமுல்லைவாயில், வடபெரும்பாக்கம் மற்றும் பர்மா நகர் ஆகிய இடங்களில் ரூ.44.25 கோடி மதிப்பீட்டில் புதியதாக பாலங்கள் அமைக்கப்படும்.

**2. பெருநகர சென்னை மாநகராட்சி, யானைக் கவுனி சாலையில் பழுதடைந்துள்ள மேம்பாலத்திற்கு பதிலாக புதியதாக மேம்பாலம் (இரயில்வே பகுதி நீங்கலாக) ரூ.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி, தற்போதுள்ள சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் மற்றும் பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையங்களுக்கிடையே இருப்புப் பாதைகளுக்கு மேல் அமைந்துள்ள யானைக் கவுனி மேம்பாலம் பழுதடைந்துள்ளதால், இப்பாலத்தினை இடித்துவிட்டு இரயில்வே துறையுடன் இணைந்து ரூ.30 கோடி மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும்.

**3. பெருநகர சென்னை மாநகராட்சி – ஸ்டீபன்சன் சாலையில் ஓட்டேரி கால்வாயின் குறுக்கே தற்போதுள்ள பாலத்தை இடித்து விட்டு புதியதாக உயர்மட்டப் பாலம் ரூ.67.76 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ஓட்டேரி குக்ஸ் சாலையையும், டாக்டர் அம்பேத்கர் சாலையையும் இணைக்கும் வகையில் ஓட்டேரி கால்வாயின் குறுக்கே உள்ள பாலம் மழைக் காலங்களில் வெள்ள நீரால் சூழப்படும் நிலை ஏற்படுவதால், இப்பாலத்தை இடித்துவிட்டு ரூ.67.76 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

**4. பெருநகர சென்னை மாநகராட்சி, கொன்னூர் நெடுஞ்சாலையில் வெள்ளத் தடுப்பு சுவர் அமைத்து பூமிக்கடியில் உள்ள மழைநீர் வடிகால் கட்டுமானத்தைப் பலப்படுத்தி ரூ.30 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்கம் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி, சென்னை – கொன்னூர் நெடுஞ்சாலையில், மேடவாக்கம் சாலை முதல், ஓட்டேரி பாலம் வரை, ஏற்கெனவே ஆக்கிரமிப்பை அகற்றிய 950 மீட்டர் நீளம் மற்றும் 12 மீட்டர் அகலமுள்ள சாலையினை விரிவுபடுத்தி போக்குவரத்து தடையின்றி செல்ல ஏதுவாக ரூ.30 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்பு சுவர் அமைத்து பூமிக்கடியில் உள்ள மழைநீர் வடிகால் கட்டுமானத்தைப் பலப்படுத்தி சாலை விரிவாக்கம் செய்யப்படும். இதனால், ஏகாங்கிபுரம் கால்வாயில் வெள்ளபெருக்கு ஏற்படாதவாறு முற்றிலும் தடுக்கப்படும்.

**5. பெருநகர சென்னை மாநகராட்சி – திருவொற்றியூர், சின்ன போரூர், பெருங்குடி ஆகிய இடங்களில் நகர்ப்புர சமுதாய நல மையங்களில் ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் 12 நீரிழிவு சிகிச்சை அலகுகள் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நகரங்களில் நீரிழிவு நோய் பெருகி வரும் நிலையில், ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் திருவொற்றியூர், சின்ன போரூர், பெருங்குடி ஆகிய இடங்களில் உள்ள 3 நகர்ப்புர சமுதாய நல மையங்களில் தேசிய நகர்ப்புர சுகாதார திட்ட நிதியின் கீழ் ரூ.2.52 கோடி மதிப்பீட்டில் ஒரு மையத்திற்கு 4 வீதம் 12 நீரிழிவு சிகிச்சை அலகுகள் அமைக்கப்படும்.

**6. குடிநீர் விநியோகத்தில் புதிய முயற்சியாக அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி வீட்டு இணைப்புகள் வழங்கப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பொது மக்களுக்கு குடிநீர் வீட்டு இணைப்பு வழங்க புதிய முயற்சியாக திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளிலும் குடிநீர் வீட்டு இணைப்புகள் வழங்கப்படும்.

**7. பழனி மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளில் குடிநீர் தேக்கத்தினை ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் குடிநீர் தேவையினை ஆண்டு முழுவதும் பூர்த்தி செய்யும் வகையில் பழனி மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளில் உள்ள கோடைக்கால நீர்த்தேக்கங்களை விரிவுப்படுத்தி கூடுதல் குடிநீர் தேக்கி வைக்க ஏதுவாக ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**8. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் திட்ட மேலாண்மை மற்றும் வடிவமைப்பு மையம் ஏற்படுத்தப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் சுமார் ரூ.4,000 கோடி மதிப்பில் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடைத்திட்டம் மற்றும் இதர உள்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிருவாக ஆணையரகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. திட்ட செயலாக்கத்தினை கண்காணித்து செவ்வனே செய்ய திட்ட மேலாண்மை மற்றும் வடிவமைப்பு மையம் ஒன்று நகராட்சி நிருவாக ஆணையரகத்தில் உருவாக்கப்படும்.

**9. அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் புதிய முயற்சியாக திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாட்டிலேயே முதன் முதலாக ஒவ்வொரு வீட்டின் உட்பகுதிகளிலும் அந்தந்த வீடுகளில் உருவாகும் கழிவுநீரினை வீட்டிற்கு வெளியே உள்ள பிரதான குழாயுடன் இணைக்கும் விதமாக குழாய்கள் பதித்தல், ஆய்வுக் குழி கட்டுதல் போன்ற பணிகள், திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி பொதுமக்களுக்கு கால தாமதமின்றி உடனடியாக கழிவுநீர் வீட்டு இணைப்பு வழங்கப்படும்.

**10. மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளையும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகரங்களாக அறிவிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 11 மாநகராட்சிகளும், 93 நகராட்சிகளும்

திறந்த வெளியில் சிறுநீர், மலம் கழிக்கும் பழக்கம் ஒழிக்கப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 1 மாநகராட்சியும் மற்றும் 31 நகராட்சிகளும், அக்டோபர் 2018க்குள் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளாக அறிவிக்கப்படும்.

**11. திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் 17 நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் 100 நுண் உரக் கூடங்கள் ரூ.50.62 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பரவலான முறையில் நுண் உரக் கூடங்களை உருவாக்கி மக்கக்கூடிய கழிவுகளை உரமாக மாற்றும் முறையானது, முதற்கட்டமாக வேலூர் மற்றும் திருச்சி மாநகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டதை தொடர்ந்து, மேலும் 3 மாநகராட்சிகள் மற்றும் 10 நகராட்சிகளில் இம்முறை விரிவுபடுத்தப்பட்டு சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நடப்பாண்டில் திருநெல்வேலி மாநகராட்சி மற்றும் 17 நகராட்சிகளில், 100 நுண் உரக் கூடங்கள் ரூ.50.62 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**12. பம்மல் அனகாபுத்தூர் நகராட்சிகளுக்கு கல்குவாரி நீர் ஆதாரத்தைக் கொண்டு புதிய குடிநீர்த் திட்டம் ரூ.6.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பம்மல் மற்றும் அனகாபுத்தூர்

நகராட்சிகளின் குடிநீர் பிரச்சனைகளுக்கு உடனடி தீர்வாக பம்மல் செங்கழுநீர்மலைப் பகுதியில் உள்ள கல்குவாரியில் உள்ள நீரை பகுப்பாய்வு செய்து சுத்திகரித்து பம்மல் நகராட்சி பகுதிக்கு நாள் ஒன்றுக்கு 1.50 மில்லியன் லிட்டர் குடிநீரும், அனகாபுத்தூர் நகராட்சிக்கு 1.00 மில்லியன் லிட்டர் குடிநீரும் ஆக 2.50 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கிட ரூ.6.40 கோடி மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

**13. தமிழகத்தின் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தேங்கியுள்ள குப்பைகளை உயிரி அகழ்வு (Bio-mining) முறையில் களைந்து நிலங்கள் மீட்டெடுக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் நீண்டகாலமாக தேங்கியுள்ள திடக்கழிவுகளை உயிரி அகழ்வு (Bio-mining) முறையில் அகற்றி, குப்பை கிடங்குகளாக மாற்றப்பட்டிருந்த நிலங்களை மீட்டெடுக்கும் திட்டம் பல்வேறு கட்டங்களாக மேற்கொள்ளப்படும்.

**14. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில், அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) நிறுவப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மிகக் குறைந்த விலையில் உயர்த்தரம் வாய்ந்த குடிநீர் வழங்க வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர்

மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து படிப்படியாக நிறுவப்படும்.

**15. இராமேஸ்வரத்துக்கு வருகின்ற பக்தர்களின் நலனுக்காக நவீன வசதிகளுடன் கூடிய யாத்ரி நிவாஸ் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புனித தலமான இராமேஸ்வரத்துக்கு வரும் பக்தர்களின் நலனை கருத்தில்கொண்டு அக்னி தீர்த்தத்திற்கு அருகில் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய யாத்ரி நிவாஸ் தனியார் மற்றும் அரசு பங்களிப்புடன் (PPP Mode) கட்டப்படும்.

**16. 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் உள்ள பூங்காக்களை அனைத்து அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போது அம்ரூத் மற்றும் பிற திட்ட நிதியுதவியுடன் 1,254 பூங்காக்கள் மேம்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் எஞ்சியுள்ள பூங்கா அமைவிடங்களில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் படிப்படியாக பல்வேறு கட்டங்களில் பூங்காக்கள் மேம்பாடு செய்யப்படும்.

**17. 8 மாநகராட்சிகள் மற்றும் 12 நகராட்சிகளில் பாதாள சாக்கடைகளில் ஏற்படும் அடைப்புகளை மனித ஆற்றலின்றி முழுக்க இயந்திரங்கள் மூலமாகவே**

**நீக்கும் வண்ணம், அடைப்பு நீக்கும் மற்றும் தூர்வாரும் இயந்திரங்கள் (Jet roding / Desilting Machineries) ரூ.13.70 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் 58 பாதாள சாக்கடைத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 35 நகராட்சிகளில் திட்டம் முடிவுற்று பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் அடைப்புகளை மனித ஆற்றலுடன் நீக்கும் நிலை உள்ளது. இந்நிலையினை மாற்றும் வகையில் 32 அடைப்பு நீக்கும் இயந்திரங்கள் மற்றும் 16 தூர்வாரும் இயந்திரங்கள் (Jet roding / Desilting Machineries) ரூ.13.70 கோடியில் தூய்மை இந்தியா திட்ட நிதியில் கொள்முதல் செய்து 8 மாநகராட்சிகள் மற்றும் 12 நகராட்சிகளுக்கு வழங்கப்படும்.

**18. அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் ஒரு இலட்சம் கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு தனி நபர் கழிப்பறைகள் கட்டிக்கொடுக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் இதுவரை 1,85,275 கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், கழிப்பறை இல்லாத 1,00,000 வீடுகளுக்கு தனி நபர் கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படும்.

## 19. குன்னூர் நகராட்சியிலுள்ள ரேலியா நீர்த் தேக்கத்தினை மேம்படுத்த ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்படும்

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குன்னூர் நகராட்சியிலுள்ள ரேலியா நீர்த் தேக்கத்தின் நீர் ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு உரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 20. கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள குறிச்சி குளத்தில், நிலத்தடி நீர் வளத்தை பெருக்கி, உலகத் தரம் வாய்ந்த பல்வேறு பொழுது போக்கு அம்சங்களுடன் கூடிய பசுமைப் பூங்கா அமைக்கப்படும்

கோயம்புத்தூர் மாநகராட்சியில், இயற்கை வளங்களை அடையாளம் கண்டு அப்பகுதி சார்ந்த வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில், மாநகராட்சிப் பகுதியில் உள்ள குறிச்சி குளத்தில் நிலத்தடி நீர் வளத்தை பெருக்கி, கொள்ளளவை அதிகரித்து, கரையினை பலப்படுத்தி, பிற பகுதிகளிலிருந்து குளத்திற்கு வரும் கழிவுநீரை சுத்திகரிக்கும் வகையில், அருகில் சிறு சிறு சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தி, பொது மக்கள் நடைபயிற்சி மேற்கொள்ளும் விதமாக நடைபாதை அமைத்தல், மிதிவண்டித் தடம் அமைத்தல், சிறுவர் பூங்கா, சிறு விளையாட்டுத் திடல்கள், பசுமைப் பகுதிகள், இருபால் உடற்பயிற்சிக் கூடங்கள், உணவு வளாகம் மற்றும் இசை நீரூற்றுக்கள் உள்ளிட்ட பல்வேறு பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய உலகத் தரம் வாய்ந்த பசுமைப் பூங்கா அமைக்கப்படும்.

**21. 11 பேரூராட்சிகளில் ரூ.35.50 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திங்கள்நகர், அம்மாபேட்டை, நன்னிலம், களியக்காவிளை, வாடிப்பட்டி, கருமத்தம்பட்டி, பேரூர், தேவர்சோலா, நடுவட்டம், பொன்னம்பட்டி மற்றும் காவேரிப்பாக்கம் ஆகிய 11 பேரூராட்சிகளில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையங்கள் ரூ.35.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**22. 8 பேரூராட்சிகளில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் சந்தை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காவேரிப்பாக்கம்,கொங்கணாபுரம், வைத்தீஸ்வரன்கோயில், எருமைப்பட்டி, காரிமங்கலம், கெலமங்களம், பாலமேடு மற்றும் ருத்ராவதி ஆகிய 8 பேரூராட்சிகளில் ரூ.8 கோடி மதிப்பீட்டில், சந்தை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**23. 49 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் 23 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் ரூ.55.86 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 49 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் தற்போது 15 வருடத்திற்கும் மேலாக செயல்பாட்டில் உள்ள

23 கூட்டுக் குடிநீர் திட்டங்களில் ரூ.55.86 கோடி மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**24. 22 பேரூராட்சிகளில் நீண்ட காலமாக தீர்வு செய்யப்படாமலிருந்த பழைய கழிவுகள், உயிரி அகழ்வு (Bio Mining) முறையில் அகற்றப்பட்டு நிலங்கள் வள மீட்பு பூங்காக்களாக ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக 22 பேரூராட்சிகளில் பல காலமாக தீர்வு செய்யப்படாமல் இருந்த பழைய குப்பை கழிவுகள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் உயிரி அகழ்வு (Bio Mining) முறையில் முழுமையாக அகற்றப்பட்டு நிலங்கள் வள மீட்பு பூங்காக்களாக மேம்படுத்தப்படும்.

**25. தேனி மாவட்டம், மேலசொக்கநாதபுரம் பேரூராட்சியில் ரூ.38.50 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும்.**

தேனி மாவட்டம், மேலசொக்கநாதபுரம் பேரூராட்சியில் ரூ.38.50 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும். இதனால் 18,394 மக்கள் பயனடைவர்.

**26. சென்னை மாநகராட்சி, கொளத்தூர், இரட்டை ஏரியை குடிநீர் ஆதாரமாக பயன்படுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நாளொன்றுக்கு 4 மில்லியன் லிட்டர் திறனுள்ள சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, கொளத்தூர், இரட்டை ஏரியை குடிநீர் ஆதாரமாகப் பயன்படுத்தி நாள் ஒன்றுக்கு 4 மில்லியன் லிட்டர் திறனுள்ள சுத்திகரிப்பு நிலையம் அமைத்து, கொளத்தூர் குடிநீர் பகிர்மான நிலையம் மூலம் குடிநீர் வழங்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**27. சென்னை – கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விழிப்புணர்வு மையம் மற்றும் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து, பொது மக்களுக்கும், மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சென்னைக் குடிநீர் வாரியத்தின் கீழ்ப்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுமார் ரூ.2 கோடி மதிப்பீட்டில் குடிநீர் விழிப்புணர்வு மையம் மற்றும் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

**28. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் புதிய முயற்சியாக திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி சென்னை மாநகரப் பகுதியில் குடிநீர் மற்றும் கழிவுநீர் வீட்டு இணைப்புகள் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் மற்றும் கழிவுநீர் அகற்றும் திட்டங்களை

செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் கீழ், எதிர்வரும் காலங்களில், புதிய முயற்சியாக திட்ட மதிப்பீட்டிலேயே உள்ளடக்கி, சென்னை மாநகரப் பகுதியில் குடிநீர் / கழிவுநீர் வீட்டு இணைப்புகளை சென்னை குடிநீர் வாரியமே வழங்கும். இதற்கான இணைப்பு கட்டணம் மற்றும் இதர கட்டணங்களை சுலபமாக தவணைகளில் பொதுமக்கள் செலுத்த வழிவகை செய்யப்படும். இதன் மூலம் திட்டங்களின் முழுமையான பயன்களை பொதுமக்கள் உடனடியாக பெற்று சென்னை பெருநகரை சுகாதாரமானதாக மாற்றிட இயலும்.

**29. சென்னை – வளசரவாக்கம் பகுதியில் உள்ள குடிநீர் விநியோக கட்டமைப்புகள் ரூ.67.74 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை, வளசரவாக்கம் பகுதியில், சீரான குடிநீர் விநியோகம் செய்யும் வகையில், முந்தைய வளசரவாக்கம் நகராட்சியால் 2005ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட குடிநீர் விநியோக கட்டமைப்புகள் ரூ.67.74 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**30. சென்னை பெருநகரில் உள்ள விடுபட்ட தெருக்களுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டமைப்புகள் ரூ.110 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சி அமைப்புகளில் பெருகிவரும் நகரமயமாதல்

மற்றும் அதிகரிக்கும் மக்கள் தொகையின் காரணமாக குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று கட்டமைப்பு வசதிகள் இல்லாமல் புதிய குடியிருப்புகள் உருவாகியுள்ளன. இப்பகுதிகளில் புதிய குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று கட்டமைப்புகள் ரூ.110 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**31. திருச்சி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 138 ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.48 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருச்சி மாவட்டம், தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 138 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.48 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**32. கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 212 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.75 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு, பொள்ளாச்சி வடக்கு மற்றும் கிணத்துக்கடவு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 212 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.75 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**33. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள குஜிலியம்பாறை, வடமதுரை, வேடசந்தூர், ஒட்டன் சத்திரம், ரெட்டியார் சத்திரம் ஆகிய 5 ஒன்றியங்களுக்குட்பட்ட 258 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.62.26 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள குஜிலியம்பாறை, வடமதுரை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் ரெட்டியார்சத்திரம் ஆகிய 5 ஒன்றியங்களுக்குட்பட்ட 258 ஊரகக் குடியிருப்புகளுக்கு நத்தம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நீரைக்கொண்டு, 89 ஆயிரம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.62.26 கோடி மதிப்பீட்டில் 5 தொகுப்புகளைக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**34. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ரெட்டியார்பட்டி மற்றும் 63 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.28.71 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ரெட்டியார்பட்டி மற்றும் 63 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.28.71 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**35. கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும் சூலூர் ஒன்றியம் மற்றும் திருப்பூர் மாவட்டம் அவினாசி ஒன்றியத்திலுள்ள 708 குடியிருப்புகளுக்கு ரூ.220 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் மற்றும் சூலூர் ஒன்றியம் மற்றும் திருப்பூர் மாவட்டம், அவினாசி ஒன்றியத்திலுள்ள 708 குடியிருப்புகளுக்கு ரூ.220 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**36. கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஒசூர் (தேவரிப்பள்ளி, நாகொண்டபள்ளி), பர்கூர், ஊத்தங்கரை ஆகிய 3 ஒன்றியங்களிலுள்ள 218 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.70 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பேரூராட்சி மற்றும் ஒசூர் (தேவரிப்பள்ளி, நாகொண்டபள்ளி), பர்கூர், ஊத்தங்கரை ஆகிய 3 ஒன்றியங்களிலுள்ள 218 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ. 70 கோடி மதிப்பீட்டில் 4 தொகுப்புகளைக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

**37. ஈரோடு மாவட்டம், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பட்லூர் மற்றும் மாத்தூர் ஊராட்சிகளிலுள்ள 58 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மயிலம்பாடி ஊராட்சியிலுள்ள 54 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் ரூ.15.45 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஈரோடு மாவட்டம், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பட்லூர் மற்றும் மாத்தூர் ஊராட்சிகளிலுள்ள 58 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.10.62 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் பவானி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மயிலம்பாடி ஊராட்சியிலுள்ள 54 குடியிருப்புகளுக்கு ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள வரதநல்லூர் மற்றும் 53 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.4.83 கோடி மதிப்பீட்டிலும் செயல்படுத்தப்படும்.

**38. பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள தகவல் தொழில் நுட்ப வழித்தட நிறுவனங்களுக்கு ஊரப்பாக்கம் அருகில் உள்ள கிளாம்பாக்கம் ஏரியை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் விநியோக நிலையம் அமைத்து லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டம் ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி, காஞ்சிபுரம் மாவட்டம், ஒக்கியம் – துரைப்பாக்கம் அருகில் பழைய மாமல்லபுரம் சாலையில் உள்ள தகவல் தொழில் நுட்ப வழித்தட நிறுவனங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, ஊரப்பாக்கம் அருகில் உள்ள கிளாம்பாக்கம் ஏரியில் இருந்து நாளொன்றுக்கு 1.50 மில்லியன் லிட்டர் நீர் எடுத்து, கிளாம்பாக்கம் கிராமத்தில் ரூ.6.50 கோடியில் நீர் விநியோக நிலையம் அமைத்து, அந்நிறுவனங்களுக்கு லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

**39. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில் ஆராய்ச்சி, வடிவமைப்பு மற்றும் திட்ட மேலாண்மை மையம் உருவாக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அம்ரூத் மற்றும் இதர பெரிய திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்த ஏதுவாக, ஆராய்ச்சி, வடிவமைப்பு மற்றும் திட்ட மேலாண்மை மையம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில் உருவாக்கப்படும்.

**40. சேலம் மாவட்டம், இளம்பிள்ளை, பனமரத்துப்பட்டி, ஆட்டையாம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, சேலம் ஆகிய 3 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 195 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம், இளம்பிள்ளை, பனமரத்துப்பட்டி, ஆட்டையாம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, சேலம் ஆகிய 3 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 195 ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**41. திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் 10 ஊராட்சிப் பகுதிகளிலுள்ள 165 குடியிருப்புகளுக்கான புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் 10 ஊராட்சிப் பகுதிகளிலுள்ள 165 குடியிருப்புகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**42. நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி, பட்டணம், ஆர். புதுப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம் ஆகிய 2 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 358 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி, பட்டணம், ஆர். புதுப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் நாமகிரிப்பேட்டை, புதுச்சத்திரம்

ஆகிய 2 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 358 ஊரகக் குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**43. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியத்திலுள்ள 134 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் ஒன்றியத்திலுள்ள 134 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

## மானியக் கோரிக்கை எண் 42

**1. ஊரகப் பகுதிகளில் 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,500 கி.மீ. நீளத்திற்கு ஓரடுக்கு கப்பிச் சாலைகள் அமைக்கப்படும்**

ஊரகப் பகுதிகளில், மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள குக்கிராமங்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்திடும் வண்ணம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதியாண்டில், 1,500 கி.மீ. நீளத்திற்கு ஊரகப் பகுதிகளில் ஓரடுக்கு கப்பிச் சாலைகள் 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**2. ஊராட்சி ஒன்றிய பள்ளி வளாகங்களுக்கு, 107 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 200 கி.மீ. நீளத்திற்கு சுற்றுச் சுவர் மற்றும் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஊரகப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி வளாகங்களுக்கு 2018–2019ஆம் நிதியாண்டில், 200 கி.மீ. நீளத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் வெள்ளத் தடுப்புச் சுவர் 107 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 3. ஊரகப் பகுதிகளில், 50 உணவு தானிய சேமிப்பு கிடங்குகள் 5 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

உணவு தானியப் பொருட்களைப் பாதுகாக்க சேமிப்பு வசதிகள் ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதியாண்டில் ஊரகப்பகுதிகளில் 50 உணவு தானிய சேமிப்பு கிடங்குகள் 5 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 4. ஊரகப் பகுதிகளில் 385 கதிரடிக்கும் களங்கள் 16 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விவசாய விளைபொருட்களை உலர வைக்கவும், மதிப்பூட்டுவதற்கும், விவசாயிகளின் வசதிக்காகவும், 2018 2019ஆம் நிதியாண்டில், ஊரகப் பகுதிகளில் 385 கதிரடிக்கும் களங்கள் 16 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 5. ஊரகப் பகுதிகளில் 15,000 கால்நடைத் தொட்டிகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கால்நடைகளுக்கு பயன்படும் வகையில் 2018–2019ஆம் நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில்

15,000 கால்நடைத் தொட்டிகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**6. சாலையோரங்களில் 10 ஆயிரம் கி.மீ. நீளத்திற்கு 92 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 20 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படும்**

ஊரகப் பகுதிகளை பசுமையாக்கும் நோக்கத்தில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கிராம ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், நெடுஞ்சாலைகள், பிரதம மந்திரி கிராம திட்ட சாலைகளின் இருமருங்கிலும், 2018–2019ஆம் நிதியாண்டில் 10 ஆயிரம் கி.மீ. நீளத்திற்கு 20 இலட்சம் மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கும் பணி 92 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**7. ஊரகப் பகுதிகளில் 650 கிணறுகள் 44 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

நிலத்தடி நீர்மட்டம் பாதுகாப்பான வட்டாரம் என மத்திய நிலத்தடி நீர்வள அமைப்பினால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில், தனிநபர் விவசாய நிலங்களில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி விவசாய விளைநிலங்களின் பரப்பினை அதிகரிக்க மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதியாண்டில் 500 கிணறுகளும், 150 சமுதாய குடிநீர் கிணறுகளும் மொத்தம் 44 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**8. ஊரகப் பகுதிகளில் 3,708 அங்கன்வாடி மையங்களில் 14 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குழந்தைநேயக் கழிப்பறைகள் கட்டப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஊரகப் பகுதிகளில் ஏற்கெனவே உள்ள அங்கன்வாடி மையங்களில் சமூக நலத்துறையுடன் ஒருங்கிணைந்து 2018–2019ஆம் நிதியாண்டில் 3,708 குழந்தைநேய கழிப்பறைகள் 14 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**9. ஊரகப் பகுதிகளில் 600 குறு பாலங்கள், 250 சிறு பாலங்கள் மற்றும் 100 தரைப் பாலங்கள் 134 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்**

ஊரகப்பகுதிகளில் போக்குவரத்தினை மேம்படுத்திடவும் மற்றும் நீர்நிலைகளை கடந்திட ஏதுவாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில், 600 குறு பாலங்கள், 250 சிறு பாலங்கள் மற்றும் 100 தரைப் பாலங்கள் மொத்தம் 134 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**10. ஊரகப் பகுதி குடியிருப்புகளில் 300 கி.மீ. நீளத்திற்கு பேவர் பிளாக் பாதைகளாக 103 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி, ஊரகப் பகுதி குடியிருப்புகளில் உள்ள குறுகலான தெருக்கள் மற்றும் சந்துகளில் "பேவர் பிளாக்" கற்களை கொண்டு 2018–2019ஆம் நிதியாண்டில் 300 கி.மீ. நீளத்திற்கு 103 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பாதைகள் மேம்படுத்தப்படும்.

**11. ஊரகப் பகுதிகளில் 300 கி.மீ. நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் பாதை 88 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

ஊரகப் பகுதி குடியிருப்புகளில் உள்ள தெருக்கள் மற்றும் பாதைகளை சிமெண்ட் கான்கிரீட் பாதைகளாக தரம் உயர்த்தும் பொருட்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில் 300 கி.மீ. நீள சிமெண்ட் கான்கிரீட் பாதைகள் மொத்தம் 88 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**12. ஊரகப் பகுதிகளில் 50 கிராம சந்தைகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

ஊரகப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் விளைப் பொருள்களை விற்பனை செய்யும் பொருட்டும், சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தும் வகையிலும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில் 50 கிராம சந்தைகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**13. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் பணிபுரியும் 12,523 கணக்காளர்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் களப்பணிகள் வழங்கப்பட்டு மாதம் ஒன்றிற்கு மதிப்பூதியமாக 3,000 ரூபாய் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் பணிபுரியும் 12,523 கணக்காளர்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ், 12,523 கிராம ஊராட்சிகளில் பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் களப்பணிகள் மேற்கொள்வதற்காக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாய் மதிப்பூதியத்தில் வருடம் ஒன்றிற்கு 45 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

**14. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சி செயலர்களுக்கும் குழு அலைபேசி வசதி வழங்கப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் இதர அலுவலர்களுக்கு வழங்கியது போல், நடப்பாண்டில் 12,524 கிராம ஊராட்சி செயலர்களுக்கும் 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் குழு அலைபேசி வழங்கப்படும்.

**15. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பணப் பரிவர்த்தனைகளை பொது நிதி மேலாண்மை அமைப்பின் கீழ், கொண்டுவரப்படும்**

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பணப் பரிவர்த்தனைகளில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு வரும் வகையிலும், கண்காணிப்பினை மேம்படுத்தும் வகையிலும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இவ்வாண்டு முதல் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பணப் பரிவர்த்தனைகள் பொது நிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) கீழ் கொண்டு வரப்படும். இதன் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பணப்பரிவர்த்தனைகள் நிகழ்நேர கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும்.

**16. ஊராட்சி ஒன்றியங்களுக்காக 10 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதி ஆண்டில், 10 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**17. ஐந்து மாவட்டங்களில் 32 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள் கட்டப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் ஆண்டில் திருவள்ளூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவாரூர் மற்றும் சிவகங்கை ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலக வளாகங்கள் 32 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**18. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மாவட்டங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு 50 புதிய வாகனங்கள் வழங்கப்படும்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ், செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மாவட்டங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

**19. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 60 உபகோட்ட உதவி செயற்பொறியாளர்களுக்கு கணினி மயமாக்கப்பட்ட நில அளவை கருவிகள் வழங்கப்படும்.**

பல்வேறு வகையான கட்டடங்கள் கட்டுதல், பாலங்கள் கட்டுதல் மற்றும் சிறுபாசன ஏரிகள், குளங்கள் மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றிற்கு துல்லியமான அளவுகள் எடுத்து மிகச் சரியான மதிப்பீடுகள் தயாரிக்க உதவிடும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 60 உபகோட்ட உதவி செயற்பொறியாளர்களுக்கு டோட்டல் ஸ்டேசன் (Total Station) என்னும் கணினிமயமாக்கப்பட்ட கருவிகள் 3 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**20. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் மதிப்பீடுகள் தயார் செய்யும் மென்பொருள் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வடிவமைக்கப்படும்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளை விரைவாகவும் மற்றும் தரமான முறையிலும் செயல்படுத்திட மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதிப்பீடுகள் தயார் செய்யும் மென்பொருள் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேசிய தகவல் மையம் உதவியுடன் வடிவமைக்கப்படும்.

**21. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஊராட்சி நிருவாகத்தை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் 3 மாத ஊராட்சி நிருவாக சான்றிதழ் படிப்பு துவங்கப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஊராட்சி நிருவாகத்தை பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் 3 மாத ஊராட்சி நிருவாக சான்றிதழ் படிப்பு தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அங்கீகாரத்துடன் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் இவ்வாண்டு அறிமுகம் செய்யப்படும். ஊராட்சி நிருவாகம் பற்றி பயில விரும்பும் பொதுமக்கள் மற்றும் இளைஞர்களும் சேர்ந்து பயில அனுமதிக்கப்படுவர்.

**22. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், செயல்படும் 20,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு ரூபாய் 25,000 முதல் ரூபாய் 75,000 வரை மொத்தம் 104 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் உள்ள சுய உதவிக் குழுக்கள் ஆற்றல் மேம்பாடு அடையவும், சுய தொழில்கள் மூலம் பொருளாதார முன்னேற்றம் பெறவும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படுகிறது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 20,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு ரூபாய் 25,000 முதல் ரூபாய் 75,000 வரை மொத்தம் 104 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி 2018–2019ஆம் நிதியாண்டில் வழங்கப்படும்.

**23. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 13,500 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு ரூபாய் 15,000 வீதம் ஆதார நிதியாக 20.25 கோடி ரூபாய் வழங்கப்படும்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், வங்கிகளின் மூலம் அதிக அளவிலான கடன் கிடைக்கப் பெறவும், ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் உள்ள 13,500 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் மொத்தம் 20 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஆதார நிதியாக 2018–2019 ஆம் ஆண்டில் அரசினால் வழங்கப்படும்.

## 24. தமிழ்நாட்டில் 385 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான கூட்டமைப்பு 96 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுநர்களை வட்டார அளவில் ஒருங்கிணைத்திடவும், வலுப்படுத்திடவும், நிலைத்த தன்மை அடையச் செய்திடவும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 385 வட்டாரங்களிலும் 96 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

## 25. வட்டார அளவிலான பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி 13 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சிகள் வழங்கப்படும்

சமுதாயம் சார்ந்த அமைப்புகளை முன்நிறுத்தி வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்திட வட்டார அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. இவ்வமைப்புகள் வட்டார அளவிலான பயிற்சி மையங்களாகவும் செயல்படும். இம்மையங்கள் மூலம் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்குத் தேவையான அனைத்துப் பயிற்சிகளும் வழங்கப்படும். இப்பயிற்சிகளுக்காக மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019 ஆம் ஆண்டில் அரசினால் 13 கோடியே 34 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**26. மகளிர் சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பை உயர்த்தும் வகையில் இ–மதி (e-Mathi) வலைதளம் மேம்படுத்தப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதியாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சேமிப்பு, வங்கிக் கடன், கடன் திருப்பம், கணக்கு பதிவேடுகள் பராமரிப்பு போன்ற முழு விவரங்களும் உடனுக்குடன் தகவல்பெறும் வகையில் (Real Time Database) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இ–மதி (e-Mathi) வலைதளத்தை மேம்படுத்தி பதிவேற்றம் செய்யப்படும். இதன் மூலம் ஊரகப்பகுதியில் உள்ள வங்கிக்கிளைகள் விரைவாகவும் அதிக அளவிலும் குழுக்களுக்கு வங்கிக்கடன் வழங்க இயலும்.

**27. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 71ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 71,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கும் வேலைவாய்ப்பிற்கும் பல்வேறு நலத்திட்டங்களை

செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் 71ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 71,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கிட இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். நடப்பு நிதியாண்டில் (2018–2019) தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ், 25,000 ஊரக இளைஞர்களுக்கும் மற்றும் தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ், 12,000 நகர்ப்புர இளைஞர்களுக்கும் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு பணியமர்த்தப்படுவர். மேலும், மாவட்ட அளவில் 59 வேலைவாய்ப்பு முகாம்களும், வட்டார அளவில் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 385 முகாம்களும் நடத்தப்பட்டு அம்முகாம்கள் வாயிலாக 34,000 இளைஞர்களுக்கு பல்வேறு நிறுவனங்களில் பணியமர்வு வழங்கப்படும்.

**28. தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா 50,000 ரூபாய் வீதம் மொத்தம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஆதார நிதி வழங்கப்படும்.**

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வளர்ச்சி பெறவும், சுய தொழில் மூலம் பொருளாதார முன்னேற்றம் அடையவும், நகர்ப்புரங்களில் உள்ள பகுதி அளவிலான கூட்டமைப்புக்கு ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்

கீழ் செயல்படும் 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா 50,000 ரூபாய் வீதம் ஆதார நிதியாக 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் 2018–2019ஆம் நிதியாண்டில் வழங்கப்படும்.

**29. தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் ஆதார நிதியாக 10 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், குழுவின் செயல்பாட்டை வலுப்படுத்தவும், வாழ்வாதார வாய்ப்புகளுக்கு வங்கியின் மூலம் கடன் பெறவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தில் உள்ள 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 10 கோடி ரூபாய் ஆதார நிதியாக 2018–2019ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

**30. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து 25,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை 167 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 25,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட 167.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆட்டுக் கொட்டகை, மாட்டுக் கொட்டகை, நாடெப் உரக்குழிகள் (NADEP) மற்றும் அசோலா பசுந்தீவனம் உற்பத்தி மையம் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், அவர்களுக்குத் தேவையான பயிற்சியும் வழங்கப்படும். இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார நிலையும், வாழ்வாதாரமும் மேம்பாடு அடையும்.

**31. மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்திட 6 மாவட்டங்களில் 70 மீன் வலை பின்னும் கூடம், 10 மீன்உலர் களங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தி தரப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட்டிட, 70 மீன் வலை பின்னும் கூடம், 10 மீன்உலர் களங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தரப்படும்.

**32. கடலோர ஊராட்சிகளில் கட்டப்படும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகங்களுக்கு, கணினி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து தரப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்பாட்டில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள, கடலோர ஊராட்சிகளில் கட்டப்படும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகங்களுக்கு, கணினி உள்ளிட்ட உட்கட்டமைப்புவசதிகள்2கோடியே58இலட்சம்ரூபாய்செலவில் அமைத்துத் தரப்படும்.

**33. கடலோரப் பகுதி மக்களுக்கு, புதிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திடும் நோக்கில், 129 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக மாற்றப்பட்டு, வாழ்வாதார மேம்பாட்டுக் கடன், 30,000 பயனாளிகளுக்கு 75 கோடி ரூபாய் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாஅவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை

மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வசிக்கும் கடலோரப் பகுதி மக்களுக்கு, புதிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திடும் நோக்கில், **129** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக மாற்றப்பட்டு, அவை மூலம் ரூ.75 கோடி வாழ்வாதார மேம்பாட்டுக் கடன், 30,000 பயனாளிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

**34. 1,000 மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களை ஏற்படுத்தி கடன் மற்றும் உட்கட்டமைப்பு வசதி போன்றவை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், 1,000 மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கு கடன், உட்கட்டமைப்பு வசதி போன்றவை ரூ.5 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

# கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

## மீன்வளம்

### மானியக் கோரிக்கை எண் 7

**1. சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் படகுகள் நிறுத்துமிடத்திலுள்ள இட நெரிசலை குறைக்கும் விதமாக 5 கோடி ரூபாய் செலவில் படகு அணையும் தளம் நீட்டித்து அமைக்கப்படும்.**

சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் விசைப்படகுகள் மற்றும் பாரம்பரிய மீன்பிடி படகுகள் இட நெரிசல் இன்றி, எளிதாக நிறுத்திட ஏதுவாக படகு அணையும் தளத்தினை இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 5 கோடி ரூபாய் செலவில் கூடுதலாக 70 மீட்டர் அளவிற்கு நீட்டிக்கப்படும். இந்த மீன்பிடி படகு அணையும் தளத்தினை நீட்டிப்பதன் மூலம் சென்னை மீன்பிடி துறைமுகத்தில் கூடுதலாக 100 மீன்பிடி படகுகளை நிறுத்த இயலும். மேலும், மீன்பிடி துறைமுகத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள மீன் ஏலமிடும் பகுதிகளை முழுமையாக பயன்படுத்திட வழிவகை ஏற்படும்.

**2. பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடி திறன் மற்றும் மீன் உற்பத்தியினை அதிகரித்திட ஏதுவாக 50 விழுக்காடு மானியத்தில் வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் 2 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்**

மீன்பிடி படகுகளின் வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் குறைந்த உழைப்புத்தன்மை கொண்டவையாக இருப்பதாலும், பாரம்பரிய கடல் மீனவர்கள் புதிய இயந்திரங்கள் வழங்கிட தொடர்ந்து கோரிவருவதாலும், அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் புதியதாக வாங்கிட பாரம்பரிய மீனவர்களுக்கு 2 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக அலகு ஒன்றுக்கு 60,000 ரூபாய் வீதம் வழங்கப்படும்.

**3. தமிழ்நாட்டின் உவர்நீர் வாழ் உயிரின வளர்ப்பிற்கு உகந்த உவர்நீர் வள வரைபடம் (Resource Mapping) தயார் செய்யும் பணி 50 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்**

தமிழ்நாட்டில் கடலோர மீன் வளர்ப்பினை அதிகரித்திடும் பொருட்டு கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களில் உள்ள உவர்நீர் ஆதாரங்கள் கண்டறியப்பட்டு உவர்நீர் வள வரைபடம் தயாரிக்கப்படும். இதயதெய்வம் மாண்புமிகு

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேற்கண்ட 6 மாவட்டங்களில் உள்ள நில பயன்பாட்டு முறை, நிலத்தடி நீர் தேங்கும் தன்மை மற்றும் நீர் ஆதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் 50 இலட்சம் ரூபாய் செலவில் உவர்நீர் வள வரைபடம் தயார் செய்யப்படும். இந்த ஆய்வின் மூலம் மீன் மற்றும் இறால் உற்பத்தியினை பெருக்குவதோடு மாநிலத்தின் ஏற்றுமதி திறனும் அதிகரிக்கப்படும்.

**4. கடலில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பிற்கு தேவையான மீன்குஞ்சு உற்பத்தி மேற்கொள்ள 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கடல் மீன்குஞ்சு வளர்ப்பகம் அமைக்கப்படும்.**

நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டத்தின் கீழ் கடலோர மீனவர்களுக்கு, கடல்மீன்களின் வளர்ப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டு காஞ்சிபுரம், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீனவக் குழுக்களால் கடல்மீன் வளர்ப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீன்வளர்ப்பிற்கான மீன்குஞ்சுகள் தேவையைப் பூர்த்தி செய்ய இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் 1 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் கடல் மீன்குஞ்சு வளர்ப்பகம் உருவாக்கப்படும்.

**5. இராமநாதபுரம் மாவட்ட மீனவ மகளிரின் வாழ்வாதாரத்திற்கு 3 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் கடற்பாசி வளர்ப்பு மற்றும் உபபொருட்கள் தயாரிப்பு அலகு அமைக்கப்படும்.**

பாக் வளைகுடா மாவட்டங்களை சார்ந்த மீனவ மகளிர்களுக்கு கடற்பாசி வளர்ப்பு ஒரு மாற்று வாழ்வாதாரமாக திகழ்கிறது. கடல் மீனவ மகளிருக்கு, கடற்பாசி உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடற்பாசி விதைப்பண்ணை மற்றும் உபபொருட்கள் தயாரிப்பு அலகு ஒன்று, 3 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படும். இதன் வாயிலாக 500 க்கும் மேற்பட்ட மீனவ மகளிர் பயனடைவார்கள்.

**6. காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்துள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் 1 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.**

காஞ்சிபுரம் மாவட்ட மீன் வளர்ப்போரின் மீன்குஞ்சு தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூரில் அமைந்துள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையத்தில் கூடுதலாக 1,600 சதுர மீட்டர் பரப்பளவில் மீன்குஞ்சு வளர்ப்பு குளங்கள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும். இதன்மூலம் ஆண்டுதோறும்

7 இலட்சத்து 68 ஆயிரம் மீன்விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு மீன் வளர்ப்போர்களுக்கு விநியோகிக்கப்படும். இதனால் ஆண்டிற்கு 190 டன் மீன்கள் கூடுதலாக உற்பத்தி செய்ய இயலும்.

**7. ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு பழைய மீன் பண்ணையில் உள்ள சினைமீன் குளங்கள் 1 கோடி ரூபாய் செலவில் புரனரமைக்கப்படும்.**

தமிழ்நாட்டில் மீன் விரலிகள் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்காக, புதிய மீன் பண்ணைகளை அமைத்தல் மற்றும் பழைய மீன் பண்ணைகளை புனரமைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டின் பெரிய மீன்குஞ்சு உற்பத்தி நிலையமான, பவானிசாகர் பழைய மீன் பண்ணையிலுள்ள 3,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட சினைமீன் குளங்கள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒரு கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்படும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் கூடுதலாக 2.5 கோடி நுண்மீன் குஞ்சுகள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்ய இயலும்.

**8. நீலகிரி மாவட்டத்தின் உயர்மட்ட நீரோடைகளில் குளிர் நீர் பிரதேச மீன் இனமான ‘ட்ரவுட்’ மீன் இன இருப்பு அதிகரிக்கப்படும்.**

குளிர்நீர் மீன்வள ஆதாரங்களைக் கொண்ட மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். நீலகிரி மாவட்டத்தில்

‘ட்ரவுட்’ மீன் இருப்பினை நிலைப்படுத்துவதற்கும், கேளிக்கை மற்றும் விளையாட்டு மீன்பிடிப்பினை ஊக்குவித்திடவும், உதகமண்டலத்தில் அவலாஞ்சியில் உள்ள மீன்குஞ்சு பொரிப்பகத்தில் ‘ட்ரவுட்’ மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு உயர்மட்ட நீரோடைகளில் இருப்பு செய்யப்பட்டு வருகிறது. இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 40 இலட்சம் ரூபாய் செலவில் இமாச்சல பிரதேச மாநிலத்திலிருந்து ‘ட்ரவுட்’ மீன் குஞ்சுகள் கொண்டு வரப்படும். இவை நீலகிரி மாவட்ட உயர்மட்ட நீரோடைகளில் இருப்பு செய்யப்படும்.

**9. தனியார் மீன்பண்ணையாளர்களை ஊக்குவித்திடும் பொருட்டு, மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்திட 30 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் நீலப்புரட்சி திட்டத்தின் மூலம் 2020ஆம் ஆண்டில் மீன் உற்பத்தியினை 3 மடங்காகவும் மற்றும் விவசாயிகளின் வருவாயினை 2 மடங்காகவும் உயர்த்திடுதல் நோக்கமாகும். இத்திட்டத்தின் நோக்கத்தினை எய்திட மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன் உற்பத்தியினை பெருக்குவதற்கு அரசு மற்றும் தனியார் துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் அவசியமாகும். இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3 மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திட 40 விழுக்காடு

மானியமாக 30 இலட்சம் ரூபாய் மீன்வளர்ப்போருக்கு வழங்கப்படும். இதன்மூலம் 3 கோடி மீன்குஞ்சுகள் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும்.

**10. கடல் உணவு தயாரிப்பு தொடர்பான சிறப்பு பயிற்சி சென்னை இராயபுரத்தில் உள்ள மத்திய சமையலறைக் கூடத்தில் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகத்துடன் இணைந்து வழங்கப்படும்.**

கடல் உணவினை உண்பதினால் ஏற்படும் பயன்பாட்டினை பிரபலபடுத்துவதற்கும் மற்றும் மீனவர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 20 இலட்சம் ரூபாய் செலவில் "பல்வேறு கடல் உணவுகள் தயாரிப்பது தொடர்பான குறுகிய கால சான்றிதழ் படிப்புகள்" தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வள பல்கலைக் கழகத்துடன் இணைந்து தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தால் வழங்கப்படும். இதன்மூலம் மீனவ மகளிர் குழுக்கள் மற்றும் தொழில்முனைவோர் பயன்பெறுவர்.

**11. தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் 20 இலட்சம் ரூபாய் செலவில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்படும் .**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் சில்லறை மீன் விற்பனையினை விரிவுபடுத்திட ஏதுவாக இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மற்றும் மதுரை மாநகரங்களில் 20 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு நவீன சில்லறை மீன் விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும். இதன் வாயிலாக, மாநகராட்சிகளில் பெருவாரியான நுகர்வோர்களுக்கு தரமான மீன்கள் மற்றும் மீன் உணவுகள் நியாயமான விலையில் கிடைப்பதோடு, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் சில்லறை விற்பனை வருவாயும் அதிகரிக்கும்.

**12. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடல் மீன் உணவகம், அலுவலகம் மற்றும் மீன்துறை ஆய்வு மாளிகை அமைக்கப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மீன்வளத் துறைக்கு சொந்தமான இடத்தில் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடல் மீன் உணவகம், அலுவலகக் கட்டடங்கள் மற்றும் ஆய்வு மாளிகை 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்த வளாகத்தில் உள்ள அலுவலகக் கட்டடம் இராமேஸ்வரம் மீன்துறை உதவி இயக்குநர் மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக துணை மேலாளருக்கு ஒதுக்கீடு செய்யப்படும். கடல் மீன் உணவகம் மூலம் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு கூடுதல் வருவாய் கிடைக்கும்.

**13. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மீன் விற்பனை கட்டமைப்புகளை மேம்படுத்திட தொடர் குளிர்சாதன வசதிகள் 1 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மீன் விற்பனை மற்றும் மீன் விற்பனைக்கான போக்குவரத்துக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ஏதுவாக இரண்டு நவீன மீன் விற்பனை அங்காடிகள், இரண்டு நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் நான்கு குளிர்காப்பு வசதிகளுடன் கூடிய மீன் விற்பனை வாகனங்கள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீலப்புரட்சி திட்டம் மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக நிதியின் கீழ் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் அதிகப்படியான நுகர்வோருக்கு தரமான மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களை விற்பனை செய்திட வழிவகுக்கும்.

**14. மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுவதற்கு பாரம்பரிய மீனவர்களுக்கு 35 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானியத்தில் குளிர்காப்பு பெட்டிகள் வழங்கப்படும்.**

பாரம்பரிய மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்கள், பிடிக்கப்படும் இடத்திலிருந்து விற்பனை செய்யப்படும் இடம்வரை சுகாதாரமான முறையில் கையாளும் பொருட்டும், மீன்களின் தரத்தினை பாதுகாத்திடவும், இதன்மூலம் பிடிக்கப்பட்ட மீன்களுக்கு நல்ல விலையினைப் பெற்றிடவும் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா

அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1,000 குளிர்காப்பு பெட்டிகள் 50 விழுக்காடு மானியத்தில் 35 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும். இதன்மூலம் கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,000 மீனவர்கள் பயனடைவர். இத்திட்டம் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்படும்.

**15. தமிழ்நாட்டின் நான்கு மீன்பிடி துறைமுகங்களில் 60 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுறவு அங்காடிகள் அமைக்கப்படும்.**

தூத்துக்குடி, தேங்காய்பட்டணம், குளச்சல் மற்றும் சின்னமுட்டம் ஆகிய மீன்பிடி துறைமுகங்களில் கூட்டுறவு அங்காடிகள், விசைப்படகுகளுக்கு தேவையான உணவு பொருட்கள், எரிவாயு, எரிபொருள், மீன்பிடி வலைகள் மற்றும் மீன்பிடிப்பிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கிடும் பொருட்டு இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நான்கு கூட்டுறவு அங்காடிகள் முறையே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

இத்திட்டம் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் செயல்படுத்தப்படும்.

**16. தமிழ்நாட்டின் மூன்று மீன்பிடி துறைமுகங்களில் தொடர் குளிர்சாதன வசதிகள் ஏற்படுத்தும் விதமாக 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும்.**

தேங்காய்பட்டணம், குளச்சல் மற்றும் தூத்துக்குடி மீன்பிடி துறைமுகங்களில் தொடர் குளிர்சாதன வசதிகளை மேம்படுத்திட ஏதுவாக இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 30 மெட்ரிக் டன் திறன் கொண்ட பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் தலா 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

இந்த பனிக்கட்டி உற்பத்தி நிலையங்கள் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் மீன்பிடி துறைமுக மேலாண்மை குழுக்களுடன் ஒருங்கிணைந்து இயக்கப்படும்.

**17. மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் உதவித்தொகையினை இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உயர்த்தி வழங்கப்படும். விபத்தினால் அல்லது மீன்பிடிக்கையில் இறந்தால் அல்லது காணாமல் போனால் நிவாரண உதவித்தொகை 1 இலட்சம்

ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும், மீனவர்கள் விபத்து காரணமாக ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு ஏற்பட்டால் உதவித்தொகை 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாகவும், கை அல்லது கால் இழப்பு தவிர வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்புகளில் இழப்பு ஏற்பட்டால் உதவித்தொகை 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**18. எண்ணூர் துறைமுக பகுதியில் உள்ள 8 மீனவ கிராமங்களுக்கு எண்ணூர் காமராஜர் துறைமுக பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியின் கீழ் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வாழ்வாதார வசதிகள் ஏற்படுத்தப்படும்**

எண்ணூரில் உள்ள காமராஜர் துறைமுகத்தை சுற்றி அமைந்துள்ள 8 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு பயிற்சி மற்றும் சமுக நலக்கூடம், குளிர்காப்புப் பெட்டிகள், மீன்விற்பனை செய்யும் அலுமினியப் பாத்திரங்கள், மீனவ இளைஞர்களுக்கான உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு உபகரணங்கள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, எண்ணூர் காமராஜர் துறைமுக பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியின் கீழ் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 19. மாதவரம் வண்ணமீன் வானவில் தொழில்நுட்பப் பூங்காவில் செயல் விளக்க அலகுகள் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

வண்ணமீன் வளர்ப்போருக்கு பயிற்சி மற்றும் செயல்விளக்கம் வழங்குவதற்காக மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் வண்ணமீன் வானவில் தொழில்நுட்பப் பூங்காவில் குஞ்சுப் பொரிப்பகம், நாற்றங்கால் குளம் மற்றும் வளர்ப்புக் குளம் போன்றவைகள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். இச்செயல் விளக்கத்தின் மூலமாக வண்ணமீன்களை வளர்ப்போர்கள் மற்றும் அதைச் சார்ந்த தொழில் முனைவோர்கள் பயன்பெறுவார்கள்.

## 20. மதிப்புக் கூட்டிய மீன் பொருட்கள் தயாரித்தலை மேம்படுத்திட 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் “கயலகம்” மீன் அங்காடிகள் அமைக்கப்படும்

பல்வேறு விதமான மதிப்புக்கூட்டிய மீன் பொருட்கள் எளிதில் கிடைக்க வழிவகை செய்யவும், மதிப்புக்கூட்டிய மீன் பொருட்கள் உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் மீன்வளத் தொழில் முனைவோர்களை மேம்படுத்தவும் மற்றும் தனிநபர் மீன் நுகர்வோர் எண்ணிக்கையை அதிகரிக்கவும், “கயலகம்” என்ற மீன் அங்காடிகள், இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மற்றும் பொன்னேரியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் நாகப்பட்டினம் மீன்வளப் பொறியியல் கல்லூரியிலும் அமைக்கப்படும்.

**21. வாணியஞ்சாவடியில் உள்ள முதுகலைப் பட்டமேற்படிப்பு நிலையத்தில் மாநில மீன் உணவு தரச்சான்றிதழ் ஆய்வகம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மீன் உணவு மற்றும் மீன் உணவு தயாரிக்கப் பயன்படும் மூலப்பொருட்களின் தரத்தினை ஆய்வு செய்து,மீன் உணவு தரச்சான்று வழங்கும் பொருட்டு மாநில ஆய்வுக்கூடம் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக வாணியஞ்சாவடியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்ட மேற்படிப்பு நிலையத்தில் அமைக்கப்படும். இதன்மூலம் மீன்வளர்ப்பிற்கு தரமான மீன் உணவு கிடைப்பதோடு, மீன் உற்பத்தியும் அதிகரிக்கும்.

**22. நீர் மறுசுழற்சி முறையில் கொடுவா மீன்வளர்ப்பு தொழில்நுட்ப பூங்கா 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

நீர் மறுசுழற்சி முறையில் மீன்வளர்ப்பை மேற்கொள்ளும் அமைப்பை உள்நாட்டு தொழில் நுட்பத்துடன் உருவாக்கும்

பொருட்டு இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னையிலுள்ள மாதவரத்தில் மறுசுழற்சி முறையில் கொடுவா மீன்வளர்ப்பு தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும். இதன் மூலம் சுகாதாரமான முறையில் நன்னீரில் கொடுவா மீன்வளர்ப்பை மேற்கொண்டு மீன் பண்ணையாளர்களின் வருமானத்தை இருமடங்காக்க இயலும்.

**23. மீன்வள பல்கலைக்கழகத்தில் செயல்படும் நிலைத்த மீன் உற்பத்தி மையங்கள் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் 3 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.**

கன்னியாகுமரி, இராமநாதபுரம், தஞ்சாவூர், ஈரோடு மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகத்தின் மீன் உற்பத்தி மையங்களில் வளங்குன்றா நீர்வாழ் உயிரின வளர்ப்பு பணிகளை மேம்படுத்திடவும், மீன்வளத் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் மீன்வள உற்பத்தி பணிகள் மேம்படுத்தப்படும்.

**24. தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளத்தில் ஒருங்கிணைந்த பல்அடுக்கு நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்நுட்பம் 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் மற்றும் கிராமப்புற மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதாரத்தை ஏற்படுத்தவும் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தால் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம், தருவைக்குளத்தில் ஒருங்கிணைந்த பல்அடுக்கு நீர்வாழ் உயிரின வளர்ப்பு என்கிற புதிய தொழில்நுட்பம் செயல்படுத்தப்படும்.

இதன்மூலம் கிராமப்புற மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட இயலும்.

**25. தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட மீன் வளர்ப்பு தொழில்நுட்பங்கள் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின்கீழ், இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரமான சினை மீன்கள் உற்பத்தி, தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி மற்றும் தனித்துவம் வாய்ந்த மீன் தீவனம் தயாரித்தல் ஆகியவற்றில் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

புதிய தொழில் நுட்பங்களை உருவாக்கிடவும், அத்தொழில் நுட்பங்களில் மீன்வளர்ப்பு தொழில் முனைவோர்க்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு பயிற்சி அளித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**26. பழவேற்காடு ஏரியில் மீன்வளத்தை அதிகரிக்க செயற்கை பவளப்பாறைகள் ரூ.8 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

பழவேற்காடு ஏரி பகுதியில் மண்படிவு மற்றும் ஏரியின் முகத்துவாரப்பகுதி மூடிக்கொள்ளுதல் காரணமாக மீன்களின் பல்லுயிர் வளமானது குறைந்து கொண்டே வருகிறது. எனவே, பழவேற்காடு ஏரிப்பகுதியில் மீன் பல்லுயிர் வளம் மட்டுமல்லாமல் மொத்த மீன்பிடிப்பின் அளவு மற்றும் மீன்பிடி திறன் அதிகரிக்கும் பொருட்டு இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 8 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை பவளப்பாறைகள் மற்றும் மீன்களை திரட்டும் செயற்கை பாறைகள் நிறுவப்படும்.

**27. மீன்வளர்ப்பு தொழிற்கூடங்களுக்கு தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் நவீன மீன்வளர்ப்பு தொழில்நுட்ப பயிற்சிகள் 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.**

நவீனமாகி வரும் மீன்வளர்ப்பு தொழிற்கூடங்களுக்கு செயல்திறன் மிகுந்த பணியாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் “நவீன மீன்வளர்ப்பு தொழில் நுட்பங்களில் 25 நாட்கள் கால அளவு கொண்ட நான்கு திறன் மேம்பாடு

பயிற்சிகள்'' திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இந்திய வேளாண் திறன் கழகத்தின் பாடத்திட்டத்தின்படி நடத்தப்பட உள்ளன. இப்பயிற்சிகளின் மூலம் 100 வேலையற்ற இளைஞர்கள் மற்றும் பள்ளிக்கல்வியை தொடர இயலாதவர்கள் பயன்பெறுவர். இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 36 இலட்சம் ரூபாய் செலவில் இப்பயிற்சி திட்டம் செயல்படுத்தப்படும்.

**28. கடலில் மிதவைக் கூண்டுகளில் மீன் வளர்க்கும் திட்டம் 2 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில்' செயல்படுத்தப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் அண்மைக் கடல் பகுதிகளில், கூண்டுகளில் மீன்களை வளர்த்து மாநிலத்தின் கடல் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடவும் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் மிதவைக் கூண்டில் மீன் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் தோராயமாக ஒரு கூண்டில் ஒரு வருடத்திற்கு 4 டன்கள் வரை மீன்களை உற்பத்தி செய்திட இயலும்.

# பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை

## மானியக் கோரிக்கை எண் 35

**1. புதியதாக உருவாக்கப்பட்ட பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கக்கூடிய பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றிலுள்ள பணியிடங்களுக்கு பொதுவான சிறப்பு விதிகள் உருவாக்குதல்.**

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1979ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இயங்கி வந்த "அ" மற்றும் "ஆ" பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம் 2000ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் இயங்கிவருகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான தேர்வு பயிற்சி மையம் மற்றும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான சிறப்பு பயிற்சி நிலையம் ஆகியவை 2000ஆம் ஆண்டு ஒன்றிணைக்கப்பட்டு அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையமாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் கீழ் இயங்கி வருகிறது. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம், 2018ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

இப்பயிற்சி நிலையங்களின் பணிகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம் 2012ஆம்

ஆண்டு துவங்கப்பட்டது. பயிற்சித் துறைத் தலைவர் அலுவலக பணியிடங்கள் மற்றும் மேற்குறிப்பிட்ட பயிற்சி நிலையங்களில் உள்ள பணியிடங்கள் ஆகியவற்றிற்கு இதுநாள்வரை பொதுவான சிறப்பு விதிகள் எதுவும் உருவாக்கப்படவில்லை. இப்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களின் பதவி உயர்வு போன்ற நலன்களைக் கருத்தில் கொண்டு இவற்றுக்கான பொதுவான சிறப்பு விதிகள் உருவாக்குவது அவசியமாகிறது.

எனவே, புதிதாக உருவாக்கப்பட்ட துறைத் தலைமை அலுவலகமாகிய பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கக்கூடிய (i) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், (ii) "அ" மற்றும் "ஆ" அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சி நிலையம் (iii) அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம் (iv) போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி மையம் ஆகிய பயிற்சி நிலையங்களிலுள்ள அனைத்துப் பணியிடங்கள் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகத்திலுள்ள பணியிடங்கள் ஆகியவற்றிற்கு பொதுவான சிறப்பு பணி விதிகள் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் ஆணையின்படி உருவாக்கப்படும்.

**2. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் கூடுதல் வசதிகளை மேம்படுத்துதல்.**

தமிழகத்தில் உள்ள அமைச்சுப்பணி மற்றும் நீதித்துறை அமைச்சுப்பணியைச் சார்ந்த அனைத்து இளநிலை

உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கு அடிப்படை பயிற்சி அளிப்பதற்காக பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம் 1979ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இப்பயிற்சி நிலையத்தின் உள்கட்டமைப்புகள் 685 பயிற்சியாளர்களுக்கு ஒரே அணியில் பயிற்சி அளிக்கத்தக்க வகையில் ரூ.38.43 கோடி செலவில் 2013–2015 ஆண்டுகளில் மேம்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்த இன்றியமையாத சில கூடுதல் வசதிகளான பல்நோக்கு அரங்கு, பொருட்கள் சேமிப்பதற்காக கூடுதல் அறைகள், நிலத்தடி நீரை தேக்கிவைப்பதற்கான குளம், மகளிர் விடுதிக்கு கூடுதல் கழிவு நீர் தொட்டி ஆகிய புதிய கட்டுமானங்களை நிறுவுதல் மற்றும் நிலையத்தில் கூடுதல் ஜென்செட் பொருத்துதல், உயர்ந்த கட்டடங்களுக்கு இடிதாங்கி அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கு இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.504 இலட்சம் வழங்கப்படும்.

**3. அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் பயிலும் பகுதிநேர மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிப்பது மற்றும் இலவச உணவு வழங்குதல்.**

அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வுக்காக 225 மாணவர்களுக்கு முழுநேரப் பயிற்சியும்,

100 மாணவர்களுக்கு பகுதி நேரப்பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், மீனவ சமுதாயத்தைச் சார்ந்த 20 மாணவர்களுக்கு முழுநேரப் பயிற்சி அளிக்கப்படுகிறது. முழுநேரப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு அளிக்கப்படும் உண்டி மற்றும் உறைவிடத்துடன் கூடிய பயிற்சிக்கான செலவினம் அரசால் முழுமையாக ஏற்கப்படுகிறது.

பகுதி நேரப் பயிற்சி வகுப்புகள் வார நாட்களில் மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரையிலும், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையிலும் நடைபெறுகின்றன. பகுதிநேரப் பயிற்சிக் கட்டணமாக தலா ரூ.3,000 பயிற்சியாளர்களிடமிருந்து பெறப்படுகிறது இந்தத் தொகை அவர்களுக்கு பயிற்சி அளிக்கும் சிறப்பு விரிவுரையாளர்களுக்கான மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது.

பகுதிநேரப் பயிற்சி பெறும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் பொருட்டு அவர்கள் அனைவருக்கும் வார நாட்களில் இரவு உணவு, சிற்றுண்டி மற்றும் தேநீரும், வார இறுதி நாட்களில் காலை மற்றும் மதிய உணவு, தேநீர் ஆகியவற்றை வழங்கும் பொருட்டு தற்போது வழங்கப்பட்டு வரும் உணவுக் கட்டணத்திற்கான நிதியை ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.56.84 இலட்சமாக உயர்த்தி இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்படும்.

இது போன்று பகுதிநேரப் பயிற்சி பெறும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம்

ரூ.3,000த்தை ரத்து செய்து இச்செலவினத்தை அரசே ஏற்று இவர்களுக்கான சிறப்பு விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத்திற்கான நிதி ஒதுக்கீட்டை ஆண்டொன்றிற்கு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.13 இலட்சமாக உயர்த்தி இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்படும்.

## 4. அண்ணா மேலாண்மை நிலையத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம் மாநில அரசு அலுவலர்களுக்கும் மத்திய அரசு அலுவலர்களுக்கும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கும், பயிற்சியினை அளிக்கும் மாநிலத்திலேயே ஒரு முன்னோடி பயிற்சி மையமாக திகழ்ந்து வருகிறது. அண்ணா மேலாண்மை நிலையத்தில் நிருவாக வளாகம், விடுதி வளாகம், விருந்தினர் இல்ல வளாகம், பேரிடர் மேலாண்மை பிரிவு மற்றும் பணியாளர்கள் குடியிருப்பு ஆகியவை உள்ளன. இந்தக் கட்டடங்கள் அனைத்தும் 2005ஆம் ஆண்டு 8,713.08 ச.மீ. பரப்பளவில் கட்டப்பட்டன. அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்தில் உள்ள கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு 12 ஆண்டுகள் கடந்த நிலையில், தற்போது பழுது பார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எனவே, அண்ணா மேலாண்மை நிலையத்திலுள்ள விருந்தினர் இல்லம், நிருவாக அலுவலகம், விடுதி வளாகம்

பணியாளர் குடியிருப்புகள் மற்றும் பேரிடர் மேலாண்மைப் பிரிவு ஆகியவற்றில் உள்கட்டமைப்பு பணிகளை மேம்படுத்துதல், நிலையத்திலுள்ள கலையரங்கத்தில் மாற்றுத் திறனாளிகளுக்காக கூடுதல் மின்தூக்கி அமைப்பது, வளாகத்தில் குடிநீர் சுத்திகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தி குடிநீர் வழங்குதல் மற்றும் கட்டடங்கள் பராமரிப்பு பணிகளுக்காக ரூ.175.60 இலட்சமும், நிலையத்தில் தற்போதுள்ள மின்விளக்குகளை புதுப்பித்து புதிதாக LED மின்விளக்குகளை பொருத்தும் மின்சாரப் பணிகளுக்காக ரூ.26.14 இலட்சமும் மற்றும் 12% சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் 10% விலையேற்ற மதிப்பீட்டிற்காக ரூ.46.80 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.248.54 இலட்சம் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்படும்.

**5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையகத்தில் இணையதளக் குற்ற (Cyber Lab) ஆய்வுக்கூடம் ஒன்று அமைத்தல்.**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையகத்தில் உயர் தொழில்நுட்பக் குற்றங்கள் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழான குற்றங்களின் தடயங்களான CCTV படிமங்கள், கணிப்பொறி வன்பொருள், அழைப்பு தகவல்கள் மற்றும் இதர இனங்கள் குறித்த தகவல்களை புலனாய்வு செய்வதற்கு இணையதளக் குற்ற ஆய்வுக்கூடம் (Cyber Lab) ஒன்று இதயதெய்வம்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும்.

**6. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையகத்தில் விசாரணை அறை (Interrogation Room) அமைத்தல்.**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையகத்தில் விசாரணை மேற்கொள்வதற்கும் அவ்விசாரணையின் ஒலி / ஒளியை பதிவு செய்வதற்கும் IP கேமரா, கணிப்பொறி, குரல் பதிவுருக்கருவி ஆகிய உபகரணங்களுடன் விசாரணை அறை (Interrogation Room) இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும்.

**7. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் பிரிவு அலுவலகங்கள் (Detachments) திருவள்ளூர், திருவாரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் அமைத்தல்.**

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் பிரிவு அலுவலகங்கள் (Detachments) திருவள்ளூர், திருவாரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் (மற்ற அனைத்து மாவட்டங்களிலும் உள்ளன) ரூ.1.05 கோடி (ஒவ்வொன்றிற்கும்) செலவினத்தில் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்ஆணையின்படி அமைக்கப்படும்.

# சட்டத் துறை

## மானியக் கோரிக்கை எண் 33

**1. தருமபுரி அரசு சட்டக் கல்லூரிக்கென புதிதாக நிரந்தரக் கட்டடம் கட்டுதல்.**

2017–2018ஆம் கல்வியாண்டில் புதிதாக துவங்கப்பட்ட தருமபுரி அரசு சட்டக்கல்லூரிக்கென, தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் வட்டத்தில் ரூ.77.07 கோடி மதிப்பீட்டில் மாணவ மற்றும் மாணவியர் விடுதிகளுடன் கூடிய நிரந்தரக் கட்டடம் கட்டப்படும்.

**2. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரிக்கு கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் கட்டுதல்.**

கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் கருத்தரங்குகள், சிறப்பு சட்ட வகுப்புகள், கலை நிகழ்ச்சிகள், பட்டமளிப்பு விழா மற்றும் பிற நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு தரை மற்றும் முதல் தளத்துடன் கூடிய கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் சுமார் 4,254 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.10.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். இதன் மூலம் 1,440 மாணவர்கள் பயன்பெறுவர்.

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## 3. நீதி நிருவாகம் மற்றும் 24. சிறைச்சாலைகள்

**மானியக் கோரிக்கை எண் 3 & 24**

## நீதி நிருவாகம்

**1. உயர்நீதிமன்றம் மற்றும் அனைத்து மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கங்களுக்கு சட்டப் புத்தகங்களும், புத்தக அலமாரிகளும் வழங்குதல்.**

**(Supply of Law Books and Book racks for Bar Associations in the Hon'ble High Court of Madras and in all 32 Districts)**

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இதயதெய்வம் சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களில் உள்ள 32 வழக்கறிஞர்கள் சங்கங்களுக்கு சட்டப்புத்தகங்களும், புத்தக அலமாரிகளும், ரூ.1 கோடி செலவில் வழங்கப்படும்.

**2. விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் குற்றவியல் நடுவர்களுக்கான (I & II) குடியிருப்புகள் கட்டுதல்.**

**Construction of Quarters Building for Judicial Magistrates (I & II) in the Combined Court Building Campus at Tindivanam in Villupuram District**

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் குற்றவியல் நடுவர்களுக்கான (I & II) குடியிருப்புகள் ரூ.5.81 கோடி செலவில் கட்டப்படும்.

**3. விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல்.**

**Construction of Quarters for Principal District Munsif and Additional District Munsif in the Combined Court Building Campus at Tindivanam in Villupuram District**

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இதயதெய்வம் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் ரூ.5.81 கோடி செலவில் கட்டப்படும்.

**4. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a Sub Court at Ottanchatram in Dindigul District**

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் ரூ.1 கோடி செலவில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

**5. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் ஒரு தொழிலாளர் நல நீதிமன்றம் அமைத்தல்.**

**Constitution of a Labour Court at Hosur in Krishnagiri District**

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் ரூ.1.34 கோடி செலவில் ஒரு தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்கப்படும்.

## சிறைச்சாலைகள்

**1. சென்னை புழல் மத்தியசிறை–1ல் புதிய அவசர கால ஊர்தி வழங்குதல்.**

**Provision of new Ambulance in Central Prison-1, Puzhal**

புழல் மத்திய சிறை–1ல் சிறைவாசிகளின் அவசர தேவைக்காக சிறைவாசிகளின் நலனை கருத்திற் கொண்டு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.11 இலட்சம் செலவில் புதிய அவசர கால ஊர்தி வழங்கப்படும்.

**2. புதியதாக துவக்கப்பட்டுள்ள விழுப்புரம், தேனி மற்றும் தருமபுரி மாவட்ட சிறைகளுக்கு புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்.**

**Creation of new posts and additional infrastructure facilities to the newly created District Jails at Villupuram, Theni and Dharmapuri.**

விழுப்புரம், தேனி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் புதிதாக கட்டப்பட்ட மாவட்ட சிறைகளில், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.616.20 இலட்சம் செலவில் (தொடரும் செலவினம் ரூ.490.50 இலட்சம், தொடரா செலவினம் ரூ.125.70 இலட்சம்) உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

**3. கோவை, திருச்சி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய மத்திய சிறைகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பது தொடர்பாக.**

**Establishment of Sewage Treatment Plants in Central Prison Coimbatore, Trichy, Salem and Cuddalore through Tamil Nadu Police Housing Corporation.**

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம் மூலம் கோவை, திருச்சி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய மத்திய சிறைகளில், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.400 இலட்சம் செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்.

**4. பெண்கள் தனிச்சிறை புழல், வேலூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியில் ஊடுகதிர் அலகிடல் கருவி (X-Ray Baggage Scanner) அமைத்தல் தொடர்பாக.**

**Purchase of 4 X-Ray Baggage Scanner machines, to Special Prisons for Women, Puzhal, Vellore, Trichy and Pudukottai Borstal School.**

பெண்கள் தனிச்சிறை புழல், வேலூர், திருச்சி மற்றும் புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியில், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.76 இலட்சம் செலவில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிறைக்குள் வருவதை கண்டுபிடித்து தடுத்திட 4 ஊடுகதிர் அலகிடல் கருவி (X-Ray Baggage Scanner) நிறுவப்படும்.

5. **அனைத்து மத்தியசிறை வளாகத்தில் (புழல் மத்தியசிறை–2 நீங்கலாக) திறந்த வெளிச்சிறை அமைத்தல்.**

**Establishment of Open Air Prisons in all Central Prison Complex (except Central Prison-II, Puzhal).**

அனைத்து மத்தியசிறை வளாகங்களிலும் (புழல் மத்தியசிறை–2 நீங்கலாக) காலியாக உள்ள இடங்களில் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திறந்த வெளிச்சிறை அமைக்கப்படும்.

6. **சிறைத்துறைக்கு சிவில் பண்டகப் பொருட்களை வாங்கிட துறைத்தலைவருக்கு உள்ள நிதி அதிகார வரம்பினை உயர்த்துதல்.**

**Enhancement of financial power to Head of the Department to purchase civil store article from Rs.4,000 to Rs.25,000 per item and from Rs.7,500 to Rs.50,000 for more than one article.**

சிறைத்துறைக்கு தேவையான சிவில் பண்டகப் பொருட்களை வாங்கிட துறைத்தலைவருக்கு உள்ள நிதி அதிகார வரம்பு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒரு பொருளுக்கு ரூ.4,000லிருந்து ரூ.25,000ஆகவும், ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கு ரூ.7,500லிருந்து ரூ.50,000ஆகவும் உயர்த்தப்படும்.

**7. சிறைத்துறை அமைச்சுப்பணியாளர்களுக்கு, காவல் துறைப் பொருள் வழங்கீட்டு மையத்தில் (Police Canteen) சலுகை விலையில் பொருட்களை வழங்க ஆணை வழங்குதல்.**

**Extending the Police Canteen facility to Prison Department Ministerial Staff also on par with Police Ministerial Staff.**

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிறைத்துறையில் பணிபுரிந்து வரும் மற்றும் ஒய்வு பெற்ற அனைத்து அமைச்சுப் பணியார்களுக்கும் காவல்துறை அமைச்சுப்பணியாளர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று காவல்துறை பொருள் வழங்கீட்டு மையத்தில் (Police Canteen) சலுகை விலையில் பொருட்கள் பெற்றுக்கொள்ள ஆணை வழங்கப்படும்.

# உயர்கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண் 20

**1. அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் பாதுகாப்பு கருதி, சுற்றுச்சுவர் முழுமையாக இல்லாத / பகுதி சுற்றுச்சுவர் மட்டுமே கட்டப்பட்டுள்ள 90 அரசு கல்லூரிகளுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்.**

**(To give protection to Government Arts and Science Colleges and Colleges of Education Construction of Compound Wall to 90 Government Colleges without Compound Wall / with Part Compound Wall)**

தமிழகத்தில் தற்போது 98 அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளின் எதிர்கால வளர்ச்சி மற்றும் மாணக்கர்களுக்கான விளையாட்டு வசதிகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, கல்லூரிகளில் உள்ள விலையுயர்ந்த தளவாடங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் ஆகியவற்றை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டிய நிலை உள்ளதாலும், இக்கல்லூரிகளின் நிலங்களை வெளியாட்கள் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றவும் மற்றும் மாணவியர்களின் பாதுகாப்பு நலனை கருதியும், முழுமையாக சுற்றுச்சுவர் இல்லாத / பகுதி சுற்றுச்சுவர் உள்ள 83 அரசு கலை மற்றும் அறிவியல்

கல்லூரிகள் மற்றும் 7 அரசு கல்வியியல் கல்லூரிகளுக்கு சுற்றுச்சுவர் அமைக்கப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.43.62 கோடி ஆகும்.

**2. 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் கணினி பாடப்பிரிவுகளில் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் புதிய கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.**

**(Procurement of New Computers to 62 Government Arts and Science Colleges for students studying computer related courses)**

தமிழ்நாட்டில் 91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகளில் இளநிலை / முதுநிலை கணினி அறிவியல் பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றில், 62 கல்லூரிகளில் கணினி பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்ட போது வழங்கப்பட்ட கணினிகளில், மிக குறைந்த எண்ணிக்கையிலான கணினிகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன. மேலும், கணினி அறிவியல் தொடர்புடைய பாடப்பிரிவுகளில் பயிலும் மாணாக்கர்கள் கணினிகளில் சிறப்பு பயிற்சி பெறும் வகையில், ஒரு கல்லூரிக்கு 50 கணினிகள் பெற்று வழங்க வேண்டியது அவசியமாகும். அதுபோன்றே, கணினிகள் பயன்பாட்டிற்கு, ஒரு கல்லூரிக்கு 5 KVA திறன் கொண்ட 2 தடையில்லா மின்வழங்கிகள் (UPS) பெற்று வழங்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் 62 கல்லூரிகளுக்கு 3,100 கணினிகள் மற்றும் 124 தடையில்லா மின்வழங்கிகள்

(UPS) தேவைப்படும். இதற்கென ஒரு கணினிக்கு ரூ.37,000ம் மற்றும் ஒரு தடையில்லா மின்வழங்கிக்கு (UPS) ரூ.98,000ம் செலவாகும். எனவே, 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நடத்தப்படும் இளநிலை / முதுநிலை கணினி அறிவியல் பாடப்பிரிவுகளில் பயிலும் மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு இக்கல்லூரிகளுக்கு தேவையான 3,100 கணினிகள் மற்றும் 124 தடையில்லா மின்வழங்கிகள் (UPS) வாங்கப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.12.69 கோடி ஆகும்.

**3. அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காவலர்கள், பெருக்குபவர்கள் மற்றும் துப்புரவாளர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் வெளிமுகமை மூலம் நிரப்புதல்.**

**(Filling up the post of Watchman, Sweeper and Sanitary Worker through the Outsourcing Agencies in Government Arts and Science Colleges and Colleges of Education)**

அரசுக் கல்லூரிகளில் மாணாக்கர்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு நவீன கழிப்பறை தொகுப்புகளும் மற்றும் அவர்களின் தேவையை கருத்தில் கொண்டு புதிய வகுப்பறைகள் மற்றும் புதிய ஆய்வகங்கள் அரசால் கட்டப்பட்டுள்ளன. புதிதாக உட்கட்டமைப்பு வசதிகள் அரசுக் கல்லூரிகளில் செய்யப்பட்டிருப்பினும், இவற்றை பராமரிக்க போதிய அடிப்படைப் பணியாளர்கள் இல்லை. மாணாக்கர்களின் சுகாதார நலன் கருதி கல்லூரிகளில் உள்ள

கட்டமைப்பு வசதிகளை காத்திட, அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 586 காவலர்கள், பெருக்குபவர்கள் மற்றும் துப்புரவாளர்கள் உள்ளிட்ட பணியிடங்கள் வெளிமுகமை மூலம் நிரப்பப்படும். இதற்கென ஒரு ஆண்டிற்கு ரூ.6.10 கோடி செலவினம் ஏற்படும்.

**4. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணாக்கர்களுக்கு உதவித் தொகை உயர்த்தி வழங்குதல்.**

**(Enhancement of Assistantship to the students of Government / Government Aided Arts and Science Colleges studying through Tamil Medium)**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்வழியில் கல்வி பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் இக்கல்லூரிகளில் இளங்கலை மற்றும் இளமறிவியல் பட்ட வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூ.400, 2018–2019ஆம் கல்வியாண்டு முதல் ரூ.900 என உயர்த்தி வழங்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 47,072 மாணாக்கர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசுக்கு ரூபாய் 2,35,36,000 கூடுதல் செலவு ஏற்படும்.

## 5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் கவுரவ விரிவுரையாளர்களின் பணியை பணிவரன்முறை செய்தல்.

## (Regularization of service of Guest Lecturers in Government Arts and Science Colleges)

அரசு கலை மற்றும் அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக உள்ள 2,334 உதவிப்பேராசிரியர் பணியிடங்களை நேரடி நியமனம் வாயிலாக நிரப்புவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அறிவிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 7 ஆண்டுகளில் 29 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 1,232 புதியப் பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்கள் காரணமாக, மாணாக்கர்களின் கல்வி நலன் பாதிக்காமல் இருப்பதற்கு, சுழற்சி–1இல் 1,883 கவுரவ விரிவுரையாளர்களும் மற்றும் சுழற்சி–2இல் 1,661 கவுரவ விரிவுரையாளர்களும் தொகுப்பூதிய அடிப்படையில் பணி புரிந்து வருகின்றனர். இக்கவுரவ விரிவுரையாளர்களுடைய நீண்டகால பணி அனுபவத்தைக் கருத்தில் கொண்டு, இவர்களுள் உதவிப்பேராசிரியர் பணியிடத்திற்கு பல்கலைக்கழக மானியக்குழு நிர்ணயித்துள்ள கல்வித் தகுதியினை பெற்றுள்ளவர்களுக்கு, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் சிறப்பு தேர்வு நடத்தப்பட்டு அத்தேர்வில் வெற்றி பெறும் கவுரவ விரிவுரையாளர்களின் பணியினை

வரன்முறை செய்து அவர்கள் முறையான பணியிடத்தில் பணியமர்த்தப்படுவார்கள்.

**6. கோவை, அரசினர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி நிலையத்திற்கு ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவித்தல், நவீன வகுப்பறை வசதி ஏற்படுத்துதல் மற்றும் அறைகலன்கள் கொள்முதல் செய்தல்.**

**(Creation of Teaching and Non Teaching Post and provision of Smart Class Room and furniture for the Faculty Development Training Centre at Government College of Technology Campus, Coimbatore)**

தற்போதைய நவீன தொழில் நுட்பத்திற்கேற்ப அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் மற்றும் பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கற்றல் மற்றும் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்காக கோவை அரசினர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் மேம்பாட்டுப் பயிற்சி மையம் ஒன்று ரூ.9 கோடி செலவில் கட்டடப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தில் தொழிற்சாலைகளின் தற்போதைய அதி நவீன தேவைகளுக்கேற்ப, ஆசிரியர்களுக்கு நீண்ட கால மற்றும் குறுகிய கால பயிற்சி வகுப்புகளும், கருத்தரங்குகளும், பயிற்சி பட்டறை வகுப்புகளும் நடத்தப்படும். இப்பயிற்சி மையத்திற்கு ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். இதற்கென 2018–2019ஆம் ஆண்டு முதல் தொடர் செலவினமாக ஆண்டொன்றிற்கு ரூ.1 கோடி

வழங்கப்படும். மேலும் நவீன வகுப்பறைகள் (Smart Class Rooms) அமைப்பதற்கும் மற்றும் பயிற்சி ஆசிரியர்கள் தங்கும் அறைகளுக்கான அறைகலன்கள் கொள்முதல் செய்யவும் தொடரா செலவினமாக ரூ.1 கோடியும் வழங்கப்படும்.

**7. மாநிலத்திலுள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகள் மற்றும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் திறனை மேம்படுத்த பயிற்சி அளித்தல்.**

**(Training Programme for Enhancing the English Teaching Skills for English Teachers working in Government / Government Aided and Self financing Engineering Colleges and Polytechnic Colleges in the State)**

தமிழகத்திலுள்ள 586 அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகள் மற்றும் 517 அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு கற்பிக்கும் திறனை மேம்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். முதற்கட்டமாக சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 50 ஆங்கில மொழி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். அவ்வாறு பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் உதவியுடன், தமிழகத்திலுள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பொறியியல் மற்றும்

பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் மண்டலம் வாரியாக பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இப்பயிற்சிக்கான மொத்த செலவினம் ரூ.60 இலட்சம் ஆகும்.

**8. சேலம், அரசினர் பொறியியல் கல்லூரியில் முதுநிலை பட்டப்படிப்பு, M.E. Communication System துவங்குதல்.**

**(Starting of Post Graduate course, M.E. Communication System, in Government College of Engineering, Salem)**

சேலம் அரசினர் பொறியியல் கல்லூரியில், M.E. Structural Engineering, M.E. Thermal Engineering, M.E. Welding Technology, M.E. Computer Aided Design மற்றும் M.E. Power Electronics and Drives எனும் 5 முதுநிலை பட்டப்படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. கணினிமயமாக்கப்பட்ட நவீன உலக சூழல்களுக்கேற்ப, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறையில் தொடர்பியல் தொடர்பான ஆராய்ச்சிகள் அதிகம் மேற்கொள்ளப்படுவதால், மாணாக்கர்கள் தொடர்பியல் துறையில் முதுகலை பட்டப்படிப்பு பெறுவதற்காக, இக்கல்லூரியில் M.E. Communication System என்ற முதுநிலை பட்டப்படிப்பு துவங்கப்படும். இப்பாடப்பிரிவிற்காக 3 ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு தொடர் செலவினமாக ஆண்டொன்றிற்கு ரூ.44.93 இலட்சம் வழங்கப்படும்.

**9. பல்கலைக்கழகங்களுக்கு ரூ.25 கோடி ஆராய்ச்சி நிதி வழங்குதல்.**

**(Grant of Rs.25 crore Research fund to the 13 Universities)**

2018ஆம் ஆண்டிற்கான தேசிய கல்வி நிறுவனங்களின் தர வரிசை கட்டமைப்பில் உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 7 பல்கலைக்கழகங்கள் முதல் 100 இடங்களில் இடம் பெற்றுள்ளன. பல்கலைக்கழகங்கள், மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் பல்வேறு துறைகளிடமிருந்தும், பல்கலைக்கழக மானியக் குழுவிடமிருந்தும் மற்றும் பிற கல்வித் தொடர்பான முகமைகளிடமிருந்தும் ஆராய்ச்சி நிதி பெற்று வருகின்றன. பல்கலைக்கழகங்களில் அதிகளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 13 பல்கலைக்கழகங்களுக்கு தேவைக்கேற்ப ரூ.25 கோடி ஆராய்ச்சி நிதியாக வழங்கப்படும்.

**10. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் மூன்று மனோ கல்லூரிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.**

**(Construction of additional buildings for three Mano Colleges of Manonmaniam Sundaranar University)**

1990ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை, சங்கரன்கோவில், பணகுடி ஆகிய இடங்களில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்

மூன்று மனோ கல்லூரிகள் துவங்கப்பட்டன. இக்கல்லூரிகள் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மாணவர்களின் உயர்கல்வி தேவையை பூர்த்தி செய்து வருகிறது. இக்கல்லூரிகளுக்கு தரை தளத்துடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இக்கல்லூரி மாணவர்கள், சிறந்த கல்விச் சூழலில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கல்வி பயிலவேண்டும் என்ற நோக்கில், ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.210 இலட்சம் மதிப்பீட்டில் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களுடன் கூடிய கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.630 இலட்சம் ஆகும்.

**11. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தால் செயல்படுத்தப்படும், “கல்லூரிகளின் ஆய்வு மாணவர்களுக்கான அறிவியல் ஆய்வு நிதியுதவி இடைவெளியை களைதல்” திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை 2018–2019ஆம் ஆண்டு முதல் ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்துதல்.**

**(Enhancement of allocation of funds for the scheme “Programme for Bridging the Gap in Research Funding for Research Scholars in Colleges of Tamil Nadu State Council for Science and Technology from Rs.15 lakh to Rs.30 lakh)**

கல்லூரிகளில் பயிலும் முழு நேர முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களின் ஆராய்ச்சி திறனை ஊக்குவிப்பதற்காக, ஆய்வு மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆய்விதழ்களில் குறைந்த

பட்சம் இரண்டு ஆய்வு கட்டுரைகளை பதிப்பித்திருந்தால், மாதந்தோறும் ரூ.10,000 ஆய்வு உதவித் தொகை மற்றும் ஆண்டொன்றுக்கு இதர ஆய்வு செலவுகளுக்காக ரூ.30,000 என மொத்தம் ரூ.3 இலட்சம் தொகையானது, 2 வருடங்களுக்கு மட்டும் வழங்க இத்திட்டம் வழிவகுக்கிறது. இத்திட்டத்தின் கீழ் ஆய்வு மாணவர்களுக்கு மொத்தம் ரூ.15 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களின் நலனை கருத்திற்கொண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு 2018–2019ஆம் ஆண்டிலிருந்து ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.30 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**12. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தால் செயல்படுத்தப்படும், "அறிவியல் கருத்தரங்கு மற்றும் பயிற்சி பட்டறை நடத்துவதற்கு பகுதி நிதியுதவி அளித்தல்" திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்துதல்.**

**(Enhancement of Fund allocation for the Scheme "Partial Assistance For Seminar/ Symposium/ Work Shop of Tamil Nadu State Council for Science and Technology from Rs.10 lakh to Rs.25 lakh")**

மாநிலத்திலுள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள், அறிவியலறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் துறையினர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், அறிவியல் ஆய்வு குறித்து பரிமாற்றங்கள் செய்யவும், கலந்துரையாடவும், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும், தமிழ்நாடு அறிவியல்

தொழில்நுட்ப மாநில மன்றத்தால் பகுதி நிதியுதவியாக ரூ.10 இலட்சம் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் அதிக விண்ணப்பங்கள் பெறப்படுகின்ற காரணத்தால், 2018–2019ஆம் ஆண்டிலிருந்து மேற்படி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்தப்படும்.

**13. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின், “தொழில்துறைக்கு தேவையான அறிவியல் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்” திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.22.50 இலட்சமாக உயர்த்துதல்.**

**(Enhancement of Fund allocation for the Scheme “Science and Technology Capacity Building for Industrial Needs” of Tamil Nadu State Council for Science and Technology from Rs.10 lakh to Rs.22.50 lakh)**

மாணவர் சமுதாயம் பயிற்சிகள் மற்றும் ஊக்குவிக்கும் நிகழ்வுகள் மூலம் தங்கள் திறமைகளை தொழில்துறைக்கேற்றவாறு மேம்படுத்தவும், சுயதொழில் தொடங்குவதற்கான திறனை அடையும் விதத்திலும், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தால் “தொழில்துறைக்கு தேவையான அறிவியல் தொழில்நுட்ப திறன் வளர்த்தல்” என்ற திட்டம் ஒவ்வொரு ஆண்டும் ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில், 10 மாவட்டங்களிலுள்ள பலவகை தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்கள்

பயன்பெறும் விதத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும், 15 மாவட்டங்களில் உள்ள மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், 2018–2019ஆம் ஆண்டு முதல் நிதி ஒதுக்கீடு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.22.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

**14. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின், "அறிவியல் தொழில்நுட்ப வெளியீடுகளுக்கு நிதியுதவி அளித்தல்" என்ற திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை ரூ.50,000லிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்துதல்.**

**(Enhancement of allocation of funds for "Assistance for Science and Technology Publications" scheme of Tamil Nadu State Council for Science and Technology from Rs.50,000 to Rs.3 lakh)**

குழந்தைகள் மற்றும் பொது மக்களுக்கு பயன் தரக்கூடிய அறிவியல் வெளியீடுகளை தமிழில் வெளிக்கொணரும் பொருட்டு, அறிவியல் தொழில்நுட்ப தமிழ் வெளியீடுகள் / புத்தகங்கள் வெளியிடும் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தில் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சிகளை தமிழில் வெளியிடுவதை மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும், இத்திட்டற்கான நிதி ஒதுக்கீடு 2018–2019ஆம் ஆண்டு முதல் ரூ.50,000லிருந்து ரூ.3 இலட்சமாக உயர்த்தப்படும்.

**15. அறிவியல் நகரம் மூலமாக சிறந்த அறிவியல் ஆசிரியர்களுக்கு விருது வழங்குதல்.**

**(Award for Best Teachers in Science through Science City)**

மாணவர் சமுதாய வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். எனவே மிகச்சிறந்த ஆசிரியர்களை இச்சமூகத்திற்கு அடையாளம்காட்டி மரியாதை செய்வதற்காக தமிழகத்தில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் இயற்கை அறிவியல் போன்ற துறைகளில் உள்ள அறிவியல் ஆசிரியர்களைக் கண்டறிந்து, அவர்களுள் 10 ஆசிரியர்களின் பணிகளை பாராட்டி, சிறந்த அறிவியல் ஆசிரியர்கள் விருது 2018–2019ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும். இவ்விருதுடன் ரூ.25,000 வீதம் ரூ.2.50 இலட்சம் பரிசுத் தொகையாகவும் மற்றும் இதர செலவினங்களுக்காக ரூ.1.30 இலட்சம் வழங்கப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.3.80 இலட்சம் ஆகும்.

**16. அறிவியல் நகரத்தின் மூலமாக கிராமப்புற கண்டுபிடிப்பாளர்களுக்கு கிராமப்புற புதுமை விருது வழங்குதல்.**

**(Rural Innovation Award through Science City for Rural inventors)**

கிராமப்புற மக்களின் அறிவுத்திறனை ஊக்குவித்து, பல பயனுள்ள புதிய கண்டுபிடிப்புகளை வெளிக்கொணரும்

விதத்தில் இரு சிறந்த கிராமப்புற கண்டுபிடிபாளர்களுக்கு கிராமப்புற புதுமை விருது வழங்கப்படும். இதற்கென 2018–2019ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் தலா ரூ.1 இலட்சம் வீதம், ரூ.2 இலட்சம் பரிசுத் தொகையாகவும் மற்றும் ரூ.1.30 இலட்சம் இதர செலவினங்களுக்காகவும் வழங்கப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.3.60 இலட்சம் ஆகும்.

**17. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மாவட்ட அறிவியல் மையம் மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்பில் அமைத்தல்.**

**(Establishment of a District Science Centre at Kanniyakumari with Central and State Government share)**

இளம் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடம் அறிவியல் மனப்பான்மையை ஊக்குவிக்கவும், தொழில்நுட்ப கல்வியை வளர்க்கவும் மாவட்ட அறிவியல் மையம் உதவுகிறது. கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்திஸ்வரம் வட்டத்தில் அஞ்சு கிராமம் என்னும் கிராமத்தில் உள்ள 5 ஏக்கர் நிலத்தில், 2,000 சதுர மீட்டர் கட்டிடத்தில், அறிவியல் பூங்கா, குறுங்கோளரங்கம், காட்சிப்பொருள் வடிவமைப்பு ஆய்வு அரங்கம், கணினி பயிலகம், முப்பரிமாண காட்சிக்கூடம் ஆகியவற்றை உள்ளடக்கி மத்திய மாநில அரசின் பங்களிப்புடன் (50:50) ரூ.15.20 கோடி செலவில் மாவட்ட அறிவியல் மையம் அமைக்கப்படும்.

**18. தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் மூலமாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணாக்கர்களுக்கான ஆங்கிலம் மற்றும் வேலை வாய்ப்பு திறன்களுக்கான ஒருங்கிணைந்த கற்றலை British Council உடன் இணைந்தளித்தல்.**

**(Learning English and Skills for employability for Students studying in Government Arts and Science Colleges in collaboration with British Council through Tamil Nadu State Council for Higher Education)**

தமிழக அரசின் முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 'தொலைநோக்குப் பார்வை 2023'–உயர்கல்வித் துறையின் கனவுத்திட்டமான 'அனைவருக்கும் தரமிக்க கல்வி'யை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் ஒரு மைல் கல்லாக 91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் 67,000 மாணாக்கர்களுக்கு ஐந்தாம் மற்றும் ஆறாம் பருவத்தில் ஆங்கிலம் மற்றும் வேலை வாய்ப்பு திறன்களுக்கான ஒருங்கிணைந்த கற்றல் பயிற்சி பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

# சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## மானியக் கோரிக்கை எண் 45

### 1. 1,132 அங்கன்வாடி மையங்களுக்கு ரூபாய் 1.13 கோடி செலவில் தேவையான குடிநீர் வசதி வழங்கப்படும்

தமிழ்நாட்டில் மொத்தம் 54,439 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 46,397 அங்கன்வாடி மையங்கள் சொந்த கட்டடங்களிலும் மற்றும் இதர அரசு கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அங்கன்வாடி மையங்களுக்கு வருகை புரியும் குழந்தைகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கும், மையங்களுக்கு தற்போது உள்ள தண்ணீர் வசதியை மேம்படுத்தவும் 1,132 மையங்களுக்கு, ரூபாய் 1.13 கோடி செலவினம் மேற்கொள்ளப்படும்.

### 2. சென்னை மாவட்டத்திற்கு கூடுதலாக இரண்டு புதிய குழந்தை நலக் குழுக்கள் (Child Welfare Committee) ஏற்படுத்தப்படும்

குழந்தை நலக் குழுக்கள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான வழக்குகளைத் தீர்வு செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களிலும் குழந்தை நலக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

பெருகி வரும் மக்கள் தொகை காரணமாக சென்னை மாவட்ட குழந்தை நலக் குழு அதிக எண்ணிக்கையிலான வழக்குகளைக் கையாள வேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, வழக்குகளை விரைவாக முடிப்பதற்கு ஏதுவாக சென்னை மாவட்டத்திற்கு கூடுதலாக இரண்டு புதிய குழந்தை நலக் குழுக்கள் ஏற்படுத்தப்படும். இதற்கு ஓராண்டிற்கு கூடுதலாக ரூபாய் 21.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. **மூன்றாம் பாலினரின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில், அவர்கள் சுய தொழில் தொடங்குவதற்கு வழங்கப்பட்டு வரும் அரசு மானியம் ரூபாய் 20,000லிருந்து ரூபாய் 50,000ஆக உயர்த்தப்படும்.**

மூன்றாம் பாலினரின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழ்நாடு மூன்றாம் பாலினர் நல வாரியத்தின் மூலம் எடுத்து வருகின்றது.

மூன்றாம் பாலினர் தங்களது வாழ்வாதாரத்தைப் பொருளாதார ரீதியாக உயர்த்திக் கொள்ளும் பொருட்டு வருவாய் ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ள மளிகை கடை அமைத்தல், கறவை மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம் அமைத்தல் போன்ற தொழில் செய்ய தனி நபர் ஒருவருக்கு ரூபாய் 20,000 வீதம் மானியமாக தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

மூன்றாம் பாலினரின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட இவ்வரசு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி இம்மானியத்தை ரூபாய் 50,000 ஆக உயர்த்தி, ஆண்டொன்றுக்கு 150 மூன்றாம் பாலினர் பயன்பெறும் வகையில் ரூபாய் 75 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**4. திருமண நிதியுதவி மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கு சமூக நலத் துறையின் கள அலுவலர்களுக்கு மென்பொருளுடன் கூடிய கையடக்க கணினி (Tablet) ரூபாய் 2.52 கோடி செலவில் வழங்கப்படும்.**

சமூக நலத் துறையானது பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனிற்காக பல்வேறு முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக திருமண நிதியுதவித் திட்டங்கள் மற்றும் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் ஆகியன துறையின் வரவு செலவுத் திட்டத்தில் பெரும்பங்கு வகிக்கின்றது.

2015 ஆம் ஆண்டு முதல் இத்திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் இ–சேவை மையங்கள் மூலம் வட்டார அளவில் பதிவு செய்யப்பட்டு, கள ஆய்வு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரால் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாவட்ட சமூக நல அலுவலர்களால்

விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட தொகை மின்னணு பரிமாற்ற சேவை மூலம் (ECS) வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் பயனாளிகள் இத்திட்டங்களின் கீழ் பயனடைகின்றனர். எனவே, விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் 1,074 சமுதாய விரிவாக்க அலுவலர் மற்றும் மகளிர் ஊர்நல அலுவலர்களின் பணியைத் துரிதப்படுத்தவும், தாமதத்தைத் தவிர்க்கவும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 2.52 கோடி செலவில் மென்பொருளுடன் கூடிய கையடக்க கணினி (Tablet) வழங்கப்படும்.

**5. பெரம்பலூர், நாமக்கல், கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருவள்ளூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்களுக்கு (சத்துணவு) 7 புதிய வாகனங்கள் ரூபாய் 54 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் செயலாக்கம் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் சத்துணவு நேர்முக உதவியாளர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு மாதத்தில் குறைந்தபட்சம் 20 சத்துணவு மையங்கள் ஆய்வு செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பெரம்பலூர், நாமக்கல், கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருவள்ளூர் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தினை திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக ரூபாய் 54 இலட்சம் செலவில் 7 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

**6. சத்துணவில் முட்டை சாப்பிடாத பயனாளிகளுக்கு வழங்கப்படும் வாழைப்பழத்தின் விலை ரூபாய் 1.25 லிருந்து ரூபாய் 3.50 ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடைந்து வரும் பயனாளிகளது புரதச் சத்தினை மேம்படுத்த அவர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் 45 முதல் 52 கிராம் எடையுள்ள முட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது. முட்டை உண்ண விரும்பாத குழந்தைகளுக்கு மாற்று உணவாக ரூபாய் 1.25க்கு மிகாமல் 100 கிராம் வாழைப்பழம் வழங்க அரசாணை (நிலை) எண் 85 சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 14.07.2008 வாயிலாக ஆணை வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தற்போது, ஒரு வாழைப்பழத்திற்கான செலவினத்தினை ரூபாய் 1.25லிருந்து ரூபாய் 3.50ஆக உயர்த்தி வழங்கப்படும். இதனால், 12,946 பயனாளிகள் ரூபாய் 61.17 இலட்சம் செலவில் பயனடைவர்.

**7. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் 43,205 சத்துணவு மையங்களுக்கு சோப்பு, நகவெட்டி, துண்டு, கையுறைகள் போன்றவை உள்ளடக்கிய சுகாதார பேழைகள் (Hygiene Kits) ரூபாய் 1.73 கோடி செலவில் வழங்கப்படும்**

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 52 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் 43,205 சத்துணவு மையங்கள் வாயிலாக பயனடைந்து வருகின்றனர். இவர்களுக்கு பள்ளி வளாகத்தினுள்ளேயே சுவையான சத்தான கலவை சாதங்கள் பலவித மசாலா முட்டையுடன் அனைத்து பள்ளி நாட்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. உணவு சமைக்கும் போதும், பரிமாறும் போதும் சுகாதாரத்தினை கடைப்பிடிக்க சத்துணவு சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு மையம் ஒன்றுக்கு ரூபாய் 400 செலவில் சோப்பு, நகவெட்டி, துண்டு, கையுறைகள் போன்றவை உள்ளடக்கிய சுகாதார பேழைகள் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அனைத்து சத்துணவு மையங்களுக்கும் ரூபாய் 1.73 கோடி செலவில் வழங்கப்படும்.

**8. அரசு சேவை இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளின் உணவூட்டு செலவினம் மாதம் ரூபாய் 450லிருந்து ரூபாய் 900 ஆக உயர்த்தப்படும்.**

கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், விதவைகள், பொருளாதார ரீதியாக பின் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைத் திருமணத்திலிருந்து மீட்கப்பட்டு, குடும்பத்தினரால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு, பராமரிப்பு

அளிக்கும் வகையில் அரசு சேவை இல்லங்கள் சமூக நலத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை, சேலம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் 9 அரசு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு சூழல்களால் பள்ளிப்படிப்பை இடைநிறுத்தம் செய்த பெண்கள் அவ்விடத்திலேயே குழந்தைகளுடன் தங்கி தொடர்ந்து கல்வி பயில ஊக்குவிக்கப்படுகின்றனர்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி சமூக நல ஆணையரகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு சேவை இல்லங்களில் உள்ள குழந்தைகளின் உணவூட்டுச் செலவினம் மாதம் ரூபாய் 450லிருந்து ரூபாய் 900 ஆகவும், வருடாந்திர பராமரிப்புச் செலவினம் ரூபாய் 150லிருந்து ரூபாய் 500 ஆகவும் உயர்த்தப்படும். இதனால் ஓராண்டிற்கு அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூபாய் 53.68 இலட்சம் ஆகும்.

**9. முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்களில் பயன்பெறும் முதியோர்களுக்கு மாதாந்திர உணவூட்டுச் செலவினம் ரூபாய் 1,200 ஆகவும், குழந்தைகளுக்கான மாதாந்திர உணவூட்டுச் செலவினம் ரூபாய் 900 ஆகவும் உயர்த்தப்படும்.**

முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கிடையே அன்பையும் பாசத்தையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய 51 ஒருங்கிணைந்த வளாகங்கள்

29 மாவட்டங்களில் மாநில அரசின் மானியம் பெற்று தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

25 முதியோர்களை உள்ளடக்கிய முதியோர் இல்லத்திற்கு உணவூட்டு மானியமாக ஒரு முதியோருக்கு ரூபாய் 653ம் மற்றும் 25 குழந்தைகளை உள்ளடக்கிய குழந்தைகள் இல்லத்திற்கு ஒரு குழந்தைக்கு ரூபாய் 750ம் வழங்கப்பட்டு, இதர செலவினங்களோடு ஒரு வருடத்திற்கு தொடரும் செலவினம் ரூபாய் 18.40 இலட்சம் தொகையில் அரசு மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கிடையே 75:25 என்ற விகிதத்தில் அரசு மானியமாக நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தற்போது ஒருங்கிணைந்த வளாகங்களில் செயல்படும் முதியோர் இல்லங்களுக்கான உணவூட்டு மானியம் ரூபாய் 653லிருந்து ரூபாய் 1,200ஆக உயர்த்தியும், குழந்தைகள் இல்லங்களுக்கு ரூபாய் 750லிருந்து ரூபாய் 900ஆக உயர்த்தியும் வழங்கப்படும்.

ஒருங்கிணைந்த வளாகங்களில் செயல்படும் முதியோர் இல்லங்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்களுக்கு உணவூட்டு செலவினம் உயர்த்தப்படுவதால், ஆண்டொன்றுக்கு ரூபாய் 106.64 இலட்சம் அரசிற்கு கூடுதல் செலவினம் ஏற்படும்.

# சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

### மானியக் கோரிக்கை எண் 52

**1. புற உலக சிந்தனையற்ற குறையுடைய குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களை அனைத்து மாவட்டங்களிலும் 2 ஆண்டிற்குள் படிப்படியாக துவங்கும் திட்டத்தில் முதற்கட்டமாக 14 மாவட்டங்களில், மையம் ஒன்றிற்கு ரூ.11.22 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.157.08 இலட்சம் செலவில் துவங்குதல்.**

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைச் சட்டம் 2016இல் குறிப்பிடப்பட்ட 21 வகையான மாற்றுத்திறனாளிகளில் புற உலக சிந்தனையற்றோர் மன வளர்ச்சி குன்றியோர் வகையின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைச் சட்டம் 2016, பிரிவு 4 (1)–இல் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் மற்றவர்களுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும் என்பதை உறுதி செய்கிறது. பிரிவு 27 (1) மற்றும் (2) ஆகியவற்றில் மறுவாழ்வு பணிகள், மருத்துவம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் ஈடுபடும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் நிதியுதவி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது முன்னோடித்திட்டமாக புற உலக சிந்தனையற்ற ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் 5 மாவட்டங்களில், (சென்னை, திருச்சி, தஞ்சாவூர்,

கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி) செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களால் 80 குழந்தைகள் பயன் பெற்று வருகின்றனர்.

புற உலக சிந்தனையற்றோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அதிக எண்ணிக்கையிலான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களைத் துவக்க வேண்டிய அவசியம் உருவாகிறது. தசைப் பயிற்சி மற்றும் செயல்திறன் பயிற்சி ஆகியவை அளிப்பதன் மூலம் இக்குழந்தைகளின் உடல்நலனில் முன்னேற்றம் ஏற்படுகிறது. ஆரம்பநிலை பயிற்சி அளிப்பதன் மூலம் மொழித்திறன் மற்றும் பயிற்சி, விளையாட்டு மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றில் முன்னேற்றம் காணப்படுகிறது.

ஆரம்ப நிலை பயிற்சி மையங்களை, மீதமுள்ள 27 மாவட்டங்களில், தன்னார்வத் தொண்டுநிறுவனங்கள் மூலம் 2 வருடங்களில் துவங்கும் வகையில், முதற்கட்டமாக 2018–2019ஆம் நிதி ஆண்டில் 14 மாவட்டங்களில், 350 குழந்தைகள் பயன்பெறும் வகையில், ரூ.157.08 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**2. மனவளர்ச்சி பாதிக்கப்பட்டோருக்கான தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 42 பராமரிப்பு இல்லங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 நிறுவனங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நிதியுதவி வழங்குதல்.**

மாற்றுத்திறனாளிகளின் சமூகப் பாதுகாப்பிற்காக இவ்வரசு பராமரிப்பு உதவித்தொகை வழங்குதல், பராமரிப்பு இல்லங்கள்

அமைத்தல், காப்பீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இவற்றில் ஒன்றான மனவளர்ச்சி குன்றியோர், குறிப்பாக 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோர், மாநிலம் முழுவதும் 42 இடங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இம்மையத்தில் பயனாளிகளுக்கு உணவு, உறைவிடம், மருத்துவ வசதி மற்றும் தொழிற்பயிற்சி வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.9.86 இலட்சம் அளவில் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென ரூ.424.08 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. மாநிலம் முழுவதும் 1,557 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் செயல்பாட்டினை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தி தொழிற்பயிற்சியினை அபிவிருத்தி செய்வதற்காக முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்படும் 5 நிறுவனங்களுக்கு தலா ரூ.10 இலட்சத்திற்கு மிகாமல் மொத்தம் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

**3. செவித்திறன் குறையுடையோருக்காக செயல்படும் 9 அரசு சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்காக ஒவ்வொரு பள்ளியிலும் தலா ஒரு வகுப்பறையை**

**ரூ.5 இலட்சம் செலவில் நவீன மயமாக்கப்பட்ட திறன் வகுப்பறையாக (Smart Class) மேம்படுத்தும் திட்டம்.**

சிறப்புக்கல்வி மேம்பாட்டிற்காக, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் தமிழக அரசு மேற்கொள்ளும் சிறப்பு நடவடிக்கையில் ஒன்றாக, திறன் வகுப்பறை (Smart Class) ஏற்படுத்தும் திட்டம் அறிமுகம் செய்யப்பட உள்ளது.

தமிழக அரசின் மூலம் நடத்தப்படும் 22 அரசு சிறப்பு பள்ளிகளில் 10 பள்ளிகள் செவித்திறன் குறையுடையோருக்கான பள்ளிகளாகும். இப்பள்ளிகளில் புதுக்கோட்டை நீங்கலாக, 9 சிறப்புப்பள்ளிகளுக்கு ஒரு பள்ளிக்கு ஒரு வகுப்பறை வீதம் மாதிரியாக “திறன் வகுப்பறை” (Smart Class) அமைக்கப்படும்.

இவ்வகுப்புகளை, நவீன வசதியுடன், செவித்திறன் குறையுடைய 500 மாணவர்கள் பயன்பெறும் வகையில் கணினி, தளவாட சாதனங்கள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஒரு பள்ளிக்கு ரூ.5 இலட்சம் வீதம் 9 பள்ளிகளுக்கு மொத்தம் ரூ.45 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**4. ரூ.145 இலட்சம் செலவில் சிறப்பு பள்ளி மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் கட்டட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுதல்.**

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக தமிழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை பிரத்யேகமான துறையினை ஏற்படுத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

சிறப்புக்கல்வி, சமூக பாதுகாப்பு, தொழிற்பயிற்சி மற்றும் மறுவாழ்வு பயிற்சி உள்ளிட்ட திட்டங்களை பயனாளிகளுக்கு மேற்கொள்ள, சிறந்த தடையற்ற சூழல் அமைந்த கட்டடங்கள் மிகவும் அவசியமானது.

தற்போது, சிறப்புக்கல்விக்காக 22 அரசு பள்ளிகள் (10 பார்வைத்திறன் குறையுடையோருக்கானது, 10 செவித்திறன் குறையுடையோருக்கானது, 1 மனவளர்ச்சி குன்றியோருக்கானது மற்றும் 1 கடுமையான கை, கால் பாதிப்படைந்தோருக்கான பள்ளி) செயல்பட்டு வருகின்றன.

தொழுநோயால் பாதிக்கப்பட்டோரை பராமரிப்பதற்காக 10 அரசு மறுவாழ்வு இல்லங்கள் (காஞ்சிபுரம், விழுப்புரம், கிருஷ்ணகிரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மதுரை, திருவண்ணாமலை, தருமபுரி, சேலம் மற்றும் ஈரோடு) சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது.

சிறப்பு கல்விக்காக இயங்கும் 22 அரசு சிறப்பு பள்ளிகளுக்கான கட்டடங்களில், 17 கட்டடங்கள் அரசின் சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன.

தற்போது புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு சொந்த கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இதர இடங்களில் கட்டடங்களில் அவ்வப்போது நிகழும் பராமரிப்பு பணிக்காக கூடுதலான நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

முக்கியமாக கூரை பழுது பார்த்தல், தரைகளை செப்பனிடுதல், கழிவறை வசதி செய்தல், குடிநீர் வசதி செய்தல், சமையலறை செப்பனிடுதல், பாதுகாப்பு சுவர் அமைத்தல்

போன்ற பராமரிப்பு பணிகள் ரூ.145 இலட்சம் செலவில் இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**5. சிறப்புப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தும் விதமாக 21 சிறப்புப் பள்ளிகளில் ரூ.85 இலட்சம் செலவில் கணினி ஆய்வகம் அமைத்தும் ரூ.36 இலட்சம் செலவில் கணினி பயிற்சிக்கான தொழில் பயிற்றுநர்களை 20 பள்ளிகளில் நியமனம் செய்தும் திட்டம் செயல்படுத்துதல்.**

தற்போது சிறப்புக் குழந்தைகளின் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு குறிப்பாக செவித்திறன் குறையுடைய, பார்வைத்திறன் மற்றும் கடும் கை, கால் ஊனமுற்ற குழந்தைகள் நலனுக்காக செயல்பட்டுவரும் 21 அரசு சிறப்பு பள்ளிகளில் கணினிப் பயிற்சிகள் வழங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிக்காக கணினி மற்றும் தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்ய மொத்தம் ரூ.85 இலட்சம் ஒதுக்கீடு செய்தும், இப்பயிற்சி வழங்குவதற்காக கணினி தொழிற்பயிற்சி ஆசிரியர்களை ரூ.15,000/– மாத தொகுப்பூதிய அடிப்படையில் 20 சிறப்புப் பள்ளிகளில் ரூ.36 இலட்சம் நிதியில் நியமனம் செய்திட, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, சிறப்புப் பள்ளி மாணவர்களுக்கு கணினி பயிற்சி வழங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிக்கான இத்திட்டம் ரூ.121 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்படும்.

**6. போக்குவரத்து நெரிசல்மிக்க சாலை சந்திப்புகளில் பார்வையற்றவர்கள் பாதுகாப்பாக சாலையினை கடப்பதற்கு ஏதுவாக குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் (Auditory Signal) சேலம் மற்றும் மதுரை மாநகரங்களில் அமைக்கும் திட்டம்.**

மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சூழலை கட்டடங்கள், போக்குவரத்து சாலைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மேற்கொள்ளும் நிகழ்வாக ஏற்கெனவே, சென்னை மாநகரின் 150 சாலை சந்திப்புகளில் குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் அமைக்கப்பட்டன.

இத்தகைய வசதியினால் பார்வையற்றவர்கள், ஏற்கெனவே சாலை சந்திப்புகளில் அமைக்கப்பட்டுள்ள சமிக்ஞை ஒளி விளக்குடன், குரல் ஒலிப்பான் இணைப்பின் மூலம் ஏற்படும் ஓசையின் உதவியுடன் பாதுகாப்பாகவும் எளிதாகவும் தன்னிச்சையாக சாலையை கடந்து செல்கின்றனர். இத்திட்டம் பார்வையற்றவர்களுக்கு இடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

எனவே, சேலம் மற்றும் மதுரை நகரங்களில் அமைந்துள்ள முக்கிய சாலை சந்திப்புகளில் குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள் அமைக்கும் இத்திட்டம் நீட்டிக்கப்படும்.

**7. மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக நிதி உதவியினை பரிமாறிக்கொள்ளவும் வேலைவாய்ப்பு அளித்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உரிமைகளுக்கு எதிராக குறைகளை பதிவு செய்து நிவாரணம் அளிக்கும் தகவல்களை சிறப்பு வலைதளம் நிறுவி பராமரித்தல்.**

மாநிலத்தில் மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு பணிக்காக அங்கீகாரம் பெற்ற 502 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இவ்வரசுடன் இணைந்து சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

இத்தகைய சேவைக்கான நிதி ஆதாரத்தை அரசுடன் இணைந்து தனியார் நிறுவனங்களும் Corporate Social Responsibility மூலம் வழங்க முன் வருகின்றன. இந்நிகழ்வில், இத்தகைய நன்கொடை வழங்கும் நிறுவனங்களுக்கு உதவ இணையதலைவாயில் (webportal) ஏற்படுத்தினால், இதன் மூலம் உதவி வேண்டுவோரும், வழங்குபவரும் பதிவு செய்து கொள்ளும்போது பரஸ்பரம் இருவருக்கும் தேவையின் அடிப்படையில் உதவிகளை பெற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கும்.

மாற்றுத்திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக, 4% இடஒதுக்கீட்டின் மூலம் வேலைவாய்ப்பு வழங்கும் நடவடிக்கைக்கு இணையாக, தனியார் நிறுவனம் மூலம், தொழிற்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பினை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. தனியார் தொழிலதிபர்கள் தங்களின் (Man Power) மனித ஆற்றலின் தேவையை தெரிவிக்கவும், வேலைவாய்ப்பு விரும்புவோர்

தங்களின் தகுதியினை தெரிவிக்கவும் வசதியாக இணையதளம் ஏற்படுத்தினால், இரு தரப்பினரும் பரஸ்பரம் தகவல்கள் பெற்று பயனடைவர்.

இவ்வாறே மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 2016இன் கீழ், மாநில ஆணையர் நியமிக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதிக்கப்படும் நிகழ்வுகளில் அதற்கான நிவர்த்திக்காக, மாற்றுத்திறனாளிகள் தங்கள் குறைகளை, விரைவில் ஆணையருக்கு தெரிவித்து தீர்வுகள் வழங்க இணையதளம் ஏற்படுத்தினால் மாநில ஆணையரின் பணி மேலும் மேம்படும்.

எனவே மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டிற்கான நிதியுதவி, வேலைவாய்ப்பு மற்றும் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் குறைதீர்வு நடவடிக்கைக்காக இணையதளம் ரூ.25 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**8. சட்டப்படிப்பு முடித்த மாற்றுத்திறனாளிகள் சட்டப் புத்தகங்கள் வாங்கவும் மற்றும் வழக்கறிஞர் சங்கத்தில் பதிவு செய்யவும் வழங்கப்பட்டு வரும் நிதி உதவியினை ரூ.3,000லிருந்து ரூ.10,000ஆக உயர்த்துதல்.**

மாற்றுத்திறனாளிகளின் சிறப்பு கல்வியினை ஊக்கப்படுத்தும் திட்டங்களில் ஒன்றான சட்டப்படிப்பு முடித்த மாற்றுத்திறன் மாணவர்களுக்கு, சட்டப்புத்தங்கள் வாங்கவும், வழக்கறிஞர்கள் சங்கத்தில் (Bar Council) பதிவு செய்யவும் ரூ.3,000 வழங்கப்பட்டு வருகிறது.

**1993–1994**ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதி உதவியினை ரூ.3,000லிருந்து ரூ.10,000ஆக உயர்த்தும்பட்சத்தில் கூடுதலான பயன்கள் மாற்றுத்திறனாளி சட்ட பட்டதாரிகளுக்கு கிடைக்கும்.

எனவே, சட்டப்படிப்பு படித்து முடித்த மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவியினை ரூ.3,000லிருந்து ரூ.10,000ஆக உயர்த்தி 15 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.1.50 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**9. மாற்றுத்திறனாளிகள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட இந்த அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016இன்படி மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப் பணிகளில் 4% இட ஒதுக்கீடு வழங்க ஏற்கெனவே ஆணை வழங்கியுள்ளது. இந்த இடஒதுக்கீட்டினை செயல்படுத்தும் விதமாக தொகுதி 'A' மற்றும் 'B' பிரிவு, நேரடி நியமனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு, விரைவில் ஆணை வெளியிடப்படும்.**

ஊனமுற்றோருக்கான (சமவாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம் 1995இன் பிரிவு 32இன் கீழ் அரசு பணியிடங்களில் தொகுதி 'A' மற்றும் 'B' பிரிவு பதவியிடங்களில் 263 பதவியிடங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்களாக

கண்டறியப்பட்டு அரசாணை (நிலை) எண் 13, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 02.03.2016இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 பிரிவு 34இன் படி பணியிடங்களில் மாற்றத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடானது 3% லிருந்து 4% ஆக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 21, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 30.05.2017இல் ஆணையிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 பிரிவு 33(ii) அதனடிப்படையில் தொகுதி ‘A’, ‘B’, ‘C’ மற்றும் ‘D’ பிரிவுகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பதவியிடங்களை கண்டறியும் பொருட்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலரின் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவானது அரசாணை (நிலை) எண் 41, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 30.10.2017இன் படி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது 4 முறை கூடி மாற்றுத்திறனாளிகளுக்கான உகந்த பதவியிடங்களை கண்டறிந்து அறிக்கை அளித்துள்ளது.

அரசாணை (நிலை) எண் 51, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, நாள் 26.12.2017இன் படி தொகுதி ‘C’ மற்றும் ‘D’ பிரிவுகளில் உள்ள அனைத்து பதவியிடங்களும் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களாக கண்டறிந்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தொகுதி ‘A’ மற்றும் ‘B’ பிரிவுகளில் நேரடி நியமன பதவியிடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்த பணியிடங்களைக் கண்டறிந்து அறிக்கை அளித்துள்ளார். அவ்வறிக்கையின் மீது சம்பந்தப்பட்ட தலைமைச்செயலகத் துறைகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டு ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

# தொழில் துறை

## சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

### மானியக் கோரிக்கை எண் 27

**1. புவியியல் மற்றும் சுரங்கத் துறை தலைமையகத்தில் அமைந்துள்ள புவி அமைப்பியல் மற்றும் சுரங்க அருங்காட்சியகத்தை ரூபாய் 50 இலட்சம் செலவில் மேம்பாடு செய்தல் மற்றும் தகவல் மையம் உருவாக்குதல் (One Stop Information Center)**

புவியியல் மற்றும் சுரங்கத் துறை தலைமையகத்தில் அமைந்துள்ள புவி அமைப்பியல் மற்றும் சுரங்க அருங்காட்சியகத்தை இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 50 இலட்சம் செலவில் மேம்படுத்தி தகவல் மையம் உருவாக்கப்படும். இதன்மூலம், கனிமம், சுரங்கம், கனிமத்தை கண்டுபிடித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான தகவல்கள் இளைய தலைமுறையினர் மற்றும் தொழில் முனைவோருக்கு கொண்டு செல்லப்படும்.

புவி அமைப்பியல் மற்றும் சுரங்க அருங்காட்சியகத்தில் தொழில்நுட்ப முறையில் அளிக்கப்படும் பயிற்சியின் மூலம் வருடத்திற்கு 500 புவியியல் பயிலும் மாணவர்கள் மற்றும் சுரங்க குத்தகைதாரர்கள் பயன் பெறுவர்.

**2. புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் நான்கு துணை இயக்குநர் பதவிகள் தரம் உயர்த்தப்பட்டு நான்கு மண்டல இணை இயக்குநர் பதவிகள் மதுரை, சேலம், திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு மண்டலங்களில் ஏற்படுத்தப்படும்.**

மாவட்ட சுரங்க நிருவாக பணிகளை துரிதப்படுத்தி அரசுக்கு வருவாய் சேர்க்கவும், மாவட்ட கனிம கட்டமைப்பு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை கண்காணித்து அரசுக்கு அறிக்கை அளிக்கவும், மண்டல அளவில் சட்ட விரோத குவாரிப்பணிகள் தடுப்பு மற்றும் குற்றவியல் நடவடிக்கை குறித்தான விழிப்புணர்வை குத்தகைதாரர்களுக்கு பயிற்சியின் மூலம் ஏற்படுத்தவும் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் என நான்கு மண்டலங்களை உருவாக்கி ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு இணை இயக்குநர், பதவி உயர்வின் மூலம் பணியமர்த்தப்படுவர்.

**3. புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் கூடுதலாக ஒரு மண்டல பறக்கும் படை திருச்சி மண்டலத்தில் அமைக்கப்படும்.**

சட்ட விரோத குவாரி மற்றும் கனிமக் கடத்தலை முற்றிலும் தடுத்து நிறுத்தி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படா வண்ணம் செயல்பட புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கூடுதலாக ஒரு

பறக்கும் படை திருச்சிராப்பள்ளி மண்டலத்தில் புதிதாக உருவாக்கப்படும்.

**4. மாவட்ட சுரங்கத்துறை மற்றும் மண்டல பறக்கும் படை அலுவலர்களின் வாகனங்களுக்கு ரூபாய் 2 இலட்சம் செலவில் GPS கருவி பொருத்தப்படும்**

மாவட்ட சுரங்கத்துறை மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்கள் இரவு மற்றும் பகல் நேரங்களில் வாகனச் சோதனை மேற்கொள்ள களப்பணிக்கு செல்லும்போது அவர்களின் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு வாகனங்களின் இருப்பிடம் மற்றும் அவர்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியரகம் மற்றும் தலைமையகத்திலிருந்து கண்காணித்து அவர்களின் பணியை மேம்படுத்த தக்க ஆலோசனைகள் வழங்க ஏதுவாக மேற்படி வாகனங்களில் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 2 இலட்சம் செலவில் GPS கருவி பொருத்தப்படும்.

**5. மாவட்ட சுரங்கத்துறை மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்களுக்கு ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கம்பியில்லாக் கையடக்கக் கருவி அளித்து அதனை மாவட்ட நிருவாகத்துடன் இணைத்து களப்பணியினை மேம்படுத்தல்.**

களப்பணியில் இருக்கும் மாவட்ட சுரங்கத்துறை அலுவலர்கள் மற்றும் மண்டல பறக்கும்படை அலுவலர்கள் தங்கள் களப்பணியின்போது ஏற்படும் அசம்பாவிதங்கள்

மற்றும் அவசரப் பணிகள் நிமித்தமாக மாவட்ட நிருவாகம் மற்றும் மாவட்ட காவல்துறை ஆகியோரின் ஆலோசனை மற்றும் உதவியினை கோருதல் தொடர்பாக நிருவாகத்தினை தொடர்பு கொண்டு உடனுக்குடன் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சம்பந்தப்பட்ட சுரங்கத்துறை களப்பணி அலுவலர்களுக்கு இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கம்பியில்லாக் கையடக்கக் கருவி வழங்கப்படும்.

**6. மாவட்ட சுரங்கத்துறை அலுவலகம் மற்றும் தலைமையகத்திற்கு 25 புதிய ஈப்பு வாகனங்கள் ரூபாய் 2 கோடி செலவில் வாங்கப்படும்.**

புவியியல் மற்றும் சுரங்கத்துறை தற்போது உள்ள ஈப்பு வாகனங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மாவட்ட அளவில் களப்பணி ஆய்வு மற்றும் கனிம நிருவாகத்தினை திறன்பட செயல்படுத்த தலைமையகத்திற்கு 5 புதிய ஈப்பு வாகனங்களும் மண்டல அலுவலகம், பறக்கும் படை மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு 20 புதிய ஈப்பு வாகனங்களும் என மொத்தம் 25 புதிய ஈப்பு வாகனங்கள் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 2 கோடி செலவில் வாங்கப்படும்.

**7. மாவட்ட கனிமக் கட்டமைப்பு நிதியின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்ய வட்டார வளர்ச்சி அலுவலர் பதவியினை மண்டல அளவில் உருவாக்குதல்**

மாவட்ட கனிமக் கட்டமைப்பு நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் சுரங்கப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டங்களின் செயல்பாட்டின் தரத்தினை கூராய்வு செய்து அவற்றின் மெய்த்தன்மை குறித்து அரசுக்கு அறிக்கை அளிக்க மண்டலத்திற்கு ஒன்று வீதம் சேலம், மதுரை, திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு மண்டலங்களுக்கும் நான்கு வட்டார வளர்ச்சி அலுவலர் பதவிகளை ஊரக வளர்ச்சி துறையில் இருந்து பணிமாற்றத்தின் மூலம் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஆண்டொன்றுக்கு ரூபாய் 40 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**8. தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (TANMAG) ரூபாய் 18.09 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களை செயல்படுத்தும்.**

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (TANMAG) தனது சொந்த நிதி மூலமாக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் 18.09 கோடி மதிப்பிலான கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்தும்.

அ) மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் ஆலை ரூபாய் 16 கோடி மதிப்பில் சுழற்சூளை பிரிவின் அருகில் கட்டப்படும்.

ஆ) முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட்டை துகள்களாக்கி மதிப்பு கூட்டுவதற்காக ரூபாய் 40 இலட்சம் செலவில் அரவை இயந்திரம் கொள்முதல் செய்யப்படும்.

இ) டுனைட்டை அரைத்து அதன் மதிப்பைக் கூட்டுவதற்காக ரூபாய் 25 இலட்சம் மதிப்பில் இயந்திரங்கள் நிறுவப்படும்.

ஈ) சுழற்சூளை பிரிவில் மாதிரி தயாரிக்கவும், பகுப்பாய்வு செய்வதற்காகவும் நவீன ஆய்வு கூடம் ரூபாய் 74 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படும்.

உ) சுழற்சூளை பிரிவில் முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் சேமிப்பதற்காக ரூபாய் 38 இலட்சம் மதிப்பில் கூடுதல் கிடங்கு கட்டப்படும்.

ஊ) சுழற்சூளை பிரிவில் சிமெண்ட் கான்கீரிட் சாலை (Phase-II) ரூபாய் 32 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படும்.

# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

## சுற்றுச்சூழல்

### மானியக் கோரிக்கை எண் 15

**1. 32 மாவட்டங்களில் தேசிய பசுமைப்படை சூழல் மன்ற மாணவ, மாணவியர்களுக்கு சூழல் போட்டிகள் நடத்தி, மாவட்டத்திற்கு ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.**

சூழல் முக்கியத்துவத்தை மாணவர்கள் உணரும் வண்ணம், தேசிய பசுமைப்படை, சூழல் மன்ற மாணவர்களுக்கு வினாடி வினா, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில், எட்டாம் வகுப்பிற்கு கீழ் மற்றும் எட்டாம் வகுப்பிற்கு மேல் என இரண்டு பிரிவுகளாக சூழல் போட்டிகள் நடத்தப்படும். மேலும் மேற்கூறிய மூன்று இனங்கள் மற்றும் இரண்டு பிரிவுகளில் வெற்றி பெற்ற மாணவ மற்றும் மாணவியருக்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாவட்டத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம் 32 மாவட்டங்களில் ரூ.64 இலட்சம் செலவில் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் தனித்தனியாக வழங்கப்படுவதுடன் சூழல் சுற்றுலாவும் அழைத்துச் செல்லப்படுவர்.

**2. மாவட்டம் ஒன்றுக்கு ரூபாய் 2 இலட்சம் வீதம், 32 மாவட்டங்களில் பிளாஸ்டிக் பயன்பாடு குறித்த வாகன விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல்.**

மனித சமுதாயத்திற்கும் சூழல் அமைப்புக்கும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதால், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பது மிகவும் அவசியமானதாகும். 2013–2014ஆம் ஆண்டு முதல் 2016–2017வரை, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் அரசுசாரா அமைப்புகளைக் கொண்டு நாட்டுப்பாடல், நாடகம், தெரு நாடகம், வில்லுப்பாட்டு, பாரம்பரிய நடனம் மூலமாக, வாகனங்கள் மூலமாக பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு குறித்து மேற்கொண்ட விழிப்புணர்வுப் பிரச்சாரம் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. எனவே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பிளாஸ்டிக் பயன்பாட்டின் தீமைகள் குறித்து மாணவர்களும், பொது மக்களும், புரிந்துணர்வை பெறும் வகையில், மாவட்டங்களில் 20 இடங்களில், வாகனங்கள் மூலமாக கலைக்குழுக்களின் பங்களிப்புடன் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசு சாரா நிறுவனங்கள் மூலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மாவட்டத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் செலவில்,

32 மாவட்டங்களிலும் மொத்தம் ரூ.64 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

3. **அனைத்து 32 மாவட்டங்களிலும், தேர்வு செய்யப்பட்ட 960 பள்ளிகளின் தேசியபசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்களின் மாணவர்களின் பங்களிப்புடன், பள்ளிக்கு ரூ.15,000 செலவீட்டில் மரக்கன்றுகள் நட்டு பராமரித்தல்.**

பள்ளி வளாகங்களை தூய்மையானதாகவும், பசுமையானதாகவும் பராமரிக்கவும், சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகளில் மாணவர்களின் பங்களிப்பினை பயனுள்ளதாக்கவும், தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 30 பள்ளிகள் வீதம், தேர்ந்தெடுக்கப்பட்ட 960 சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை அமைந்துள்ள பள்ளி வளாகங்களில், மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க, 2017–2018ஆம் ஆண்டில் பள்ளி ஒன்றுக்கு ரூ.15,000 வீதம், ரூபாய் 144 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் மாணவர்கள் தங்கள் பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழலை பற்றி புரிந்துகொண்டு, அதற்கேற்ப செயல் திட்டங்கள் உருவாக்க உதவிகரமாக இருக்கும். இத்திட்டத்தில் தங்களைஇணைத்துக்கொண்டுசெயல்படும்மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கப்படும். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்திட்டம் 2018–2019ஆம் ஆண்டிலும் 32 மாவட்டங்களில், ரூபாய் 144 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

**4. கடலோர மண்டல சூழல் அமைப்புகள் மற்றும் கடலோர மண்டலத்தில் உள்ள இயற்கை சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் குறித்த விபரங்கள் மற்றும் கடலோர மண்டலத்தில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து தகவல்களை விளம்பரப்படுத்துதல்.**

கடற்கரைப் பகுதிகளில், மாசு தடுப்பு மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, தமிழகத்தில் உள்ள சுற்றுலா தலங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. சூழல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில், சொற்தொடர்கள், விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள், செய்யக்கூடியவை மற்றும் செய்ய கூடாதவை போன்ற தகவல்களை உள்ளடக்கிய 100 தகவல் பலகைகள், ஒவ்வொரு பகுதியிலும் மூன்று முதல் நான்கு வரை 12 அடிக்கு 6 அடி என்ற அளவுகளில் அமைக்கப்படும். ஒரு தகவல் பலகை அமைக்க ரூ.50,000 என்ற மதிப்பீட்டில் ரூ.50 இலட்சம் செலவில் 100 தகவல் பலகைகள் அமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் உள்ள 13 கடலோர மாவட்டங்களில் மொத்தம் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

**5. கடலோர குடியிருப்புப் பகுதிகளில் தெரு நாடகங்கள், பிரச்சாரம் திடக்கழிவு மேலாண்மை குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.**

கடற்கரைப் பகுதியில் வாழும் மீனவர் சமுதாய மற்றும் உள்ளூர் மக்கள் சூழல் அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்த போதிய கல்வி மற்றும் குறைந்த விழிப்புணர்வு பெற்றவர்களாக உள்ளனர். மேலும் சில இடங்களில், பாரம்பரிய நோக்கில் செய்யும் நடவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு இல்லாமையினால், சுற்றுச்சூழலில் பாதிப்புகள் ஏற்படுகிறது. திடக்கழிவுகள், உருளைப்பட்டைகளை எரித்தல், நீராதாரங்கள், கழிமுகங்கள் மற்றும் ஆறுகளின் முகத்துவாரங்களில் மீன் கழிவுகளைக் கொட்டுதல், அங்கீகரிக்கப்படாத கட்டடங்கள் கட்டுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

எனவே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மாணவர்கள் / அரசு சாரா அமைப்புகள் மூலம் தெருமுனைப் பிரச்சாரங்கள், கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள் வாயிலாக, மீனவர் பகுதிகளில் மட்டுமல்லாது பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் மேற்கண்ட பல்வேறு செயல்பாடுகளால் ஏற்படும் தீமைகள் குறித்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மேற்கண்ட நடவடிக்கைகள் ஒரு மாவட்டத்தில் **5** நிகழ்ச்சிகள் வீதம், ஒரு நிகழ்ச்சி ரூபாய் **60,000** செலவில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஒரு மாவட்டத்திற்கு ரூ.3 இலட்சம் வீதம் 13 கடற்கரை மாவட்டங்களில் மொத்தம் ரூ.39 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**6. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிறந்த விளம்பரத்திற்கான குறும்படங்களுக்கு விருதுகள் வழங்குதல்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து நிலம், காற்று, நீர், வனம், தொழிற்சாலை நடவடிக்கைகள், தாவரங்கள், விலங்குகள் உள்ளிட்ட ஏதாவது ஒரு தலைப்பில், பொது ஊடகங்களில் விளம்பரப்படுத்த ஏதுவாக சிறந்து விளம்பரப்படங்களுக்கான போட்டிகள் நடத்தி சிறந்த முதல் மூன்று படங்கள் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பரிசுத் தொகையாக முறையே ரூ.7 இலட்சம், ரூ.6 இலட்சம், மற்றும் ரூ.5 இலட்சம் வழங்கப்படும். மேலும் இப்போட்டி தொடர்பான விளம்பரம், மதிப்பீடு செய்தல் மற்றும் பரிசு வழங்கும் விழாவிற்கு ரூ.2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுவதால் பரிசளிப்பதற்காக மொத்தம் ரூ.20 இலட்சம் செலவிடப்படும். விளம்பரப்படத்தின் நகல்கள் சுற்றுச்சூழல் துறையின் வலைதளத்தில் வெளியிடப்படுவதோடு, தேசிய பசுமைப் படை மற்றும் சூழல் மன்றங்களின் விழாக்கள், பள்ளிகளின் பிரார்த்தனை வேளைகளிலும் ஒளிபரப்பப்படுவதோடு, தேர்வு செய்யப்பட்ட விளம்பரப்படங்கள் 2019–2020ஆம் ஆண்டில், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையால் பரிந்துரை செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம்

ரூ.30 இலட்சம் செலவில் பொது / வெகுஜன ஊடகங்களில் ஒளிபரப்பப்படும்.

**7. சென்னை வருவாய் மாவட்டத்தின் எல்லையை விரிவுபடுத்தியதன் அடிப்படையில் சென்னை மாவட்டத்திற்கு கூடுதலாக புதிய மாவட்ட அலுவலகங்கள் ரூ.130 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.**

சென்னை மாவட்ட மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தின் கண்காணிப்பில் 2,333 தொழிற்சாலைகள் உள்ளன. தற்போது சென்னை மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்கு ஒரு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மட்டும் உள்ளது. அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசாணை எண் 01 நாள் 04.01.2018இல் சென்னை வருவாய் மாவட்ட எல்லையை விரிவுபடுத்தி ஆணை வெளியிட்டுள்ளது. தற்போது புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 6 வட்டங்களையும் சேர்த்து மொத்தம் 5,117 தொழிற்சாலைகள் இவ்அலுவலகக் கண்காணிப்பின் கீழ் வருகின்றன. இதனால் ஏற்படும் வேலைப்பளுவினைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை மாவட்டத்திற்கு மேலும் இரண்டு புதிய மாவட்ட அலுவலகங்கள் 2018–2019ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 130 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**8. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறப்பாக செயல்படுவதற்காக இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் தென் சென்னை பகுதிக்கென ஒரு புதிய மண்டல அலுவலகம் ரூ.90 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.**

இணை தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) தலைமையில் தற்போது உள்ள சென்னை மண்டல அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஆறு மாவட்ட அலுவலகங்களும் மற்றும் மூன்று ஆய்வகங்களும் இயங்கி வருகின்றன. மேற்படி மண்டல அலுவலகத்தின் கீழ் 45 அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகள் அனைத்தையும் இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் மாதந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும். மேலும் இம்மாவட்டங்களில் பொதுமக்கள் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எழும்போது இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் பணிச்சுமை அதிகமாவதுடன் குறித்த நேரத்தில் ஆய்வினை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. தற்போது சென்னை வருவாய் மாவட்ட எல்லை விரிவுபடுத்தப்பட்டதன் காரணமாக சென்னை மாவட்டத்திற்கு மேலும் இரண்டு புதிய மாவட்ட அலுவலகங்கள் ஏற்படுத்த வாரியம் திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாக தற்போது உள்ள இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் பொறியாளர் (கண்காணிப்பு) அவர்களின் பணிச்சுமை மேலும் அதிகரிக்கும். இதனைக் கருத்தில் கொண்டும், தொழிற்சாலைகளை சீரிய முறையில்

கண்காணிக்கவும், பொதுமக்களின் புகார் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும் ஏதுவாக மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, **2018–2019**ஆம் நிதி ஆண்டில் சென்னை–தெற்கு பகுதிக்கு என இணைத் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் பதவி ஏற்படுத்தப்பட்டு அவரது தலைமையில் ஒரு புதிய மண்டல அலுவலகம் **ரூ.90** இலட்சம் செலவில் உரிய பதவிகளுடன் ஏற்படுத்தப்படும்.

**9. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்போர் நல சங்கங்களுக்கு பசுமை விருதுகள் ரூ.5 இலட்சம் செலவில் வழங்குதல்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது பொருட்களின் தேவையை குறைத்தல், மறு உபயோகம் செய்தல் மற்றும் மறு சுழற்சி செய்தல் என்ற வகையில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் துவங்குகின்றது. அந்த வகையில் வீட்டில் உண்டாகும் திடக்கழிவிலிருந்து மக்கும் கழிவு, மக்காத கழிவு என தரம் பிரித்து, மக்கும் கழிவிலிருந்து உரம் அல்லது மீத்தேன் எரிவாயு தயாரித்தல், மக்காத கழிவுகளை மறு சுழற்சி செய்வதற்கு அனுப்புதல், வீடுகளில் மழை நீர் சேகரிப்பு வசதி ஏற்படுத்துதல், மரம் நடுதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வினை மக்களிடம் ஏற்படுத்துதல் ஆகிவற்றில் குடியிருப்போர் நலச்சங்கங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். இவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தற்போது மாவட்ட ஆட்சியர்கள், தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் பசுமை விருதுகள் போன்று

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதி ஆண்டிலிருந்து வாரிய நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் செலவில், பெரு நகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில், ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும் மூன்று சிறந்த குடியிருப்போர் நலச்சங்கங்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பசுமை விருதுகள் வழங்கப்படும்.

**10. 200 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.80 இலட்சம் செலவில் திரவ படிக காட்சிபடுத்தும் கருவி (LCD Projector) வழங்குதல்.**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றி பள்ளி மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிகவும் அவசியம் ஆகின்றது. குறிப்பாக திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, மின்னணு கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் மாசு, பருவநிலை மாற்றம், பூமி வெப்பமயமாதல் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி பள்ளி மாணவர்களிடம் விளக்குவதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்தலாம். எனவே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதி ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 6 அரசு மேல்நிலை பள்ளிகள் வீதம் மொத்தம் 200 அரசு மேல்நிலை பள்ளிகளுக்கு வாரிய நிதியிலிருந்து ரூ.80 இலட்சம் செலவில் திரவ படிவ காட்சிபடுத்தும் கருவி (LCD Projector) வழங்கப்படும். இதன்மூலம் பள்ளி மாணவர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை,

பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, மின்னணு கழிவு மேலாண்மை மற்றும் இதர சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்கள் காட்சிப்படுத்தப்படும்.

**11. இரண்டு புதிய மாவட்ட அலுவலகக் கட்டடம் சுமார் ரூ.4 கோடி செலவில் கட்டுதல்.**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வாரிய தலைமை அலுவலகம், 5 மண்டல அலுவலகங்கள், 23 மாவட்ட அலுவலகங்கள், மற்றும் 14 ஆய்வகங்கள் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மீதம் உள்ள அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்களை கட்ட வாரியம் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. எனவே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நடப்பு நிதியாண்டில், கும்மிடிபூண்டி மற்றும் திருப்பூர் (தெற்கு) ஆகிய இரண்டு மாவட்ட அலுவலகங்களுக்கு வாரிய நிதியிலிருந்து ரூபாய் 4 கோடி செலவில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.

**12. வாரிய தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கு இடையே காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதியை ரூ.3.25 கோடி செலவில் ஏற்படுத்துதல்.**

இணைத்தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர்கள் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்கள் வாரிய தலைமை அலுவலகத்தில் நடத்தப்படும் ஆய்வுக்கூட்டம் மற்றும் விவாதங்களில் கலந்து கொள்வதற்காக

தலைமை அலுவலகத்திற்கு ஒவ்வொரு முறையும் அழைக்கப்படுகிறார்கள். தலைமை அலுவலகத்திற்கு அடிக்கடி வருகை தருவதனால் அவர்களது வேலை நேரம் வீணாவதுடன், அவர்களுக்கான போக்குவரத்து செலவு, தங்கும் செலவு மற்றும் கூட்டம் நடத்துவதற்கான செலவும் வாரியத்திற்கு ஏற்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு வாரியம் கடந்த ஆண்டு தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும் இடையே காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதியினை ஏற்படுத்தி சிறப்பாக பயன்படுத்தி வருகின்றது. இவ்வசதியினை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேலும் விரிவுபடுத்தி 2018–2019ஆம் நிதி ஆண்டில் வாரிய நிதியிலிருந்து ரூ.3.25 இலட்சம் செலவில் அனைத்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்களும் காணொலி மூலம் கூட்டம் (Video Conferencing) நடத்தும் வசதி ஏற்படுத்தப்படும்.

**13. நகர்ப்புற வனவியல் திட்டத்தின் கீழ் சென்னை புறநகர் பகுதியில் ரூ.175 இலட்சம் செலவில் 10 ஏக்கர் அரசு நிலத்தில் மரம் வளர்த்தல் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.25 இலட்சம் செலவில் 25,000 மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குதல்.**

தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் கொள்கை 2017இல் வனங்களை சுற்றியுள்ள பகுதிகளில் பசுமை போர்வையினை ஏற்படுத்துதல், தனியார் நிலங்களில் மர வளர்ப்பினை

ஊக்கப்படுத்துதல், படுகை நிலங்களில் தேக்கு மரங்களை வளர்த்தல் மற்றும் இலவச மரக்கன்றுகளை பல்வேறு நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார்களுக்கும் அளித்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகர்ப்புற வனவியல் திட்டத்தின் கீழ் சென்னை மாநகரின் பசுமை போர்வையினை விரிவுபடுத்தும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் நிதி ஆண்டில் சென்னை புறநகர் பகுதியில் 10 ஏக்கர் அரசு நிலம் தேர்வு செய்யப்பட்டு அதில் வாரிய நிதியிலிருந்து ரூ.1.75 கோடி செலவில் சுமார் 5,000 மரக்கன்றுகள் வனத்துறையின் மூலம் நடப்பட்டு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்யப்படும். மேலும் தனியார் நிலங்களிலும் மரம் வளர்ப்பினை ஊக்கப்படுத்தும் வகையில் 2018–2019ஆம் நிதி ஆண்டில் வாரிய நிதியிலிருந்து ரூ.25 இலட்சம் செலவில் 25,000 மரக்கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

**14. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.15 இலட்சம் செலவில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளும் திட்டம்.**

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் கடந்த 2016 முதல் தனது பணியாளர்களுக்கு புதிய சுகாதார காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இருப்பினும்

இத்திட்டத்தில் பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளும் வசதி இல்லை. எனவே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய பணியாளர்களின் உடல் நலனை காக்கும் பொருட்டு 45 வயதுக்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறையும், 45 வயதுக்கு கீழ் உள்ள பணியாளர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தலா ஒரு நபருக்கு ரூ.3,000 செலவில் முழு உடல் பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2018–2019 நிதி ஆண்டு முதல் ஆண்டுக்கு ரூ.15 இலட்சம் செலவில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

### மானியக் கோரிக்கை எண் 13

**1. காவிரி டெல்டா மாவட்டங்களில் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 25 நேரடி நெல் கொள்முதல் நிலைய சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விவசாயிகளிடமிருந்து நெல்கொள்முதல் செய்வதில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மிக முக்கிய பங்கு வகிப்பதால் இவற்றிற்கு நிரந்தர கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசு உறுதி பூண்டுள்ளது. அதன்படி நடப்பு நிதியாண்டில் காவிரி டெல்டா மாவட்டங்களில் 25 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தலா ரூபாய் 48 இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

**2. காவிரி டெல்டா மாவட்டங்களில் 100 நெல் கொள்முதல் நிலையங்களில் தானிய வகைகளை காயவைத்து கொள்முதல் செய்ய உலர்களங்கள் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, காவிரி டெல்டா மாவட்டங்களில்

விவசாயிகளின் நலனைக் கருதி நெல்கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. நெல் கொள்முதல் நிலையங்களில் உள்ள உலர் களங்களில் விவசாயிகள் தங்களது நெல்லை உலர வைத்துக் கொள்கின்றனர். ஆனால் துவரம் பருப்பு, பச்சைப்பயறு மற்றும் உளுத்தம்பருப்பு போன்ற தானிய வகைகளை உலர வைப்பதற்கான போதிய இடவசதி இல்லாமல் உள்ளது. இக்குறையினை போக்கும் விதமாக விவசாயிகளால் பயிரிடப்படும் நெல், துவரம் பருப்பு, பச்சைப்பயறு மற்றும் உளுத்தம் பருப்பு போன்ற அனைத்து தானிய வகைகளையும் உலரவைத்து கொள்முதல் செய்வதற்கு வசதியாக விவசாயிகளின் நலன் கருதி முதற்கட்டமாக 100 நெல் கொள்முதல் நிலையங்களில் 4,000 சதுர அடி பரப்பளவில் உலர்களம் தலா ரூபாய் 12 இலட்சம் வீதம் ரூபாய் 12 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

**3. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் நெல்லை தூற்றி சுத்தம் செய்து தரமாக கொள்முதல் செய்வதற்கு, கூடுதலாக 500 நெல்தூற்றும் இயந்திரங்கள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு தமிழகம் முழுவதும் இயங்கிவரும் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் மூலம் விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை தூற்றி சுத்தம் செய்து தரமான நெல்கொள்முதல் செய்வதற்கு 500 நெல்

தூற்றும் இயந்திரங்கள் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கொள்முதல் செய்யப்படும்.

**4. திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியங்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கு கூடுதலாக 200 ஈரப்பதமானிகள் 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் திறந்தவெளி சேமிப்பு மையங்கள், நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள், கிடங்குகள் ஆகியவற்றில் சேமிக்கப்படும் உணவு தானியப் பொருட்களின் தரம் குறையாமல் இருப்பதற்கும், உணவு தானியப் பொருட்களின் ஈரப்பதத்தினை ஆய்வு செய்வதற்கும் 200 ஈரப்பதமானிகள் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

**5. கிடங்குகளில் உணவு தானியப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் மாலை நேரப் பூச்சிகளின் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு 600 புற ஊதாக்கதிர் விளக்குப் பொறிகள் 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொது விநியோகத்திட்டத்தின் கீழ், குடும்ப அட்டைதார்களுக்கு வழங்கப்படும் உணவு தானிய பொருட்களான அரிசி மற்றும் கோதுமை, சிறப்பு பொது

விநியோகத்திட்டம் மற்றும் சத்துணவுத் திட்டங்களுக்கு வழங்கப்படும் பருப்பு வகைகள் ஆகியவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் முன்னதாக சேமித்து வைத்து வழங்கப்படுகிறது. இவ்வாறு கிடங்குகளில் சேமித்து வைக்கப்படும் பொருட்களை பூச்சிகளின் தாக்கமின்றி பாதுகாத்திட தற்போது வேதிப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், பசுமைச் சூழலுக்கு சாதகமான விஞ்ஞான முறைகளைக் கையாண்டு வேதிப்பொருட்களின் பயன்பாட்டினை குறைப்பதற்கான நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி கிடங்குகளில் உணவு தானியப் பொருட்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அட்டிகளில் மாலைநேரப்பூச்சிகளின் தாக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கு 600 புறஊதாக்கதிர் விளக்கு பொறிகள் ரூபாய் 24 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

**6. சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டம் மற்றும் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் வட்டக் கிடங்கு தலா 1.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உணவுப்பொருள் சேமிப்பு பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவினை மேம்படுத்தும் வகையில் கூடுதல் வட்டக்கிடங்குகள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தமிழ்நாடு முழுவதும்

190 எண்ணிக்கையிலான சொந்த வட்ட செயல்முறைக் கிடங்குகள் இயங்கி வருகின்றன. வட்டசெயல்முறை கிடங்குகளின் மூலம் பொது விநியோகத் திட்டத்திற்கான உணவுப் பொருட்கள் சேமித்து வைத்து நியாய விலைக்கடைகளுக்கு நகர்வு செய்யப்படுகிறது. அவ்வகையில் தேவையின் அடிப்படையில் மேலும் கூடுதல் வட்டக் கிடங்குகள் சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம் மற்றும் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கூடுதல் வட்டக் கிடங்கு தலா ரூபாய் 1.5 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

**7. திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர், வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு மற்றும் சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி ஆகிய இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தலா 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய வட்டக்கிடங்குகள் 9 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உணவுப்பொருள் சேமிப்பு பாதுகாப்பினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகளின் கொள்ளளவினை மேம்படுத்தும் வகையில் புதிய வட்டக் கிடங்குகள் கட்ட அரசால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தமிழ்நாடு முழுவதும் 190 எண்ணிக்கையிலான சொந்த வட்டச்செயல்முறை கிடங்குகள் இயங்கி வருகின்றன. வட்டச்செயல்முறை கிடங்குளின் மூலம் பொது விநியோகத்

திட்டத்திற்கான உணவுப்பொருட்கள் சேமித்து வைத்து நியாய விலைக்கடைகளுக்கு நகர்வு செய்யப்படுகிறது. மேலும் அரசால் அவ்வப்பொழுது புதியவட்டங்கள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் தேவையின் அடிப்படையில் புதிய வட்டச் செயல்முறைகிடங்கு இல்லாத திருவாரூர் மாவட்டம், கூத்தா நல்லூர், வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு மற்றும் சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஆகிய இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தலா 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய வட்டக்கிடங்கு தலா ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

**8. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தொடர்ந்து 25 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வரும் கிடங்குகளின், நில பாதுகாப்பிற்காக முதற்கட்டமாக 20 வளாகங்களின் எல்லையில் முள்வேலி அல்லது பாதுகாப்புச்சுவர் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 25 வருடங்களுக்கு மேலாக இருந்து வரும் கிடங்கு வளாகங்களில் நில பாதுகாப்பினை கருத்தில் கொண்டும், ஆக்கிரமிப்புகளை தடுக்கும் நோக்குடனும் முதற்கட்டமாக முன்னுரிமை அடிப்படையில் நில ஆக்கிரமிப்பு பிரச்சனைக்குள்ளான 20 கிடங்கு வளாகங்களின் மனை எல்லையில் முள்வேலி (Fencing) அல்லது பாதுகாப்புச்சுவர் (Compound Wall) அமைக்கும் பணிகள் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் கழக நிதியிலிருந்து அமைக்கப்படும்.

**9. நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூரில் உள்ள silo வளாகத்தில் உணவுப் பொருள் நகர்வு பணிகளை எளிதாக்கிட இருப்புப்பாதை அமைத்தல், Conveyor மற்றும் Forklift போன்ற இயந்திரங்கள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூரில் உள்ள நவீன அரிசி ஆலை வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நவீன நெல் சேமிப்பு கொள்கலன் (SILO) வளாகத்தையும் அருகில் உள்ள அரசூர் இரயில் நிலையத்தினையும் இணைக்கும் விதமாக கிடங்கு வளாகத்தின் உள்ளிருந்து 200 மீட்டர் நீளத்திற்கு இருப்புப்பாதை அமைத்தும் Conveyor மற்றும் Forklift போன்ற இயந்திரங்களை பயன்படுத்தியும், இரயில் பெட்டிகள் மூலம் நெல், அரிசி ஆகிய உணவுப் பொருட்களை வெளிமாவட்டங்களுக்கு அனுப்பி வைப்பதை எளிதாக்கிடவும், உணவுப் பொருட்கள் மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு நகர்வு செய்வதற்கான அமைப்புகள் ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும்.

**10. நாகப்பட்டினம் மாவட்டம், எருக்கூரில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன நெல் சேமிப்பு கொள்கலனின் (SILO) இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் ஐந்தாண்டுகளுக்கு 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்மணிகளை பாதுகாக்க தற்போது திறந்தவெளி சேமிப்புக்

கிடங்குகளே அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. வெயில், மழை ஆகியவற்றின் காரணமாக திறந்தவெளி சேமிப்பு நிலையங்களில் சேமிக்கப்படும் நெல் பாதிப்படைகிறது. எனவே, நவீன தொழில்நுட்ப வசதி கொண்டதும், நீண்டகால நெல் சேமிப்புக்கு பாதுகாப்பானதுமான நெல் கொள்கலன், அதாவது Silo அமைத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி முதற்கட்டமாக நாகப்பட்டினம் மாவட்டம் எருக்கூர் நவீன அரிசி ஆலை கிடங்கு வளாகத்தில் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் நெல் கொள்கலன் நிறுவும் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டிற்கு எடுத்து கொள்ளும் நிலையில் உள்ளது. இந்நவீன நெல் சேமிப்பு கொள்கலன் அமைப்பின் இயக்கத்தினை 5 வருட காலத்திற்கு தகுதிவாய்ந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளவும் உரிய முறையில் பராமரிக்கவும் ரூபாய் 7 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**11. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான நவீன அரிசி ஆலை வளாகங்களில் அதிநவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்நல்லாசியுடன்,மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கும் நவீன அரிசி ஆலைகளில் புழுங்கல்அரிசி தயார் செய்யும் போது வெளியேற்றப்படும் தொழிலக நீரியியல் கழிவுநீரை அதிநவீன தொழில்நுட்ப இயந்திரங்களைக் கொண்டு சுத்திகரிப்பது அவசியமாகிறது. எனவே, தஞ்சாவூர் மண்டலத்தில் அம்மன்பேட்டை மற்றும்

திருநாகேஸ்வரம், திருவாரூர் மண்டலத்தில் திருவாரூர் மற்றும் சுந்தரக்கோட்டை, நாகப்பட்டினம் மண்டலத்தில் எருக்கூர் பகுதி I எருக்கூர் பகுதி II மற்றும் சித்தர்காடு, கடலூர் மண்டலத்தில் நெய்வேலி, திருவண்ணாமலை மண்டலத்தில் போளூர், சிவகங்கை மண்டலத்தில் மானாமதுரை, மதுரை மண்டலத்தில் கடச்சனேந்தல், திருநெல்வேலி மண்டலத்தில் தாழையூத்து மற்றும் திருச்சி மண்டலத்தில் அதவத்தூர் ஆகிய 13 நவீன அரிசி ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படும் தொழிலக நீரியல் கழிவு நீரை சுத்திகரிக்க அதி நவீன தொழில்நுட்ப இயந்திரங்களை கொண்ட சுத்திகரிப்பு நிலையம் ரூபாய் 13 கோடி மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் நிறுவப்படும்.

**12. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 12 நவீன அரிசி ஆலைகளில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கரி சாம்பல் தடுக்கும் இயந்திரம் (Wet Scrubber) 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் புழுங்கல்அரிசி அரவை செய்யும் நவீன அரிசி ஆலைகளில் அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட இயந்திரங்களை நிறுவி சுற்றுச்சூழலை பாதுகாத்திட அரசு உறுதி பூண்டுள்ளது. அதனடிப்படையில், தஞ்சாவூர் மண்டலத்தில் அம்மன்பேட்டை, திருநாகேஸ்வரம் மற்றும் பட்டுக்கோட்டை, திருவாரூர் மண்டலத்தில் சுந்தரக்கோட்டை, நாகப்பட்டினம் மண்டலத்தில் எருக்கூர் பகுதி–2, கடலூர் மண்டலத்தில்

நெய்வேலி, திருவண்ணாமலை மண்டலத்தில் போளூர், சிவகங்கை மண்டலத்தில் மானாமதுரை, மதுரை மண்டலத்தில் கடச்சனேந்தல், திருநெல்வேலி மண்டலத்தில் தாழையூத்து, திருச்சி மண்டலத்தில் அதவத்தூர் மற்றும் காஞ்சிபுரம் மண்டலத்தில் திம்மாவரம் ஆகிய 12 நவீன அரிசி ஆலைகளில் மக்களின் நலன் கருதியும் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் வகையிலும் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கரி சாம்பல் தடுக்கும் இயந்திரம் (Wet Scrubber) ரூபாய் 2 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் நிறுவப்படும்.

**13. பொது விநியோகத்திட்டப் பொருட்கள் பாதுகாப்பான முறையில் சென்றிட 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் லாரிகளில் GPS கருவி பொருத்தியும் மற்றும் கிடங்குகளில் CCTV கேமரா அமைத்தும் கண்காணிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொது விநியோகத்திட்டத்திற்கு தேவையான அரிசி, கோதுமை போன்ற பொருட்கள் லாரிகள் மூலம் இந்திய உணவுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு கொண்டு வந்து பின்னர் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு இயக்கம் செய்யப்படும் பொருட்கள் கிடங்குகளுக்கும், நியாய விலை அங்காடிகளுக்கும் சரியான எடையிலும், பாதுகாப்பாகவும் GPS பொருத்தப்பட்ட லாரிகளில் சென்றடைவதை உறுதி செய்திட ஏதுவாக கழக நிதியிலிருந்து ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் கிடங்குகளில் CCTV கண்காணிப்பு கேமரா பொருத்தியும், கிடங்கு

மென்பொருளை இணைய பயன்பாட்டு மென்பொருளாக மேம்படுத்தியும், நவீன கட்டுப்பாட்டு அறை அமைத்தும் கண்காணிக்கப்படும் .

**14. தமிழகத்தில் இளம் நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு / விழிப்புணர்வு தகவல்களை கொண்டு சென்றிட ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டில் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் நன்முறையில் செயல்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு / விழிப்புணர்வு கொண்டு சென்றிட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ஐந்து பள்ளிகள் தெரிவு செய்து, பள்ளிகளுக்கு தலா ரூ.2,500 வீதம் ரூபாய் 4 இலட்சம் வழங்கி அனைத்து மாவட்டங்களிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படும். இதே போன்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா ஐந்து கல்லூரிகள் தெரிவு செய்து கல்லூரிகளுக்கு தலா ரூ.10,000 வீதம் ரூபாய் 16 இலட்சம் வழங்கி நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படும். மேற்சொன்ன நிகழ்ச்சிகளை தொழிலாளர் நலத்துறையும், உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிருவாகத்துறையும் இணைந்து நடத்திட அந்தந்த துறைகளுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் ரூபாய் 10 இலட்சம் வழங்கி தமிழ்நாட்டில் இளம் நுகர்வோர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு / விழிப்புணர்வு தகவல்களை கொண்டு சென்றிட நுகர்வோர் நலநிதியிலிருந்து மொத்தம் ரூபாய் 30 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

**15. விவசாயப் பொருட்களை பாதுகாத்திட விவசாயிகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் ஏழு மண்டலங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விவசாயப் பொருட்களை பாதுகாத்திட நவீன சேமிப்பு முறைகள் மற்றும் தரக்கட்டுப்பாடு குறித்து விவசாயிகள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் ஏழு மண்டலங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி, கழக நிதியிலிருந்து ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும். இப்பயிற்சியின் போது ஒவ்வொரு விவசாயிக்கும் விவசாய உபகரணங்களும் வழங்கப்படும்.

**16. தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் 3 கிடங்கு வளாகங்களில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் உதவியுடன் சூரிய ஒளித் தகடுகள் பொருத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் 3 கிடங்கு வளாகங்களில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் உதவியுடன் கழக நிதியினைக் கொண்டு சூரிய ஒளித் தகடுகள் பொருத்தப்படும்.

# கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கைத்தறி மற்றும் துணிநூல்

### மானியக் கோரிக்கை எண் 17

**1. கைத்தறி நெசவாளர்களுக்கு 10 விழுக்காடு அகவிலைப்படி உயர்வு வழங்குதல்**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அடிப்படைக் கூலியுடன், அகவிலைப்படியும் சேர்த்து நெசவுக் கூலி வழங்கப்பட்டு வருகிறது. நெசவாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது வருவாயை அதிகரித்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நெசவாளர்கள் தற்போது பெற்றுவரும் அகவிலைப்படியில் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 1,139 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள சுமார் 66,000 கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறுவார்கள். இதன் மூலம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கூடுதலாக சுமார் ரூ.15 கோடி செலவினம் ஏற்படும்.

**2. பட்டுத் துணிகளின் விற்பனைக்கு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்குதல்**

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பட்டு இரகங்களின் சரக்கு இருப்பு அதிகரித்துள்ளது. அதன்

விற்பனையை அதிகரிக்கவும், இருப்பினை குறைக்கவும், பட்டு நெசவில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டும், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 31.03.2017 தேதியில் இருப்பாக உள்ள பட்டு இரக துணிகளின் விற்பனைக்கு உச்சவரம்பின்றி 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ. 10 கோடி அளவிற்கு செலவினம் ஏற்படும்.

**3. டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் மூலம் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையை விரிவுபடுத்துதல்**

கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகள் உயர் கல்வி பயிலுதலை ஊக்குவிக்கும் பொருட்டு டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் மூலம் 33 பாடப்பிரிவுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே வழங்கப்படும் 33 பாடப்பிரிவுகளுடன், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி நடப்பாண்டு முதல்

1. செவிலியர் பட்டயப் படிப்பு (Diploma in Nursing)

2. ஆடை அலங்காரப் பட்டயப் படிப்பு (Diploma in Fashion Technology)

**3.** ஆடை அலங்கார தொழிலியலில் பட்டப் படிப்பு (Degree in Fashion Technology)

**4.** படக்காட்சி மூலம் புகட்டப்படும் கல்விக்கான பட்டயப் படிப்பு (Diploma in Visual Communication)

ஆகிய 4 பாடப்பிரிவுகளும் சேர்த்து மொத்தம் 37 பாடப்பிரிவுகளுக்கு டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் உதவித் தொகை வழங்கப்படும். ஒவ்வொரு பாடப்பிரிவிலும் தலா ஒரு மாணவர், ஒரு மாணவி தேர்வு செய்யப்பட்டு முதல் நிலைக்கு ரூ.4,000ம், இரண்டாம் நிலைக்கு ரூ,2,500ம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும். இதனால், ரூ.0.52 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

**4. கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்**

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983, விதி 1988 குறித்து நன்கு தெரிந்து கொள்ளவும், சட்டப்பூர்வ நடவடிக்கைகளில் ஒவ்வொரு நிலையிலும் வழுவாது, நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து துறையில் பணியாற்றும் சுமார் 350 அலுவலர்களுக்கு இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி புத்தாக்கப் பயிற்சி ரூ.7.70 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**5. கரூரில் வடிவமைப்பு அரங்கம் அமைத்தல்** (Design Studio)

ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களின் வடிவமைப்பு (Design) தேவையினை பூர்த்தி செய்திடும் பொருட்டு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கரூரில் ஒரு வடிவமைப்பு அரங்கம் ரூ.**34.70** இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**6. காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு சரிகை ஆலையில் உற்பத்தி செய்யப்படும் சரிகையின் தரத்தினை மேம்படுத்துதல்**

தமிழ்நாடு சரிகை ஆலையில் உற்பத்தி செய்யப்படும் சரிகையின் தரம், நிறம் மற்றும் பளபளப்பு ஆகியவற்றினை மேம்படுத்தவும், சரிகை உள்ளீட்டின் தங்கம் மற்றும் வெள்ளி கலப்பினை சீராக பராமரிக்கவும், காரைக்குடியில் உள்ள மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவன (CECRI) வல்லுநர்களால் தங்கம் முலாம் பூசுதல் பிரிவில் விரிவான ஆய்வினை மேற்கொள்ள இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.**5** இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

**7. தொழில் நுட்ப ஜவுளியினை ஊக்குவித்தல்**

தொழில் நுட்ப ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை பார்வையிடவும், மற்ற மாநிலங்களில்

உள்ள சிறப்பு தொழில் நுட்ப ஜவுளி சந்தை மையங்களுக்கு அழைத்துச் செல்லவும், சந்தை பகுப்பாய்வு, முதலீட்டாளர்களின் சந்திப்பு, தயாரிப்பு மாதிரிகளை உருவாக்குதல் மற்றும் முதலீட்டாளர்கள் / தொழில் முனைவோர்களை ஈர்ப்பதற்கான பயிற்சி அளிக்க இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.25 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு செயல் திட்டம் வகுக்கப்படும்.

## 8. சிறந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் பரிசு தொகை திட்டத்தினை விரிவுபடுத்துதல் மற்றும் சிறந்த வடிவமைப்பாளர்களுக்கு பரிசுத் தொகைத் திட்டத்தினை அறிமுகப்படுத்துதல்

சிறந்த கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசு மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் திட்டம் 2013–2014ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தினை விரிவுப்படுத்தி அதிக எண்ணிக்கையிலான நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில், பட்டு இரகம் உற்பத்தி செய்யும் நெசவாளருக்கு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி முதல் பரிசாக ரூ.1 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். இது தவிர, பருத்தி இரகம் உற்பத்தி செய்யும் நெசவாளருக்கு முதல் பரிசாக ரூ.1 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரம், மூன்றாம்

பரிசாக ரூ.50 ஆயிரம் வழங்கப்படும். மேலும், சங்கங்களிலுள்ள வடிவமைப்பாளர்களை ஊக்குவிக்கும் விதமாக சிறந்த வடிவமைப்பாளர்களை தேர்வு செய்து முதல் பரிசாக ரூ.25 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ.10 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.5 ஆயிரம் நடப்பாண்டு முதல் வழங்கப்படும்.

இதனால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.3.90 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

## 9. கைத்தறி நெசவாளர்களுக்கு சிறப்பு நல்வாழ்வு மருத்துவ முகாம்கள் நடத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கைத்தறி நெசவாளர்களின் உடல்நலத்தை பாதுகாக்கவும் மற்றும் மேம்படுத்தவும், காது, மூக்கு, தொண்டை ஆய்வும், குறிப்பாக கண் பரிசோதனை மற்றும் எலும்பு மருத்துவம் உள்ளிட்ட வியாதிகளை கண்டறிய சிறப்பு நல்வாழ்வு மருத்துவ முகாம்கள், 20 இடங்களில் ஒவ்வொன்றும் தலா ரூ.50,000 செலவில் நடத்தப்படும். இதனால் அரசுக்கு ரூ.10 இலட்சம் செலவினம் ஏற்படும்.

## 10. மின் ஆளுமை குறித்த பயிற்சி

துறையின் மூலம் நடத்தப்படும் மின் ஆளுமை நடவடிக்கைகளை சிறப்பாக நடைமுறைப் படுத்துவதற்காக மின் ஆளுமை குறித்த பயிற்சி, துறை அலுவலர்கள் மற்றும் நெசவாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் / தமிழ்நாடு மின் ஆளுமை

கழகம் / நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிறுவனம்/ பிற சேவை மையங்கள் ஆகியவற்றுடன் இணைந்து மின் ஆளுமை குறித்த பயிற்சி இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 650 நபர்களுக்கு நடப்பாண்டில் ரூ.14.30 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**11. இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழில் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்.**

இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணித் திறனை மேம்படுத்தும் பொருட்டு, பிரதம மந்திரி தொழில் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 191 தொழிலாளர்களுக்கு கூடுதலாக தொழில் மேம்பாட்டு பயிற்சி ரூ.24.25 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

**12. கோ–ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்கள் முதல் தலைமை அலுவலகம் வரை உள்ள அனைத்து நிலை செயல்பாடுகளும் கணினிமயமாக்கல்.**

கோ–ஆப்டெக்ஸின் விற்பனை நிலையங்கள் முதல் தலைமை அலுவலகம் வரை உள்ள அனைத்து நிலை செயல்பாடுகளும் கணினி மூலம் இணைக்கப்பட்டு நிகழ்நேர தகவல்களாக மாற்றம் செய்யப்படவுள்ளது. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தேவையான கணினி வன்பொருள்கள், தொலை தொடர்பு இணைப்புகள் மற்றும் அனைத்து ஊழியர்களுக்கு பயிற்சிகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 13. கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களை நவீனமயமாக்குதல்.

விற்பனை நிலையங்களை நவீனப் படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்களை ஈர்க்கக்கூடிய பொலிவினை ஏற்படுத்தி, கோ –ஆப்டெக்ஸ் தனது விற்பனையை அதிகரித்து வருகிறது. வாடிக்கையாளர்களை கவரும் வகையிலும், விற்பனை நிலையங்களின் ரொக்க விற்பனையை மேம்படுத்தவும், தனியார் சந்தையில் நிலவும் போட்டியினை எதிர்கொள்ளவும் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி நடப்பு ஆண்டில் 5 விற்பனை நிலையங்கள் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தப்படும்.

## 14. கோ–ஆப்டெக்ஸின் தலைமை அலுவலகத்தில் சூரிய மின் ஆற்றல் உற்பத்தி செய்யும் அலகினை நிறுவுதல்.

சூரிய மின் ஆற்றலை உற்பத்தி செய்யும் அலகினை நிறுவி மின்சாரம் உற்பத்தி செய்ய கோ–ஆப்டெக்ஸ் திட்டமிட்டுள்ளது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு ஏற்ப, சூரிய ஒளியின் ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் வகையில் இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

கோ–ஆப்டெக்ஸின் தலைமை அலுவலகத்தில் சூரிய மின் ஆற்றல் அலகு ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். இதனால் கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலக மின்சார கட்டணத்தொகை கணிசமான அளவிற்கு குறையும்.

**15. புதிய இரகங்களை கோ–ஆப்டெக்ஸில் அறிமுகம் செய்தல்**

இளம் தலைமுறை வாடிக்கையாளர்களைக் கவரும் பொருட்டு இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பட்டு, பருத்தி இரக துப்பட்டாக்கள் மற்றும் பருத்தி ஆயத்த ஆடை துணி இரகங்கள் கோ ஆப்டெக்ஸில் அறிமுகப்படுத்தப்படும்.

மேலும், இளம் தலைமுறை வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் பட்டு இரக துப்பட்டாக்கள் ஆரணிப் பகுதி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் பருத்தி இரக துப்பட்டாக்கள் மற்றும் பருத்தி ஆயத்த ஆடை துணி இரகங்கள் கோவை மற்றும் மதுரைப் பகுதி சங்கங்களில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் உற்பத்தி செய்து கோ–ஆப்டெக்ஸில் அறிமுகப்படுத்தப்படும்.

# காால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

## கால்நடை பராமரிப்பு

### மானியக் கோரிக்கை எண் 6

**1. 1,500 விவசாயிகளுக்கு ரூ.2.25 கோடி மொத்த செலவில் தானியங்கி புல்நறுக்கும் கருவிகள் விநியோகிக்கப்படும்**

பசுந்தீவனம் விரயமாவதை குறைக்கும் நோக்குடன் 1,500 விவசாயிகளுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தானியங்கி புல்நறுக்கும் கருவிகள் ரூ.2.25 கோடி செலவில் வழங்கப்படும். ஒரு அலகின் விலையான ரூ.20,000இல், 75 சதவீத மானியமாக ஒரு கருவிக்கு ரூ.15,000 வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன்மூலம் பசுந்தீவனம் வீணாவது குறைவதுடன், அதன் செரிமானத் தன்மையும் அதிகரிக்கும்.

**2. விவசாயிகள் வளர்க்கும் சேலம் மேச்சேரி செம்மறி ஆடுகளின் மரபுத் தரம் ரூ.5.25 கோடி செலவில் உயர்த்தப்படும்**

உயர் மரபுத்திறன் கொண்ட 1,000 எண்ணிக்கையிலான சேலம் மேச்சேரி இன செம்மறி ஆட்டு கிடாக்குட்டிகள் ரூ.5.25 கோடி ஒதுக்கீட்டில் உருவாக்கப்படும். இவ்வாறு உருவாக்கப்படும் கிடாக்குட்டிகள் சேலம், கரூர், திருப்பூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு தங்களது செம்மறி ஆடுகளின் மரபுத் தன்மையை

இயற்கைமுறை இனவிருத்தி மூலம் மேம்படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்படும்.

**3. மாட்டினம் மற்றும் ஆட்டினங்கள் ரூ.6.29 கோடி செலவில் காப்பீடு செய்யப்படும்**

விவசாயிகளுக்கு ஏற்படும் பொருளாதார இழப்பினைக் குறைக்கும் விதமாக, இன்னல் மேலாண்மை நடவடிக்கையாக ரூ.6.29 கோடி மொத்த செலவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கால்நடைகள் காப்பீடு செய்யப்படும். இதன்வாயிலாக, அதிகபட்சமாக 1.25 இலட்சம் மாட்டினங்கள் அல்லது 12.5 இலட்சம் ஆட்டினங்கள் காப்பீடு செய்யப்படும்.

**4. குறைந்த உள்ளீடு தேவைப்படும் கோழிகளுக்கான புதுமையான கோழி உற்பத்தித் திட்டம் ரூ.1 கோடி செலவில் தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்**

குறைந்த உள்ளீடு தேவைப்படும் 80,000 கோழிகள் ரூ.1 கோடி செலவில் விளக்க மாதிரியான முன்னோடித் திட்டமாக தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி உற்பத்தி செய்யப்படும். இக்கோழிகள் 400 விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன் வாயிலாக கிராமப்புற ஏழைகளின்

பொருளாதார நிலை உயரவும், அவர்களின் ஊட்டச்சத்து தேவையை ஈடு செய்யவும் ஏதுவாகும்.

### 5. இறைச்சிக்கான நவீன கோழி உற்பத்தித் திட்டம் ரூ.2.25 கோடி செலவில் திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும்

திருவண்ணாமலை மாவட்டத்தில், இறைச்சிக்கான நவீன கோழி உற்பத்தித் திட்டம், ரூ.2.25 கோடி செலவில் விளக்க மாதிரியான முன்னோடி திட்டமாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்படும். இதன்மூலம், 1,20,000 இறைச்சிக் கோழிக் குஞ்சுகள் 200 பயனாளிகளுக்கு வழங்கப்படும். இதன் வாயிலாக கிராமப்புற பொருளாதார மேம்பாடு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

### 6. கால்நடை வளர்ப்போர் பயன்பெறும் வகையில் ரூ.50 இலட்சம் செலவில் கைப்பேசியின் மூலம் செயல்படும் செயலி உருவாக்கப்படும்

கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள், திட்டங்கள், வழங்கப்படும் சேவைகள், கால்நடை நோய்கள் குறித்த குறிப்புகள், ஆலோசனைகள், முதலியன கைப்பேசி மூலம் விவசாயிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீட்டில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி செயலி உருவாக்கப்படும்.

## 7. இருநூறு கால்நடை மருத்துவர்கள் மற்றும் 200 தொழில்நுட்ப சார் பணியாளர்களுக்கு ரூ.1.50 கோடி செலவில் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்

மருத்துவ நடைமுறைகள், பால் பண்ணைத் தொழில், கால்நடை இனவிருத்தி, தீவன மேலாண்மை கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பம் கோழி வளர்ப்பு, செல்லப் பிராணிகள் மருத்துவம், ஆகியவற்றில் இத்துறையின் 200 கால்நடை மருத்துவர்களுக்கும், 200 தொழில்நுட்ப சார் பணியாளர்களுக்கும் ரூ.1.50 கோடி செலவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி புத்தாக்கப் பயிற்சி வழங்கப்படும்.

## 8. ஆறு கால்நடை பன்முக மருத்துவமனைகள் மற்றும் 22 பெருமருத்துவமனைகளில் ரூ.2.59 கோடி செலவில் அறுவை சிகிச்சைக்கூடங்கள் ஏற்படுத்தப்படும்

கால்நடை மருத்துவம் மற்றும் ஈனியல் சிகிச்சை துறைகளில் சிறப்பான சிகிச்சையை இத்துறை வழங்கி வருகிறது. அறுவை சிகிச்சைத் துறையிலும் இத்தகைய மேம்பட்ட சேவைகளை வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகள் வளர்ப்போர் பயன்பெறும் வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 6 கால்நடை பன்முக மருத்துவமனைகள் மற்றும் 22 பெருமருத்துவமனைகளில் ரூ.2.59 கோடி செலவில் அறுவை சிகிச்சைக்கூடங்கள் ஏற்படுத்தப்படும்.

**9. கிராமப்புற இளைஞர்கள் 500 பேருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்து அவர்களை முதன்மைப் பயிற்சியாளர்களாக ஆக்கும் பொருட்டு ரூ.17.50 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்படும்**

படித்த, ஆர்வமும் துடிப்பும் உள்ள 500 கிராமப்புற இளைஞர்களுக்கு பால் பண்ணைத் தொழில் அமைத்தல், இறைச்சி மதிப்பு சங்கிலி, தீவன வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்றவற்றில் ரூ.17.50 இலட்சம் செலவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் முதன்மைப் பயிற்சியாளர்களாக ஆக்கப்படுவர். அவர்கள் இதர விவசாயிகளுக்கு பயிற்சியளித்து வணிகரீதியிலான கால்நடை வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ள ஊக்குவிப்பார்கள்.

**10. விவசாயிகளுக்கு கூடுதல் பசுந்தீவன ஆதாரமாக விளங்கும் பொருட்டு, பசுந்தீவன மர வளர்ப்புப் பணி ரூ.2 கோடி செலவில் துறை பண்ணைகளில் மேற்கொள்ளப்படும்**

இத்துறைப் பண்ணைகளில் 10 இலட்சம் தீவன மரக்கன்றுகள் ரூ.2 கோடி செலவில் உற்பத்தி செய்யப்படும். கூடுதல் பசுந்தீவன ஆதாரமாக பசுந்தீவன மரங்களை வளர்க்க விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்கு தீவன மரக்கன்றுகள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வழங்கப்படும். இதன் வாயிலாக வருடந்தோறும் பசுந்தீவனம்

கிடைப்பது உறுதி செய்யப்படுவதுடன் கால்நடைகளின் புரதச்சத்து தேவையும் பூர்த்தி செய்யப்படும்.

**11. கால்நடை நிலையங்களில் ரூ.3.10 கோடி செலவில் மண்ணில்லா பசுந்தீவன உற்பத்தி (ஹைட்ரோபோனிக்ஸ்) மற்றும் அசோலா செயல்விளக்க அலகுகள் ஏற்படுத்தப்படும்**

தீவனப்புல் உற்பத்தி செய்யப்படும் பகுதிகள், நகரம் மற்றும் தொழில்மயமாகி குறைந்து வருவதால் மாற்றுத் தீவன வளர்ப்பை ஊக்குவிப்பது தற்போதைய தேவையாகும். எனவே, மண்ணில்லா பசுந்தீவன உற்பத்தி அலகுகள் மற்றும் அசோலா செயல்விளக்க அலகுகளை 385 கால்நடை நிலையங்களில் ஏற்படுத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இதன்மூலம் மாற்றுமுறை தீவன வளர்ப்பை மேற்கொள்வதால் கிடைக்கும் பயன்கள் பற்றிய விழிப்புணர்வு விவசாயிகளுக்கு ஏற்படும்.

**12. ஐநூறு கால்நடை நிலையங்களுக்கு ரூ.90 இலட்சம் செலவில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக முன்மாதிரி கால்நடை கட்டுப்பாட்டு கருவிகள் வழங்கப்படும்**

கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும், சிகிச்சையின்போது கையாள்வதற்காகவும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட முன்மாதிரி கால்நடை கட்டுப்பாட்டு கருவிகள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

ரூ.90 இலட்சம் செலவில் 500 கால்நடை நிலையங்களுக்கு வழங்கப்படும்.

**13. உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் தரமான உறைவிந்தைப் பெற ஏதுவாக பொலிகாளைகள் மற்றும் காளைக் கன்றுகளுக்கு ரூ.5 கோடி செலவில் கால்நடை கொட்டகைகள் ஏற்படுத்தப்படும்**

உறைவிந்து உற்பத்தி பணியில் ஈடுபடுத்தப்படும் பொலிகாளைகளின் இருப்பிட வசதியை மேம்படுத்தும் நோக்கோடு ஈச்சங்கோட்டை, ஒசூர் மற்றும் உதகமண்டல கால்நடைப் பண்ணைகளில் 100 பொலிகாளைகள் மற்றும் 40 பொலிகாளைக் கன்றுகளைப் பராமரிக்க ஏதுவாக, மூன்று உறைவிந்து உற்பத்தி நிலையங்களிலும், ரூ.5 கோடி மொத்த செலவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி கால்நடை கொட்டகைகள் ஏற்படுத்தப்படும்.

**14. கால்நடை நிலையங்களில் உள்ள குளிர் சங்கிலி வசதிகளை மேம்படுத்த ரூ.7.97 கோடி செலவில் 480 தொடர் குளிர்சாதனப் பெட்டிகள், ஒரு குளிர்பதன அறை, 1,061 குளிர் சாதனப் பெட்டிகள் மற்றும் 1,500 தடுப்பூசிப் பெட்டிகள் கால்நடை நிலையங்களுக்கு வழங்கப்படும்.**

கால்நடை நோய்களுக்கான தடுப்பூசிகள் கால்நடைகளுக்குப் போடப்படும்வரை குளிர் நிலையில் இருத்தல் வேண்டும். இத்துறையின் தடுப்பூசிக்கான குளிர்பதன சங்கிலித் தொடரை மேம்படுத்த ரூ.7.97 கோடி செலவில், 480 தொடர் குளிர்சாதனப் பெட்டிகள், ஒரு

குளிர்பதன அறை, 1,061 குளிர் சாதனப் பெட்டிகள் மற்றும் 1,500 தடுப்பூசிப் பெட்டிகள், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் உள்ள கால்நடை நிலையங்களுக்கும் வழங்கப்படும். இதன்மூலம் கால்நடைகளுக்கு வழங்கப்படும் தடுப்பு மருந்துகளின் தரம் பெரிதும் பாதுகாக்கப்படும்.

**15. திருநெல்வேலியில் ரூ.1.50 கோடி செலவில் கால்நடை மற்றும் கோழித் தீவன தொழில்நுட்ப மையம் அமைக்கப்படும்**

தமிழகத்தின் தென் மாவட்ட கால்நடை மற்றும் கோழி வளர்ப்போரின் தீவன தேவையை நிறைவேற்ற ஏதுவாக ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் கால்நடை மற்றும் தீவன தொழில்நுட்ப மையம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும். இந்த மையம் குறைந்த செலவில் கால்நடை மற்றும் கோழிகளுக்கான 1,500 டன் உயர்தர அடர் தீவனத்தை ஆண்டுதோறும் உற்பத்தி செய்யும்.

**16. சென்னை, மாதவரத்தில் ரூ.1.51 கோடி செலவில் ஊரக கோழி உள்ளீடு மற்றும் திறன் வளர்ப்பு மையம் அமைக்கப்படும்**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட குறைந்த உள்ளீட்டுத் தொழில்நுட்ப மரபணுக் கோழிகளான நந்தனம் கோழி–4 மற்றும் நாட்டுக் கோழி (அசீல்) ஆகியவற்றை ஊக்குவிக்கும்

வகையில் சென்னை, மாதவரத்தில் ரூ.1.51 கோடி ஒதுக்கீட்டில் ஊரக கோழி உள்ளீடு மற்றும் திறன் வளர்ப்பு மையம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும். நல்ல இறைச்சி உற்பத்தி, மதிப்பு கூட்டுதல், உப பொருட்கள் உபயோகம் மற்றும் இறைச்சிக்கூட கழிவு மேலாண்மை ஆகியவை பற்றிய பயிற்சிகள் கிராமப்புற வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு வழங்கப்படும்.

**17. கால்நடை மற்றும் கோழியின நோய்களைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கான மையம் ஒன்று ரூ.3.06 கோடி செலவில் சென்னை மாதவரத்தில் ஏற்படுத்தப்படும்**

மாநிலத்தில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழியினங்களில் ஏற்படும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களைக் கண்காணித்து, கண்டறிந்து கட்டுப்படுத்தும் பணியை மேற்கொள்வதற்காக, கால்நடை மற்றும் கோழியின நோய்களைக் கண்காணித்து கட்டுப்படுத்தும் மையம் ஒன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3.06 கோடி செலவில் சென்னை மாதவரத்தில் ஏற்படுத்தப்படும்.

**18. மண்ணில்லா பசுந்தீவன உற்பத்தி (ஹைட்ரோஃபோனிக்) அலகுகளை உருவாக்கிட, சென்னை, மாதவரத்தில் ரூ.74.48 இலட்சம் செலவில் மையம் ஒன்று அமைக்கப்படும்**

எளிதில் உபயோகிக்கக் கூடிய குறைந்த விலையிலான மண்ணில்லா பசுந்தீவன உற்பத்தி (ஹைட்ரோஃபோனிக்)

அலகுகளை உருவாக்கி, வறட்சி பாதித்த மாவட்ட கிராமப்புற ஏழை விவசாயிகளுக்கு வழங்கிட சென்னை, மாதவரத்தில் ரூ.74.48 இலட்சம் செலவில் மையம் ஒன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும். இந்த அலகுகள் 320 விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

## 19. தருமபுரி மாவட்டத்தில் ஆலம்பாடி இன ஆராய்ச்சி மையம் ரூ.4 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்

உள்நாட்டின கால்நடைகளை பாதுகாப்பது அவற்றின் மரபுத் தன்மையை மேம்படுத்துவதற்கான அடித்தளமாகும். இவ்வகையில் காங்கேயம், புலிக்குளம் மற்றும் பர்கூர் இனங்களுக்கான ஆராய்ச்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது, ஆலம்பாடி இன பசுக்களை பாதுகாப்பதற்காக ஆலம்பாடி இன ஆராய்ச்சி மையம் ஒன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.4 கோடி செலவில் தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தால் ஏற்படுத்தப்படும்.

# மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

### மானியக் கோரிக்கை எண் 19

**1) செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கள்ளக்குறிச்சி மற்றும் கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து சிகிச்சை மையங்கள் 28.3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் விபத்து சிகிச்சை மையங்கள் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கள்ளக்குறிச்சி மற்றும் கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து சிகிச்சை மையங்கள் 28.3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**2) காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, விபத்து காய சிகிச்சை ஒப்புயர்வு மையமாக (Centre of Excellence) 8.55 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, விபத்து காய சிகிச்சை ஒப்புயர்வு மையமாக (Centre of Excellence) 8.55 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

**3) தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் (டாம்ப்கால்) மேலும் ஒரு தொழில் அலகு தொடங்கப்படும்.**

தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் சித்தா, ஆயுர்வேதா மற்றும் யுனானி ஆகிய இந்தியமுறை மருந்துகளை தயார் செய்து, அரசு மருத்துவ நிலையங்களுக்கு வழங்கி வருகிறது. இந்தியமுறை மருந்துகளின் தேவை அதிகரித்து வருவதால் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மூலிகை பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் (டாம்ப்கால்) மேலும் ஒரு தொழில் அலகு தொடங்கப்படும்.

**4) ‘தாய்’ (TAEI) திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 9 விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களுக்கு 60 மருத்துவ அலுவலர்கள், 300 செவிலியர்கள் மற்றும் 342 இதர சுகாதார பணியாளர்கள் 5.91 கோடி ரூபாய் செலவில் புதிதாக பணி நியமனம் செய்யப்படுவார்கள்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ‘தாய்’ (TAEI) திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை, வேலூர், கரூர் மற்றும் சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், கிருஷ்ணகிரி, கோவில்பட்டி மற்றும் திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வரும் 9 விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்களுக்கு 60 மருத்துவ அலுவலர்கள், 300 செவிலியர்கள் மற்றும் 342 இதர சுகாதார பணியாளர்கள் 5.91 கோடி ரூபாய் செலவில் புதிதாக பணி நியமனம் செய்யப்படுவார்கள்.

**5) 12 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை மையங்களாகக் கொண்டு (HUB) அவற்றைச் சார்ந்து 160 மருத்துவமனைகளில் (Spokes) மாரடைப்பு சிகிச்சைப் பிரிவுகள் (STEMI) 9.2 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது

மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், இராஜாஜி அரசு மருத்துவமனை மதுரை, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சி, வேலூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய **12** அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை மையங்களாகக் கொண்டு (HUB) அவற்றை சார்ந்து **160** மருத்துவமனைகளிலும் (Spokes) மாரடைப்பு சிகிச்சை பிரிவுகள் (STEMI) **9.2** கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

**6) 108 அவசரகால ஊர்திகளை விபத்து நிகழ்வுகளின் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யும் பணி (Dynamic Allocation) சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT - Madras) மூலம் 24 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, **108** அவசரகால ஊர்திகளை விபத்து நிகழ்வுகளின் தேவைக்கேற்ப ஒதுக்கீடு செய்யும் பணி **(Dynamic Allocation)** சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம் **(Indian Institute of Technology - Madras)** மூலம் **24** இலட்சம் ரூபாய் செலவில் மேலும் மேம்படுத்தப்படும்.

7) **திருப்பூர், இராமநாதபுரம், தென்காசி மற்றும் பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (MDCCU) 2.67 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருப்பூர், இராமநாதபுரம், தென்காசி மற்றும் பொள்ளாச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் பன்னோக்கு தீவிர சிகிச்சைப் பிரிவுகள் (Multi Disciplinary Critical Care Unit) 2.67 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

8) **மாரடைப்பு (Heart Attack) மற்றும் பக்கவாதத்தினால் (Stroke) பாதிக்கப்படுபவர்களுக்கு உரிய நேரத்தில் (Golden Hour) உடனடி சிகிச்சை அளித்து உயிர்காக்கும் பொருட்டு Thrombolysis வசதிகளுடன் கூடிய சிறப்பு அவசர கால ஊர்திகள் முதற்கட்டமாக முக்கிய நகரங்களில் இயக்கப்படும்.**

அவசர கால மருத்துவ நிகழ்வுகளின் போது (Medical Emergencies) ஏற்படும் உயிர் இழப்புகளைக் குறைக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாரடைப்பு மற்றும் பக்கவாத நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு உரிய நேரத்தில் (Golden Hour) உடனடி சிகிச்சை அளித்து அவர்களின் உயிரைக் காக்கும் பொருட்டு புதிய முயற்சியாக Thrombolysis வசதிகளுடன் கூடிய சிறப்பு அவசர கால ஊர்திகள் (Special Ambulances for Heart Attack and Stroke) முதற்கட்டமாக முக்கிய நகரங்களில் இயக்கப்படும்.

**9) திருவள்ளூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, அரூர் மற்றும் திண்டிவனம் அரசு வட்ட மருத்துவமனைகளில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 4.4 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவள்ளூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, அரூர் மற்றும் திண்டிவனம் அரசு வட்ட மருத்துவமனைகளில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 4.4 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**10) அதிக சாலை விபத்துகள் நிகழும் பகுதிகளான சூளகிரி, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்ட மருத்துவமனையில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 2 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அதிக சாலை விபத்துகள் நிகழும் பகுதிகளான சூளகிரி, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வட்ட மருத்துவமனையில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையங்கள் 2 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**11) சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு 2 கோடி ரூபாய் செலவில் மேலும் நவீனப்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை இராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு 2 கோடி ரூபாய் செலவில் மேலும் நவீனப்படுத்தப்படும்.

**12) விழுப்புரம், தருமபுரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, புதுக்கோட்டை ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிதாக கேத் லேப் (Cath Lab) கருவிகள் 21 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.**

மாரடைப்பு ஏற்படும் நோயாளிகளுக்கு மேற்கொள்ள வேண்டிய உடனடி அவசரகால சிகிச்சையான ஆஞ்சியோ பிளாஸ்ட்டி சிகிச்சை அளிக்க ஏதுவாக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு, கேத் லேப் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம், தருமபுரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, புதுக்கோட்டை ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் புதிதாக கேத் லேப் (Cath Lab) கருவிகள் 21 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**13) மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்களுக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான சிறப்பு பயிற்சி ‘தாய்’ (TAEI) திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு ‘தாய்’ (TAEI) திட்டத்தின் கீழ் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கான சிறப்பு பயிற்சி ஒரு கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

**14) பக்கவாதத்தை கண்டறிவது, உடனடி மருத்துவ முதலுதவி அளிப்பது, உரிய மருத்துவமனைக்கு தகவல் பரிமாறுவது மற்றும் குறுகிய கால அளவில் மருத்துவமனையில் அனுமதிப்பது என உடனடியாக நோயாளிகளுக்கு பக்கவாத சிகிச்சை (SCRIPT) கிடைத்திட மேம்படுத்தப்பட்ட நெறிமுறைகள் (Protocol) வகுக்கப்பட்டு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு 37 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பக்கவாதத்தை கண்டறிவது, உடனடி மருத்துவ முதலுதவி அளிப்பது, உரிய மருத்துவமனைக்கு தகவல் பரிமாறுவது மற்றும் குறுகிய கால அளவில் மருத்துவமனையில் அனுமதிப்பது என உடனடியாக நோயாளிகளுக்கு பக்கவாத சிகிச்சை (Stroke Care and Rapid Intervention with Plasminogen Activator and Thrombectomy) கிடைத்திட மேம்படுத்தப்பட்ட நெறிமுறைகள் (Protocol) வகுக்கப்பட்டு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கு 37 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

**15) தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, காரப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைகளுக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக லீனியர் ஆக்ஸிலேட்டர் (**Linear Accelerator) **கருவிகள் 50 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

புற்றுநோய் சிகிச்சை முறைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு படிப்படியாக லீனியர் ஆக்ஸிலரேட்டர் (Linear Accelerator) கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, காரப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் சென்னை ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைகளுக்கு புற்றுநோய் சிகிச்சைக்காக லீனியர் ஆக்ஸிலேட்டர் (Linear Accelerator) கருவிகள் 50 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**16) 'தாய்' (**TAEI) **திட்டத்தின் கீழ் 18 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு 141 புதிய செவிலியர் பணியிடங்கள் 2.37 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, 'தாய்' (TAEI) திட்டத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம், செய்யாறு, கள்ளக்குறிச்சி, கும்பகோணம், நாகப்பட்டினம், மன்னார்குடி, காரைக்குடி, மணப்பாறை, உசிலம்பட்டி, பெரியகுளம், உதகமண்டலம், பொள்ளாச்சி, ஈரோடு, திருப்பூர், மேட்டூர், இராமநாதபுரம் மற்றும் பென்னாகரம் ஆகிய 18 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் உள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளுக்கு 141 புதிய செவிலியர் பணியிடங்கள் 2.37 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

**17) 108 அவசரகால ஊர்தி சேவையில் பணிபுரியும் மருத்துவ நுட்புனர்களுக்கு திறன் மேம்பாட்டு** (Skill Development) **பயிற்சி 1.9 கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 108 அவசரகால ஊர்தி சேவையில் பணிபுரியும் மருத்துவ நுட்புனர்களுக்கு திறன் மேம்பாட்டு (Skill Development) பயிற்சி 1.9 கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

**18) தஞ்சாவூர், திருப்பூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை தாய்சேய் நல ஒப்புயர்வு மையங்களுக்குத்** (RCH Centres of Excellence) **தேவையான சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள் 7.72 கோடி ரூபாய் செலவில் புதியதாக நியமனம் செய்யப்படுவார்கள்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், திருப்பூர், கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளின் தாய்சேய் ஒப்புயர்வு மையங்களுக்குத் (Reproductive and Child Health Centres of Excellence) தேவையான சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள் 7.72 கோடி ரூபாய் செலவில் புதியதாக நியமனம் செய்யப்படுவார்கள்.

**19) அதிக பிரசவங்கள் நிகழும் 47 சீமாங்** (CEmONC) **மையங்களில் தாய்சேய் நல பாதுகாப்பை கருதி 222 பாதுகாப்புப் பணியாளர்கள் 1.33 கோடி ரூபாய் செலவில் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அதிக பிரசவங்கள் நிகழும் 47 சீமாங் மையங்களில் (Comprehensive Emergency Obstetric and Newborn Care Centres) தாய்சேய் நல பாதுகாப்பைக் கருதி,

222 பாதுகாப்புப் பணியாளர்கள் 1.33 கோடி ரூபாய் செலவில் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.

**20) கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் தாய்சேய் நல ஒப்புயர்வு மையங்களுக்கு நவீன மருத்துவக் கருவிகள் இரண்டு கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் தாய்சேய் நல ஒப்புயர்வு மையங்களுக்கு (Reproductive and Child Health Centres of Excellence) நவீன மருத்துவக் கருவிகள் இரண்டு கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**21) கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு (SNCU) இரண்டு கோடியே ஒன்பது இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு (Special New Born Care Unit) 2 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

**22) மதுரை, திருவண்ணாமலை, தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகள் அவசர சிகிச்சை மற்றும் நிலைப்படுத்துதல் பிரிவுகளுக்கு (PREM) நவீன மருத்துவக் கருவிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை, திருவண்ணாமலை, தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகள் அவசர சிகிச்சை மற்றும் நிலைப்படுத்துதல் பிரிவுகளுக்கு (Paediatric Resuscitation and Emergency Management) நவீன மருத்துவக் கருவிகள் ஒரு கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**23) 69 பச்சிளம் குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு (SNCU) ஒரு கோடியே மூன்று இலட்சம் ரூபாய் செலவில் T-Piece Resuscitator கருவிகள் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 69 பச்சிளம் குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு T-Piece Resuscitator கருவிகள் 1 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**24) தற்போது 530 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உடல் நல பரிசோதனைகள் செய்யும் உன்னத "அம்மா ஆரோக்கியத் திட்டம்" மேலும் 100 மையங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.**

30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள வகை செய்யும் "அம்மா ஆரோக்கியத் திட்டம்" 1.3.2016 அன்று தொடங்கப்பட்டு, தற்போது 530 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த உன்னதமான "அம்மா ஆரோக்கியத் திட்டம்" மேலும் 100 மையங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

**25) 834 துணை சுகாதார மையங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள 140 நகர்ப்புற சுகாதார மையங்களில் மக்கள் தொகை மற்றும் சமூகம் சார்ந்த தொற்றா நோய்கள் கண்டறியும் நலத் திட்ட பெண் சுகாதார தன்னார்வலர்களுக்கு 4.61 கோடி ரூபாய் செலவில் ஊக்கத் தொகை வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 834 துணை சுகாதார மையங்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள 140 நகர்ப்புற சுகாதார மையங்களில் மக்கள் தொகை மற்றும் சமூகம் சார்ந்த

தொற்றா நோய்கள் கண்டறியும் நலத் திட்ட பெண் சுகாதார தன்னார்வலர்களுக்கு (Women Health Volunteers) 4.61 கோடி ரூபாய் செலவில் ஊக்கத் தொகை வழங்கப்படும்.

**26) விழுப்புரம், சிவகங்கை, கரூர், திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை ஆகிய 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவி (Mammogram) 1.5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம், சிவகங்கை, கரூர், திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை ஆகிய 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மார்பக புற்றுநோய் கண்டறியும் கருவி (Mammogram) 1.5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**27) எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனை, கஸ்துரிபாய்காந்தி தாய்சேய் நல மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனை, ஓட்டேரி மற்றும் சேத்துப்பட்டு காசநோய் மருத்துவமனைகள், சிதம்பரம் இராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி, காரப்பேட்டை அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் 6 அரசு மருத்துவமனைகளில் சி.டி. ஸ்கேன் கருவிகள் (C.T. Scan) 13.5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனை, கஸ்தூரிபாய் காந்தி தாய்சேய் நல மருத்துவமனை, ஆர்.எஸ். ஆர்.எம். மருத்துவமனை, ஒட்டேரி மற்றும் சேத்துப்பட்டு காசநோய் மருத்துவமனைகள் மற்றும் காரப்பேட்டை அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் பெருந்துறை, விருதாச்சலம், ஓமலூர், மேலூர், அறந்தாங்கி மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய 6 அரசு மருத்துவமனைகள் மற்றும் சிதம்பரம் இராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி ஆகியவற்றிற்கு ஸ்கேன் கருவிகள் (C.T. Scan) 13.5 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**28) கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் காசநோய் பிரிவுகளுக்கு நடமாடும் நுண்கதிர்வீச்சு கருவிகள் (**Mobile X-Ray**) மூன்று கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

2025–ம் ஆண்டிற்குள் காசநோயை முற்றிலும் ஒழித்திடும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருவள்ளூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் காசநோய் பிரிவுகளுக்கு நடமாடும் நுண்கதிர்வீச்சு கருவிகள் (Mobile X-Ray) மூன்று கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**29) தமிழகம் முழுவதும் உள்ள காசநோயாளிகள், அவர்களது சிகிச்சை காலம் முழுவதும் மாத்திரை உட்கொள்ளும் முறை, நவீன தொழில்நுட்ப உதவியுடன் கண்காணிக்கத் தேவையான '99 DOTS Sleeves' செயலி 2.2 கோடி ரூபாய் செலவில் உருவாக்கி கண்காணிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகம் முழுவதும் உள்ள காசநோயாளிகள், அவர்களது சிகிச்சை காலம் முழுவதும் மாத்திரை உட்கொள்ளும் முறை, நவீன தொழில்நுட்ப உதவியுடன் கண்காணிக்கத் தேவையான '99 DOTS Sleeves' செயலி 2.2 கோடி ரூபாய் செலவில் உருவாக்கி கண்காணிக்கப்படும்.

**30) காசநோயாளிகள் குறித்த சிகிச்சை விவரங்களை பதிவு செய்வதற்காக களப்பணியாளர்களுக்கு 528 புதிய கையடக்க கணினிகள் 6.76 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

காசநோயாளிகள் குறித்த சிகிச்சை விவரங்களை பதிவு செய்வதற்காக 1,412 களப்பணியாளர்களுக்கு கையடக்க கணினிகள் உலக காசநோய் தினத்தன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேலும் 528 புதிய கையடக்க கணினிகள் 6.76 கோடி ரூபாய் செலவில் களப்பணியாளர்கள் மற்றும் ஆய்வக நுட்புணர்களுக்கு வழங்கப்படும்.

**31) 2025க்குள் காசநோயை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில், தமிழகம் முழுவதும் உள்ள மருந்து கடைகளில் விற்பனை செய்யப்படும் காசநோய் சிகிச்சைக்கான மருந்துகளின் விற்பனை பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டு தொடர் சிகிச்சை கண்காணிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் 2025க்குள் காசநோயை முற்றிலும் ஒழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள மருந்து கடைகளில் விற்பனை செய்யப்படும் காசநோய் சிகிச்சைக்கான மருந்துகளின் விற்பனை பதிவுகள் கணினிமயமாக்கப்பட்டு தொடர் சிகிச்சை கண்காணிக்கப்படும்.

**32) தொழுநோய் பாதிப்பு உள்ள 87 வட்டாரங்களில் வீடு வீடாக சென்று தொழுநோய் பாதிப்பு கண்டறிந்து சிகிச்சையளிக்கும் பணிகள் 87 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.**

தொழுநோய் அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, நரம்பு பாதிப்பு ஏற்படுவதற்கு முன் சிகிச்சை அளித்தால், தொழுநோயால் ஏற்படும் ஊனத்தைத் தடுக்கலாம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தொழுநோய் பாதிப்பு உள்ள 87 வட்டாரங்களில் வீடு வீடாக சென்று தொழுநோய் பாதிப்பு கண்டறிந்து சிகிச்சையளிக்கும் பணிகள் 87 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

**33) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனைகளில், கல்லீரல் பாதிப்பு விளிம்பு நிலை நோயாளிகளுக்கான ஸ்டெம் செல் சிகிச்சைக்கு, பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சிகள் 4.3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். மேலும், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 13 இலட்சம் ரூபாய் செலவில் வைரல் ஹெபடைடிஸ் கண்காணிப்பு மையம் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கல்லீரல் சிகிச்சையில் முன்னோடியாக விளங்கும் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கல்லீரல் பாதிப்பிற்கு உள்ளான விளிம்பு நிலை நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், ஸ்டெம்செல் சிகிச்சைக்கு பல்வேறு மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் ஆராய்ச்சிகள் 4.3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். மேலும், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் வைரல் ஹெபடைடிஸ் கண்காணிப்பு மையம் 13 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**34) பல்வேறு வகையான காய்ச்சல்களைக் கண்டறிந்து சிகிச்சையளித்திடவும், காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், ஒருங்கிணைந்த காய்ச்சல் கண்காணிப்பு, சிகிச்சை மற்றும் தடுப்பு திட்டம் திருப்பூர் மாவட்டத்தில் 4.35 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, பல்வேறு வகையான காய்ச்சல்களைக் கண்டறிந்து சிகிச்சையளித்திடவும், காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஒருங்கிணைந்த காய்ச்சல் கண்காணிப்பு, சிகிச்சை மற்றும் தடுப்பு திட்டம் (Comprehensive Plan for Surveillance, Prevention, Control of Epidemic Prone Infectious Diseases and Management in Tiruppur District) திருப்பூர் மாவட்டத்தில் 4.35 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

**35) தமிழகத்தில் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்களை கட்டுப்படுத்தவும், இதுபோன்ற நோய்களில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கவும் 12.93 கோடி ரூபாய் செலவில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாட்டில் தற்போது டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் கொசுக்களால் பரவும் நோய்களான டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்களை மேலும் கட்டுப்படுத்தி பொதுமக்களை பாதுகாக்க,12.93 கோடி ரூபாய் செலவில் கொசு ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**36) டெங்கு மற்றும் சிக்குன்குனியா காய்ச்சல்களை தடுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்காக இந்த நிதியாண்டிலும் இரண்டு கோடி ரூபாய் செலவில் தொடர் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, டெங்கு மற்றும் சிக்குன்குனியா காய்ச்சல்களை தடுக்கும் நிலவேம்பு குடிநீர் வழங்குதல் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்காக இந்த நிதியாண்டிலும் இரண்டு கோடி ரூபாய் செலவில் தொடர் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**37) தன்சுத்தம் மற்றும் சுற்றுப்புறத் தூய்மை குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் 35 வட்டாரங்களில் தலா ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை தேர்ந்தெடுத்து 2.62 கோடி ரூபாய் செலவில் "சுகாதார பூங்காக்கள்" அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தன்சுத்தம் மற்றும் சுற்றுப்புறத் தூய்மை குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் 35 வட்டாரங்களில் தலா ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை தேர்ந்தெடுத்து 2.62 கோடி ரூபாய் செலவில் "சுகாதார பூங்காக்கள்" அமைக்கப்படும்.

**38) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையின், கை அறுவை சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு நிலையத்திற்கு சிறப்பு மருந்துகள் மற்றும் நவீன மருத்துவக் கருவிகள் 4.23 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையின், கை அறுவை சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு நிலையத்திற்கு சிறப்பு மருந்துகள் மற்றும் நவீன மருத்துவக் கருவிகள் **4.23** கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**39) ஸ்டெம் செல் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை முறைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் ஆய்வகம், 6.63 கோடி ரூபாய் செலவில் cGMP தரத்திற்கு மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஸ்டெம் செல் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை முறைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் ஆய்வகம், **6.63** கோடி ரூபாய் செலவில் current Good Manufacturing Practice தரத்திற்கு மேம்படுத்தப்படும்.

**40) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையின் கை அறுவைசிகிச்சை ஆராய்ச்சி மற்றும் கை மாற்று அறுவை சிகிச்சை பிரிவிற்கு, அதி நவீன வசதிகளுடன் தனி அறுவை அரங்கமும், தனிப்பிரிவும் 4.79 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைத் துறையின் கை அறுவை சிகிச்சை ஆராய்ச்சி மற்றும் கை மாற்று அறுவை சிகிச்சை பிரிவிற்கு, அதி நவீன வசதிகளுடன் தனி அறுவை அரங்கமும், தனிப்பிரிவும் **4.79** கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**41) சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள சிறப்பு அடுக்குமாடி கட்டடத்திற்கு கூடுதல் வசதிகள் 9.92 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள சிறப்பு அடுக்குமாடி கட்டடத்திற்கு கூடுதல் வசதிகள் **9.92** கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**42) சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நோயாளிகளின் நலன் கருதி சாய்தள வசதிகள் 6.36 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

நிபுணர் குழு அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில், அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் நலன் கருதி சாய்தள வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நோயாளிகளின் நலன் கருதி சாய்தள வசதிகள் **6.36** கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**43) சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் அரசு மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனைகளுக்கு புதிய தீ விபத்து தடுப்பு மற்றும் பாதுகாப்பு கருவிகள் 4.1 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் அரசு மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனைகளில் உள்ள தீ விபத்து தடுப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியமானதாகும். எனவே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா

அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த இரண்டு அரசு மருத்துவமனைகளிலும் புதிய தீ விபத்து தடுப்பு மற்றும் பாதுகாப்புக் கருவிகள் 4.1 கோடி ரூபாய் செலவில் பொருத்தப்படும்.

**44) தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் நவீன புறநோயாளிகள் பிரிவு ஆறு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில் நவீன புறநோயாளிகள் பிரிவு ஆறு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**45) 5 மாவட்டங்களில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகங்களுக்கு சொந்த கட்டடங்கள் ஐந்து கோடி ரூபாய் செலவில் இரண்டாண்டுகளில் கட்டப்படும்.**

வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்ட சுகாதார துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 5 மாவட்டங்களில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் ஐந்து கோடி ரூபாய் செலவில் இரண்டாண்டுகளில் கட்டப்படும்.

**46) ஜெனரேட்டர் மற்றும் உயர் அழுத்த மின் வசதிகள் 27.34 கோடி ரூபாய் செலவில் 19 அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 19 அரசு மருத்துவமனைகளில் ஜெனரேட்டர் மற்றும் உயர் அழுத்த மின் வசதிகள் 27.34 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**47) நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கமும் 12 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சை பின்கவனிப்பு பிரிவும் 1.32 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கமும் 12 படுக்கைகள் கொண்ட அறுவை சிகிச்சை பின்கவனிப்பு பிரிவும் 1.32 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**48) விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கென தனிப்பிரிவு 1.64 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம்

அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கென தனிப்பிரிவு 1.64 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**49) மருத்துவ அலுவலர் குடியிருப்புகள் 19 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 6.99 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டடங்கள் கட்டப்படும்.**

ஆரம்ப சுகாதார நிலையங்கள் 24x7 பிரசவ சேவைகளை வழங்கி வருகின்றன. இங்கு பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு படிப்படியாக குடியிருப்பு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 19 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடங்கள் 6.99 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**50) மலைவாழ் மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு நீலகிரி, ஜவ்வாதுமலை, கல்வராயன்மலை, ஏலகிரி, ஏற்காடு, கொல்லிமலை, கொடைக்கானல் ஆகிய மலைப் பகுதிகளில் உள்ள 64 துணை சுகாதார நிலையங்களுக்கு 18.8 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.**

மலைகள் மற்றும் தொலைதூர கிராமங்களில் வசிக்கும் மலைவாழ் மக்களின் சுகாதார வசதிகளை மேம்படுத்த, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மலைவாழ் மக்களின் சுகாதார வசதிகளை

தொடர்ந்து மேம்படுத்தும் பொருட்டு நீலகிரி, ஜவ்வாதுமலை, கல்வராயன்மலை, ஏலகிரி, ஏற்காடு, கொல்லிமலை, கொடைக்கானல் ஆகிய மலைப் பகுதிகளில் உள்ள 64 துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடங்கள் 18.8 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**51) 19 வட்டாரங்களில் 100 துணை சுகாதார நிலையங்களுக்கு 20.48 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.**

வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் துணை சுகாதார நிலையங்களுக்கு, படிப்படியாக சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 19 வட்டாரங்களில் உள்ள 100 துணை சுகாதார நிலையங்களுக்கு சொந்த கட்டடங்கள் 20.48 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**52) தமிழகத்தில் உள்ள 309 அரசு மருத்துவமனைகள், 22 அரசு மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த 55 மருத்துவமனைகள், இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 105 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ தகவல் மேலாண்மைத் திட்டம் 37 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்பட்டு திறம்பட செயல்படுத்தப்படும்.**

மருத்துவ தகவல் மேலாண்மைத் திட்டம், 309 அரசு மருத்துவமனைகள், 22 அரசு மருத்துவக் கல்லூரிகளைச்

சார்ந்த 55 மருத்துவமனைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்திட்டம், தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் அரசு மருத்துவ நிலையங்களில் மேம்படுத்தப்படுவதுடன், இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இதற்காக நடப்பாண்டில் 37 கோடி ரூபாய் செலவிடப்படும்.

**53) தாய்சேய் நலப் பணி, பிறப்பு மற்றும் இறப்பு பதிவிற்காக 985 துணை சுகாதார நிலையங்களுக்கு பயோமெட்ரிக் கருவிகள் 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தாய்சேய் நலப் பணி, பிறப்பு மற்றும் இறப்பு பதிவிற்காக அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தின் கீழ் 985 துணை சுகாதார நிலையங்களுக்கு பயோமெட்ரிக் கருவிகள் 20 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**54) எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மையம் (DEIC) 1.5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மையங்கள் (District Early Intervention Centres) 1.5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**55) சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை, சேலம், மதுரை, தர்மபுரி மற்றும் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மாவட்ட மையம் மூலமாக (DEIC) ஹீமோகுளோபினோபதி நோயாளிகளுக்கு 1.25 கோடி ரூபாய் செலவில் சிகிச்சை அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை குழந்தைகள் நல மருத்துவமனை,

சேலம், மதுரை, தர்மபுரி மற்றும் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கான குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் மாவட்ட மையம் மூலமாக (District Early Intervention Centres) ஹீமோகுளோபினோபதி நோயாளிகளுக்கு 1.25 கோடி ரூபாய் செலவில் சிகிச்சை அளிக்கப்படும்.

**56) 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஹீமோகுளோபினோபதி சிகிச்சை பிரிவிற்கு 8 செவிலியர்கள் 16 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 5 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஹீமோகுளோபினோபதி சிகிச்சை பிரிவிற்கு 8 செவிலியர்கள் 16 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.

**57) தலசீமியா மற்றும் ஹீமோபிலியா போன்ற அரிய வகை மரபு நோய்களுக்கான சிகிச்சை அளிப்பதற்கு தேவையான மருந்துகள் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் 18.84 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தலசீமியா மற்றும் ஹீமோபிலியா போன்ற

அரிய வகை மரபு நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தேவையான மருந்துகள் 18.84 கோடி ரூபாய் செலவில் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் வழங்கப்படும்.

**58) இந்த ஆண்டு முதல் கூடுதலாக திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் வேலூர் மாநகராட்சிகளில் தேசிய சிறார் நலத் திட்டத்தின் கீழ் 8 நடமாடும் பள்ளி மருத்துவக் குழுக்கள் 1.4 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த ஆண்டு முதல் கூடுதலாக திருநெல்வேலி, திண்டுக்கல் மற்றும் வேலூர் மாநகராட்சிகளில் தேசிய சிறார் நலத் திட்டத்தின் கீழ் 8 நடமாடும் பள்ளி மருத்துவக் குழுக்கள் 1.4 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

**59) செய்யாறு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், நுண்கதிர் வீச்சாளர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர்கள் பணியிடங்கள் 40 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அரசு மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனையாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, செய்யாறு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், நுண்கதிர் வீச்சாளர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர்கள் பணியிடங்கள் 40 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

**60) 9 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் 3 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள வலி நிவாரணம் மற்றும் நோய் தணிப்பு பிரிவுகளுக்கு** (Pain & Palliative Care Unit) **2.11 கோடி ரூபாய் செலவில் மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரியலூர், பென்னாகரம், உசிலம்பட்டி, நாகப்பட்டினம், உதகமண்டலம், காரைக்குடி, பெரியகுளம், விருதுநகர், பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் இராயப்பேட்டை, புதுக்கோட்டை, கரூர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள வலி நிவாரணம் மற்றும் நோய் தணிப்பு பிரிவுகளுக்கு (Pain & Palliative Care Unit) மருத்துவ அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் 2.11 கோடி ரூபாய் செலவில் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள்.

**61) குடும்ப நலத்திட்டத்தில் குழந்தை பிறப்புகளுக்கு இடையே போதிய இடைவெளியை உறுதிப்படுத்த பிரசவத்திற்குப்பின் கருத்தடை வளையம்** (PPIUCD)

**பொருத்திக் கொள்ளும் தாய்மார்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.300 வழங்கப்படும்.**

குடும்ப நலத் திட்டத்தை செயல்படுத்துவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. குழந்தை பிறப்புகளுக்கு இடையே போதிய இடைவெளியை உறுதிப்படுத்த கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளும் தாய்மார்களை ஊக்குவிப்பது அவசியம். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவ நிலையங்களில் பிரசவத்திற்குப்பின் 48 மணி நேரத்திற்குள் கருத்தடை வளையம் (PPIUCD) பொருத்திக் கொள்ளும் தாய்மார்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.300 வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றிற்கு 7.5 கோடி ரூபாய் செலவிடப்படும்.

**62) மலைப்பகுதிகள் அதிகம் உள்ள வட்டாரங்களில் எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவில் புதிதாக குடியிருப்புகள் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மலைப் பகுதிகள் அதிகம் உள்ள வட்டாரங்களில் எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்களுக்கு புதிதாக குடியிருப்புகள் இரண்டு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**63) வால்பாறை மற்றும் சேராப்பட்டு மலைப்பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மகப்பேறு பிரிவுகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வால்பாறை மற்றும் சேராப்பட்டு மலைப்பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மருத்துவ பரிசோதனை, ஆலோசனை, சிகிச்சை, ஸ்கேன் ஆகிய வசதிகள் உள்ளடக்கிய தனி மகப்பேறு பிரிவுகள் ஒரு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**64) மலைப் பகுதிகள் அதிகம் உள்ள வட்டாரங்களில் செயல்படும் வால்பாறை, ஒகேனக்கல், பிக்கிலி, சித்தேரி, கருமந்துரை, கரியலூர் ஆகிய 6 ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகள் பிரிவுகள் 1.27 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மலைப் பகுதிகள் அதிகம் உள்ள வட்டாரங்களில் செயல்படும் வால்பாறை, ஒகேனக்கல், பிக்கிலி, சித்தேரி, கருமந்துரை மற்றும் கரியலூர் ஆகிய 6 ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகள் பிரிவுகள் 1.27 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**65) மலைப் பிரதேசங்களில் உள்ள 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 23 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக செவிலியர் குடியிருப்புகள் ஏழு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.**

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் செவிலியர்களுக்கு படிப்படியாக செவிலியர் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மலைப் பிரதேசங்களில் உள்ள 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உட்பட 23 ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக செவிலியர் குடியிருப்புகள் ஏழு கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**66) காவேரிப்பட்டினம், காணை, கொழப்பலூர், ஆதமங்கலம்புதூர் மற்றும் சத்திரப்பட்டி ஆகிய 5 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புற நோயாளிகள் பிரிவு மூன்று கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, காவேரிப்பட்டினம், காணை, கொழப்பலூர், ஆதமங்கலம்புதூர் மற்றும் சத்திரப்பட்டி ஆகிய 5 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புறநோயாளிகள் பிரிவு மூன்று கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்படும்.

**67) சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தருமபுரி, செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் ஆகிய 6 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காது வால் நரம்பு உள்வைப்பு கருவி** (Cochlear Implant) **பொருத்தும் மையங்கள் 4.37 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், தருமபுரி, செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் ஆகிய **6** அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காது வால் நரம்பு உள்வைப்பு கருவி (Cochlear Implant) பொருத்தும் மையங்கள் **4.37** கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**68) சேலம், தருமபுரி, வேலூர், விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய 5 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஆர்.டி.பி.சி.ஆர்.** (RTPCR) **ஆய்வக மையங்கள் 2.18 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம், தருமபுரி, வேலூர், விழுப்புரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய **5** மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நோய்க்கிருமிகளை துல்லியமாக கண்டறிய ஆர்.டி.பி.சி.ஆர். (RTPCR) ஆய்வக மையங்கள் **2.18** கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**69) கரூர் மாவட்டம் குளித்தலை அரசு மருத்துவமனையில் புதிதாக இரத்த வங்கியும், கோயம்புத்தூர் ஈ.எஸ்.ஐ. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குருதி பகுப்பாய்வு மையமும் 70 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கரூர் மாவட்டம் குளித்தலை அரசு மருத்துவமனையில் புதிதாக இரத்த வங்கியும், கோயம்புத்தூர் ஈ.எஸ்.ஐ. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குருதி பகுப்பாய்வு மையமும் 70 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**70) பெருநகர சென்னை மாநகராட்சி, இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 1.24 கோடி ரூபாய் செலவில் தரச்சான்று விருதுகள் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, இதர மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 1.24 கோடி ரூபாய் செலவில் “தரச்சான்று விருதுகள்” வழங்கப்படும்.

**71) 90 இலட்சம் ரூபாய் செலவில் அரசு மருத்துவமனைகளில் உலகத்தரத்திற்கு இணையாக பிரசவ அறைகளை மேம்படுத்தும் தர மேம்பாட்டுத் திட்டம் துவங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் "இலக்கு 2023" தொலைநோக்கு திட்டத்தின் கீழ் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக தாய் சேய் நல இலக்குகளை அடைய வேண்டும் என்ற உயரிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவமனைகளில் உலகத்தரத்திற்கு இணையாக பிரசவ அறைகளை மேம்படுத்தும் தர மேம்பாட்டுத் திட்டம் 90 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும்.

**72) உணவு பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட, புகார் மற்றும் குறைகளின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உணவு பாதுகாப்புத் துறைக்கென தனி வலைதளம் மற்றும் கைபேசி செயலி 20 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உணவு பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட, புகார் மற்றும் குறைகளின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் உணவு பாதுகாப்புத் துறைக்கென தனி வலைதளம் மற்றும் கைபேசி செயலி 20 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

**73) தமிழ்நாட்டில் உள்ள 100 சுற்றுலா தலங்களில் உணவுப் பாதுகாப்பு தகவல் தொடர்பு மையங்கள் (Food Safety Hubs) 15 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் உள்ள 100 சுற்றுலா தலங்களில் உணவுப் பாதுகாப்பு தகவல் தொடர்பு மையங்கள் (Food Safety Hubs) 15 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**74) மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மன நல அவசர சிகிச்சை மற்றும் பாதுகாப்பு மையங்கள் (ECRC) சென்னை மாநகராட்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில், ஒரு கோடியே மூன்று இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மனநலத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக மன நல அவசர சிகிச்சை மற்றும் பாதுகாப்பு மையங்கள் (Emergency Care and Recovery Centre) சென்னை மாநகராட்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு கோடியே மூன்று இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**75) அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நான்காண்டு கால மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகள் தொடங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நான்காண்டு கால மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகள் தொடங்கப்படும்.

**76) அனைத்து மாவட்டங்களிலும், துணை சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை மேற்கொள்ளப்படும் பல்வேறு சுகாதாரத் திட்டப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்கள் பங்கேற்புடன் அப்பணிகளைக் கண்காணிக்க 4.11 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும் (**Monitoring of Health Activities through Community Participation)**.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து மாவட்டங்களிலும், துணை சுகாதார நிலையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை மேற்கொள்ளப்படும் பல்வேறு சுகாதாரத் திட்டப் பணிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்கள் பங்கேற்புடன் அப்பணிகளைக் கண்காணிக்க 4.11 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்தப்படும் (Monitoring of Health Activities through Community Participation).

**77) உணவில் உள்ள கலப்படம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திட மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு கலப்படங்களை கண்டறியும் செயல்முறை விளக்கங்கள் குறித்து 16 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.**

மக்களுக்கு பாதுகாப்பான, கலப்படமற்ற மற்றும் தரமான உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்ய, தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டம் 2006 செயல்படுத்தப்பட்டு வருகிறது. உணவில் உள்ள கலப்படம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேல்நிலைப் பள்ளி மாணாக்கர்களுக்கு உணவில் கலப்படங்களை கண்டறியும் செயல்முறை விளக்கங்கள் குறித்து 16 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

**78) ஒங்கல்வாடி, சோளக்காடு மற்றும் கரியாலூர் ஆகிய 3 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்மை துணை செவிலியர்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய ஊரக பயிற்சி நிலையங்கள் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒங்கல்வாடி, சோளக்காடு மற்றும் கரியாலூர் ஆகிய 3 ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்மை துணை செவிலியர்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய ஊரக பயிற்சி நிலையங்கள் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும்.

**79) உயிர்காக்கும் உன்னத திட்டமான STEMI சிகிச்சைத் திட்டத்தின் கீழ் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்புநர்களுக்கு ஸ்டெமி நெறிமுறைகள் (Protocol) குறித்த பயிற்சி 32 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, உயிர்காக்கும் உன்னத திட்டமான STEMI (ST Elevation Myocardial Infarction) சிகிச்சைத் திட்டத்தின் கீழ், 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள், அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தொழில்நுட்புநர்களுக்கு ஸ்டெமி நெறிமுறைகள் (Protocol) குறித்த பயிற்சி 32 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

**80) அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பான குடிநீர், சுற்றுப்புறத் தூய்மை, ஊட்டச்சத்து குறித்து சுகாதாரப் பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி ஒரு கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து மாவட்டங்களிலும் பாதுகாப்பான குடிநீர், சுற்றுப்புறத் தூய்மை, ஊட்டச்சத்து குறித்து சுகாதாரப் பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி ஒரு கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

**81) பெண் கருக்கொலையை முற்றிலுமாக தடுக்கும் பொருட்டு மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்களுக்கு "பாலின தேர்வு செய்யும் தடைச் சட்டம்–1994" குறித்து சிறப்பு பயிற்சி 16 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பெண் கருக்கொலையை முற்றிலுமாக தடுக்கும் பொருட்டு மருத்துவ அலுவலர்கள் மற்றும் செவிலியர்களுக்கு "பாலின தேர்வு செய்யும் தடைச் சட்டம்–1994" குறித்து சிறப்பு பயிற்சி 16 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

**82) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் ஓட்டுநர்களுக்கு வாகனங்களின் அன்றாட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான இயக்கம் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். களப்பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் அரசு தாய்மை துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு இருசக்கர வாகன இயக்க பயிற்சி அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் பல்வேறு துறைகளில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு வாகனங்கனின் அன்றாட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான இயக்கம் குறித்த பயிற்சிகள் வழங்கப்படும். தாய்

சேய் நலப்பணிகளை கிராமந்தோறும் சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் அரசு தாய்மை துணை செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு இருசக்கர வாகன இயக்க பயிற்சி அளிக்கப்படும்.

**83) மருத்துவ மேற்படிப்பு மாணவர்களுக்கு போட்டித் தேர்விற்கான இலவச பயிற்சி மையங்கள் துவங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவ நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் பயன்பெறும் வகையில், தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வுக்கான இலவச பயிற்சி மையங்கள் துவங்கப்படும்.

**84) மனநல நோயாளிகளுக்கான மருத்துவ சேவைக்காக அனைத்து மாவட்டங்களுக்கும் 32 வாகனங்கள் 96 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ சேவைக்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் 32 சிறப்பு வாகனங்கள், 96 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**85) தமிழகத்தில் மேலும் 10 மாநகராட்சிகளில் உள்ள அரசு பள்ளிகளில் பாதுகாப்பான ஊட்டச்சத்து உணவு குறித்த**

**விழிப்புணர்வு மற்றும் பயிற்சி SNF@School (Safe Nutrition Food awarness and training at School) 10 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகத்தில் மேலும் 10 மாநகராட்சிகளில் உள்ள அரசு பள்ளிகளில் பாதுகாப்பான ஊட்டச்சத்து உணவு குறித்த விழிப்புணர்வு SNF@School (Safe Nutrition Food at School) 10 இலட்சம் ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

**86) 15 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் பச்சிளம் குழந்தைகளின் உயிர் காக்கும் தாய்ப்பால் வங்கிகள் 1.5 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனையில் உதித்த உன்னத திட்டமான தாய்ப்பால் வங்கிகள் 23 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும் திண்டுக்கல் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையிலும் சிறப்பாக இயங்கி வருகின்றன. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்த ஆண்டு உதகமண்டலம், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம், கும்பகோணம், கோவில்பட்டி, பெரம்பலூர், விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் தென்காசி ஆகிய 15 அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் தாய்ப்பால் வங்கிகள் 1.5 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும்.

**87) தமிழகத்தில் வளரிளம் பருவத்தினர் மற்றும் இள வயதினரின் மன அழுத்தத்தைக் குறைத்து தற்கொலை எண்ணங்களைத் தடுக்கும் நோக்கத்தோடு அரசு மூலமாகவும், தனியார் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்தும், கட்டணமில்லா உளவியல் ஆலோசனை சேவைகளும், மருத்துவ சேவைகளும் வழங்கப்படும்.**

தமிழகத்தின் வளரிளம் பருவத்தினர் மற்றும் இள வயதினரின் மனநலனைப் பாதுகாக்கும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து மாவட்டங்களிலும் தமிழக அரசு மூலமாகவும், தனியார் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்தும் கட்டணமில்லா உளவியல் ஆலோசனை சேவைகள் மற்றும் மருத்துவ சேவைகள் 24 மணிநேரமும் வழங்கப்படும். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் 24 மணி நேர 104 தகவல் மற்றும் ஆலோசனை மையத்தையும் தொடர்புகொள்ளலாம்.

**88) மருத்துவ சேவை மேலாண்மை (Health Service Management) தொழில்நுட்ப பயிற்சி பெறும் வகையில் ஆஸ்திரேலிய பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், ஆஸ்திரேலிய பல்கலைக் கழகத்துடன்,

மருத்துவ சேவை மேலாண்மை (Health Service Management) பற்றிய தொழில்நுட்பத்தில் பயிற்சி பெறும் வகையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அரசு மருத்துவர்களும், அரசு மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களும், ஆஸ்திரேலிய பல்கலைக் கழகத்தில் பயின்று சிறந்த சுகாதார நிர்வாகிகளாக தேர்ச்சி பெறும் வாய்ப்பு உருவாக்கப்படும்.

**89) அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் Home Health Care Course என்ற ஓராண்டு பட்டயப் படிப்பு தொடங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் Home Health Care Assistant Course என்ற ஓராண்டு பட்டயப்படிப்பு தொடங்கப்படும். இப்பட்டயப் படிப்பு முடித்தவர்கள் Home Health Care Assistants (நலவாழ்வு உதவியாளர்கள்) என அழைக்கப்படுவார்கள். இவர்களுக்கு வயது முதிர்ந்த மற்றும் நோயாளர்களின் வீட்டிற்கே சென்று அவர்தம் படுக்கையின் அருகிலிருந்து பேணவும் இதர மருத்துவ சேவைகளை தொடரவும், ஆற்றுப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் பயிற்சி அளிக்கப்படும்.

**90) ஆறு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மூன்று மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் DNB மருத்துவப் பட்ட மேற்படிப்பிற்கான 42 கூடுதல் இடங்கள் 2.52 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனை, சிவகங்கை, விழுப்புரம், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும், பொள்ளாச்சி, நாமக்கல், நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் DNB மருத்துவப் பட்ட மேற்படிப்பிற்கான 42 கூடுதல் இடங்கள் 2.52 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**91) 16 அரசு மருத்துவமனைகளில், 5 பிரிவுகளில், மருத்துவம் சார்ந்த உதவியாளர்களுக்கான நான்காண்டு கால பட்டப் படிப்பு 1.4 கோடி ரூபாய் செலவில் புதிதாக தொடங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கடலூர், சிதம்பரம், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கோவில்பட்டி, பொள்ளாச்சி, நாமக்கல், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை, இராமநாதபுரம், திருப்பூர், விருதுநகர், பெரம்பலூர் மற்றும் திருவள்ளூர் அரசு மருத்துவமனைகளில் 5 பிரிவுகளில் மருத்துவம் சார்ந்த உதவியாளர்களுக்கான நான்காண்டுகால பட்டப் படிப்பு 1.4 கோடி ரூபாய் செலவில் புதிதாக தொடங்கப்படும். பெரம்பலூர்

மற்றும் திருவள்ளூர் அரசு மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்பிற்காக புள்ளியியலாளர் மற்றும் நூலகர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

**92) ஏழு அரசு மருத்துவமனைகளில் மருத்துவத்திறன் மேம்பாட்டுக் கூடங்கள் 10.85 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, செங்கல்பட்டு, சேலம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையிலும் மருத்துவத்திறன் மேம்பாட்டுக் கூடங்கள் (Clinical Simulation Laboratory) 10.85 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும்.

**93) தேசிய கல்விசார் களஞ்சியம் மூலம் மருத்துவக் கல்வி மாணவர்களின் சான்றிதழ்கள் டிஜிட்டல் மயமாக்கம் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேசிய கல்விசார் களஞ்சியம் மூலம் தமிழகத்தில், மருத்துவக் கல்வி மாணவர்களின் சான்றிதழ்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு சான்றிதழ்கள் மிகவும் பாதுகாப்புடன் சேமிக்கப்படும். இதனால் மாணவர்கள் தங்கள் சான்றிதழ்களை

எப்போது வேண்டுமானாலும் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யமுடியும்.

**94) எழும்பூர், பூவிருந்தவல்லி, மதுரை, சேலம், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் காந்திகிராமம் ஆகிய இடங்களில் உள்ள மண்டல பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான செயற்கை உடல் உறுப்பு மாதிரிகளும் (Mannequins), ஒலி மற்றும் ஒளி அமைப்பு கருவிகளும் 94 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, எழும்பூர், பூவிருந்தவல்லி, மதுரை, சேலம், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் காந்திகிராமம் ஆகிய இடங்களில் உள்ள மண்டல பயிற்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான செயற்கை உடல் உறுப்பு மாதிரிகளும் (Mannequins), ஒலி மற்றும் ஒளி அமைப்பு கருவிகளும் 94 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**95) தமிழ்நாட்டின் அனைத்து அரசு மருத்துவமனைகள் / சுகாதார நிலையங்களில் தேசிய தர நிர்ணயத் திட்டம் மூலம் மருத்துவ சேவைகளின் தரத்தை மேம்படுத்தி சான்றிதழ் வழங்கி சிறப்பாக சேவையாற்றும் மருத்துவமனைகளுக்கு ஊக்கப்பரிசு வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேசிய தர நிர்ணயத் திட்டம் மூலம்

மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா அரசு மருத்துவமனைகள், சமுதாய சுகாதார மையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ சேவைகளின் தரத்தை மேம்படுத்த, தேசிய தர நிர்ணயக் குழு ஆய்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவமனைகள் / சுகாதார நிலையங்களுக்கு தரச் சான்றிதழ் வழங்கி, சிறப்பாக செயல்படும் மருத்துவமனைகளுக்கு ஊக்கப்பரிசு வழங்கும் தர மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**96) 23 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 40 அரசு மருத்துவமனைகள் மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள 3 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் 17.5 கோடி ரூபாய் செலவில் 200 புதிய அதிநவீன டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், இராயப்பேட்டை, ஓமந்தூரார், எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, கோயம்புத்தூர், தருமபுரி, செங்கல்பட்டு, கன்னியாகுமரி, கரூர், மதுரை, புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவண்ணாமலை, திருவாரூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய 23 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு 8.50 கோடி ரூபாய் செலவிலும், 40 அரசு மருத்துவமனைகளுக்கு 8.73 கோடி ரூபாய் செலவிலும் புதூர்நாடு, கரியாலூர் மற்றும்

ஜமுனாமரத்தூர் ஆகிய மலைப்பகுதிகளில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 27 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 200 புதிய அதிநவீன டயாலிசிஸ் கருவிகள் வழங்கப்படும்.

**97) கீழ்ப்பாக்கம் மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் கண் சிகிச்சை பிரிவுகளுக்கு அதிநவீனக் கருவிகள் 3.25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கீழ்ப்பாக்கம் மற்றும் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் கண் சிகிச்சை பிரிவுகளுக்கு அதிநவீனக் கருவிகள் 3.25 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**98) 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், 13 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் முதியோர் நலப் பிரிவுகள் (National Program for Health Care in Elderly) தொடங்க தேவையான மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள் 5.12 கோடி ரூபாய் செலவில் நியமனம் செய்யப்படுவார்கள்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேனி, திருவண்ணாமலை, திருவாரூர், சிவகங்கை, புதுக்கோட்டை, கரூர், செங்கல்பட்டு,

கன்னியாகுமரி தூத்துக்குடி மற்றும் தருமபுரி ஆகிய 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், கடலூர், விருதுநகர், கிருஷ்ணகிரி, நாமக்கல், அரியலூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், உதகமண்டலம், திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர், இராமநாதபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய 13 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளிலும் முதியோர் நலப் பிரிவுகளைத் (National Program for Health Care in Elderly) தொடங்கத் தேவையான மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதாரப் பணியாளர்கள், 5.12 கோடி ரூபாய் செலவில் நியமனம் செய்யப்படுவார்கள்.

**99) அவசரகாலங்களில் உயிர்காக்கும் பணிகளை விரைவாகவும், திறம்படவும் மேற்கொள்ளும் வகையில் சுகாதாரப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி ஒரு கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அவசர காலங்களில் உயிர்காக்கும் பணிகளை விரைவாகவும், திறம்படவும் மேற்கொள்ளும் வகையில் சுகாதாரப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி ஒரு கோடி ரூபாய் செலவில் சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.

**100) சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைகளில் மூன்றாம் பாலினர் (Transgender) சிகிச்சைக்கான சிறப்புப் பிரிவு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மூன்றாம் பாலினர் நலனுக்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைகளில் மூன்றாம் பாலினர் (Transgender) சிகிச்சைக்கான சிறப்புப் பிரிவு 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**101) அனைத்து மாவட்டங்களிலும் மனநலப் பிரிவுகளில், முன் பயணத்திட்ட முறையில் குறிப்பிட்ட மருத்துவமனைகளில் குறிப்பிட்ட நாட்களில் மன நோயாளிகளுக்கு நேரில் சென்று சிகிச்சையளிக்கும் வகையில் மனநல மருத்துவர் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டு 2.34 கோடி ரூபாய் செலவில் "Satellite Clinics" ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து மாவட்டங்களிலும் மனநலப் பிரிவுகளில் முன் பயணத் திட்ட முறையில் குறிப்பிட்ட மருத்துவமனைகளில் குறிப்பிட்ட நாட்களில் மன நோயாளிகளுக்கு நேரில் சென்று சிகிச்சையளிக்கும் வகையில் மனநல மருத்துவர் பணியிடங்கள் கூடுதலாக

உருவாக்கப்பட்டு 2.34 கோடி ரூபாய் செலவில் “Satellite Clinics” ஏற்படுத்தப்படும்.

**102) கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாம்புக்கடி மற்றும் விஷக்கடிகளில் இருந்து உயிர்காக்கும் பொருட்டு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு 22 இலட்சம் ரூபாய் செலவில் விஷமுறிவு மேலாண்மை குறித்த சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.**

கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாம்புக்கடி மற்றும் விஷக்கடிகளிலிருந்து உயிர்காக்கும் பொருட்டு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு விஷமுறிவு மேலாண்மை குறித்த சிறப்பு பயிற்சி 22 இலட்சம் ரூபாய் செலவில் அளிக்கப்படும்.

**103) நீலகிரி மாவட்டம் எமரால்டு பகுதியில் புதிய வட்டம் சாரா மருத்துவமனை 18.54 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நீலகிரி மாவட்டம் எமரால்டு பகுதியில் புதிய வட்டம் சாரா மருத்துவமனை 18.54 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**104) 25 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக பல் சிகிச்சைப் பிரிவுகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 25 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் புதிதாக பல் சிகிச்சைப் பிரிவுகள் 75 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

**105) 50 அரசு மருத்துவமனைகளுக்கு நவீன மருத்துவக் கருவிகள் வழங்கி மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் ஆத்தூர், போடிநாயக்கனூர், அவிநாசி, கோபிசெட்டிபாளையம், குமாரபாளையம், தொண்டாமுத்தூர், திருமங்கலம், கோவில்பட்டி, உடுமலைப்பேட்டை, பெருந்துறை, பவானி, நன்னிலம், இராசிபுரம், பாபநாசம், வாணியம்பாடி, பெரியார் நகர், ஒசூர், வேதாரண்யம், சங்கரன்கோவில், சிவகாசி, பாலக்கோடு, வேலூர் பெண்டலண்ட், பொள்ளாச்சி, பழனி, சைதாப்பேட்டை, விழுப்புரம், கீரனூர், கம்பம், தோவாளை, கிருஷ்ணராயபுரம், கிணத்துக்கடவு, தமராக்கி, திருவெறும்பூர், முதுகுளத்தூர், விளவங்கோடு, கடையநல்லூர், அரியலூர், ஸ்ரீரங்கம், ஜோலார்பேட்டை, மணப்பாறை, பேராவூரணி, சோழவந்தான், பட்டுக்கோட்டை, ஒட்டன்சத்திரம், ஆலங்குடி, திருமயம், காங்கேயம், சீர்காழி, வேடசந்தூர் மற்றும்

ஜெயங்கொண்டம் ஆகிய மருத்துவமனைகளுக்கு எண்ணியல் ஊடுகதிர் கருவி, மீயொலி பரிசோதனைக் கருவி போன்ற மருத்துவக் கருவிகள் வழங்கி மேம்படுத்தப்படும்.

**106) இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனை, காரப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தற்போதுள்ள கோபால்ட் சிகிச்சை அலகுகள் 28 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, எழும்பூர் தாய்சேய் நல மருத்துவமனை, காரப்பேட்டை அறிஞர் அண்ணா அரசு புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் தற்போதுள்ள கோபால்ட் சிகிச்சை அலகுகள் 28 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும்.

**107) திருப்பூர், கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் சிதம்பரம் இராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு புதிதாக எம்.ஆர்.ஐ. (M.R.I.) ஸ்கேன் கருவிகள் 30 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருப்பூர், கிருஷ்ணகிரி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் சிதம்பரம் இராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளுக்கு புதிதாக எம்.ஆர்.ஐ. (M.R.I.) ஸ்கேன் கருவிகள் 30 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**108) புகைப்பிரியர்களை ஈர்க்கும் வகையில் எலக்ட்ரானிக் சிகரெட்டுகளை பிடிப்பதால் ஆபத்தில்லை என விளம்பரப்படுத்தி விற்பனை செய்யப்படுகின்றன. தமிழக அரசு மெல்லும் புகையிலை பொருட்களை ஏற்கெனவே தடை செய்துள்ள நிலையில் இந்த எலக்ட்ரானிக் சிகரெட்டுகளும் மக்களின் உடல் நலன் கருதி தமிழ்நாட்டில் தடை செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புகைப்பிரியர்களை ஈர்க்கும் வகையில்

எலக்ட்ரானிக் சிகரெட்டுகளை பிடிப்பதால் ஆபத்தில்லை என விளம்பரப்படுத்தி விற்பனை செய்யப்படுகிறது. தமிழக அரசு மெல்லும் புகையிலை பொருட்களை ஏற்கெனவே தடை செய்துள்ளது. மக்களின் உடல் நலன் கருதி எலக்ட்ரானிக் சிகரெட்டுகள் தமிழ்நாட்டில் தடைசெய்யப்படும்.

# வேளாண்மைத் துறை

## மானியக் கோரிக்கை எண் 5

**1. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியுடனும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படியும், விவசாயிகளின் பங்கேற்புடன், 2018–2019ஆம் ஆண்டில் "எம்.ஜி.ஆர். 100 நெல் இரகம்'' ஒரு கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பிரபலப்படுத்தப்படும்.**

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட "எம்.ஜி.ஆர் 100'' என்ற புதிய உயர்விளைச்சல் சன்னரக நெல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.11.2017 அன்று தஞ்சாவூரில் வெளியிடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இந்த நெல் இரகத்தினை மூன்று கட்டமாக விதைப்பெருக்கம் செய்து, நடப்பாண்டில், பத்து மாவட்டங்களில், விவசாயிகளின் வயல்களில் வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் கண்காணிப்பில், 100 செயல்விளக்கத் திடல்கள் அமைத்து விதை உற்பத்தி மேற்கொள்ளப்படும். மேலும், இந்த இரகம் தொடர்பான சாகுபடித் தொழில்நுட்பங்களும் விவசாயிகளுக்கு பயிற்றுவிக்கப்படும். இதற்காக நடப்பாண்டில், ஒரு கோடியே 19 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. மண்ணின் வளத்தினை மேம்படுத்த 50,000 ஏக்கர் பரப்பில் 2018–2019ஆம் ஆண்டில் பசுந்தாள் உரப்பயிர் (Green Manure Crop) சாகுபடி செய்ய 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மண்வளத்தினை நிலைநிறுத்துவதில் பசுந்தாளுரம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தொடர்ந்து பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து மண்ணில் மடக்கி உழுவதால் மண்ணின் வளம் மேம்படுவதுடன் அங்ககச்சத்தும் நிலைநிறுத்தப்படுகிறது. மண்வளத்தை மேம்படுத்த உறுதுணையாக இருக்கும் பசுந்தாள் உர பயன்பாட்டினை விவசாயிகளிடையே பிரபலப்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2018–2019ஆம் ஆண்டில் 50 சதவீத மானியத்தில் 50,000 ஏக்கர் பரப்பளவில் பசுந்தாள் உர விதைகளை விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிப்பதற்காக, 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் வேளாண்மைத் துறை மூலம் தமிழ்நாட்டின் குறிப்பிட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, இயற்கை வேளாண் மண்டலமாக அறிவித்து, முற்றிலும் இரசாயனமற்ற இயற்கை வேளாண்மையைப் பரவலாக்க 2018–2019ஆம் ஆண்டில் 5 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 30 தொகுப்புகள் உருவாக்கி, 5 கோடியே 5 இலட்சம் ரூபாய்

நிதி ஒதுக்கீட்டில், விதை முதல் சந்தைப்படுத்துதல் வரை நிதி உதவிகள் வழங்கி, இயற்கை வேளாண்மை செய்வதற்கு ஏற்ற பகுதிகள் உருவாக்கப்பட்டு, புதிய இயற்கை வேளாண் மண்டலங்களாக அறிவிக்கப்பட்டு, முற்றிலும் இரசாயனமற்ற இயற்கை வேளாண்மை பரவலாக்கப்படும். மேலும், இயற்கை விவசாயம் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் விவசாயிகளுக்கு அளிக்கப்படும்.

**4. தரமான விதைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பத்து மாவட்டங்களில் விதை சுத்திகரிப்பு மற்றும் சேமிப்பு கிடங்கு வசதி 11 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் ஏற்படுத்த 2018–2019ஆம் ஆண்டில் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.**

தரமான விதைகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் மூலமாக ஏற்படுத்தப்பட்டு வரும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கி விதை சுத்திகரிப்பு மையம் தொடங்குவதற்கு அரசு முன்னுரிமை வழங்கும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஒன்றுக்கு 60 இலட்சம் ரூபாய் வீதம் 10 மாவட்டங்களில் 11 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலமாக விதை சுத்திகரிப்பு மையத்துடன் கூடிய சேமிப்பு கிடங்குகள் அமைப்பதற்காக மொத்தம் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**5. பாரம்பரிய நெல் இரகங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, 2018–2019ஆம் ஆண்டில், பாரம்பரிய நெல் இரகங்களை பாதுகாத்து, சாகுபடி செய்து, மாநில அளவில் அதிக மகசூல் பெறும் முதல் மூன்று விவசாயிகளுக்கு பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதும், ரொக்கமும் வழங்கப்படும்.**

பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்துப் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்திடும் விதமாக பாரம்பரிய முறையில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்று மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் விவசாயிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி "பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருதும்" ரொக்க தொகையாக முறையே 1 இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாயும் வழங்கி கௌரவிக்கப்படும்.

**6. சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாக, பொது மற்றும் தனியார் நிகழ்ச்சிகளில் பழமரக்கன்றுகள் பரிசளிப்பதை ஊக்குவிக்கும் வகையில், 2018–2019ஆம் ஆண்டில் தோட்டக்கலைத் துறையின் மூலம் தரமான பழமரக்கன்றுகளும் இதர கன்றுகளும் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் வழங்கிட 5 கோடி ரூபாய் செலவிடப்படும்.**

சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடையே தற்பொழுது அதிகரித்து வரும் நிலையில், பொது மற்றும் தனியார் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர்களுக்கு பழமரக் கன்றுகள் வழங்கும் வழக்கம் பிரபலமடைந்து வருகிறது.

பழமரக்கன்றுகள் வளர்க்கும் வழக்கத்தினை அதிகரிக்கவும், சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தோட்டக்கலைத்துறை மூலம் தரமான பழமரக்கன்றுகளும், இதர தோட்டக்கலை கன்றுகளும் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்கிட 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. விவசாயிகளுக்கு இலாபம் தரும் தோட்டக்கலை பயிர்கள், 2018–2019 ஆம் ஆண்டில் 34 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 44,250 ஏக்கர் பரப்பில் விரிவாக்கம் செய்யப்படும்.**

தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி, விவசாயிகளுக்கு நல்ல இலாபம் தருவதோடு ஆண்டு முழுவதும் மக்களுக்கு வேலைவாய்ப்பையும் உருவாக்கி தருகிறது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் தனித்துவம் வாய்ந்த பழங்கள் மற்றும் காய்கறிகள், வாசனைப் பயிர்கள், மலைப்பயிர்கள் மற்றும் நறுமணப்பயிர்கள் 44,250 ஏக்கர் பரப்பில் விரிவாக்கம் செய்வதற்காக, 34 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. தமிழ்நாட்டில் வெங்காய சாகுபடியை ஊக்குவிக்கவும், குறைந்த செலவில் வெங்காய சேமிப்புக் கிடங்குகள் அமைக்கவும், 2018–2019 ஆம் ஆண்டில் 7 கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மருத்துவக் குணம் வாய்ந்த சிறிய வெங்காயத்தை சாகுபடி செய்து, தினசரி உணவில் உபயோகிப்பதில் தனித் தன்மை வாய்ந்தது தமிழ்நாடு. வெங்காயத்தை சரியான

முறையில் சேமித்து, உரிய நேரத்தில் விற்பனை செய்தால் விவசாயிகளுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் சின்ன வெங்காயம் மற்றும் பெல்லாரி வெங்காயம் சாகுபடி செய்வதற்கு 40 சதவீதம் மானியமும், குறைந்த செலவில் 636 வெங்காய சேமிப்பு கிடங்குகள் அமைப்பதற்கு 50 சதவீதம் மானியமும், அனைத்து மாவட்ட விவசாயிகளுக்கும் வழங்கப்படும். இதற்காக, 2018–2019ஆம் ஆண்டில் 7 கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. நகர்ப்புற மற்றும் புறநகர்ப் பகுதி மக்கள் வீட்டுத் தோட்டங்களில் காய்கறி உற்பத்தி செய்ய தேவையான காய்கறி விதைத் தளைகளை வழங்க 2018–2019ஆம் ஆண்டில் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தற்போது நகர்ப்புறங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் வசிக்கும் மக்கள், வீட்டுத் தோட்டங்களில் காய்கறி உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். இச்செயல் மக்களுக்கு ஆரோக்கியமான காய்கறிகளைத் தருவதோடு, மனமகிழ்ச்சியையும், அமைதியையும் தருகிறது. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் வீட்டுத் தோட்ட காய்கறி சாகுபடியினை ஊக்குவிப்பதற்காக, அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஐந்து காய்கறி வகைகள் அடங்கிய இரண்டு இலட்சம் காய்கறி விதைத்தளைகள் 40 சதவீத மானியத்தில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும். இத்திட்டத்திற்கு 2018–2019ஆம் ஆண்டில் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**10. வேளாண் விளைபொருட்களை தூய்மையாகவும், சுகாதாரமாகவும், விரைவாகவும் உலர்த்தி மதிப்புக்கூட்டி நல்ல விலைக்கு விற்க, 2018–2019ஆம் ஆண்டில் விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு சூரிய கூடார உலர்த்திகள் 2 கோடி ரூபாய் செலவில் அமைத்துத் தரப்படும்.**

வாழை, அன்னாசி, மாம்பழம், கொப்பரைத் தேங்காய், மிளகாய் வற்றல், தக்காளி, முருங்கை இலை, கறிவேப்பிலை, மருத்துவ மூலிகைகள், பூண்டு, இலவங்கம் போன்ற வேளாண் விளைபொருட்களை தூய்மையான முறையிலும், சுகாதாரமான முறையிலும், விரைவாக உலர்த்தி, மதிப்புக்கூட்டி, விவசாயிகள் அதிக இலாபம் ஈட்டுவதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் 50 சதவீத மானியத்தில், 400 சதுர அடி முதல் 1000 சதுரஅடி வரை பரப்பளவுள்ள சூரிய கூடார உலர்த்திகள் 2 கோடி ரூபாய் மானியத்தில் விவசாயிகள் மற்றும் விவசாய குழுக்களுக்கு அமைத்து தரப்படும்.

**11. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை அதிகரிக்க, இளைஞர்களுக்கு, வேளாண் இயந்திரங்கள், சூரிய சக்தி பம்பு செட்டுகள் மற்றும் நுண்ணீர் பாசன அமைப்புகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிகள், 2018–2019ஆம் ஆண்டில், ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டுகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் கிராமப்புற இளைஞர்களை

ஈடுபடுத்தினால், பராமரிப்புச் செலவு கணிசமாகக் குறைவதோடு, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் சூரிய சக்தி மோட்டார் பம்பு செட்டுகள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் நுண்ணீர் பாசன அமைப்புகளில் பழுது நீக்கி பராமரிப்பதற்கான பயிற்சி கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் அளிக்கப்படும். இதற்காக 2018–2019ஆம் ஆண்டில் ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**12. கிராமப்புற இளைஞர்களை தோட்டக்கலையில் ஈடுபடுத்தும் வகையில், தோட்டக்கலை அறிவியல் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்காக 2018–2019ஆம் ஆண்டில், 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

திறன் மிக்க கிராமப்புற இளைஞர்களை தோட்டக்கலையில் ஈடுபடுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் தோட்டக்கலை அறிவியல் சார்ந்த குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சி, 7,000 நபர்களுக்கு 10 கோடி ரூபாய் நிதியில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மாதவரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடுமியான்மலை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தளி மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் ஆகிய நான்கு தோட்டக்கலைப் பயிற்சி மையங்கள் மூலமாகவும், அரசு தோட்டக்கலை பண்ணைகள் மூலமாகவும் அளிக்கப்படும்.

**13. தோட்டக்கலைத் துறையில் திட்டங்கள் சார்ந்த களப்பணிகள் மேற்கொள்வதற்காகவும், தோட்டக்கலை சார்ந்த வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையிலும், 2018–2019ஆம் ஆண்டில் 500 தொழில் பழகுநர்கள் (Apprentice) பயிற்றுவிக்கப்படுவர். இதற்காக, 2018–2019ஆம் ஆண்டில், 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் தோட்டக்கலைத் துறையில் பண்ணைகள் மற்றும் திட்டங்கள் சார்ந்த களப்பணிகளை மேற்கொள்வதற்காகவும், தோட்டக்கலை சார்ந்த வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்துடனும், 500 தொழில் பழகுநர்கள் பயிற்றுவிக்கப்படுவர். இதற்காக 2018–2019ஆம் ஆண்டில் 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**14. கரும்பு சாகுபடியில் நோயற்ற கன்றுகளை விரைந்து உருவாக்க உதவும் திசுவளர்ப்பு நாற்று சாகுபடி முறையினை பரவலாக்குவதற்காக, 2018–2019ஆம் ஆண்டில், 26 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

கரும்பு சாகுபடியில் புதிய இரகங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும், நோயற்ற கன்றுகளை விரைந்து உருவாக்க திசுவளர்ப்பு முறையினை பின்பற்றுவதற்காகவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து 7 இலட்சத்து 50 ஆயிரம்

திசுவளர்ப்பு கரும்பு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். இதற்காக 26 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இதன்மூலம், தமிழ்நாட்டில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியும் அதிகரிப்பதோடு, விவசாயிகளுக்கு அதிக வருமானமும் கிடைக்கும்.

**15. மண்வளம் அறிந்து உரமிட உதவும் மண்வள அட்டை அடிப்படையிலான உர விநியோகம் 2018–2019ஆம் ஆண்டில் 100 வட்டாரங்களில் சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தப்படும்.**

மண் வளமறிந்து அதற்கேற்ப உரமிடும் முறையினை தமிழக விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக, தமிழ்நாடு அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக, அளவிற்கு அதிகமான இரசாயன உரங்கள் பயன்பாட்டினைத் தவிர்க்கவும், மண்வளம் பாதுகாத்து, உரச்செலவைக் குறைக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 100 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம், 100 வருவாய் கிராமங்களில் மண்வள அட்டை அடிப்படையில் விவசாயிகள் உரங்களை வாங்கி பயன்படுத்தும் திட்டம், சோதனை அடிப்படையில் 2018–2019ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டம் தமிழகத்தின் அனைத்து கிராமங்களுக்கும் படிப்படியாக விரிவாக்கப்படும்.

**16. விவசாயிகளின் பணிச்சுமையை குறைக்கும் வகையில், விவசாய நிலங்களில் உழுவை இயந்திரம் கொண்டு வரப்பு செதுக்கி, சேறு பூசும் கருவியின் செயல்விளக்கத்திற்காக, 2018–2019ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

நெல் வயல் சேற்று உழவின் போது, வரப்பு அமைத்து சீர் செய்வதென்பது மிகவும் கடினமான பணியாகும். தற்சமயம் இப்பணிக்காக விவசாயிகள் ஏக்கருக்கு 3,000 ரூபாய் வரை செலவு செய்கிறார்கள். இப்பணிச்சுமை மற்றும் செலவினை குறைக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் உழுவை இயந்திரத்தால் இயங்குகின்ற வரப்பு செதுக்கி, சேறு பூசும் கருவிகளை தமிழ்நாட்டு விவசாயிகளிடையே பிரபலப்படுத்திடும் வகையில், வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாய நிலங்களிலேயே செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்படும். இச்செயல்விளக்கம் முற்றிலும் இலவசமாக 2,500 ஏக்கர் நிலப்பரப்பில் 50,000 விவசாயிகள் பயனடையும் வகையில் மேற்கொள்ளப்படும். இதற்காக, 2018–2019ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**17. நிலக்கடலையில் முளைப்புத் திறன் குறையாமல், விதையினை அதிக நாட்கள் சேமிக்கும் தொழில்நுட்பத்தை, விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிப்பதற்காக 2018–2019ஆம் ஆண்டில், 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

நிலக்கடலையில் விதையின் தரம் குறையாமல் அதிக நாட்களுக்கு பாதுகாக்கும் புதிய தொழில்நுட்பங்களை

விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் நோக்குடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில், கடலூர், விழுப்புரம் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 150 எக்டரில் நிலக்கடலை விதை உற்பத்தி செயல்விளக்கம் மேற்கொண்டு, 300 டன் விதை உற்பத்தி செய்யவும், அறுவடைக்குப்பின் அதிக நாட்கள் முளைப்புத்திறன் குறையாமல் சேமிக்க, கால்சியம் குளோரைடு மற்றும் சூப்பர் விதை சேமிப்பு பைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்திற்காக, 2018–2019ஆம் ஆண்டில் 80 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**18. பொதுமக்களும், மாணவ மாணவியர்களும் தோட்டக்கலையில் செயல்படுத்தி வரும் நவீன தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து, தங்களது அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில், சோதனை அடிப்படையில், குறிப்பிட்ட பண்ணைகளில் "பண்ணை சுற்றுலா திட்டம்" 2018–2019ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும்.**

அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் மூலம் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களின் கன்றுகள் உற்பத்தி, பசுமைக்குடில் சாகுபடி, குழித்தட்டு நாற்றங்கால் உள்ளிட்ட பல்வேறு நவீன தொழில்நுட்பங்கள் குறித்து மாணவர்களும் பொதுமக்களும் தெரிந்து கொண்டு, தங்களது அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில், தோட்டக்கலைப் பண்ணைகளுக்கு வருகை புரிந்து, இத்தொழில்நுட்பங்களை கண்டுணர்ந்து அறிந்து கொள்ளும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் பண்ணை சுற்றுலாத் திட்டம், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அறிமுகப்படுத்தப்படும்.

**19. விவசாயிகள் இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை பாதுகாப்பான முறையில் கையாளுவதற்காக, முன்னெச்சரிக்கை பாதுகாப்பு பொருட்கள் அடங்கிய தளைகள் (Kit) விநியோகம் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பயிற்சிக்காக, 2018–2019ஆம் ஆண்டில், 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

வேளாண் பயிர்களில் குறிப்பாக பருத்தியில் பயிர் பாதுகாப்பு மருந்துகளை பாதுகாப்பான முறையில் கையாளும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முன்னெச்சரிக்கைக்காக பயன்படுத்த வேண்டிய முகக்கவசம், கண்ணாடி, தொப்பி, கையுறை, மேலுறை மற்றும் முதலுதவி மருந்துகள் போன்ற பாதுகாப்புப் பொருட்கள் அடங்கிய தளைகள் (Kit) விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும். மேலும், “இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கும் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள்” – குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

**20. பருத்தியில் அதிகரித்து வரும் இளஞ்சிவப்பு காய்ப் புழுக்களின் (Pink Bollworm) தாக்குதலினை கட்டுப்படுத்துவதற்காக, 2018–2019ஆம் ஆண்டில், 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு இனக்கவர்ச்சிப் பொறிகள் (Pheromone traps) ஒரு கோடியே 9 இலட்சம் ரூபாய் நிதியில் விநியோகிக்கப்படும்.**

சமீப காலங்களில் பருத்தி பயிரில், இளஞ்சிவப்புக்காய்ப் புழுக்களின் தாக்குதல் அதிகமாக தென்படுகிறது. இப்புழுக்களை ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில்

கட்டுப்படுத்தும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 50 சதவீத மானியத்தில் அதிகபட்சமாக ஏக்கருக்கு ரூ.720/– என்ற விகிதத்தில் 15,200 ஏக்கர் பரப்பில், இனக்கவர்ச்சிப் பொறிகளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக, நடப்பு ஆண்டில், ஒரு கோடியே 9 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**21. விவசாயிகளுக்கு அதிக விளைச்சலும், இலாபமும் தரும் வண்ணக் குடைமிளகாய் சாகுபடியை பாதுகாக்கப்பட்ட சூழலில் உருவாக்க, நடப்பாண்டில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2 இலட்சம் சதுர மீட்டரில் பசுமைக்குடில்கள் தொகுப்பு ஏற்படுத்துவதற்காக, 50 சதவீத மானியமாக 9 கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாட்டில் பாரம்பரியமாக வளர்க்கப்பட்டு வரும் பச்சை மிளகாய் 4–5 மாதத்தில் ஒரு ஹெக்டருக்கு 20–40 டன் விளைச்சல் கொடுக்கக்கூடியது. அதிக வைட்டமின்கள் மற்றும் தாது சத்துக்கள் நிறைந்த வண்ண குடைமிளகாய்க்கான தேவை தற்போது அதிகரித்துள்ளது. பாதுகாக்கப்பட்ட சாகுபடி முறைகளில் வருடம் முழுவதும் குடை மிளகாய் சாகுபடி செய்ய முடியும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பசுமைக்குடில்கள் மூலம் வண்ண குடைமிளகாய் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக நடப்பாண்டில், 2 இலட்சம் சதுர மீட்டர் பரப்பில் பசுமைக் குடில்கள் அமைப்பதற்காக 50 சதவீத மானியமாக 9 கோடியே 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படும்.

**22. தோட்டக்கலைப் பயிர்களை அதிகம் சாகுபடி செய்து வரும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்க செயல்பட்டு வரும் தளி தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 2018–2019ஆம் ஆண்டில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தோட்டக்கலையில் வளமிக்க பகுதியாகத் திகழும் கிருஷ்ணகிரி மாவட்டம் தளி வட்டாரத்தில் செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில், தோட்டக்கலை சார்ந்த அனைத்துத் தொழில்நுட்பங்களிலும் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. கொய்மலர்களுக்கான மகத்துவ மையமும் செயல்பட்டு வரும் இவ்வளாகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் மாநிலத்தில் தனித்துவம் வாய்ந்த பயிற்சி மையமாக மாற்ற மகளிர் விடுதி, அலுவலர்களுக்கு தங்கும் இடம் போன்ற கூடுதல் வசதிகள் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**23. மதுரை மாவட்டத்தில் விவசாயிகளின் நலனுக்காக பாரம்பரிய மலர்களுக்கான புதிய மதிப்புக் கூட்டு மையத்தை அமைப்பதற்காக, 2018–2019ஆம் ஆண்டில் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

இந்திய அளவில் மல்லிகை சாகுபடியில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. புவிசார் குறியீடு பெற்ற “மதுரை மல்லிகை”, உள்நாட்டு பயன்பாட்டிற்காகவும் வர்த்தக நோக்கிலும் சாகுபடி செய்யப்பட்டு, பல்வேறு அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவே, விவசாயிகளின் நலனுக்காக,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் மதுரை மாவட்டத்தில் மல்லிகை சாகுபடியை ஊக்குவிக்கவும், அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்ப மேம்பாட்டிற்காகவும் மல்லிகை மற்றும் இதர பாரம்பரிய மலர்களுக்கான மதிப்புக் கூட்டுதல் மையம் இரண்டு கோடி ரூபாய் நிதியில் ஏற்படுத்தப்பட்டு, அறுவடைக்கு பின் செய் தொழில்நுட்பங்கள் மற்றும் ஏற்றுமதி வழிமுறைகள் குறித்து செயல்விளக்கம் மேற்கொள்ளப்படும்.

**24. நீலகிரி, நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள மலைவாழ் பழங்குடியின காபி சாகுபடி செய்யும் விவசாயிகளின் தோட்டங்களில் உற்பத்தியை உயர்த்தி, பதப்படுத்தி, வர்த்தகத்தை அதிகரித்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 2018–2019ஆம் ஆண்டில் 2 கோடியே 28 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

தமிழ்நாட்டில் நீலகிரி மற்றும் சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைப்பகுதிகளிலுள்ள காபித்தோட்டங்கள், அங்குள்ள பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றது. கோத்தகிரி, கூடலூார், ஏற்காடு மற்றும் கொல்லிமலைப் பகுதிகளில் உள்ள பழங்குடியினரின் இயற்கை காபித் தோட்டங்களின் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் வர்த்தகத்தை அதிகரிக்கும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் 2 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் காபி செடிகள், நுண்ணீர் பாசன அமைப்புகள், மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் போன்ற பல வசதிகள் பழங்குடியின விவசாயிகளுக்கு உருவாக்கப்படும்.

**25. விவசாயிகளின் விளைபொருட்கள் அதிக அளவில் பரிவர்த்தனை செய்யப்படும் செஞ்சி மற்றும் விருத்தாச்சலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விவசாயிகளின் விளைபொருட்களை சேமிக்க பல்அடுக்கு சேமிப்பு கிடங்கு வசதி 2018–2019ஆம் ஆண்டில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தரப்படும்.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி மற்றும் கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஆண்டுதோறும் சராசரியாக 2 இலட்சம் முதல் 3 இலட்சம் விவசாயிகளின் விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. தீவிர அறுவடைக்காலங்களில் இந்த ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்களில் ஏற்படும் இட நெருக்கடியினை சமாளிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் செஞ்சி மற்றும் விருத்தாச்சலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தலா 7,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பல்அடுக்கு சேமிப்பு கிடங்கு வசதி 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**26. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வரும் விளைபொருட்களின் துல்லியமான எடையை உறுதி செய்யும் வகையில், முதற்கட்டமாக 500 கிலோ எடைத் திறன் கொண்ட மின்னணு எடை இயந்திரம், 150 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வரும் விளைபொருட்களுக்கு துல்லியமான எடையை உறுதி செய்ய

வேண்டும். இதனால் விவசாயிகளிடையே நம்பகத்தன்மை ஏற்படும். இதனை உறுதி செய்யும் நோக்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முதற்கட்டமாக, 500 கிலோ எடைத்திறன் கொண்ட மின்னணு எடை இயந்திரம், 150 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**27. வேளாண் இயந்திரங்கள் குறித்த விலை, மானியம், பராமரிப்பு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் விவசாயிகள் அறிந்து பயன்பெற, மாநில அளவிலான தகவல் மையம் ஒன்று 2018–2019ஆம் ஆண்டில் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் அமைக்கப்படும்.**

வேளாண் பணியாட்களின் பற்றாக்குறையை சமாளித்து, வேளாண் பணிகளை காலத்தே மேற்கொள்வதற்கு, வேளாண்மையை இயந்திரமயமாக்குதலுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. வேளாண் இயந்திரங்கள் தேர்வு, விலை, மானிய விவரம், பராமரிப்பு குறித்த விழிப்புணர்வினை விவசாயிகளிடையே ஏற்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் சென்னையில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் தலைமையிடத்தில் மாநில வேளாண் இயந்திரங்கள் தகவல் மையம் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**28. இராமநாதபுரம் மாவட்டத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றிய நிலங்களில், மண்வள மேம்பாடு, மாற்றுப் பயிர் சாகுபடி, பண்ணைக் குட்டை நீரைப் பயன்படுத்தி**

**சாகுபடி போன்ற தொழில்நுட்ப செயல்விளக்கத்தினை அமைத்து, வேளாண் பணியினை தீவிரப்படுத்துவதற்காக 2018–2019 ஆம் ஆண்டில் 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் சீமைக் கருவேல மரங்களை அகற்றிய நிலங்களில் வேளாண் பணியினை விவசாயிகள் மேற்கொள்ளும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் மண்வள மேம்பாடு, மாற்றுப் பயிர் சாகுபடி உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பாக செயல்விளக்கத் திடல்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளால் விவசாயிகளின் வயல்களில் அமைக்கப்படும். இதற்காக, இடுபொருள் உதவிகள் வழங்கப்படுவதோடு, பரமக்குடி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில், மாதிரி செயல்விளக்கத்திடல் அமைத்து பயிற்சி அளிப்பதற்காக, 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**29. அதிகரித்து வரும் தோட்டக்கலை பட்டயப் படிப்பின் தேவையை கருத்தில் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை தோட்டக்கலை பட்டயப்படிப்பு நிறுவனத்தின் மாணவர்களின் எண்ணிக்கை நடப்புக் கல்வியாண்டு முதல் 40லிருந்து 80 ஆக உயர்த்தப்படும்.**

தோட்டக்கலை பட்டயப்படிப்பின் தேவை சமீப காலங்களில் அதிகரித்து வருகின்ற சூழ்நிலையினைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில், தென் மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில், கன்னியாகுமரி மாவட்டத்தில்

இயங்கிவரும் பேச்சிப்பாறை தோட்டக்கலை பட்டயப்படிப்பு நிறுவனத்தின் மாணவர்களின் சேர்க்கை, நடப்பு கல்வியாண்டு முதல் 40லிருந்து 80 ஆக உயர்த்தப்படும்.

**30. பயிர் காப்பீட்டுத் திட்ட செயலாக்கத்தைக் கண்காணிக்கவும், களப்பிரச்சினைகளை உடனுக்குடன் களையவும், இத்திட்டத்தின் பலன்கள் 2018–2019ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகளை மேலும் விரைவாக சென்றடைவதை உறுதிசெய்ய, மாநில மற்றும் மாவட்ட அளவில் தனிப்பிரிவுகள் உருவாக்கப்படும்.**

தமிழ்நாட்டில் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் தொடர்பாக விவசாயிகள் மற்றும் துறை அலுவலர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் திட்டச் செயலாக்கத்தினை தொடர்ந்து கண்காணிக்கவும், களப்பிரச்சினைகளை உடனுக்குடன் களைந்து விவசாயிகளுக்கு விரைவாக இழப்பீடு பெற்றுத்தரும் நோக்கத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநில மற்றும் மாவட்ட அளவில், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கென தனிப்பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

**31. தோட்டக்கலைத் திட்டப் பலன்கள் விரைவாக விவசாயிகளை சென்றடைவதற்கு, தோட்டக்கலைத் துறையில் காலியாக உள்ள 376 தொழில்நுட்ப அலுவலர்களின் பணியிடங்கள் 2018–2019ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும்.**

தோட்டக்கலை உற்பத்தியை பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மாவின்

வழியில் செயல்படும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டப் பலன்கள் விவசாயிகளுக்கு விரைவாகச் சென்றடைவதை உறுதி செய்யவும், திட்டங்களை முறையாக கண்காணிக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டில் தோட்டக்கலைத் துறையில் தற்சமயம் காலியாகவுள்ள 96 தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் 280 தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும்.

**32. வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் நலனுக்காகவும் செயல்படுத்தப்படும் திட்டங்களை விரைந்து செயலாக்கவும், கண்காணிக்கவும் வேளாண் துறை அலுவலர்களுக்கு 50 புதிய வாகனங்கள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

வேளாண் உற்பத்தியை பெருக்கவும், விவசாயிகளின் வருமானத்தினை உயர்த்தவும், மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டப் பலன்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு விரைவாகச் சென்றடைவதை உறுதி செய்யவும், வேளாண் திட்டங்களை முறையாக கண்காணிக்கவும், வேளாண்மைத் துறை அலுவலர்களுக்கு 50 புதிய வாகனங்கள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## செய்தி மற்றும் விளம்பரம்

### மானியக் கோரிக்கை எண் 28

**1. பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் இயற்கை எய்தும்போது பணிபுரிந்த ஆண்டுகளுக்கு ஏற்றவாறு ரூ.50,000 முதல் ரூ.2,00,000 வரை வழங்கப்பட்டு வரும் குடும்ப உதவி நிதி ரூ.75,000 முதல் ரூ.3,00,000 வரை உயர்த்தி வழங்கப்படும்.**

பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் இயற்கை எய்தினால் அன்னாரது குடும்பத்தினருக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 5 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.50,000லிருந்து ரூ.75,000 ஆகவும், 10 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.1,00,000லிருந்து ரூ.1,50,000 ஆகவும், 15 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.1,50,000லிருந்து ரூ.2,25,000 ஆகவும், 20 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் ரூ.2,00,000லிருந்து ரூ.3,00,000 ஆகவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்ப உதவி நிதி உயர்த்தி வழங்கப்படும்.

**2. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில், இசை மேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுத் தூண் அமைக்கப்படும்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இசை அறிஞர்களாலும், வித்வான்களாலும், இசை மகா சமுத்திரம் என்றும், மாமேதை என்றும் போற்றிப் புகழப்பட்ட இசைமேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில், ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுத் தூண் அமைக்கப்படும்.

**3. தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் கனவினை நிறைவேற்றும் வகையில் தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் பாரதமாதா நினைவாலயம் அமைக்கப்படும்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் கனவினை நிறைவேற்றும் வகையில், தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நூலகத்தோடு கூடிய பாரதமாதா நினைவாலயம் அமைக்கப்படும்.

**4. சென்னை மாநகரில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டம் பழமை மாறாமல் ரூ.85 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகரில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டம் பழமை மாறாமல் ரூ.85 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

**5. திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும்செவலில் உள்ள மாவீரன் பூலித்தேவன் மாளிகை மற்றும் திருமண மண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் சீரமைக்கப்படும்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும்செவலில் உள்ள மாவீரன் பூலித்தேவன் மாளிகை மற்றும் திருமண மண்டபம் ரூ.50 இலட்சம் செலவில் சீரமைக்கப்படும்.

**6. எட்டு நினைவகங்களில் உள்ள 110 பழைய புகைப்படங்கள் ரூ.5 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தந்தை பெரியார்–பேரறிஞர் அண்ணா நினைவகம் (ஈரோடு), மூதறிஞர் இராஜாஜி இல்லம் (கிருஷ்ணகிரி), பிஷப் கால்டுவெல் இல்லம் (திருநெல்வேலி), தில்லையாடி வள்ளியம்மை நினைவு மண்டபம் (நாகப்பட்டினம்), கோபால் நாயக்கர் மணிமண்டபம் (திண்டுக்கல்), பெருந்தலைவர் காமராசர் இல்லம்

(விருதுநகர்), முத்து மண்டபம் (வேலூர்) மற்றும் காந்தி நினைவு மண்டபம் (கன்னியாகுமரி) ஆகிய மாவட்ட நினைவகங்களில் மொத்தம் உள்ள 110 பழைய புகைப்படங்களை ரூ.5 இலட்சம் செலவில் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்படும்.

**7. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள மறு ஒலிப்பதிவு திரையரங்கம் ரூ.142 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள மறு ஒலிப்பதிவு திரையரங்க கட்டட சீரமைப்பு ரூ.89 இலட்சம் மதிப்பீட்டிலும், மின் அமைப்பு பணி ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டிலும், குளிர்சாதன வசதி ரூ.32.50 இலட்சம் மதிப்பீட்டிலும் சீரமைக்கப்படும். மேலும் ஒலியமைப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**8. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன வளாகத்தில் வட்டச்சுற்று மின்தொடர் கட்டமைப்பு (Ring Main Grid - RMG) ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் மின் அளவினை

இயல்பான நிலையில் பராமரித்திடவும், மறுசீரமைத்திடவும் இவ்வளாகத்தில் வட்டச்சுற்று மின்தொடர் கட்டமைப்பு (Ring Main Grid - RMG) ரூ.88 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

9. **அனைத்து மாவட்டங்களிலும் உள்ள எல்இடி வீடியோ படக்காட்சி வாகனங்களில் ரூ.6.50 இலட்சம் செலவில் அரசு முக்கிய நிகழ்ச்சிகள் நேரலை ஒளிபரப்பு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும்.**

அரசு முக்கிய நிகழ்ச்சிகளை தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் உள்ள எல்இடி வீடியோ படக்காட்சி வாகனங்களில் நேரலை ஒளிபரப்பாக திரையிடும் வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தொடரும் செலவினமாக ரூ.6.50 இலட்சம் செலவில் சிம்கார்டுகள் பொருத்தப்பட்டு நேரலை ஒளிபரப்பு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும்.

10. **அரசு பொருட்காட்சிகளில் அரங்குகள் அமைத்திட இரும்பு வளைவு தகரங்கள் ரூ.20 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.**

அரசு பொருட்காட்சிகளில் அரங்கங்கள் அமைத்திட தற்போது நல்ல நிலையில் உள்ள 11,170 வளைவுத் தகரங்கள் ஒரே சமயத்தில் இரண்டு பொருட்காட்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்த முடிகிறது. பல தருணங்களில் ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் அரசு பொருட்காட்சிகள்

நடைபெறுவதைக் கருத்தில் கொண்டு **3**ஆவது பொருட்காட்சியிலும் அரங்கங்கள் அமைத்திட ஏதுவாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.**20** இலட்சம் செலவில் புதியதாக இரும்பு வளைவுத் தகரங்கள் கொள்முதல் செய்யப்படும்.

**11. அரசு பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் ரூ.2 ஆயிரத்திலிருந்து ரூ.5 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு பொருட்காட்சியில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியம், தொடரும் செலவினமாக, ரூ.**2** ஆயிரத்திலிருந்து ரூ.**5** ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

## எழுதுபொருள் மற்றும் அச்சு

### மானியக் கோரிக்கை எண் 30

**1. அரசு மைய அச்சகம், சென்னைக்கு நிரலாக்க சேடல் தைக்கும் இயந்திரம் ரூபாய் 253.48 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு மையஅச்சகம், சென்னை பயன்பாட்டிற்கு பல்கலைக்கழகங்களுக்கான 2 கோடி எண்ணிக்கையிலான விடைத்தாள்களை குறித்த நேரத்தில் நேர்த்தியாகவும், குறைந்த மனித ஆற்றலை பயன்படுத்தி உடனுக்குடனும் சிறப்பாகவும் செயலாக்கம் செய்திட நிரலாக்க சேடல் தைக்கும் இயந்திரம் (Inline signature gathering, pinning and 3 side trimmer Saddle Stitching Machine) ரூபாய் 253.48 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 253.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டைக்கு தாளீடு வலைமீள் இயந்திரம் ரூபாய் 110 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டையில் மருத்துவத்துறை, வணிக வரித்துறை

மற்றும் பிற துறைகளுக்கான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், தேர்தல் துறைக் குறித்த அச்சுப்பணிகளின் அவசியத்தன்மை கருதி இவ்வச்சகத்தில் மேற்கொள்ளப்படும் அச்சுப் பணிகளை இயந்திரத்தில் துரிதமாக அச்சிடுவதற்கு தாளீடு வலைமீள் இயந்திரம் ஒன்று ரூபாய் 110 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 110 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. அரசு கிளை அச்சகம், மதுரை, விருத்தாசலம் மற்றும் சேலம் அச்சகங்களுக்கு புத்தகம் தயாரித்திட பட்டைக் கட்டுமான இயந்திரங்கள் ரூபாய் 58.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அண்ணா பல்கலைக்கழகத்தின் 350 பக்கங்கள் கொண்ட கல்லூரிகள் குறித்த தகவல் கையேடு மற்றும் இதர புத்தக கட்டுமானப் பணிகளை தரமாகவும், நேர்த்தியாகவும் காலதாமதமின்றியும், கழிவுகளை குறைத்திடும் வகையில் அரசு கிளை அச்சகம், மதுரை, விருத்தாசலம் மற்றும் சேலம் ஆகிய அச்சகங்கங்களில் செயல்படுத்திட இயந்திரம் ஒன்றின் விலை ரூபாய் 19.50 இலட்சம் வீதம் மொத்தம் 3 எண்கள் பட்டைக் கட்டுமான இயந்திரம் (Perfect Binding Machine) ரூபாய் 58.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 58.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை**

**அச்சகங்களுக்கு 4 கம்பியடிக்கும் இயந்திரங்கள் ரூபாய் 7.40 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அம்மா அவர்களின் ஆசியுடன், அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, மதுரை அச்சகங்களில் அச்சடிக்கப்படும் வழக்குப் பட்டியல்கள், நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்களை இணைத்து புத்தகங்களாக்கிட கம்பியடிக்கும் இயந்திரம் ஒன்று ரூ.1.85 இலட்சம் விலையில் முறையே தலா 2 வீதம் 4 கம்பியடிக்கும் இயந்திரங்கள் (Single Head Wire Stitching Machine – 25 mm) ரூபாய் 7.40 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 7.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**5. அரசு அச்சகங்களுக்கு 135 எண்கள் நெகிழி அடித்தட்டு ரூபாய் 11.47 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அச்சடிக்கப்பட்ட கட்டுமானம் செய்த படிவங்கள் மற்றும் பதிவேடுகளை எளிதாகக் கையாளுவதற்கும், ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவிற்கு சேதாரமின்றி எடுத்துச்செல்லவும் அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற வளாகம், சேலம், மதுரை, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, திருச்சி, விருத்தாசலம், புதுக்கோட்டை அச்சகங்களுக்கு நெகிழி அடித்தட்டு ஒன்றின் விலை ரூ.8,500 என மொத்தம் 135 எண்கள் நெகிழி அடித்தட்டு (Plastic Pallet)

ரூபாய் 11.47 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 11.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அச்சகத்திற்கு தானியக்க உயர்விரைவு வெட்டும் இயந்திரம் ரூபாய் 49.26 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளை வளாகத்தில் உள்ள அரசு கிளை அச்சகத்தில் காகிதம் வெட்டும் இயந்திரம் தேய்மானம் அடைந்து வழக்கற்றதாகியதால் உயர்நீதிமன்ற வழக்குப்பட்டியல் பணியில் சுணக்கம் அடைவதை தவிர்க்க அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அச்சகத்திற்கு தானியக்க உயர்விரைவு வெட்டும் இயந்திரம் (Fully Automatic High Speed Cutting Machine) ஒன்று ரூபாய் 49.26 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 49.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. அரசு மைய அச்சகம், சென்னைக்கு 4 வண்ண தனித்தாள் அச்சு இயந்திரம் ரூபாய் 53.80 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசின் கொள்கை விளக்க குறிப்புகள், மேலட்டைகள் மற்றும் அழைப்பிதழ்கள் ஆகியவற்றை பல வண்ணங்களில் அச்சிட்டு வழங்கிட

4 வண்ண தனித்தாள் அச்சு இயந்திரத்தினைக் கொண்டு அச்சுப் பிரதிகளை குறைந்த செலவில் தரமானதாக எடுத்திட இயலும் என்பதால், அரசு மைய அச்சகம், சென்னைக்கு நான்கு வண்ண தனித்தாள் அச்சு இயந்திரம் (4 Color Sheet Fed Offset Machine) ஒன்று ரூபாய் **53.80** இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் **53.80** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. இயக்ககம், அரசு கிளை அச்சகம், மதுரை மற்றும் சேலம் அச்சகங்களுக்கு 5 கணினிகள் ரூபாய் 2.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அத்தியாவசிய அலுவலக நிர்வாகப் பணிகளுக்காக இயக்ககத்திற்கு **3** கணினிகள் மற்றும் அரசு கிளை அச்சகம், மதுரை மற்றும் சேலம் அலகிற்கு தலா ஒரு கணினி என மொத்தம் **5** கணினிகள் (Computer) ஒன்று ரூ.**50,000** விலையில் ரூபாய் **2.50** இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் **2.50** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. இயக்ககம், சென்னை உயர்நீதிமன்ற கிளைஅச்சகம், அரசு கிளை அச்சகம், மதுரை மற்றும் சேலம் அச்சகங்களுக்கு 6 சீரொளி அச்சுகள் ரூபாய் 3 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அலுவலக நிருவாகப்

பணிகளுக்கான அச்சுப் பிரதிகள் எடுக்க இயக்ககத்திற்கு 3 சீரொளி அச்சுகள் மற்றும் அரசு கிளை அச்சகம் சென்னை உயர்நீதிமன்ற வளாகம், அரசு கிளை அச்சகம் மதுரை மற்றும் சேலம் அலகிற்கு தலா ஒன்று ரூ.50,000 விலையில் மொத்தம் 6 சீரொளி அச்சுகள் (Laser Printer) ரூபாய் 3 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**10. இயக்ககம் மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகம் ஆகியவற்றிற்கு இரு எண்கள் புள்ளிக்கண அச்சு ரூபாய் 1.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இயக்ககம் மற்றும் அரசு எழுதுபொருள் அலுவலகம் ஆகியவற்றிற்கு சம்பளப் பட்டியல் தயாரித்திட ஏதுவாக இயந்திரம் ஒன்று ரூ.50,000 விலையில் இரு எண்கள் புள்ளிக்கண அச்சு (Dot Matrix Printer) ரூபாய் 1 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**11. அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற வளாகம் மற்றும் அரசு கிளை அச்சகம், சேலத்திற்கு தட்டு ஒளிப்பாய்ச்சம் ரூபாய் 7 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற வளாகம் மற்றும் அரசு கிளை அச்சகம், சேலத்தில் அச்சடிக்க தேவையான அச்சுத் தகடுகளை

தயாரித்திட, தற்போது பயன்பாட்டில் உள்ள தட்டு ஒளிப்பாய்ச்சம் இயந்திரம் நீண்ட பயன்பாட்டின் காரணமாக பழுது ஏற்படுவதால் தட்டு ஒளிப்பாய்ச்சம் (Plate Exposure) ஒன்று ரூ.3.50 இலட்சம் விலையில் இரு தட்டு ஒளிப்பாய்ச்சம் இயந்திரங்கள் ரூபாய் 7 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 7 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**12. அரசு கிளை அச்சகம், மதுரை, சேலம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அச்சகங்களுக்கு 24 எண்கள் நெடுவரிசை எண்ணிடு பெட்டிகள் ரூபாய் 7.20 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசுகிளைஅச்சகம், மதுரை, சேலம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அச்சகங்களில் அச்சிடப்படும் பிரதிகளில் தொடர் வரிசை எண்களிட தலா 6 எண்கள் நெடுவரிசை எண்ணிடு பெட்டிகள் (Vertical Numbering Boxes) ஒன்று ரூ.30,000/– விலையில் மொத்தம் 24 எண்கள் ரூபாய் 7.20 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 7.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**13. அரசு கிளை அச்சகம், மதுரை, சேலம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அச்சகங்களுக்கு 24 எண்கள் கிடைவரிசை எண்ணிடு பெட்டிகள் ரூபாய் 7.20 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, அரசுகிளைஅச்சகம், மதுரை, சேலம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அச்சகங்களில் அச்சிடப்படும் பிரதிகளில் தொடர் வரிசை எண்களிட தலா 6 எண்கள் கிடைவரிசை எண்ணிடு பெட்டிகள் (Horizontal Numbering Boxes) ஒன்று ரூ.30,000 விலையில் மொத்தம் 24 எண்கள் ரூபாய் 7.20 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 7.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**14. அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அச்சகங்களுக்கு அச்சுவருடி ரூபாய் 1 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அச்சகங்களுக்கு பல்கலைக்கழக மற்றும் மருத்துவத்துறை, காவல் துறை படிவங்கள் போன்ற பணிகளுக்கு மெழுகுத்தாளில் அச்சு எடுக்கப்படும் போது அச்சடிப்பு சிறப்பாக அமைந்திட வேண்டி அச்சுவருடி (Printer Cum Scanner) ஒன்று ரூ.50,000 விலையில் இரு அச்சுவருடிகள் ரூபாய் 1 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. அரசு கிளை அச்சகம், மதுரைக்கு 2 எண்கள் தாள் கட்டு இயந்திரம் ரூபாய் 4.50 இலட்சம் செலவில்கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் ஆணைப்படி, அரசு கிளை அச்சகம், மதுரையில் அச்சிடப்படும் படிவங்கள்/பதிவேடுகளை 50 முதல் 1000 எண்ணிக்கை கொண்ட கட்டுகளாக கட்டி அனுப்புகை செய்ய தாள் கட்டு இயந்திரம் (Paper Bundling Machine) ஒன்று ரூ. 2.25 இலட்சம் விலையில் இரண்டு எண்கள் ரூபாய் 4.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**16. சென்னை அரசு மைய அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற கிளை அச்சகம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அச்சகம், சேலம், மதுரை, புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலத்தில் உள்ள அரசு கிளை அச்சகங்களுக்கு மொத்தம் 16 எண்கள் நகர் அடிமேடை ரூபாய் 4.80 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தினசரி அச்சுப்பணிக்கு பயன்பாட்டுப் பொருட்களை பண்டகப் பிரிவிலிருந்து இயந்திரப் பிரிவிற்கு எடுத்து வரவும், அச்சிடப்படும் படிவங்களை புத்தகங்களாக உருவாக்கி அனுப்புகை பிரிவிற்கு எடுத்து செல்லவும், அனைத்து பிரிவுகளில் சேர்ந்திடும் காகித கழிவுகளை அகற்றவும் சென்னை அரசு மைய அச்சகத்திற்கு 4 எண்கள், அரசு கிளை அச்சகங்கள்–சென்னை உயர்நீதிமன்ற வளாகம், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை, சேலம், புதுக்கோட்டை, மதுரை மற்றும் விருத்தாசலம் ஆகிய அலகுகளுக்கு தலா 2 எண்கள் என ஒன்று ரூ.30,000/– விலையில் மொத்தம் 16 எண்கள் நகர் அடிமேடை (Hydraulic Pallet Trolley) ரூபாய் 4.80

இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 4.80 இலட்சம்நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 17. அரசு எழுதுபொருள் அலுவலகம் மற்றும் அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டைக்கு எண்ணிம படியெடுப்பி இயந்திரம் ரூபாய் 1 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு எழுதுபொருள் அலுவலகம் மற்றும் அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை அலகுகளில் உள்ள படியெடுப்பி (Copier) இயந்திரங்கள் தேய்மானம் காரணமாக இயங்காத நிலையில் உள்ளதால் அரசு எழுதுபொருள் அலுவலகம் மற்றும் அரசு கிளை அச்சகம், புதுக்கோட்டை அலகுகளுக்கு தலா ஒரு எண்ணிம படியெடுப்பி இயந்திரம் என ஒன்று ரூ.50,000 விலையில் மொத்தம் 2 எண்ணிம படியெடுப்பி (photo copier) இயந்திரங்கள் ரூபாய் 1 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 இலட்சம்நிதிஒதுக்கீடு செய்யப்படும்.

## 18. அரசு கிளை அச்சகம், மதுரைக்கு மை வழங்கி ரூபாய் 25.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அரசு கிளை அச்சகம், மதுரையில் ஓரியண்ட் இயந்திரத்தில் பல்கலைக்கழக விடைத்தாள்களுக்கான பார்கோட் அச்சுப்பணிகள்

மேற்கொள்ளப்படும் போது உற்பத்தியினை அதிகரிக்கவும், அதிக காகித கழிவினை தவிர்க்கவும், குறைவான மையினைக் கொண்டே அதிக உற்பத்தியை பெற்றிட அரசு கிளை அச்சகம், மதுரைக்கு ஒரு மை வழங்கி (Bulk Inking system) ரூபாய் 25.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 25.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. அரசு கிளை அச்சகம், மதுரைக்கு தாள் அடைக்கட்டு இயந்திரம் ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மதுரை அரசு கிளை அச்சகத்தில் காகிதம் வெட்டும் இயந்திரங்களில் பெறப்படும் இதழ்வெட்டுத் துண்டு கழிவுகளை அழுத்தம் செய்து சிறு கட்டுகளாக்கினால் குறைந்த இடப்பரப்பில் அடுக்கி வைத்துக் கொள்வதுடன் சுமை ஊர்தி மூலம் அதிக எடை கொண்ட கழிவுகளை அகற்றலாம் என்பதால் கழிவு காகிதங்களை அழுத்தம் செய்வதற்கு அரசு கிளை அச்சகம், மதுரைக்கு ஒரு தாள் அடைக்கட்டு இயந்திரம் (Paper Bailing Machine) ரூபாய் 3.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 3.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## 41. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை

## 51. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

### மானியக் கோரிக்கை எண் 41 & 51

**1. 423 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி, டேட்டா கார்டு மற்றும் கணினி இயக்கப் பயிற்சி வழங்குதல்**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசு கிராம நிருவாகத்தினை நவீனப்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது. நிலப் பதிவேடுகள், சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் பிற சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவதில் வெளிப்படையான மற்றும் திறமையான நிருவாகத்தினை உறுதி செய்திட தகவல் தொழில்நுட்பமானது மிக முக்கியமான காரணியாக உள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 9,614 கிராம நிருவாக அலுவலர்களில் 9,191 கிராம நிருவாக அலுவலர்களுக்கு மடிக்கணினி மற்றும் அச்சுப்பொறி இயந்திரங்கள் வழங்கியது போக மீதமுள்ள 423 கிராம நிருவாக அலுவலர்களுக்கு ரூ.1.42 கோடி செலவில் மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் டேட்டா கார்டு வழங்கப்பட்டு அவற்றை இயக்குவதற்கான பயிற்சியும் வழங்கப்படும்.

## 2. சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1914ஆம் ஆண்டு கட்டப்பட்டு சிதிலமடைந்த நிலையில் உள்ள சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகம் போதிய இடவசதியின்மை காரணமாக வட்டாட்சியர் அலுவலக பிரிவுகளான பொதுப் பிரிவு, தேர்தல் பிரிவு, சமூகப் பாதுகாப்புத் திட்டப் பிரிவு மற்றும் நில அளவை பிரிவு உள்ளிட்ட பல பிரிவுகள் தனித்தனி கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் தினமும் வந்து செல்லும் வட்டாட்சியர் அலுவலகம் உறுதியாகவும் போதிய இட வசதியுடனும் திகழ வேண்டும் என்ற நோக்குடன் சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு 2018–2019ஆம் ஆண்டில் ரூ.281.60 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டப்படும்.

## 3. வருவாய் அலுவலர்களுக்கு இணையதள வசதியுடன் கூடிய சிம்கார்டு வழங்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி., வருவாய்த்துறையில் வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர், நிலம் தொடர்பான பணிகள், சான்றிதழ்கள் வழங்குதல் மற்றும் இயற்கை இடர்பாடு

நேரங்களில் பொதுமக்களுக்கு மேம்பட்ட சேவையினை வழங்கிட ஏதுவாக **291** வட்டாட்சியர்கள், **383** மண்டலத் துணை வட்டாட்சியர்கள் மற்றும் **1,189** வருவாய் ஆய்வாளர்கள் என மொத்தம் **1,863** அலுவலர்களுக்கு ரூ.**0.50** கோடி செலவில் இணையதள வசதியுடன் கூடிய சிம்கார்டுகள் புதிய கட்டண திட்டத்தில் வழங்கப்படும்.

## 4. தகவல் மேலாண்மை அமைப்பை ஏற்படுத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் கண்காணிப்புக்கான தகவல் மேலாண்மை அமைப்பு தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் ரூ.**0.30** கோடி செலவில் ஏற்படுத்தப்படும். இவ்வமைப்பு வருவாய் நிருவாகத்தின் பல்வேறு செயல்பாடுகளை திறம்பட கண்காணிப்பதற்கும், நிர்வகிப்பதற்கும், பல்வேறு அமைப்பு முறைகளிலிருந்து தகவல்களை சேகரிப்பதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும் உதவும். இதன் மூலம், முறையான கண்காணிப்பு, மறு ஆய்வு மற்றும் முடிவெடுக்கும் செயல்பாடுகளுக்கு கிராம அளவில் இருந்து மாவட்ட அளவு வரை வருவாய் துறையில் பதிவு செய்யப்படும் தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

## 5. சமூக பாதுகாப்புத் திட்டத்தில் மொபைல் ஆப் மற்றும் இணைய வழி தகவல் சேகரிப்பு வசதி ஏற்படுத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மத்திய அரசின் உயர் கணினி மேம்பாட்டு மையத்துடன் (C-DAC) வருவாய் நிருவாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை இணைந்து சமூக பாதுகாப்புத் திட்ட நிருவாக நிதியிலிருந்து ரூ.0.40 கோடி செலவில் (ஆண்டொன்றுக்கு) கைபேசியின் மூலமாக மேம்பட்ட தரவு சேகரிப்பு மென்பொருள் தீர்வு ஒன்று உருவாக்கப்படும். இதன் மூலம் பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதை உடனுக்குடன் கண்காணிக்கவும் அது தொடர்பான துல்லியமான தகவல்களை திரட்டவும் முடியும்.

## 6. சமூகப் பாதுகாப்புத் திட்ட பிரிவு ஆவணங்கள் அனைத்தையும் கணினிமயமாக்கல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நாம் கையாளும் அனைத்து கோப்புகள் மற்றும் ஆவணங்களை ஒரு சொல் தேடல் மூலம் தேடி எடுத்து படித்து பார்க்க ஏதுவாக சமூக பாதுகாப்புத் திட்ட நிருவாக நிதியிலிருந்து ரூ. 0.12 கோடி மதிப்பீட்டில் சென்னையில் இயங்கும் மத்திய அரசின் உயர்கணினி மேம்பாட்டு மையம் மூலம் ஒரு ஆவணக் காப்பகம் மற்றும் மேலாண்மை அமைப்பு (Document Archives and Management System) உருவாக்கப்படும். இதன்

மூலம், அனைத்து ஆவணங்கள் மற்றும் கோப்புகள் தேடி எடுக்கப்பட்டு ஸ்கேன் செய்யப்பட்டு அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு அறிவார்ந்த புத்தகம் போன்று கணினி மூலம் சேகரிக்க முடியும்.

**7. இடி மற்றும் மின்னல் குறித்த முன்னெச்சரிக்கை வழங்கும் முன்னோடி திட்டம் உருவாக்குதல்**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இடி, மின்னல் தாக்குதலால் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஏற்படும் சேதத்தை தடுத்திடும் நோக்குடன், புனேவில் உள்ள இந்திய வானிலை மையம் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் உதவியுடன் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 0.80 கோடி செலவில் இடி, மின்னல் குறித்த முன்னெச்சரிக்கை வழங்கும் முன்னோடித் திட்டம் 2018–2019ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**8. கிராம நிருவாக அலுவலர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோர்களுக்கு தகுதிகாண் பருவம் விளம்புகை செய்யும் பொருட்டு அதிகாரத்தினை மாவட்ட ஆட்சியர்களுக்கு பகிர்ந்தளித்தல்**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக நேரடி நியமனம் செய்யப்படும்

கிராம நிருவாக அலுவலர்கள், உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய பவானிசாகர் பயிற்சி மற்றும் ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சி போன்ற பயிற்சிகளுக்கு நிருவாக காரணங்களால் காலதாமதமாக அனுப்பப்பட்டு காலதாமதமாக தேர்வு / பயிற்சி பெற்றிருந்தாலும் முதல் முறையிலேயே அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தால் அவ்வினங்களை சம்மந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலகிலேயே தகுதிகாண் பருவம் விளம்புகை செய்து ஆணைகள் வெளியிட மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்.

**9. தீபாவளி திருநாளன்று பட்டாசுகள் விற்பனை செய்திட பண்டிகைக்கு 30 நாட்களுக்கு முன் தற்காலிக உரிமம் வழங்க விண்ணப்பங்களை இணைய வழியாக சமர்ப்பித்தல்**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தீபாவளி திருநாளை முன்னிட்டு பட்டாசு விற்பனை செய்யும் சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் வியாபாரிகள் பட்டாசுகளை கொள்முதல் செய்து இருப்பு வைத்திடவும், விற்பனை செய்திடவும் வெடிபொருள் சட்டம் 1884–இன் படி தீபாவளி பண்டிகைக்கு 30 நாட்களுக்கு முன் தற்காலிக உரிமத்தினை வழங்கிட கோரும் மனுக்களை மின்னணு மூலம் சமர்ப்பித்திடும் வகையில் இதற்கான பயனாக்கப் பாதீடு (Application Server) உருவாக்கப்படும். இதன் மூலம் பட்டாசு விற்பனை செய்ய தற்காலிக உரிமம் பெற வியாபாரிகள் தீபாவளி பண்டிகைக்கு 2 மாதங்களுக்கு

முன்பாக ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதிக்குள்ளாக ஒவ்வொரு வருடமும் இணைய தளம் (Online portal) மூலம் மனு அளிக்க வேண்டும்.

**10. வெடி மருந்து பொருட்கள் சேமிக்க உரிமம் மற்றும் பெட்ரோலியம் சட்டம் தொடர்பான தடையில்லாச் சான்றிதழ் பெற மின்னனு மூலம் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வெடி மருந்து பொருட்கள் சேமிக்க, உரிமம் மற்றும் பெட்ரோலியச் சட்டம் (Petroleum Act) தொடர்பான தடையில்லாச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாக பெறப்படும் மனுக்களை மின்னனு மூலம் சமர்ப்பித்திட 'பயனாக்கப் பாதீடு' (Application Server) உருவாக்கப்படும். இந்நடைமுறையின் மூலம், வியாபாரிகள் வெடிமருந்து பொருட்கள் சேமிக்க உரிமம் மற்றும் பெட்ரோலியச் சட்டம் தொடர்பான தடையில்லாச் சான்றிதழ் பெற இணைய தளம் (Online Portal) மூலம் மனு செய்து இணைப்புகளுடன் பதிவஞ்சல் மூலம் உரிய அலுவலருக்கு அனுப்பிட வேண்டும்.

**11. ஆதரவற்ற விதவையர், ஆதரவற்ற குழந்தைகள் சான்றிதழ் மற்றும் துயர் துடைப்பு திட்டங்களுக்கான நிவாரண நிதி உதவி பெற இ–சேவை மையம் மூலம் விண்ணப்பித்தல்.**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வருவாய் மற்றும் பேரிடர்

மேலாண்மைத் துறையின் மூலம் ஏற்கெனவே மின்னணு சேவை மூலம் வழங்கப்படும் பல்வேறு சான்றிதழ்களின் தொடர்ச்சியாக பொது மக்கள் பயன்பெறும் வகையில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிவாரணங்களை எளிதாக பெற்று பயனடையும் வகையில் ஆதரவற்ற விதவை சான்றிதழ் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் சான்றிதழ் ஆகியவை இவ்வாண்டு முதல் இ–சேவை மையங்கள் மூலம் வழங்கப்படும். அதே போல, துயர்துடைப்பு திட்டங்களான 1) முதலமைச்சரின் சாலை விபத்து நிவாரண நிதித் திட்டம், 2) விபத்து நிவாரணத் திட்டம், 3) துயர்துடைப்பு நிவாரணத் திட்டம் ஆகியவை தொடர்பான மனுக்களை பரிசீலனை செய்து எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, மேற்கண்ட திட்டங்களின் கீழ் பெறப்படும் மனுக்களை நேரடியாக மனுதாரரிடமிருந்து பெறாமல் இவ்வாண்டு முதல் இ–சேவை மையங்கள் மூலம் பெறப்படும்.

## 12. மாற்றுத்திறனுடையோர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான சிறப்பு குறைதீர் கூட்டம் நடத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாற்றுத்திறனுடையோர்க்கு உதவும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒன்று மாற்றுத் திறனுடையோர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான சிறப்பு குறைதீர் கூட்டம். மாற்றுத்திறனுடையோர்களின் குறைகளை தீர்ப்பதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தீவிர

முனைப்பு காட்டவும், அவர்களின் சேவைகளை மேம்படுத்தும் விதமாக மாற்றுத்திறனுடையோர்களின் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அவர்களின் குறைகளை களைவதில் அதிக அக்கறை காட்டிடவும் ஏதுவாக, வருவாய் கோட்ட அளவில் வருவாய் கோட்டாட்சியர் நிலையில் மாதம் ஒரு முறையும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் நிலையில் இரு மாதத்திற்கு ஒரு முறையும், மாநில அளவில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் மூன்று மாதத்திற்கு ஒருமுறையும் மாற்றுத்திறனுடையோர் குறைதீர் கூட்டம் நடத்தப்படும்.

## 13. திறன்மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆசிய பேரிடர் ஆயத்த மையம் ஒரு சர்வதேச அரசாங்க அமைப்பாகும் (2005இல் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது). இந்த மையத்தின் பிராந்திய ஆலோசணைக்குழுவில் 26 நாடுகள் இடம்பெற்றுள்ளன. இதில், இந்தியாவின் சார்பில் உள்துறை அமைச்சகம் உறுப்பினராக இடம்பெற்றுள்ளது. இம்மையம், பல அரசுகள், ஐ.நா.வின் முகமைகள், கல்வி மையங்கள், தனியார் துறை ஆகியவற்றுடன் இணைந்து ஆசியா–பசிபிக் பகுதியிலுள்ள நாடுகள் மற்றும் இதர நாடுகளில் பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை கண்டறிதல், பேரிடர் குறைப்பு, பருவ மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிதல் மற்றும்

குறைத்தல் ஆகியவற்றில் ஈடுபடுகின்றது. பீகார் மற்றும் குஜராத் மாநிலங்கள் இம்மையத்துடன் ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. இம்மையம், வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு ஆணையரகத்தின் மூலம் தமிழ்நாடு அரசுடன் இணைந்து நீண்டகால அளவில் திறன்மேம்பாட்டு பயிற்சி அளித்திட விருப்பம் தெரிவித்துள்ளது. மேலும், இம்மையம், ரைம்ஸ் (RIMES, Bangkok)மையத்துடன் இணைந்து திறன்மேம்பாட்டு பயிற்சி அளித்திட விருப்பம் தெரிவித்துள்ளது. தமிழக அரசுப் பணியாளர்களின் திறனையும், தொழில்நுட்பத் திறனையும் மேம்படுத்தும் வகையில் பயிற்சி அளித்திட வருவாய் மற்றும் பேரிடர் தணிப்பு துறை, ஆசிய பேரிடர் ஆயத்த மையம், பாங்காக் உடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

## 14. குறுவட்ட அளவில் தொலையளவு மழைமானிகள் நிறுவுதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநிலம் முழுவதும் பெய்யும் மழையளவை துல்லியமாக கணக்கிட்டு, அதன் அடிப்படையில் வானிலை முன்னறிவிப்புகளையும் அறிவுரைகளையும் வழங்கிடும் நோக்கில், தமிழ்நாட்டில் உள்ள **1,189** குறு வட்டங்கள் (Firkas) ஒவ்வொன்றிலும், விவசாயிகள், பயனாளர்கள் மற்றும் உபயோகிப்பாளர்களுக்கு முன்னறிவிப்புகள் மற்றும் அறிவுரைகள் உடனடியாக வழங்க தொலைத்தொடர்பு முறையில் (Telemetric) இயங்கிடும் மழைமானிகளை நிறுவிடும் பொருட்டு முதற்கட்டமாக

2018–2019ஆம் நிதியாண்டில் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேடல், மீட்பு மற்றும் தகவல்தொடர்பு உபகரணங்கள் கொள்முதல் செய்திடல்**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, மாநிலத்தின் தயார் நிலையை வலுப்படுத்திட பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.13.40 கோடி மதிப்பீட்டில் கீழ்க்கண்ட தேடல், மீட்பு மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்.

அ) Vegetation Declogger

ஆ) High Capacity Suction-cum-Jetting Machine

இ) Robotic Excavator

**16. தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளை மேம்படுத்துதல்**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டின் அனைத்து கடலோர மாவட்டங்களும் வெள்ளம், புயல், ஆழிப்பேரலை மற்றும் தீவிர பருவநிலைகளால் பாதிப்புக்கு உள்ளாகின்றன. திடீர் வெள்ளப்பெருக்கு, நிலநடுக்கம் மற்றும் நிலச்சரிவுகளால்

மலைப்பகுதிகளில் உள்ள மாவட்டங்கள் பெரிய அளவில் பாதிப்புக்கு உள்ளாகின்றன. பேரிடர் காலங்களில் தேடுதல், வெளியேற்றுதல் மற்றும் மீட்பு ஆகிய பணிகளை குறுகிய காலத்திற்குள் மேற்கொள்வது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும் என்பதால், மீட்புப் பணிகளை முன்னின்று மேற்கொள்ளும் தீ மற்றும் மீட்புத் துறையினருக்கு தேவைப்படும் நவீன இயந்திரங்கள், கருவிகள், மீட்புக்குழு தானியியங்கிகள், நீர்மூழ்கி அங்கிகள், நீர்மூழ்கி பம்புகள் மற்றும் நவீன கருவிகள் ஆகியவை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

## 17. பேரிடர் உதவி படையினை உருவாக்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பேரிடர் காலங்களில் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேம்படுத்திட காவல் துறையில் உள்ள ஊர்க்காவல் படையினைப் போன்று பேரிடர் உதவிப்படை என்ற சிறப்புத் தனிப்படை மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் முன்னுரிமை அடிப்படையில் முதற்கட்டமாக கடலோர மற்றும் மலைப் பகுதிகள் அடங்கிய மாவட்டங்களில் உருவாக்கப்படும்.

## 18. மீனவர்களுக்கு முழுமையான முன்னெச்சரிக்கை தகவல் சாதனங்கள் வழங்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி, ஆழ்கடலுக்கு தொடர்ந்து பல நாட்களாக மீன்பிடிக்க குழுக்களாக செல்லும் மீன்பிடி படகுகளுக்கு (Multiday fishing vessels) வானிலை சம்மந்தமான முன்னெச்சரிக்கை அறிவிப்புகளை தெரிவித்திட மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.3.40 கோடி மதிப்பில் செயற்கை கோள்களின் துணைகொண்டு செயல்படும் படகுகள் மற்றும் கப்பல்களை நிலைநிறுத்தும் அமைப்பு சாதனங்கள் (Navic), கடலில் உள்ள மீன் பிடி படகுகளுக்கும் மற்றும் கப்பல்களுக்கும் வானிலை தொடர்பான முன்னெச்சரிக்கைகளையும் மற்றும் கடல் பாதுகாப்பு தொடர்பான தகவல்களையும் அளிக்கும் சர்வதேச நடுத்தர அதிர்வெண் மூலம் செயல்படும் அச்சு எந்திரங்களும் (Nav Tex) மற்றும் செயற்கைக்கோள் மூலம் செயல்படும் தொலைபேசிகளும் வழங்கப்படும்.

## 19. சென்னை மாவட்டத்திற்கான வெள்ள முன்னறிவிப்பு திட்டம் உருவாக்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை வெள்ள முன்னறிவிப்பு அமைப்பானது (1) பெருநகர சென்னை நில அமைப்பின் தகவல் தொகுப்பு (2) பெருநகர சென்னை வெள்ள பாதிப்புக்குள்ளாகும் பகுதிகள் தொகுப்பு (3) முப்பரிமான புவியியல் தகவல் அமைப்பின் காட்சிப்படுத்துதல் தொகுப்பு (4) நிகழ்நிலை தரவு மையத் தொகுப்பு (5) மக்களிடமிருந்து திரட்டப்படும் தகவல் அடிப்படையிலான வெள்ளம் குறித்த தொகுப்பு மற்றும்

(6) சென்னை வெள்ள பாதிப்பின்போது முடிவெடுக்க உதவிடும் ஆதார அமைப்பு ஆகிய ஆறு தொகுப்புகள் அடங்கிய அமைப்பாகும். இதன் மூலம் வெள்ள மட்ட அளவு முன்னறிவிப்பு கிடைத்த ஒரு மணி நேரத்தில் வார்டு வாரியாக வழங்கப்படும். எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலத்தில் சென்னை வெள்ள முன்னறிவிப்பு அமைப்பானது செயல்பாட்டுக்கு வரும்.

## 20. 100 குறுவட்ட அளவர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டுதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, குறுவட்ட அளவர்களை பொதுமக்கள் எளிதாக தொடர்பு கொள்ள ஏதுவாக, முதற்கட்டமாக 100 குறுவட்டங்களில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. மேலும், 50 குறுவட்டங்களில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்ட 04.05.2017 அன்று ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2017–2018ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு கூடுதலாக 10 குறுவட்டங்களில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்ட ஆணைகள் வழங்கப்பட்டு தற்போது துவக்க கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், இத்திட்டத்தினை விரிவுபடுத்தும் முகமாக 2018–2019ஆம் நிதியாண்டில் மேலும் 100 குறுவட்டங்களில் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்

சுமார் ரூ.24.02 கோடி செலவில் (ஒரு குடியிருப்புக்கு ரூ.24.02 இலட்சம்) கட்டப்படும்.

**21. மத்திய நிலஅளவை அலுவலகத்தை மேம்படுத்தும் பொருட்டு வரைவி (Plotter), ஸ்கேனர், அச்சுப்பொறி மற்றும் கணினி வழங்குதல்**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மத்திய நில அளவை அலுவலகம் நில அளவை இயக்ககத்தின் தொழில்நுட்ப மையமாக விளங்குவதுடன், வரைபடங்கள் தயாரிக்க உதவும் பழமையான விலைமதிப்பற்ற நில ஆவணங்களை பாதுகாக்கவும் உதவுகிறது. நவீன தொழில்நுட்பம் புகுத்தப்பட்ட 2007ஆம் ஆண்டில் தேவையான கணினிகள் / Scanners / Plotters / அச்சுப்பொறிகள் ஆகியவை நில ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

முன்பு வழங்கப்பட்ட கணினிகள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதால் ஆயுட் காலத்தையும் தாண்டி தற்போது அவற்றினை பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, நவீன தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் மத்திய நிலஅளவை அலுவலகத்திற்கு தேவையான வரைவி (Plotter), ஸ்கேனர், அச்சுப்பொறி மற்றும் கணினி ஆகியவை ரூ.0.59 கோடி மதிப்பீட்டில் 2018–2019ஆம் நிதியாண்டில் வழங்கப்படும்.

## 22. மாவட்ட மற்றும் மண்டல நில அளவை அலுவலகங்களை மேம்படுத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2007–2008ஆம் ஆண்டில் நிலஅளவை ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டம் நிலஅளவை துறையில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம், மாவட்ட மற்றும் மண்டல நில அளவை அலுவலகங்களில் முதற்கட்டமாக குறைந்த அளவில் கணினிகள் மற்றும் அதன் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அவற்றின் ஆயுட் காலம் அநேகமாக முடிந்துவிட்ட நிலையில் அவை செயலிழந்து வருகின்றன. எனவே, அவ்வலுவலகங்களில் உள்ள நிருவாகம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவை வலுவூட்டுவதற்காக அனைத்து மாவட்ட மற்றும் மண்டல நிலஅளவை அலுவலகங்களுக்கு தோராயமாக ரூ.1.6 கோடி மதிப்பீட்டில் 2018–2019ஆம் நிதியாண்டில் கணினிகள், அச்சுபொறிகள் தடையற்ற மின்சாரம் வழங்கும் கருவிகள் வழங்கப்படும்.

## 23. நிலவரித்திட்ட வட்டாட்சியர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் 3ஜி இணைய வசதி வழங்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில், அரசால், செயல்படுத்தப்பட்டு வரும் வருவாய் பின்தொடர் பணிகளில் பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் பணிகளுக்காகவும் தூய ஆவணங்களான தூய சிட்டா

மற்றும் ‘அ’ – பதிவேடு தயாரிக்கும் பணிகளுக்காகவும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் பணியாற்றி வரும் 78 நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர்களில் முதற்கட்டமாக 20 தனி வட்டாட்சியர்களுக்கு மடிக்கணினி, அச்சுப்பொறி மற்றும் 3ஜி தரவு அட்டைகள் ரூ.0.12 கோடி மதிப்பீட்டில் 2018–2019ஆம் நிதியாண்டில் வழங்கப்படும்.

**24. கிராம நிருவாக அலுவலர்களுக்கான கோட்ட/ வட்ட அளவிலான பொது மாறுதல்கள் மற்றும் மாவட்ட மாறுதல் கோரிக்கைகளை பெற்று பரிசீலனை செய்யும் ஒரு செயலியை** (Application) **ஏற்படுத்துதல்.**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கிராம நிருவாக அலுவலர்களின் கோட்ட / வட்ட அளவிலான பொது மாறுதல்களை ஆண்டுதோறும் மேற்கொள்ளவும், மேலும் மாவட்ட மாறுதல் மற்றும் மனமொத்த மாறுதல்கள் தொடர்பான கோரிக்கைகளை பரிசீலித்து இம்மாறுதல்களை இணையதள வழி மூலம் மேற்கொள்ள புதியதொரு மென்பொருள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**25. அருகருகே உள்ள மாவட்டங்களை மண்டலங்களாக ஒருங்கிணைத்து தகுதியுள்ள கிராம உதவியாளர்களுக்கு கிராம நிருவாக அலுவர்களாக பதவி உயர்வு வழங்குதல்**

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களின் ஆணையின்படி, அரசாணை நிலை எண் 570 வருவாய் (பணி –8(1) துறை நாள் 26.12.2014இன்) படி தகுதியுள்ள கிராம உதவியாளர்களுக்கு கிராம நிருவாக அலுவலர்களாக பதவி உயர்வு வழங்குவது தொடர்பான நேர்வில் ஒரு சில மாவட்டங்களில் கிராம உதவியாளர்களைக் கொண்டு பதவி உயர்வு மூலம் நிரப்ப நிர்ணயம் செய்யப்பட்ட பணியிடங்கள் காலியாகவும் சில மாவட்டங்களில் தகுதியுள்ள கிராம உதவியாளர்கள் பதவி உயர்வு பெற காலிப் பணியிடம் இன்றியும் உள்ள நிலை உள்ளது. இந்நேர்வுகளில், அருகருகே உள்ள மாவட்டங்களை மண்டலங்களாக ஒருங்கிணைத்து அந்தந்த மண்டலங்களில் உள்ள மாவட்டங்களில் தகுதியுள்ள கிராம உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட பின்னரும் காலியாக உள்ள பணியிடங்களில் 30 சதவீதம் பணியிடங்களை, அந்த மண்டலத்திலுள்ள பிற மாவட்டங்களில் பதவி உயர்வுக்காக காத்திருக்கும் தகுதியுள்ள கிராம உதவியாளர்களைக் கொண்டு நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்படும்.

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## சுற்றுலா

### மானியக் கோரிக்கை எண் 29

**1. பள்ளி மாணாக்கர்களுக்கு சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான உள்ளூர் சுற்றுலாவை ஏற்பாடு செய்தல்**

சுற்றுலாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சென்ற ஆண்டு பள்ளி மாணாக்கர்களுக்கு நடத்தப்பட்ட சுற்றுலா, அவர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளதால், இந்த ஆண்டும் பள்ளி மாணாக்கர்களுக்கு ஒரு நாள் சுற்றுலா சென்று வருவதற்கு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுற்றுலாத்துறை மூலம் மாவட்டம் ஒன்றிற்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் 64 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

**2. 2018ஆம் ஆண்டு உலக சுற்றுலா தின விழாவினை மதுரையில் (மாநில அளவில்) கொண்டாடுதல்**

தமிழக கலை, பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை கண்டுகளிக்க வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல்வேறு விழாக்கள் சுற்றுலாத் துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. உலக சுற்றுலா அமைப்பு

அறிவித்துள்ளவாறு செப்டம்பர் 27ஆம் நாள், உலக சுற்றுலா தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு உலக சுற்றுலா தின விழா, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநில அளவில் மதுரையில் கொண்டாட 25 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

**3. நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூம்புகார் சுற்றுலா வளாகத்தை பழுதுபார்த்து புதுப்பித்தல்**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பூம்புகார் சுற்றுலா வளாகம், பண்டைய காலத்தில் சோழர்களின் துறைமுகத் தலைநகரமாக விளங்கியது. சுற்றுலாத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள இந்த சுற்றுலா வளாகத்தில் அமைந்துள்ள சிலப்பதிகார கலைக்கூடம், மகர தோரண வாயில், அழகிய சிற்பங்களையும் பூங்காவையும் கொண்டுள்ள பாவை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், கொற்றப்பந்தல் முதலிய கலைமிகு படைப்புகள் கொண்ட நினைவுச் சின்னங்கள், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்த்து புதுப்பிக்கப்படும்.

**4. தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டையை பழுதுபார்த்து புதுப்பித்தல்**

இந்தியாவில், ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து முதல் வீரமுழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் அரசாண்ட

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் நினைவுக் கோட்டை கட்டப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் இந்த நினைவுக் கோட்டை வளாகம், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதுபார்த்து புதுப்பிக்கப்படும்.

**5. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் தமிழ்நாடு விடுதிகளில் கூடுதல் வசதிகள் செய்தல்**

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் வசதியாக தங்கிச் செல்ல முக்கிய சுற்றுலாத் தலங்களில் அனைத்து வசதிகளுடன் கூடிய தங்கும் விடுதிகள் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில், கிருஷ்ணகிரி, ஓசூர், ஒகேனக்கல், ஊட்டி, மதுரை–2, திருச்செந்தூர் மற்றும் கொடைக்கானல் ஆகிய தலங்களில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு விடுதிகளில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 41 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் செய்து தரப்படும்.

**6. சேலம் மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஏற்காடு படகு இல்லத்தில் கூடுதல் வசதிகள் செய்தல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் ஒன்பது படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு படகு இல்லத்தில் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, படகு குழாம் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**7. நீலகிரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பைக்காரா படகு இல்லத்தில் கூடுதல் வசதிகள் செய்தல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டில் ஒன்பது படகு இல்லங்கள் இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டத்திலுள்ள பைக்காரா படகு இல்லத்தில் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு மற்றும் நலன் கருதி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, படகு குழாமிலிருந்து படகு இல்லம் வரை கைப்பிடியுடன் கூடிய புதிய படிக்கட்டுகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் செய்யப்படும்.

# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## 10. வணிகவரிகள் மற்றும்

## 11. முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு

### மானியக் கோரிக்கை எண் 10 & 11

**1. விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகம் கட்டுதல்**

விருதுநகர் மாவட்டத்தில் உதவி ஆணையர் (வணிகவரி), இராஜபாளையம்–1, உதவி ஆணையர் (வணிகவரி), இராஜபாளையம்–2 மற்றும் வணிகவரி அலுவலர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகியோரது அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மூன்று அலுவலகங்களுக்கு அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த கட்டடம் கட்டப்பட வேண்டுமென வணிகப் பெருமக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் ரூ.196.90 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

**2. வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டுதல்**

வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் வணிகவரி அலுவலகத்தில் 2,045 பதிவுபெற்ற

வணிகர்கள் உள்ளனர். தனியார் கட்டடத்தில் செயல்படும் இவ்வலுவலகத்திற்கு அரக்கோணம் நகரின் மையப்பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை வணிகப் பெருமக்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வேலூர் மாவட்டம், அரக்கோணத்தில் வணிகவரி அலுவலர் அலுவலகம் ரூ.106.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**3. மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டட வளாகத்தில் உள்ள மூன்று மின்தூக்கிகளைப் புதுப்பித்தல்**

மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் 27 வணிகவரி அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்கு தினந்தோறும் பெருமளவு வணிகப் பெருமக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் வருகை புரிகின்றனர். இக்கட்டடத்தில் உள்ள பழமையான மின்தூக்கிகளில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதனை பயன்படுத்துவோர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, பழமையான மின்தூக்கிகளை அகற்றி, நவீன வசதிகளுடன் கூடிய மின்தூக்கிகள் அமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணைப்படி, மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில், ரூ.80.15 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று மின்தூக்கிகள் நிறுவப்படும்.

**4. சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவுக் கட்டடத்தில் உள்ள இரண்டு மின்தூக்கிகளைப் புதுப்பித்தல்**

சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவுக் கட்டடத்தில் வணிகவரித்துறை நிர்வாக அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வலுவலகங்களுக்கு வணிகப் பெருமக்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் பெருமளவில் வருகைபுரிகின்றனர். பழமையான மின்தூக்கிகள் அடிக்கடி பழுதடைகின்ற காரணத்தினால் வருகை தரும் வணிகப் பெருமக்களுக்கு அதிக சிரமம் ஏற்படுகிறது. எனவே பழமையான மின்தூக்கிகளை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவுக் கட்டடத்தில் உள்ள பழமையான இரண்டு மின்தூக்கிகள், ரூ.57.75 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மாற்றியமைக்கப்படும்.

**5. கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டட வளாகத்தில் உள்ள இரண்டு மின்தூக்கிகளைப் புதுப்பித்தல்**

கோவை வணிகவரி அலுவலக ஒருங்கிணைந்த கட்டடம் தரைதளம் மற்றும் நான்கு தளங்களை கொண்டுள்ளது. வணிகப் பெருமக்கள் இந்த அலுவலகங்களுக்கு அதிக அளவில் தினந்தோறும் வருகை புரிகின்றனர். இக்கட்டடத்தில் உள்ள பழமையான மின்தூக்கிகள் பழுதடைந்துள்ள காரணத்தினால் நவீன வசதியுடன் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோவை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வரும் இரண்டு மின்தூக்கிகள் ரூ.28.35 இலட்சம் மதிப்பீட்டில் நவீன வடிவமைப்புடன் புதுப்பிக்கப்படும்.

**6. பட்டுக்கோட்டை பதிவு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டுதல்**

பட்டுக்கோட்டை பதிவுத்துறை அலுவலகங்களுக்கு, ஆண்டுதோறும் தோராயமாக 25,000 பொதுமக்கள் ஆவணப் பதிவிற்காக வந்து செல்கின்றனர்.

அப்பகுதியில் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), இணை–1 மற்றும் இணை–2 சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுகின்றன.

இவ்வலுவலகங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நவீன முறையில் பாதுகாப்பதும், வலைதள பதிவிற்கு உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதும் அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.15 கோடி மதிப்பீட்டில், பட்டுக்கோட்டையில் புதிய ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டப்படும்.

**7. தென்காசி பதிவு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டுதல்**

தென்காசி பதிவுத்துறை அலுவலகங்களுக்கு, ஆண்டுதோறும் தோராயமாக 37,000 பொதுமக்கள் ஆவணப் பதிவிற்காக வந்து செல்கின்றனர்.

அப்பகுதியில் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), இணை–1 மற்றும் இணை 2 சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. இவ்வலுவலகங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நவீன முறையில் பாதுகாப்பதும், வலைதள பதிவிற்கு உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதும் அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.2.15 கோடி மதிப்பீட்டில், தென்காசியில் புதிய ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டப்படும்.

### 8. மாவட்டப் பதிவாளர் மற்றும் உயர் அலுவலர்களின் விரைவான தகவல் பரிமாற்றத்திற்கு மடிக்கணினிகள் வழங்குதல்

பொது மக்களிடமிருந்து வரப்பெறும் கோரிக்கைகள் மீது துரித நடவடிக்கை எடுக்க தகவல் பரிமாற்றம் மிகவும் இன்றியமையாததாகும்.

அதனைக் கருத்தில் கொண்டு, உடனுக்குடன் தகவல்களை துறை சார்ந்த அலுவலர்களுக்கு பரிமாற்றம் செய்வதற்கு ஏதுவாக 95 மாவட்டப் பதிவாளர்கள், 20 உதவி பதிவுத்துறைத் தலைவர்கள், 11 துணை பதிவுத்துறைத் தலைவர்கள் மற்றும் 4 கூடுதல் பதிவுத்துறைத் தலைவர்கள் ஆகிய 130 அலுவலர்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.81.76 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மடிக்கணினிகள் வழங்கப்படும்.

### 9. வங்கியில் பெற்ற கடனிற்காக சொத்துக்களை பிணையமாக வைத்து பதிவு செய்யப்படும் ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண உச்சவரம்பினை நிர்ணயித்தல்

சொத்துக்களின் மீது கடன்பெறும்போது, கடன் தொகைக்குப் பிணையமாக அச்சொத்துக்களின் மூல ஆவணங்களை வங்கிகளில் ஒப்படைத்து உடன்படிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வாறான உடன்படிக்கைகளுக்கு

மூன்று மாத காலத்திற்குட்பட்டு அல்லது அதற்கு மேற்பட்டு என இரு விதமாக முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வங்கி கடனிற்கு பிணையமாக வைத்து பதிவு செய்யப்படும் மூன்று மாத காலத்திற்குட்பட்ட மற்றும் அதற்கு மேற்பட்ட காலங்களுக்காக விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்திற்கு செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூ.30,000 ஆகவும் அதிகபட்ச பதிவு கட்டணம் ரூ.6,000 ஆகவும் நிர்ணயிக்கப்படும்.

# கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

## பால்வளம்

### மானியக் கோரிக்கை எண் 8

**1. ரூபாய் 60 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் இரண்டு 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொகுப்பு பால் குளிர்விப்பான்கள் நிறுவப்படும்**

சங்கங்களில் அதிகரித்துவரும் பால் கொள்முதலை எதிர்கொள்ளும் நோக்கத்துடனும், பாலின் ஆரம்ப தரத்தை பாதுகாக்கவும், பால் உற்பத்தியாளர்களின் வசதியை மேம்படுத்திடவும், 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு அலகு மொத்த பால் குளிர்விப்பான்கள், புதுக்கோட்டை மாவட்டம், கிள்ளனூர் மற்றும் நார்த்தமலை ஆகிய இரண்டு கிராமங்களில் ரூபாய் 60 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதன் மூலம் அப்பகுதியில் பெறப்படுகின்ற பாலின் தரம் உயர்த்தப்படும்.

**2. திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலையின் கையாளும் திறனை உயர்த்த, ரூபாய் 250 இலட்சம் செலவில் நவீன சவ்வூடு வடிகட்டும் தொழில் நுட்பத்தில் புதிய இயந்திரம் நிறுவப்படும்**

திருவண்ணாமலை பால் பண்ணை மற்றும் பால் பவுடர் தொழிற்சாலையின் திறனை நாளொன்றுக்கு 2 இலட்சம்

லிட்டரிலிருந்து 2.25 இலட்சம் லிட்டராக உயர்த்தவும் அதிநவீன தொழில் நுட்பத்தில் சவ்வூடு வடிகட்டும் முறையில் பால் பவுடர் தரத்தை அதிகரிக்கவும் மற்றும் செயலாக்கத் திறனை மேம்படுத்தவும் ரூபாய் 250 இலட்சம் செலவில் புதிய இயந்திரம் நிறுவப்படும். இதன் மூலமாக பால்பவுடரின் தரம் மற்றும் திறன் மேம்படுத்தப்படும்.

**3. ஈரோடு ஒன்றியத்தில் ரூபாய் 50 இலட்சம் செலவில் 50 மி.லி., 100 மி.லி. மற்றும் 200 மி.லி என்ற சிறிய அளவிலான சிப்பங்களில் நெய் நிரப்பும் நவீன தானியங்கி இயந்திரம் நிறுவப்படும்**

சென்னை பெருநகரம், இதர நகரங்கள் மற்றும் ஊரக பகுதிகளில் நெய் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் 50 மி.லி, 100 மி.லி. மற்றும் 200 மி.லி. என்ற சிறிய அளவிலான சிப்பங்களில் அடைத்து நுகர்வோர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, நுகர்வோர்களுக்கு பால் பொருட்கள் அனைத்து அளவுகளிலும் கிடைக்கச் செய்திடவும், விற்பனை உயர்வு மூலமாக ஒன்றியம் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் பயன்படும் நோக்கத்தில் ஈரோடு ஒன்றியத்தில் நவீன தானியங்கி நெய் நிரப்பும் இயந்திரம் ரூபாய் 50 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

**4. 17 மாவட்ட ஒன்றியங்களில் மேற்கொள்ளப்படும் கால்நடை பராமரிப்பு சேவை பணிகளை ஒருங்கிணைக்க ஏதுவாக சிறப்பு செயலி மென்பொருள் ஒன்று ரூபாய் 20 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்**

பால் உற்பத்தியாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்கள் பயன் பெறும் வகையில் ஆண்ட்ராய்டு அடிப்படையிலான செயலி ஒன்று உருவாக்கப்படும். இந்த மென்பொருள் செயலி மூலம் பால் உற்பத்தியாளர்கள், கன்று, பால்மாடு வளர்க்கும் முறைகள், ஒன்றியம் விவசாயிகளுக்கு அளித்துவரும் சேவைகள், கால்நடை சுகாதார சேவைகள் மற்றும் கால்நடை மருத்துவ பணிகளை ஒருங்கிணைக்க உதவும். இந்த ஆண்ட்ராய்டு அடிப்படையிலான செயலி ரூபாய் 20 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

**5. ரூபாய் 60 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 17 மாவட்ட ஒன்றியங்களிலுள்ள 34 பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் 341 தொகுப்பு பால் குளிர்விப்பான் நிலையங்களில் கண்காணிப்பு கேமரா (CCTV) நிறுவப்படும்**

தற்போது 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் நாளொன்றுக்கு 29 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 34 பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் 341 பால் மொத்த பால் குளிர்விப்பு நிலையங்களில் குளிர்வித்து பாதுகாக்கப்படுகிறது. தரமான பால் கொள்முதல் செய்வதை உறுதி செய்வதற்கு, எடைபோடுதல், பரிசோதனை செய்தல், பால் டேங்கர்களில் பாலை ஏற்றுதல் போன்ற நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

அதற்காக **341** மொத்த பால் குளிர்விப்பான்கள் மற்றும் **34** பால் குளிரூட்டும் நிலையங்கள் ஆகியவற்றில் ரூபாய் **60** இலட்சம் மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) நிறுவப்படும்.

**6. ரூபாய் 21 இலட்சம் செலவில் நீலகிரி, தருமபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட துணைப்பதிவாளர்களுக்கு (பால்வளம்) புதிய இலகு ரக வாகனம் வாங்கப்படும்**

பால் உற்பத்தியாளர்களுக்கான நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு மற்றும் சங்கங்களை பார்வையிடும் தினசரி பணிகளை மேற்கொள்வதற்கு துணைப்பதிவாளர் (பால்வளம்)களுக்கு வாகனங்கள் ஒதுக்கப்படுகின்றன. இந்த ஆண்டு நீலகிரி, தருமபுரி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் துணைப் பதிவாளர் (பால்வளம்)களின் பயன்பாட்டிற்கு, பழைய வாகனங்களுக்கு பதிலாக, **3** புதிய இலகு ரக வாகனங்கள் ரூபாய் **21** இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**7. ரூபாய் 10 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் பொது நிலை அலுவலர்களுக்கு கையடக்க கணினி வழங்கப்படும்**

நடுநிலை மற்றும் உயர்நிலை அலுவலர்களின் தினசரி செயல்பாடுகளில் தகவல் பரிமாற்றம் மிக முக்கியப் பங்காற்றுகிறது. இணையம் மற்றும் 17 மாவட்ட ஒன்றியங்களில் பொதுநிலை அலுவலர்களாக, உதவி பொதுமேலாளர்கள், துணைப் பொதுமேலாளர்கள் மற்றும் பொது மேலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தினசரி நடவடிக்கைகளான பால் கொள்முதல், பால் விற்பனை, பால் வண்டிகளின் இயக்கம் போன்றவற்றின் மீதான கண்காணிப்பு அமைப்பை செழுமைபடுத்தும் வகையில் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணியாற்றி வரும் பொது நிலை அலுவலர்களான துணை பொது மேலாளர்கள் மற்றும் பொதுமேலாளர்களுக்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் கையட க்க கணினி வழங்கப்படும்.

**8. 300 பாலகங்கள் மற்றும் சில்லறை விற்பனையகங்களில் பால் மற்றும் பால் உபபொருட்கள் நுகர்வோர்களுக்கு எந்நேரமும் கிடைக்கும் வகையில் பாட்டில் குளிர்விப்பான்கள் மற்றும் ஆழ் உறைவிப்பான்கள் ரூபாய் 150 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்**

இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனையை அதிகரிக்க அதிக அளவு எண்ணிக்கையில் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. விற்பனை நிலையங்களில் பால் பொருட்கள் கெடாவண்ணம் சேமித்து வைக்க சேமிப்பு உபகரணங்கான ஆழ்உறைவிப்பான்கள், பாட்டில் குளிர்விப்பான்கள் வழங்கப்படுகின்றன.

சேமிப்பு வசதிகளை அளிக்கும் நோக்கில் அதிக விற்பனை செய்யும் 300 விற்பனை நிலையங்களுக்கும் 225 லிட்டர் கொள்ளளவு கொண்ட பாட்டில் குளிர்விப்பான்களும், ஆழ் உறைவிப்பான்களும் (ஃப் பிரீசர்) ரூபாய் 150 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**9. 17 மாவட்ட ஒன்றியங்களை சார்ந்த 30 முன்னணி பால் உற்பத்தியாளர்கள் பால் உற்பத்தி தொழில் வளர்ச்சிக்கான அறிவியல் ரீதியிலான பால் தொழில்நுட்ப முறைகளை கற்றுக்கொள்ள அயல்நாட்டிற்கு ரூபாய் 30 இலட்சம் செலவில் அழைத்துச் செல்லப்படுவர்**

பால் உற்பத்தி தொழிலின் வளர்ச்சிக்கு கறவை மாட்டின் பால் உற்பத்தியை அதிகரிக்க தேவையான நவீன தொழில் நுட்பங்களை அறிதல், தீவன சாகுபடியில் உயர்வு, பால் உற்பத்தியில் செலவு குறைப்பு, பால் பதப்படுத்தும் தொழில் நுட்பத்தில் செலவின குறைப்பு ஆகியவை முக்கிய பங்கு வகிக்கிறது. பால்பண்ணை தொழில் பற்றிய நவீன தொழில்நுட்பங்கள் குறித்த அறிவை வளர்த்துக் கொள்ள 30 முன்னனி பால் உற்பத்தியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.30 இலட்சம் செலவில் அயல் நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

**10. விழுப்புரம் ஒன்றியத்தில், குல்ஃபி ஐஸ்கிரீம் தயாரிக்கும் வசதிகள் மற்றும் குளிர்பதன வசதிகளின் தரம் உயர்த்த ரூ.100 இலட்சம் செலவிடப்படும்**

விழுப்புரம் ஒன்றியத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட குளிர்பதன அமைப்பின் தரத்தை உயர்த்தி, பயனுள்ள முறையில் இயக்கி பாலின் தரத்தை பாதுகாக்க வேண்டியுள்ளது. மேலும், மதிப்புக்கூட்டும் பொருட்களான குல்ஃபி ஐஸ்கிரீம் தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டு விற்பனை அதிகரிக்கப்படவுள்ளது.

எனவே, விழுப்புரம் ஒன்றியத்தில் குளிரூட்டும் அமைப்புகளின் தரத்தை மேம்படுத்தவும், குல்ஃபி ஐஸ்கிரீம் தயாரிக்கும் வசதிகளை ஏற்படுத்தவும் ரூ.100 இலட்சம் செலவிடப்படும்.

**11. ரூபாய் 288 இலட்சம் மொத்த மதிப்பீட்டில், மாவட்ட ஒன்றியங்களில் உள்ள பயன்படுத்தபடாத நிலப்பரப்பில் பசுந்தீவன சாகுபடி செய்யப்படும். இது தவிர, அசோலா & ஹைட்ரோ போனிக்ஸ் போன்ற அமைப்பிற்குரிய உபகரணங்கள் வழங்கப்படும்**

கால்நடைகளின் ஆரோக்கியத்தை பராமரிக்கவும், கறவை மாடுகளின் தீவன செலவை குறைக்கவும் பால் கறவை மாடுகளுக்கு தீவனம் வழங்குவது அத்தியாவசியமாகும்.

கறவை மாடுகளுக்கு தேவையான பசுந்தீவனம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் ரூ.288 இலட்சம் செலவில், ஈரோடு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியத்தில் 70 ஏக்கர் நிலத்தில் பசுந்தீவன சாகுபடி செய்யப்படும். மேலும் அசோலா & ஹைட்ரோ போனிக்ஸ் உபகரணங்கள் வழங்கப்படும்.

**12. தருமபுரி ஒன்றியத்தில் பால் பதப்படுத்தும் இயந்திரம், புதிய குளிர்பதன அமைப்பு மற்றும் கொதிகலன் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்**

தருமபுரி ஒன்றியத்தின் தற்போதைய பால் கொள்முதல் நாளொன்றுக்கு 2.22 இலட்சம் லிட்டராக உள்ளது. இவ்வொன்றியத்தில் நிறுவப்பட்டுள்ள இயந்திரங்கள் மிகவும்

பழையதாகவுள்ளதால் இவை மாற்றப்பட வேண்டும். எனவே, கூடுதல் பால் கொள்முதலை கையாளவும், பால் பதப்படுத்தும் திறனை அதிகரிக்கவும் பால் பதப்படுத்தும் இயந்திரங்கள், குளிர்பதன அமைப்பு மற்றும் கொதிகலன் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் தருமபுரி ஒன்றிய பால்பண்ணையில் ரூ.300 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**13. 17 மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் 4 மாநகர பால் பண்ணைகளின் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் ரூபாய் 5 கோடியே 70 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்**

பால் மற்றும் பால் உபபொருட்கள் நுகர்வோரை சென்றடையும் முன் மாவட்ட ஒன்றியங்கள் மற்றும் மாநகர பால்பண்ணைகளில் உள்ள தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களில் பல்வேறு தர பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களை புதுப்பிக்கவும் நவீனமயமாக்கவும் புதிய நவீன பகுப்பாய்வு கருவிகளும் நிறுவப்பட வேண்டியுள்ளது. மில்கோ ஸ்கேன், மில்கோ ஸ்கிரீன், ஹாட் ஏர் ஓவன், இன்குபேட்டர், மாய்சர் அனலைசர், பி.எச்.மீட்டர், ஆட்டோ கிளேவ் போன்ற கருவிகள் தலா ரூ.35 இலட்சம் செலவில் ஆறு மாவட்டங்களிலும், தலா ரூ.20 இலட்சம் செலவில் 11 மாவட்டங்களிலும், தலா ரூ.35 இலட்சம் செலவில் 4 பெருநகர பால்பண்ணைகளிலும் மொத்தம் ரூ.5.70 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

## 14. ரூபாய் 7.50 கோடி செலவில் 500 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் தானியங்கி பால் பரிசோதனை அலகுகள் வழங்கப்படும்

தானியங்கி பால்சேகரிப்பு நிலையம் ஒரு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த அலகு ஆகும். இது பால்சேகரிப்பு மையத்தின் பல செயல்பாடுகளை ஒன்றிணைக்கிறது. இது பால் உற்பத்தியாளர் வழங்கும் பாலின் அளவு, கொழுப்பு / கொழுப்பு அல்லாத இதரசத்து அடிப்படையில் ஒவ்வொரு பால் உற்பத்தியாளர் வழங்கிய பாலிற்கான விலை கணக்கிடப்படும். இந்த கருவி குறிப்பாக பால் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பால் சேகரிப்பு நிலையங்களுக்கு பயனுள்ளதாக இருப்பதோடு பெறப்பட்ட பால் விவரங்களின் சுருக்கத்தினை பராமரிக்கும். இந்த கருவி மின்கலம் மற்றும் மின்சாரம் ஆகிய இரண்டிலும் இயங்குவதுடன் 1 மணி நேரத்துக்கு 50 முதல் 60 பால் மாதிரிகளை பரிசோதித்து பதிவு செய்யும்.

பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி பாலின் தரத்தின்அடிப்படையில் உரிய விலை கிடைத்திடவும், பால் அளவு, தரம் மற்றும் கொள்முதல் விலை போன்ற விபரங்கள் கிடைக்க செய்திடவும், நாளொன்றுக்கு 300 லிட்டருக்கு அதிகமாக கொள்முதல் செய்யப்படும் 500 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு தானியங்கி பால் கொள்முதல் அலகுகள் மொத்தம் ரூபாய் 7.50 கோடி செலவில் வழங்கப்படும்.

**15. ரூபாய் 5 கோடி செலவில் அம்பத்தூரிலுள்ள பால் பண்ணையில் பனீர், பால்பேடா, குல்ஃபி மற்றும் ஐஸ்கிரீம் ஆகிய பால் உப பொருட்கள் பேக்கிங் செய்யும் தானியங்கி மற்றும் நவீன சிப்பங்கட்டும் இயந்திரங்கள் நிறுவப்படும்**

அம்பத்தூர் பால் உபபொருட்கள் பண்ணையில் ஐஸ்கிரீம், பால்கோவா, பனீர், பால்பேடா, குல்ஃபி, லஸ்ஸி மற்றும் தயிர் போன்ற பால் உப பொருட்கள் தயாரிக்கப்பட்டு, மாநகர நுகர்வோர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. பால் உபபொருட்கள் விற்பனை ஊக்கமளிப்பதோடு நுகர்வோர் ஆதரவும் பெருகி வருகிறது. எனவே அம்பத்தூர் பால் பொருட்கள் பண்ணையில் சிப்பங்கட்டும் திறனை அதிகரிக்க ரூ.5 கோடி மொத்த மதிப்பிட்டில், தானியங்கி ஐஸ்கிரீம் பேக்கிங் இயந்திரங்கள் மற்றும் பனீர் பேக்கிங் இயந்திரங்கள் நிறுவப்படும்.

**16. அதிக கொள்ளளவு கொண்ட கொதிகலன்கள், மின்மாற்றிகள், மின் உபகரணங்கள், குளிர்பதன சேமிப்பு வசதிகள், சுத்தம் செய்யும் இயந்திரங்கள் மற்றும் ஐஸ்கிரீம் உறைகலன்கள் அம்பத்தூர் பால் உபபொருட்கள் பண்ணையில் ரூபாய் 6 கோடி செலவில் அமைக்கப்படும்**

அம்பத்தூர் பால் உபபொருட்கள் பண்ணையில், ஐஸ்கிரீம், பனீர், குல்பி, சுவையூட்டப்பட்ட தயிர், மற்றும் பால் இனிப்புகள் தயாரிக்கப்படுகிறது. நுகர்வோர் மத்தியில் ஆவின் பால் உபபொருட்களுக்கு அதிக வரவேற்பு உள்ளது.

அதிகரித்து வரும் நுகர்வோர்களின் தேவையை ஈடு செய்ய தற்போதுள்ள கொதிகலன்கள், தானியங்கி சுத்தம் செய்யும் இயந்திரம், மின்மாற்றிகள், மின்சாதன உபகரணங்கள் மற்றும் சேமிப்பு வசதிகளை தரம் உயர்த்தி, திறனை மேம்படுத்துவதற்கு

அதிக திறனுள்ள கொதிகலன்கள், தானியங்கி சுத்தம் செய்யும் இயந்திரங்கள், மின்மாற்றி மற்றும் மின்சார உபகரணங்கள் ரூபாய் 6 கோடி செலவில் அமைக்கப்படும்.

**17. கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு அலுவலகக் கட்டடம் ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் உருவாக்கப்படும்**

பால் உற்பத்தியாளர்கள் பயன் பெறும் வகையிலும், பால் உற்பத்தி மற்றும் பால் கொள்முதலை அதிகரிக்கும் வகையிலும், ஒரு புதிய அலுவலகக் கட்டடம் கன்னியாகுமரி ஒன்றியத்தில் அமைந்துள்ள தோவாளை சங்கத்திற்கு ரூபாய் 21 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

இச்சங்கம் 1961ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. நாளொன்றுக்கு சுமார் 500 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த சங்கத்தின் பால் உற்பத்தியாளர்களிடம் சுமார் 361 கறவை மாடுகள் உள்ளன. இச்சங்கத்தின் நிதிநிலையானது திருப்திகரமாக உள்ளது. ஆண்டுதோறும் பால் வழங்கும் உறுப்பினர்களுக்கு போனஸ் வழங்கப்படுகிறது.

தற்போதுள்ள தோவாளை சங்கக்கட்டடம் மிகவும் பழுந்தடைந்துள்ளதால், ஒரு புதிய கட்டடம் கட்ட வேண்டியது அவசியமாகும். இதன் மூலம் பால் உற்பத்தி அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

எனவே, தோவாளை சங்கத்திற்கு 1,000 சதுர அடி அளவில் ஒரு புதிய சங்கக் கட்டடம் ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**18. விருதுநகர் ஒன்றியத்தில் வெண்ணெய், நெய், பனீர் மற்றும் இந்திய வகை இனிப்புகள் தயாரிக்க ஏதுவாக புதிய பால் பொருட்கள் தயாரிக்கும் ஆலை ஒன்று ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.**

விருதுநகர் ஒன்றியம் தற்போது நாளொன்றுக்கு 18 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகிறது இவ்வொன்றியத்தின் கையாளும் திறன் நாளொன்றுக்கு 50 ஆயிரம் லிட்டர் ஆகும். கொள்முதல் செய்யப்படும் பால் முழுமையும் சென்னைக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. விருதுநகர் ஒன்றியம் இலாபம் ஈட்டும் வகையில், கொள்முதல் செய்யப்படும் பால் மற்றும் பிற ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் பாலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களான வெண்ணெய், நெய், பனீர், பால்கோவா, இந்திய குலாப்ஜாமூன், ரசகுல்லா போன்ற இந்திய இனிப்பு வகைகள் தயாரித்து மாநகர மற்றும் பிற ஒன்றியங்கள் மூலம் விற்பனை செய்யப்படும்.

வெண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம், நெய் தயாரிக்கும் இயந்திரம், நவீன சிப்பம் கட்டும் இயந்திரங்கள், குலோப் ஜாமூன், ரசகுல்லா, பால் கோவா தயாரித்து சிப்பம் கட்டும் நவீன இயந்திரங்கள், பொருள் சேமிப்பு கிட்டங்கி, குளிர்பதன கிட்டங்கிகள் ஆகியவற்றுடன் கூடிய புதிய பால் பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலை ரூ.10 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் ஒன்றியத்தில் அமைக்கப்படும்.

# ஊரகத் தொழில் துறை

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

### மானியக் கோரிக்கை எண் 44

**1. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சர்வதேச தரச்சான்றிதழ் பெற செலுத்தும் கட்டணங்களை ஈடு செய்யும் திட்டம்**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சர்வதேச போட்டித்தன்மையினை மேம்படுத்தவும், உலகளாவிய சந்தையுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு ஏதுவாகவும், இந்நிறுவனங்கள் ISO 9001 / ISO 14001 / HACCP / BIS / ZED உள்ளிட்ட சர்வதேச தரச்சான்றிதழ்கள் பெற செலுத்தும் கட்டணத்தில் ஒவ்வொரு சான்றிதழுக்கும் 100 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.1 இலட்சம் வரை ஈடு செய்யும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி செயல்படுத்தப்படும். இந்நிதியாண்டில், இத்திட்டத்தினை ரூ. 200 இலட்சம் நிதியுடன் செயல்படுத்தப்படும்.

**2. திருவாரூர் மாவட்டத்தில் தென்னை நார் மற்றும் நார் அட்டை உற்பத்தி செய்யும் பொது வசதி மையம் அமைத்தல்**

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களில் தென்னை மரங்கள் அதிக அளவில்

உள்ளபடியால், இப்பகுதியில் கயிறு சார்ந்த தொழில்கள் அமைப்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

எனவே, திருவாரூர் மாவட்டத்தில் SFURTI திட்டத்தின் கீழ், ரூ.500 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் கயிறு குழுமம் ஒன்று உருவாக்கி, குழும உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் தென்னை நார் மற்றும் நார் அட்டை தயாரிக்கும் ஒரு பொது வசதி மையம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி அமைக்கப்படும்.

### 3. சென்னை மாவட்டத்திலுள்ள வியாசர்பாடி கூட்டுறவு தொழிற்பேட்டையில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்

சென்னை மாவட்டத்திலுள்ள வியாசர்பாடி கூட்டுறவு தொழிற்பேட்டையானது 100 உறுப்பினர்களுடன் ரூ.12.83 இலட்சம் பங்கு மூலதனமாக கொண்டு 30.30 ஏக்கர் பரப்பளவில் 69 மேம்படுத்தப்பட்ட மனைகள், 55 தொழிற்கூடங்களுடன் செயல்பட்டு வருகிறது. டிசம்பர் 2015இல் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தில் தொழிற்பேட்டையின் உட்கட்டமைப்பு பெருமளவில் சேதமடைந்துள்ளது.

எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இக்கூட்டுறவு தொழிற்பேட்டையின் சாலை, கழிவு நீர் வடிகால் வசதி, தெரு விளக்குகள் போன்ற அடிப்படை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ரூ.40 இலட்சம் செலவில் அரசு நிதி உதவியாக பெற்று உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

**4. சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வகத்தில் (MICAL) செயல்படும் ஆய்வுக்கூடத்தை தரம் உயர்த்தி நவீனப்படுத்திடல்.**

MICAL என அழைக்கப்படும் சென்னை தொழிற் கூட்டுறவு பகுப்பாய்வகம் 315 உறுப்பினர்களுடன் ரூ.4.75 இலட்சம் பங்கு மூலதனமாகவும் அரசு பங்கு மூலதனமாக ரூ. 21 இலட்சம் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் 4,800 சதுரஅடி பரப்புள்ள சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

டிசம்பர் 2015இல் ஏற்பட்ட பெரும் மழை வெள்ளத்தில் இச்சங்கத்தின் உபகரணங்கள் பெருமளவில் சேதமடைந்து பழுதடைந்த நிலையில் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இச்சங்க உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் உயிர் காக்கும் மருந்துகளை தரமான முறையில் பரிசோதனை செய்வதை உறுதி செய்யும் பொருட்டு ரூ.25 இலட்சம் அரசு நிதி உதவியுடன் பழுதடைந்த உபகரணங்களை மாற்றி நவீனப்படுத்தப்படும்.

**5. சேலம் மாவட்டத்திலுள்ள சேகோசர்வ் சங்கத்தின் ஆய்வகத்திற்கு NABL அங்கீகாரம் பெற உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் வாங்குதல்.**

அதிகப்படியான விலையினை சேகோ உற்பத்தியாளர்களுக்கு நிர்ணயம் செய்திடவும், கிடங்கு வசதியினை மேம்படுத்தி நல்ல வியாபார சந்தையினை

உருவாக்கிடவும் சேலம் ஸ்டார்ச் மற்றும் சேகோ உற்பத்தியாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கமானது **1981**ஆம் ஆண்டு சேலத்தில் தொடங்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேகோசர்வ் சோதனை கூடத்தின் தரத்தினை உயர்த்தி NABL அங்கீகாரம் பெற்றிடும் வகையில், ஆய்வுக்கூடத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி புதிய உபகரணங்கள் கொள்முதல் செய்திட, சங்கத்தின் சொந்த நிதியிலிருந்து ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**6. திருச்சி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு சிறப்பு மகளிர் காவலர் பனியன் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவு சங்கத்திற்கு தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்.**

தமிழ்நாடு சிறப்பு காவலர் பெண்கள் பனியன் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவு சங்கம் **08.06.1977**ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு **06.07.1977** அன்று முதல் தமிழ்நாடு காவலர் குடும்பத்தைச் சேர்ந்த **25** பெண் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. இச்சங்கமானது காட்டன் பனியன்கள் **(12S)** தயாரித்து காவல் துறைக்கு வழங்கி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இச்சங்கத்தில் புதியதாக **40"** மற்றும் **42"** அளவிலான பனியன்கள் தயாரிக்க அரசு நிதி உதவியுடன் ரூ.**18** இலட்சம் மதிப்பீட்டில் **9** பின்னலாடை தையல் இயந்திரங்கள் நிறுவப்படும்.

**7. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கன்னியா அச்சு சேவை தொழிற் கூட்டுறவு சங்கத்தின் கட்டடத்தை புனரமைத்தல்.**

கன்னியா அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம், 70 உறுப்பினர்களை கொண்டு ரூ.96,065 பங்கு தொகையுடன் இயங்கி வருகிறது. இச்சங்கம் அரசு துறைகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பஞ்சாயத்து அலுவலகங்கள் போன்றவற்றிற்கு தேவைப்படும் அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை விநியோகித்து அதன் மூலம் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கி வருகிறது.

இச்சங்கத்தின் கட்டடம் பழுந்தடைந்த நிலையில் உள்ளதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அதனை சீரமைத்திட ரூ.8 இலட்சம் அரசு நிதி உதவியுடன் கட்டடம் புதுப்பிக்கப்படும்.

# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

## மானியக் கோரிக்கை எண் 32

**1. பணியின்போது விபத்து ஏற்பட்டு பணியிடத்தில் மரணமடையும் (death at worksite) பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ.5,00,000 உதவித்தொகை, பணியின் போது விபத்து ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மரணம் அடைபவர்களுக்கும் வழங்கப்படும்.**

பதிவு பெற்ற மற்றும் பதிவு பெறாத கட்டுமானத் தொழிலாளர்கள் பணியின் போது விபத்து ஏற்பட்டு பணியிடத்தில் மரணமடையும் நேர்வில் (death at worksite), உதவித்தொகையாக 5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. பணியிடத்தில் நிகழ்ந்த விபத்தில் சிக்கிய கட்டுமானத் தொழிலாளர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மரணமடைந்தால் மேற்கண்ட உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பணியிடத்தில் நிகழ்ந்த விபத்தில் சிக்கிய கட்டுமானத் தொழிலாளர், பணியிடம் தவிர்த்து, மருத்துவமனையில் சிகிச்சையின் போது சிகிச்சை பலனின்றி மரணமடைந்தாலும், அத்தொழிலாளர் குடும்பத்திற்கு 5 இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும்.

**2. தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 60 வயது பூர்த்தி அடைந்து ஓய்வூதியம் பெறும் கட்டுமானத் தொழிலாளர் இறந்து விட்டால், அவரது கணவர் / மனைவிக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் ரூ.400லிருந்து ரூ.500ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்து 60 வயது பூர்த்தியடைந்த கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. வாரியத்தில் பதிவு செய்துள்ள 60 வயது பூர்த்தியடையாத பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளி, நோய் மற்றும் உடல் பலமின்மை காரணமாக முடக்கம் ஏற்பட்டால் அவரும் ஓய்வூதியம் பெற தகுதியானவர் ஆவர்.

மாதாந்திர ஓய்வூதியம் பெறும் கட்டுமானத் தொழிலாளர் இறந்து விட்டால் அவரது கணவர் / மனைவிக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.400 தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையானது நடைமுறையில் உள்ள வாழ்க்கைச் செலவிற்கு போதுமானதாக இல்லை என்பதால், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேற்படி குடும்ப ஓய்வூதிய தொகையினை ரூ.400லிருந்து ரூ.500ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**3. தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் வழங்கப்படும் ஈமச்சடங்கு உதவித் தொகை ரூ.2,000லிருந்து ரூ.5,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தொழிலாளர் நல நிதி செலுத்தும் தொழிலாளர் அவரது பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் அன்னாரது ஈமச்சடங்கு செலவிற்காக உதவித்தொகை ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது. தற்போது உயர்ந்துள்ள விலைவாசியின் அடிப்படையில் இந்த ஈமச்சடங்கு உதவித் தொகை, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.2,000லிருந்து ரூ.5,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**4. 18 மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களில் மாற்றுதிறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் உருவாக்கப்படும்.**

வேலைவாய்ப்புதுறையின் கீழ், மாற்றுதிறனாளிகளுக்கென ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் சென்னையில் இயங்கி வருகிறது. மேலும் 13 மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு வேலைவாய்ப்பு பிரிவுகள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2018–2019ஆம் ஆண்டில், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி,

திருப்பூர், கரூர், அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், சிவகங்கை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, விழுப்புரம், திருவண்ணாமலை, திண்டுக்கல், இராமநாதபுரம், தேனி, விருதுநகர், திருவள்ளூர் ஆகிய 18 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகளை மேம்படுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள் அமைக்கப்படும்.

**5. இணையதளம் வாயிலாக தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய தொழிற்தேர்வு நடத்தப்படும்.**

தமிழகம் முழுவதிலும் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் 65,000 பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய தொழிற்தேர்வு ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மற்றும் ஜூலை மாதங்களில் நடத்தப்படுகிறது. இத்தேர்வினை ஏற்பாடு செய்வதில் உள்ள சிரமங்களைக் களையும் பொருட்டும், விரைவாக தேர்வு முடிவுகளை அறிவித்து பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் பொருட்டும் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இனி வரும் காலங்களில் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு அகில இந்திய தொழிற் தேர்வு, இணையதளம் வாயிலாக நடத்தப்படும். இதற்கென பயிற்சியாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் நிதி 3.38 கோடி ரூபாயும், அரசு சார்பில் 3.12 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 6.50 கோடி ரூபாய் வருடத்திற்கு செலவாகும்.

**6. அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு கருத்தியல் பாடங்கள் கணினிவழியில் (e-Content) பயிற்சியளிக்கப்படும்.**

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பிட்டர், மெசினிஸ்ட், மோட்டார் வாகனம், எலெக்ட்ரிசியன், வெல்டர், டர்னர், கோபா, கார்பெண்டர், டிராப்ட்ஸ்மென் சிவில், எலெக்ட்ரானிக் மெக்கானிக், மெக்கானிக்டீசல், பிளம்பர், சர்வேயர், டிராப்ட்ஸ்மென் மெக்கானிக் ஆகிய 14 தொழிற்பிரிவுகளில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு தொழில் சார்ந்த கருத்தியல் பாடங்களை அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் முப்பரிமாண செயல்முறையின் மூலம் நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1.27 கோடி ரூபாய் செலவில் கணினி வழியான பாடங்கள் (e-Content) கொள்முதல் செய்யப்பட்டு அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.

**7. பயிற்றுநர்களின் பணிக்காலம் பயிற்சி ஆண்டு இறுதி வரை நீட்டிப்பு செய்யப்படும்.**

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும்‘ இளநிலை மற்றும் உதவி பயிற்சி அலுவலர்கள் பயிற்சி காலத்தின் இடையிலேயே ஒய்வுபெறுவதால் பயிற்சியாளர்களின் பயிற்சி பாதிக்கப்படுகிறது. இதனைக் களையும் பொருட்டு, பள்ளிக் கல்வித் துறையில் கடைபிடிக்கப்படுவது போல மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்

ஆணையின்படி, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றி ஓய்வு பெறும் பயிற்றுநர்களின் பணிக்காலம் பயிற்சி ஆண்டு முடிவடையும் வரையில் பணி நீட்டிப்பு செய்யப்படும்.

**8. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சி பிரிவு அதிகாரிகளுக்கு CUG கைப்பேசி இணைப்புவசதி வழங்கப்படும்.**

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் திறன் பயிற்சி நிறுவனங்களை திறம்பட நிர்வகிக்கவும், கண்காணிக்கவும் தகவல்களை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளவும், திட்டங்களை விரைவாக செயல்படுத்திட பயிற்சித்துறையின் பயிற்சி பிரிவில் உள்ள அதிகாரிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, **9.34** இலட்சம் ரூபாய் செலவில் CUG கைபேசி இணைப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.

**9. தொழிற்பயிற்சி நிலையங்களுக்கிடையே மண்டல மற்றும் மாநில விளையாட்டு போட்டிகள் மாநில அரசின் பங்களிப்புடன் நடத்தப்படும்.**

அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் பங்கேற்கும் மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இனிவரும் காலங்களில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் மாநில அரசின் பங்களிப்புடன் நடத்தப்படும். இதற்கு வருடந்தோறும்

17 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரைப் போல் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களும் மாநில அளவிலும், அகில இந்திய அளவிலும் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கு இதன் மூலம் வழி வகை செய்யப்படும்.

**10. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் அழைப்பின் பேரில் சேவை பொதுமக்களுக்கு வழங்கிட கைபேசி செயலி** (Mobile App) **உருவாக்கப்படும்.**

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வெற்றிகரமாக பயிற்சி முடித்து செல்லும் பயிற்சியாளர்கள் தாங்கள் பெற்ற திறன்களை வெளிப்படுத்தும் விதமாகவும், அவர்கள் உடனே சுய தொழில் துவங்க ஏதுவாகவும் அவர்களது விருப்பத்திற்கேற்ப அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தங்களை பதிவு செய்து கொண்டு தங்கள் தொழில் சார்ந்த சேவையை அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு நியாயமான கட்டணத்தில் வழங்கலாம். இதனை செயல்படுத்தும் விதமாக மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூ.2 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு கைபேசி செயலி உருவாக்கப்படும். இந்த செயலி மூலம் பொது மக்களிடம் இருந்து வரப்பெறும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான தேவைகளை பயிற்சி முடித்த பயிற்சியாளர்கள் மேற்கொள்வார்கள். இது அவர்கள் படித்து முடித்த உடனேயே சுயதொழில் செய்ய ஒரு தொடக்கமாக இருக்கும்.

**11. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.**

தமிழகத்தில் உள்ள 88 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் **31,298** பயிற்சியாளர்கள் பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இப்பயிற்சியாளர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளிக்கும் பொருட்டும், கண்காணிக்கும் பொருட்டும் இவர்கள் அனைவருக்கும் **7.05** இலட்சம் ரூபாய் செலவில் அடையாள அட்டை வழங்கப்படும்.

**12. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்று தருவதற்கென பணியமர்த்தும் அலுவலர்கள்** (Placement) **நியமிக்கப்படுவர்.**

தமிழகத்தில் உள்ள **88** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் **31,298** பயிற்சியாளர்கள் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவரையும் அவர்கள் பயின்ற தொழிற்பிரிவுகளுக்கு ஏற்ற வேலைவாய்ப்புகளைக் கண்டறிந்து, தொழிற்சாலைகளில் பணியமர்த்தும் வகையில் அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும், ஏற்கனவே அப்பயிற்சி நிலையத்தில் பணியாற்றும் பயிற்சி அலுவலர் (Training Officer) நிலையில் உள்ள ஒரு அலுவலர் வீதம் மொத்தம் **88** பயிற்சி அலுவலர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பணியமர்த்தும் அலுவலர்களாக (Placement officer) நியமிக்கப்படுவர்.

**13. தமிழகத்தில் உள்ள மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஒசூர், சிவகாசி ஆகிய 6 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு புறஒலி** (Ultrasound) **கருவி வழங்கப்படும்.**

தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நலம் பெறும் வகையில் தமிழகத்தில் உள்ள மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஒசூர், சிவகாசி ஆகிய 6 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புறஒலி (Ultrasound) கருவி வழங்கப்படும். இதன் மூலம் 3 இலட்சத்து 48 ஆயிரத்து 548 காப்பீட்டாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடைவார்கள்.

**14. 7 புதிய அவசர மருத்துவ ஊர்திகள்** (Ambulance) **மற்றும் 4 மருந்து இடம் மாற்றும் ஊர்திகள் வழங்கப்படும்.**

தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரை அவசர காலத்தில் உயிர்காக்கும் வகையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லவும், அவர்களுக்கு தேவையான மருந்துகளை உரிய மருந்தகங்களில் சேர்க்கவும், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் 7 அவசர ஊர்திகளும் (Ambulance), 4 மருந்து இடம் மாற்றும் ஊர்திகளும் வழங்கப்படும். இதன் மூலம் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 909 காப்பீட்டாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடைவார்கள்.

**15. தமிழகத்தில் உள்ள சேலம், வேலூர், திருச்சி, ஓசூர், சிவகாசி ஆகிய 5 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு** Fully Automated Analyzer **வழங்கப்படும்.**

நோயாளிகளுக்கு 1 மணி நேரத்தில் 150 பரிசோதனைகள் செய்யும் திறன் கொண்ட Fully Automated Analyzer என்ற மருத்துவ சாதனம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 40 இலட்சம் ரூபாய் செலவில் சேலம், வேலூர், திருச்சி, ஓசூர், சிவகாசி ஆகிய 5 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும். இதன் மூலம் 2 இலட்சத்து 28 ஆயிரத்து 909 காப்பீட்டாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடைவார்கள்.

**16. அயனாவரம், மதுரை மற்றும் சேலம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு மூட்டு அறுவை சிகிச்சை செய்ய** Arthroscope **கருவிகள் வழங்கப்படும்.**

தொழிலாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் மூட்டு அறுவை சிகிச்சை பெறுவதற்கு அயனாவரம், மதுரை, சேலம் ஆகிய 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 60 இலட்சம் ரூபாய் செலவில் Arthroscope கருவிகள் வழங்கப்படும். இதன் மூலம் 5 இலட்சத்து 2 ஆயிரத்து 582 காப்பீட்டாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடைவார்கள்.

**17. அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு** Rigid Nasal Endoscope with camera and TV Unit **வழங்கப்படும்.**

தொழிலாளர்கள் நலனை கருத்தில் கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 13 இலட்சம் ரூபாய் செலவில் மூக்கு மற்றும் தொண்டையினை கேமரா மூலம் கண்காணித்து அறுவை சிகிச்சை செய்ய Rigid Nasal Endoscope with camera and TV Unit அயனாவரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைக்கு வழங்கப்படும். இதன்மூலம் 3 இலட்சத்து 22 ஆயிரத்து 297 காப்பீட்டாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடைவார்கள்.

**18. அயனாவரம், மதுரை மற்றும் சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு அறுவை சிகிச்சையினை எளிமையாக மேற்கொள்ள** Laproscope **கருவி வழங்கப்படும்.**

தொழிலாளர்களுக்கு எளிய முறையில் அறுவை சிகிச்சையினை மேற்கொள்ளும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் அயனாவரம், மதுரை மற்றும் சிவகாசி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளுக்கு Laproscope கருவி வழங்கப்படும். இதன்மூலம் 4 இலட்சத்து 80 ஆயிரத்து 621 காப்பீட்டாளர்களும் அவர்தம் குடும்பத்தினரும் பயனடைவார்கள்.

# போக்குவரத்துத் துறை

## மானியக் கோரிக்கை எண் 48

### 1. தமிழகத்தின் அனைத்து தரப்பினரின் நலனுக்காக மாநில அளவில் மேம்படுத்தப்பட்ட நிலையான இயக்க கொள்கை உருவாக்குதல்

### Development of State wide Sustainable Mobility policy to benefit all of Tamil Nadu

தமிழ்நாட்டில் பல்வகை போக்குவரத்து அமைப்பு அதிவேகமாக வளர்ந்து வருகிறது. விமானம், இரயில் மற்றும் பேருந்து போக்குவரத்து தவிர, தனிநபர்களின் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் மாநிலத்தில் எல்லை வரை பயணிக்க முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, தமிழகம் முழுவதற்கும் ஒரு பரவலான, நிலையான இயக்க கொள்கையை உருவாக்குவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அடுத்த ஆறுமாதங்களில், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன், சமுதாயத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் நன்மை அளிக்கும் வகையில், அனைத்து வகையான போக்குவரத்தை உள்ளடக்கிய பல்வகை போக்குவரத்து அமைப்பினை உருவாக்குவதே இக்கொள்கையின் நோக்கமாகும்.

## 2. சென்னையில் மின்கலன் அல்லது மின்சாரத்தில் ஓடும் பேருந்துகள் இயக்குவதற்கான விரிவான திட்டம் (Electric Bus Road Map)

### Road Map for Electric Bus Roll out in Chennai

சுற்றுச்சூழல் நலனில் அதிக அக்கறை கொண்டுள்ள அம்மாவின் அரசு, போக்குவரத்துக் கழக பேருந்துகளை மாசற்ற தூய்மையான ஆற்றலின் கீழ் கொண்டுவரும் பொருட்டு, தொலைநோக்குப் பார்வையில் அரசினால் உருவாக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் C – 40 (Clean Bus Declaration) இத்துறையின் சார்பில் கையொப்பமிட்டு உறுதி செய்துள்ளது. குறிப்பாக, சென்னை போன்ற மாநகரங்களின் சுற்றுச்சூழலை பாதுகாத்திடும் உயரிய நோக்கத்தில் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் கீழ், மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்து பேருந்துகளையும் படிப்படியாக மின்கலன்/ மின்சாரத்தினால் இயக்கப்படும் பேருந்துகளாக மாற்றிட வழிவகை செய்யப்படும். அதனைத் தொடர்ந்து இத்திட்டமானது, மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழகம் முழுவதும் மின்சார பேருந்துகளை இயக்கிட வழிவகை செய்யும் ஒரு விரிவான திட்ட அறிக்கை உருவாக்கப்படும். சென்னை மாநகரில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் வாயிலாக தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் பல்வேறு படிநிலைகளில் செயல்படுத்துதல் குறித்து, தேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் ஆலோசகர்களை உள்ளடக்கிய உயர்மட்ட குழு உருவாக்கப்படும். இக்குழுவின்

பரிந்துரையின் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதுமாக மின்சார பேருந்துகளை இயக்குவதற்கான திட்டமானது பல்வேறு படிநிலைகளில் செயல்படுத்தப்படும்.

### 3. தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு (TDFC) ஒரு முழு அளவிலான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பினை வடிவமைத்தல்

### Formation of Information Technology Strategy Committee for Tamil Nadu Transport Development Finance Corporation to recommend IT Framework

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம், அரசின் வங்கியல்லாத நிதி நிறுவனமாகும் (Non Banking Financial Company). ஏறத்தாழ, 3,000 கோடி ரூபாய் வைப்புத் தொகையை கொண்டுள்ள இந்நிறுவனத்தில் முதலீடு செய்தல், கடன் வழங்குதல் மற்றும் வைப்புத் தொகைக்கான வட்டி வாடிக்கையாளர்களுக்கு தவறாமல் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை முழுமையாக கணினிமயமாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் மின்னாளுமைத் திட்ட முகமை ஆகியவற்றின் உதவியுடன் புதிய உயர்மட்ட குழு ஒன்று அமைக்கப்படும்.

அனைத்துமே கணினி, திறன்பேசி என அசுர வளர்ச்சி அடைந்துள்ள நிலையில், இந்த உயர்மட்ட குழுவானது இந்நிறுவனத்தின் வளர்ச்சி, வைப்புத் தொகை,

முதலீட்டாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு மற்றும் மத்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் உள்ளிட்ட பல அம்சங்களைக் கருத்தில் கொண்டு, ஒரு விரிவான திட்டமுறை சமர்ப்பித்து செயல்படுத்தப்படும்.

## 4. போக்குவரத்தினை மேம்படுத்திட மாவட்ட அளவில் பணிக்குழு உருவாக்கம்

## Working group on Mobility at District level

மாவட்ட ஆட்சியர் அவர்கள் மண்டல போக்குவரத்து ஆணையராகவும் உள்ளதால், மாவட்ட அளவிலான மக்களின் போக்குவரத்து சேவைகளின் தேவைகளை அறிந்து உடனடியாக அதற்கு தீர்வு காண இயலும். இதனை வெகுவாக உணர்ந்துள்ள அரசு, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு பணிக்குழு விரைவில் உருவாக்கப்படும். இக்குழுவானது, மாவட்ட மக்களின் நேரடியான மற்றும் மறைமுகத் தேவைகளை உடனுக்குடன் அறிந்து, அதற்குரிய பரிந்துரைகளை விரைந்து அரசுக்கு அளிக்கும்.

மாவட்ட அளவிலான தொழில் மற்றும் வர்த்தக அமைப்பினைச் சார்ந்தோர், கல்வியாளர்கள் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனம் உள்ளிட்ட பலர் இக்குழுவில் இடம் பெறுவர். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இக்குழு கூடி, மாவட்ட அளவிலான தேவைகளை அறிந்து, அதனை மாவட்ட ஆட்சியர் அளவில் நிறைவேற்றுதல் மற்றும் அரசளவில் மேற்கொள்ள வேண்டியதை பரிந்துரைக்கும்.

**5. போக்குவரத்து பணிமனைகள் / கிளைகளின் வரவு செலவுகளை நிதி பகுப்பாய்வின் மூலம் மேம்படுத்திடும் புதிய திட்டம்.**

**Bus Depots / Branches as Revenue & Cost Centers**

தற்பொழுது அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் மொத்தத்தில் வருவாய் மற்றும் செலவீன மையமாக திகழ்கிறது. இதுவே, அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு முழு அளவிலான திட்டமிடுதல் வாயிலாக, போக்குவரத்துக் கழகங்கள் லாபம் அல்லது நஷ்டத்தில் இயங்குவதைக் கண்டறியமுடிகிறது.

ஆனால் குறிப்பாக, பணிமனை / கிளை அளவிலான பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட கவனமும், அதனை உடனடியாக நிவர்த்தி செய்திட தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டு, செலவுகளை குறைத்து, வருவாயினை பெருக்கிட ஆவன செய்யப்படும்.

இதனால், பணிமனைகள் / கிளைகளின் பிரதான நடவடிக்கைகள் நிதிப்பகுப்பாய்வின் மூலம் ஆய்வு செய்யப்பட்டு, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்துக் கழகங்களின் வருவாயை பெருக்கி செலவை குறைக்கும் மையங்களாக மாற்றுவதற்கான முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 6. விற்பனையாளர் தரவரிசை அறிமுகப்படுத்தல்

## Introduction of Vendor-rating

மாநில போக்குவரத்துக் கழகங்களின் தேவைக்கான உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட பல பொருட்களானது, சாலை போக்குவரத்து நிறுவனம் மூலமாகவும், தலைமையிடம் மூலமாகவும், சில நேரங்களில் தனியாகவும், பணிமனைகளைப் பொறுத்தமட்டில், மண்டல அலுவலகங்கள் மூலமாகவும் கொள்முதல் செய்யப்படுகிறது.

முற்றிலும் பொதுநலன் கருதியே போக்குவரத்துக் கழகங்கள் இயங்கி வருவதால், நல்ல தரமான உதிரி பாகங்களை ஆண்டு முழுவதும் கையிருப்பில் வைத்து இருப்பது அவசியமான ஒன்றாகும். ஒட்டுமொத்த இந்த நடவடிக்கைகளை எளிதாக்கிடும் வகையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விற்பனையாளரின் செயல்திறனை மதிப்பீடு செய்ய விற்பனையாளர் தரவரிசை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

விற்பனையாளர்களால் வழங்கப்படும் பொருட்களின் தரம் அவர்களின் நம்பகத்தன்மை ஆகியவற்றை காரணிகளாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படும். இத்திட்டத்தின் வாயிலாக, அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் பயனடையக் கூடிய வகையில், நம்பகத்தன்மை வாய்ந்த விற்பனையாளரை இனம் காண்பதோடு, விற்பனை செய்யப்படும் பொருட்களின் தரமும் உறுதி செய்யப்படுகிறது. இதன் பயனாக, போலி விற்பனையாளர்கள் மற்றும் பட்டியலில் தடைசெய்யப்பட்டுள்ளோர் மற்றும் புறவழி விற்பனையாளர்கள் ஆகியோர் எளிதில் அடையாளம் காணப்பட்டு

புறந்தள்ளப்படுவர். மேலும், இத்தரவரிசை மதிப்பீட்டின்படி தரம், நியாயமான விலை மற்றும் விற்பனைக்குப் பின்னரான தொடர் சேவை ஆகியன உறுதி செய்யப்படுவதோடு, ஆரோக்கியமான போட்டியுடன் கூடிய நம்பகத்தன்மையும் சந்தையில் ஏற்படும். அனைத்து போக்குவரத்து கழகங்களும் பயனடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**7. அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அன்றாட அலுவலக நடைமுறைகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் இணைத்து கணினிமயமாக்கிடும் புதிய திட்டம் அறிமுகம்.**

**As-is & To-be study – COTS (Commercial Off The Shelf) products–Web-based application and requisite hardware to be purchased for State Transport Undertakings**

பெரும்பாலான அரசு துறைகளின் அன்றாட அலுவலக நடைமுறைகள் செயல்பாடுகள் அனைத்தும், மின்னாளுமைத் திட்டத்தின் வாயிலாக (e-governance) ஒருங்கிணைக்கப்பட்டு சிறப்புடன் இயங்கி வருகின்றன.

தற்பொழுது பெரும்பாலான அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அன்றாட அலுவலக நடைமுறைகள் அனைத்தும் மரபு வழியாக உள்ளது. குறிப்பாக, சென்னை போன்ற மாநகரங்களில் இயங்கிடும் கழகங்களின் பல உட்பிரிவு அலுவலகங்கள் கணினி வாயிலாக இணைக்கப்பட்டிருந்தாலும், பல கழகங்கள் இன்றும் மரபு வழியிலே இயங்கி வருகின்றன.

அனைத்துமே கணினிமயமாகி வருகின்ற சூழ்நிலையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகங்களின்

செயல்பாடுகளை ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் ஒரு புதிய திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.

தற்பொழுது, சில போக்குவரத்துக் கழகங்களில் பயன்படுத்தப்பட்டுவரும் மென்பொருள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தேவைக்கேற்ப சில மாறுதல்களுடன் கூடிய புதிய மென்பொருள் உருவாக்கப்படும். பின்னர் அதன் மூலம் அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் அன்றாட அலுவலக நடைமுறைகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ், தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் ஆலோசனையுடன், இணையதள முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

**8. அனைத்து அரசு போக்குவரத்து கழகங்களுக்கான விரிவான புதிய கொள்முதல் கொள்கை அறிமுகம்.**

**New Procurement Policy for all State Transport Undertakings**

அனைத்து அரசு போக்குவரத்து கழகங்களிலும் உரிய நடைமுறைகளை பின்பற்றி, தங்கள் தேவைக்கு ஏற்றவாறு கொள்முதல் மேற்கொள்ளப்படுகின்றன. இவையாவும், சாலை போக்குவரத்து நிறுவனம், அரசு போக்குவரத்து கழகங்களின் கூட்டாண்மை அலுவலகங்கள் மற்றும் பணிமனைகள் வாயிலாக, பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தற்போதுள்ள கொள்முதல் நடைமுறையினை மேம்படுத்தி ஒரு விரிவான கொள்முதல் கொள்கை உருவாக்கப்பட்டு, அதன் மூலம் மொத்த கொள்முதல், தொடர் கொள்முதல் செய்யும்போது அதிக லாபம் ஈட்ட வழிவகை ஏற்படும். தரமான உபகரணங்கள் தயாரிப்பாளர்களுக்கு (Original Equipments

Manufacturers) முக்கியத்துவம் அளிக்கப்படும். கொள்முதல் திறனை அதிகரிக்கும் பொருட்டு, புதிய கொள்முதல் கொள்கை உருவாக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்படும்.

**9. ஓட்டுநர்களுக்கு நவீன வழிகாட்டி வாயிலாக நுண்ணறிவுப்பயிற்சி.**

**Simulators to provide advanced training for drivers**

பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவைகளில், ஓட்டுநர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். மாறிவரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, விபத்துக்களை முற்றிலுமாகத் தவிர்த்து, சாலைப் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், ஓட்டுநர்களுக்கு அவ்வப்போது புத்தாக்கத் திறன் மேம்பாட்டு நுண்ணறிவுப் பயிற்சி அளிப்பது அவசியமான ஒன்றாகும்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி, சாலைகளையும், போக்குவரத்து நெரிசல்களையும் ஓட்டுநர்கள் கணினித் திரை வாயிலாக உடன் கண்டறிந்து, அதற்கேற்ப பேருந்துகளை திறம்பட இயக்கிடப் பயிற்சி அளிக்கக்கூடிய “சிமுலேட்டர்” (Simulator) என்னும் உயர் தொழில்நுட்ப பயிற்சிக் கருவியானது, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அனைத்து அரசு போக்குவரத்துக் கழகப் பயிற்சி மையங்களிலும் விரைவில் நிறுவப்படும். ஓட்டுநர்கள் களநிலவரங்களை உடன் கண்டறிந்து அதற்கேற்ப, திறம்பட செயல்படும் ஒரு நடைமுறை அனுபவத்தினை இப்பயிற்சியானது அளிக்கும்.

**10. போக்குவரத்துக்கழக வரலாற்றில் முதன்முறையாக, விபத்து இழப்பீடு, விபத்துத்தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்வகித்திடும் பொருட்டு அனைத்து போக்குவரத்துக் கழகங்களுக்கான ஒருங்கிணைந்த அமைப்பு (அ) அறக்கட்டளை உருவாக்கம்.**

**Formation of Common Trust for all State Transport Undertakings to administer Accident Compensation, Accident prevention and Toll fee Cess Amount.**

சாலைப் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில், அரசின் சார்பில் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் போக்குவரத்து பணியாளர்களின் சிறந்த செயல்பாடுகளையும் மீறி, சில நேரங்களில் சாலை விபத்துகள் நிகழ்ந்து விடுகின்றன. விபத்துக்கான இழப்பீட்டுத் தொகையினை உரிய நேரத்தில் வழங்கிடுவது மட்டுமின்றி, விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் சுங்கச் சாவடிகளுக்குச் செலுத்த வேண்டியுள்ள கட்டணம் ஆகியவற்றிற்காக பேருந்துக் கட்டணத்துடன் கூடுதலாக மேல்வரி (Cess) வசூலிக்கப்படுகிறது.

எனவே, அனைத்துமே கணினிமயமாகி வருகின்ற சூழ்நிலையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு போக்குவரத்துக் கழகங்களின் வரலாற்றில் முதன்முறையாக விபத்து இழப்பீடு, விபத்துத் தடுப்பு மற்றும் சுங்கக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தினையும் திறம்பட நிருவாகம் செய்திட ஒருங்கிணைந்த அமைப்பு (அ) அறக்கட்டளை ஒன்று உருவாக்கப்படும்.

அனைத்து அரசுபோக்குவரத்துக் கழகங்களின் செயல்திறனை மேம்படுத்திடும் வகையில், உருவாக்கப்பட்டுள்ள இந்த அமைப்பின் மூலமாக, விபத்துக்கான இழப்பீட்டுத் தொகையினை உரிய நேரத்தில் விரைந்து வழங்குதல், சாலை பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் சுங்கக் கட்டணங்களை முறையாக செலுத்துதல் உள்ளிட்ட பலவகையான பணிகள் திறம்பட மேற்கொள்ளப்படும்.

**11. நவீன தொழில்நுட்ப வசதி மூலம், மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து பேருந்து நிறுத்தங்களிலும், பேருந்துகளின் வருகை நேரத்தினை பயணிகள் அறிந்து கொள்ளும் வசதி அறிமுகம்.**

**Information on Bus Arrival at Bus Stops throughout the State**

தற்போது, குறிப்பிட்ட பேருந்து நிறுத்தத்தில், குறிப்பிட்ட பேருந்தின் வருகைக்காக காத்திருக்கும் பயணிகளுக்கு அடுத்த பேருந்தின் வருகை நேரத்தினை அறிந்து கொள்வதில் உள்ள சிரமங்களை களைந்திடும் வகையில், போக்குவரத்துத் துறையில் முதன்முறையாக, 'புவித்திசைச்சுட்டி' (GPS) என்கிற நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக, மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து பேருந்து நிறுத்தங்களுக்கும் புவிசார் குறியீட்டு எண் வழங்கப்படுகிறது.

கணினி யுகம் கடந்து தற்பொழுது கைபேசி யுகமாகிவிட்ட இந்நிலையில், பயணம் மேற்கொள்ளும் பொதுமக்களுக்கு திறன்பேசி செயலிகள் (Apps) வாயிலாக, பயணம் பற்றிய விவரங்களோடு, பேருந்து வருகையின் நேரத்தினை தெரிவிப்பதும், அதனை அறிந்து கொள்வதும் அவசியமான ஒன்றாகும். இதனைக் கருத்தில் கொண்டு, இதய தெய்வம்

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து பேருந்து நிறுத்தங்களுக்கும் புவிசார் குறியீட்டு எண் (Geo Code) வழங்கப்பட்டு, அதனடிப்படையில், GPS என்கிற நவீன தொழில்நுட்பத்தின் வாயிலாக, அனைத்து பேருந்து நிறுத்தங்கள் மற்றும் பேருந்துகளின் நகர்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு, உரிய வருகை நேரத்தினை உடனடியாக பயணிகளுக்கு திறன்பேசி செயலிகள் வாயிலாக தெரிவித்திட வழிவகை செய்யப்படும்.

இதன் பொருட்டு அரசுக்கு எந்தவித நிதிச்சுமையுமின்றி, தனியார் நிறுவனத்தின் வாயிலாக மேற்கொள்ளப்படும் இத்திட்டத்திற்கான செலவீனமானது, திறன்பேசி செயலிகள் மற்றும் புவித்திசைச்சுட்டி வாயிலாக, வர்த்தகரீதியில் மேற்கொள்ளப்படும் விளம்பரங்கள் மற்றும் நன்கொடையாளர்கள் மூலமாக ஈடு செய்யப்படும்.

## 12. மேலைநாடுகளில் வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டுள்ள (Hub & Spoke) செயல் திட்டம் அறிமுகம்

### Hub &Spoke model

போக்குவரத்துப் பயணிகளின் அடர்வு விகிதமானது, மாறிவரும் அன்றாட தேவைக்கேற்ப, ஏற்ற இறக்கத்துடன் காணப்படுவதால், வழித்தடப் பகுப்பாய்வு என்பது ஒரு தொடரும் சவாலாகவே உள்ளது.

பயணிகள் அடர்வு அதிகம் உள்ள மேலை நாடுகளில், பயணிகளின் நலனுக்கேற்றவாறு, பாரம்பரிய முறையிலான வழித்தடங்களை மேலாண்மை செய்வதால், போதுமான வருமானம் மற்றும் சேவைகளை பராமரிக்க ஏதுவாக இல்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

சர்வதேச மாதிரிகளின் முடிவுகளின் அடிப்படையில், மேலைநாடுகளில் பேருந்து சேவைகளில் “Hub and Spoke Model”என்கிற இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, வெற்றிகரமான பல நல்ல முடிவுகளைத் தந்துள்ளது. அதனடிப்படையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு போக்குவரத்து கழகங்களில், இத்திட்டமானது பல படிநிலைகளில் செயல்படுத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரு பணிமனையினை மையமாகக் கொண்டு, அதனைச் சுற்றியுள்ள பகுதிவாழ் மக்கள் அனைவரும் பயனடைகின்ற வகையில், பேருந்து சேவைகள் இல்லாத அனைத்து வழித் தடங்களிலும் பேருந்துகள் இயக்கப்படும். இதன் பயனாக, செலவுகள் பெருமளவு குறைவதோடு, பேருந்து சேவை பயணிகளுக்கு மேலும் எளிதாகும். இத்திட்டத்தினை திறம்பட செயல்படுத்திடத் தேவையான பயிற்சிகள் உரிய அலுவலர்களுக்கு அளிக்கப்படும்.

**13. சென்னை மாநகர் போக்குவரத்து கழகமும் இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனமும் (IIT) இணைந்து அரசு பொது போக்குவரத்து சேவையினை கடைகோடி வரை சேர்த்தல் மற்றும் பல்வேறு பொது போக்குவரத்துகளை ஒருங்கிணைத்தல்.**

**Partnering with IIT Madras to determine last mile connectivity solutions and Multi model integration**

சென்னை போன்ற பெருநகரங்களில் நாளுக்கு நாள் மக்கள் தொகை பெருக்கமும் தனிநபர் வாகனங்களின் அதிகரிப்பும் உயர்ந்த வண்ணம் உள்ளது. இந்நிலையில்,

மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு செயல்படும் போக்குவரத்துக் கழகங்களும் அதற்கேற்ப, மக்களின் தேவைகளை பூர்த்தி செய்திடல் அவசியமாகிறது. எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் புகழ்பெற்ற மத்திய அரசின் கல்வி நிறுவனமான (Indian Institute of Technology) இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் மற்றும் மாநகர் போக்குவரத்துக் கழகம் கூட்டாண்மையுடன் இணைந்து சென்னையில் இயங்கும் பல்வகை போக்குவரத்துக்களை தேர்ந்தெடுத்த வழித்தடங்களில் ஒருங்கிணைத்தல் தொடர்பான விரிவான ஆய்வுமேற்கொள்ளப்படும்.

**14. போக்குவரத்துக் கழகங்களின் அன்றாட நடைமுறை மூலதனத்திற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் புதிய ஏற்பாடு.**

**Streamlining existing working capital arrangements with Banks and bringing down rate of interest**

போக்குவரத்துக் கழகங்கள் தொடர்ந்து இயங்கிட ஆண்டு முழுவதும் நடைமுறை மூலதனம் அவசியமாகிறது. வங்கிகளில் கழகங்களுக்குச் சொந்தமான பத்திரங்கள் அடமானம் வைக்கப்படுவதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இந்த ஏற்பாடானது பல ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வருகிறது. தனியார் உள்ளிட்ட பல வங்கிகளில் இந்த பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும்போது வட்டி விகிதமானது பல நேரங்களில் மிகவும் அதிகமாக உள்ளது.

இதனை நெறிபடுத்துவதன் தொடக்கமாக, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தேசியமயமாக்கப்பட்டவங்கிகளுக்கு ஒரு வாய்ப்பு வழங்கிடுவதன் பயனாக, வட்டி விகிதங்கள் சீராக்கப்பட்டு, அதன் மூலம் போக்குவரத்துக் கழகங்களுக்கு சேமிப்பினை உருவாக்கிட வழிவகை செய்யப்படும்.

### 15. போக்குவரத்து கழகங்களின் தேர்வு செய்யப்பட்ட பணிமனைகளில் சூரிய எரிசக்தி மேற்கூரைகள் அமைத்தல்.

### Installation of Solar Power Roof Top Panels in Selected Depots

புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களில், இன்று நமக்கு அதிகமாக கிடைக்கக்கூடியது சூரிய ஆற்றலாகும். பூமி வெப்பமயமாதலால் ஏற்படும் அச்சத்திலிருந்து மீள, சூரிய ஆற்றல் தொழில்நுட்பத்தை அதிக அளவில் பயன்படுத்துவதில், உலகளவில் தற்போது போட்டி ஏற்பட்டுள்ளது. சூரிய மின்தகடுகள் மூலம் கிடைக்கும் மின்சக்தியினால், மின்கட்டணம் குறைவதற்கு வாய்ப்பு உண்டு.

தமிழக அரசு சூரிய சக்தி மேற்கூரைகளை அரசு அலுவலகங்களிலும், பணியிடங்களிலும் அமைப்பதற்கு ஆர்வமாக உள்ளது. அவ்வகையில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, அரசு போக்குவரத்து கழகங்களின் தேர்வு செய்யப்பட்ட பணிமனைகளில் சூரிய எரிசக்தி மேற்கூரைகள் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை (Tamil Nadu Energy Development Agency) உதவியுடன்அமைக்கப்படும்.

## 16. வணிக வளாகம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதன் மூலம் பணிமனைகளை நவீனமயமாக்கி வருவாய் ஈட்டுதல்.

## Modernisation of Bus-Depots through Commercial development and housing projects.

பெருநகரங்களில் உள்ள போக்குவரத்து பணிமனைகளை நவீனமயமாக்கிட அரசின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போக்குவரத்துக் கழக வரலாற்றில் முதன்முறையாக, கழகங்களின் வருவாயினைப் பெருக்கி, பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்குரிய ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்து பலன்களை தாமதமின்றி வழங்கி வழிவகை செய்திடும் தொலைநோக்கு முயற்சியின் முதற்கட்டமாக, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பணிமனைகளில் உள்ள இடங்களின் அளவினைப் பொறுத்து, தொடர் கடைகள், அடுக்குமாடி வர்த்தக கடைகள், வங்கிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக தமிழ்நாட்டில் 8 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய அடுக்குமாடி கட்டடங்களில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் முதல் தளம் ஆகிய பகுதிகள் போக்குவரத்துக் கழகங்களின் தற்போதைய தேவைகளுக்கும், முதல் தளம் முதல் மூன்றாம் தளம் வரை வணிக வளாகம் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு பயன்படுத்தப்படும். தேர்ந்த கட்டட வல்லுநர்களைக் கொண்டு கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புகளில், போக்குவரத்து கழகங்களின் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இத்திட்டம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தின்

(Tamil Nadu Infrastructure Fund Management Company) உதவியுடன்செயல்படுத்தப்படும்.

**17. மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பொழுதுபோக்கு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புசெய்தல்.**

**On Board entertainment for passengers travelling on Metropolitan Transport Corporation.**

பொதுவாக மாநகர் பேருந்து பயணத்தில், தொடர் நிறுத்தங்கள், போக்குவரத்து சமிக்கை விளக்கு மற்றும் போக்குவரத்து நெரிசல் ஆகியவற்றின் காரணமாக, பயணிகள் அதிக நேரம் செலவிடுவது தவிர்த்திட இயலாத ஒன்றாகிறது. எனவே, இந்நேரத்தினை பயணிகளுக்கு பயன் தருகின்ற வகையில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான பலவகையான நிகழ்ச்சிகள் விமானங்களில் பேருந்து இருக்கை முன்பு அமைக்கப்பட்டுள்ள சிறிய அளவிலான ஒளித்திரை போன்று பேருந்துகளில் அமைத்திடும் திட்டம் அறிமுகம் செய்யப்படும்.

மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு எந்தவித நிதிச் சுமையுமின்றி, சுயமாக பராமரிக்கக் கூடிய வகையில், பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பிட ஆவன செய்யப்படும் .

இந்நிகழ்ச்சிகளானது, திரைப்படங்கள், இசையுடன் கூடிய காணொலி காட்சிகள், சின்னத்திரை நிகழ்ச்சிகள்

மற்றும் நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மாநகர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் ஒளிபரப்பிட ஆவன செய்யப்படும்.

**18. முக்கிய பேருந்து நிலையங்களில் பெரிய அளவிலான மின்னணு ஒளித்திரை தகவல் பலகை.**

**Electronic Digital Screens at a few major bus stands.**

பேருந்து நிலையங்களில் பொதுமக்கள் பேருந்துகளுக்காகவோ அல்லது ஏனைய தொடர் வண்டிகளுக்காகவோ காத்திருக்கும் நேரத்தில், விமான நிலையம் மற்றும் இரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று பெரிய அளவிலான மின்னணு ஒளித்திரையானது, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சில முக்கிய பேருந்து நிலையங்களில் அமைக்கப்படும்.

முதற்கட்டமாக, விளம்பரதாரர்கள் வாயிலாக குறைந்தபட்சம் 10 பேருந்து நிலையங்களில் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ள இம்மின்னணு விளம்பர ஒளித்திரை வாயிலாக, பேருந்துகளின் விவரம், வருகை நேரம் உள்ளிட்ட பிற தகவல்களோடு, விளம்பரம் உள்ளிட்ட பல காணொலிக் காட்சிகள் திரையிடப்படும். இத்திட்டத்தின் பயனாக, பயணிகளின் காத்திருப்பு நேரமானது பயனுள்ள வகையில்அமைந்திடும்.

## 19. பேருந்துகளில் நவீன பின் நோக்குக் கண்ணாடிகள் பொருத்துதல்.

## Fitment of Advanced Rear view Mirrors

பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ள பின்நோக்கு கண்ணாடிகளில் ஓட்டுநரின் பார்வையில் புலப்படாத மறைவுப் பகுதிகளும் (Blind Spots) பேருந்துகள் விபத்துக்களுக்கு உள்ளாவதற்கான ஒரு முக்கிய காரணமாகும். தரமான பெரிய அளவிலான பின்னோக்குக் கண்ணாடிகளைப் பேருந்துகளில் அமைப்பதன் மூலம் ஓட்டுநரின் பார்வை எல்லையினை விரிவாக்கி மேம்படுத்துவதன் வாயிலாக, விபத்துக்களை பெருமளவில் தவிர்த்திட இயலும்.

அந்த வகையில், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தில் முதன் முறையாக, ஓட்டுநரது பார்வையில் புலப்படாத மறைவுப் பகுதிகளை (Blind Spots) முற்றிலுமாக அகற்றிடும் உயரிய நோக்கில், இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

(i) பரந்த கோணக் கண்ணாடி (Wide Angle Mirror)

(ii) நெருக்கமான அருகாமைக் கண்ணாடி (Close Proximity Mirror)

(iii) மறைவுப் பகுதிகளை வெளிப்படுத்தும் கண்ணாடி (Blind Spot Mirror)

ஆகிய மூன்று வகையான பின்னோக்குக் கண்ணாடிகள் ஆறு ஆண்டுகளுக்கும் குறைவான வயதுடைய பேருந்துகளில் பொருத்தப்படும். இதன் மூலம் ஓட்டுநர், பேருந்தின் நெருக்கமான முன்புறத்திலும், பக்கவாட்டிலும், பின்புறத்திலும்

நிகழ்வுகளைத் தெளிவாகக் கண்டு அதற்கேற்ப, பேருந்துகளை கவனமாக இயக்கிடுவதன் பயனாக, விபத்துக்கள் பெருமளவில் தவிர்க்கப்படும்.

**20. மதுரை மாநகரப் பேருந்துகளில் அடுத்து இறங்குமிடங்களை ஒலி அறிவிப்பு மூலம் அறிந்து கொள்ளும் புதிய வசதி அறிமுகம்.**

**A bus stop announement system in Madurai within buses to identify the next approaching bus stop**

தமிழ்நாடு அரசு பேருந்துகளின் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் நலன்களை எந்நாளும் கருத்தில் கொண்டு, அதற்கேற்றவாறு பல்வேறு புதிய திட்டங்களையும், புதிய முயற்சிகளையும் அரசு அறிமுகம் செய்து வருகிறது. பேருந்து பயணம் என்பது பயணிகளுக்கு எளிதாகவும் உற்ற நண்பனாகவும் இருப்பது அவசியமாகிறது.

மாநகரப் பேருந்துகளில் பயணிப்போர் அடுத்து இறங்க வேண்டிய நிறுத்தத்தினை அறிந்து கொள்வதிலும், வாகனப் போக்குவரத்து நெரிசல்மிக்க நேரங்களில் (Peak Hour) பயணிகள் தங்களின் இறங்குமிடத்தினை தவறவிடும் சிரமமும் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாநகரப் பேருந்து நிறுத்தங்களின் பெயர்களை ஒலி அறிவிப்பு மூலம் அறிந்து கொள்ளும் ஒரு புதிய திட்டம் அறிமுகம் செய்யப்படும். இதன் மூலம் பயணிகள் எளிதில், அடுத்தடுத்து வரும் நிறுத்தங்களை முன்கூட்டியே அறிந்துகொண்டு, எளிதில் இறங்கிட ஏதுவாகும்.

## 21. அம்மா அரசு நடமாடும் பணிமனை

## Amma Government Mobile Workshop

அரசு தானியங்கி பணிமனை இல்லாத பிற மாவட்டங்களில் இயக்கப்படும் அரசு துறை ஊர்திகள் அருகில் உள்ள அரசு தானியங்கி பணிமனைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனை தவிர்த்திடும் பொருட்டு தேவையான ஆய்வு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, “அம்மா அரசு நடமாடும் பணிமனை” முன்னோட்ட அடிப்படையில் இரண்டு மாவட்டங்களில் ஏற்படுத்தப்படும்.

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்

### மானியக் கோரிக்கை எண் 25

**1. ஆத்தூர், கோவில்பட்டி மற்றும் பழனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

**Construction of own building for the Regional Transport Offices at Attur, Kovilpatti and Palani.**

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 86 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் 49 அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தற்பொழுது, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லையாதலால் சொந்தக் கட்டடம் கட்டுவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டாரப் போக்குவரத்து

அலுவலகம் ஆகிய மூன்று அலுவலகங்களுக்கு ரூபாய் 913.50 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

**2. ஓமலூர், பாலக்கோடு, திருப்பத்தூர், குமாரபாளையம், சூலூர், பரமக்குடி, அருப்புக்கோட்டை மற்றும் திருமங்கலம் பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

**Construction of own building for the Unit Offices at Omalur, Palacode, Tirupathur, Kumarapalayam, Sulur, Paramakudi, Aruppukottai and Thirumangalam.**

போக்குவரத்துத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 59 பகுதி அலுவலகங்களில் 16 பகுதி அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தற்பொழுது, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பகுதி அலுவலகங்களில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லையாதலால் சொந்தக் கட்டடம் கட்டுவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சேலம் மாவட்டம், ஓமலூர் பகுதி அலுவலகம், தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பகுதி அலுவலகம், வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதி அலுவலகம், நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் பகுதி அலுவலகம், திருப்பூர் மாவட்டம், சூலூர் பகுதி அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதி அலுவலகம், விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை

பகுதி அலுவலகம் மற்றும் மதுரை மாவட்டம், திருமங்கலம் பகுதி அலுவலகம் ஆகிய எட்டு அலுவலகங்களுக்கு ரூபாய் 1,251.88 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

**3. ஸ்ரீவில்லிபுத்தூர், மார்த்தாண்டம் மற்றும் சோழிங்கநல்லூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

**Construction of own building and formation of testing track for the Regional Transport Offices at Srivilliputhur, Marthandam and Sholinganallur.**

போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கி வரும் 86 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில், 49 அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தற்பொழுது, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லையாதலால் சொந்தக் கட்டடம் கட்டுவது அவசியமாகிறது. மேலும், ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான தேர்வினை நடத்தி, வாகனம் ஓட்டும் திறனை துல்லியமாக மதிப்பிட ஓட்டுநர் தேர்வுத்தளமும் அத்தியாவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டாரப்

போக்குவரத்து அலுவலகம் ஆகிய மூன்று அலுவலகங்களுக்கு ரூபாய் 1,500.61 இலட்சம் செலவில் ஓட்டுநர் தேர்வுத்தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

**4. வேடசந்தூர் மற்றும் திருவெறும்பூர் பகுதி அலுவலகங்களுக்கு ஓட்டுநர் தேர்வுத்தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

**Construction of own building for the Unit Offices at Vedachandur and Thiruverumbur.**

போக்குவரத்துத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் 59 பகுதி அலுவலகங்களில், 16 பகுதி அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தற்பொழுது, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பகுதி அலுவலகங்களில் போதுமான அடிப்படை வசதிகள் இல்லையாதலால் சொந்தக் கட்டடம் கட்டுவது அவசியமாகிறது. மேலும், ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கான தேர்வினை நடத்தி, வாகனம் ஓட்டும் திறனை துல்லியமாக மதிப்பிட ஓட்டுநர் தேர்வுத் தளமும் அத்தியாவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் பகுதி அலுவலகம் மற்றும் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் பகுதி அலுவலகம் ஆகிய இரண்டு அலுவலகங்களுக்கு ரூபாய் 414.57 இலட்சம் செலவில் ஓட்டுநர் தேர்வுத் தளத்துடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

**5. ஆரணி பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்துதல்.**

**Upgradation of Unit office, Arani as Regional Transport Office.**

பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் ஆரணி, போளூர், சேத்துப்பட்டு, செய்யாறு, வந்தவாசி மற்றும் வெண்பாக்கம் ஆகிய தாலுக்காக்களில் வாழும் பொதுமக்கள் தங்கள் போக்குவரத்து தொடர்பான பணிகளை சிரமமின்றி மேற்கொள்வது போன்றவற்றை கருத்திற்கொண்டு, ஆரணி பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்துவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் இயங்கி வரும் ஆரணி பகுதி அலுவலகம் ரூபாய் 87.22 இலட்சம் செலவில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாக தரம் உயர்த்தப்படும்.

**6. ஈரோடு (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு பாதுகாப்பு சுற்றுச் சுவர் மற்றும் பொதுமக்கள் காத்திருப்பு அறை கட்டுதல் மற்றும் தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டுதல்.**

**Construction of Protection Compound Wall and**

**Public waiting hall for the Regional Transport Office, Erode (East) and Construction of Protection Compound Wall for the Regional Transport Office, Tenkasi.**

போக்குவரத்துத்துறையின் செயலாக்க அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் வாகனத் தணிக்கையில் பல்வேறு குற்றங்கள் கண்டறியப்பட்டு, அக்குற்றங்களின் அடிப்படையில் அவ்வாகனங்களை சிறைப் பிடித்து பாதுகாப்பாக நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், போக்குவரத்து தொடர்பான பணிகளுக்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு வருகை தரும் பொதுமக்களுக்கு காத்திருப்பு அறை கட்டுவது அத்தியாவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 60.45 இலட்சம் செலவில் ஈரோடு (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் மற்றும் பொதுமக்கள் காத்திருப்பு அறை மற்றும் தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டப்படும்.

7. **அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் (CCTV Cameras) பொருத்துதல்.**

**Installation of Closed Circuit Television Cameras (CCTV Cameras) in all Regional Transport Offices and Unit Offices.**

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் ஏராளமான பொதுமக்கள் தங்கள் போக்குவரத்து தொடர்பான பணிகளுக்காக தினந்தோறும் வந்த வண்ணம் உள்ளனர். எனவே, வெளிப்படையான மற்றும் விரைவான சேவைகளை பொதுமக்களுக்கு திறம்பட அளிப்பது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ரூபாய் 230 இலட்சம் செலவில் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பகுதி அலுவலகங்களில் கண்காணிப்பு தொலைக்காட்சி கேமராக்கள் (CCTV Cameras) பொருத்தப்படும்.

**8. அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கு அச்சு பொறிகளுடன் கூடிய கணினிகள், பார்கோடு ரீடர் மற்றும் கைரேகை பதிவு செய்யும் கருவி வாங்குதல்.**

**Purchase of Computers with Printers, Bar Code Reader and Finger Print Reader for all Regional Transport Offices, Unit Offices and Check Posts.**

தற்பொழுது அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் பயன்படுத்தப்படும் கணினிகள் மற்றும் அச்சுப்பொறிகள் 6 வருடங்களுக்கு மேல் காலாவதியாகி சரி செய்ய இயலாத நிலையில் உள்ளன. ஆகையால், மேற்படி அலுவலகங்களுக்கு விரைவாக செயல்படும் நவீன கணினிகள், அச்சுப்பொறிகள், பார்கோடு ரீடர்

மற்றும் கைரேகை பதிவு செய்யும் கருவிகள் வாங்குவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்துத் துறையின் கீழ் இயங்கும் அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், பகுதி அலுவலகங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளுக்கு ரூபாய் **341** இலட்சம் செலவில் அச்சு பொறிகளுடன் கூடிய கணினிகள், பார்கோடு ரீடர் மற்றும் கைரேகை பதிவு செய்யும் கருவிகள் வாங்கப்படும்.

**9. போக்குவரத்துத் துறையின் பயன்பாட்டிற்காக ஆன்டிராய்ட் செயலி** (Android App) **ஒன்றினை உருவாக்குதல்.**

**Development of an Android Application for use of the Transport Department.**

போக்குவரத்துத் துறையில் கடந்த **19.06.2012** முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வாகன் (பெயர்ப்பு–4) வாயிலாக புதிய வாகனங்களை பதிவு செய்யும் பொழுது, வாகன முகவர்கள் இணையதளம் வாயிலாக கட்டணம் மற்றும் வரி செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், **01.03.2018** முதல் சாரதி (பெயர்ப்பு) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது இணையதளம் வாயிலாக, பொதுமக்கள் தங்கள் வீட்டில் இருந்தபடியே, ஒட்டுநர் உரிமம் குறித்த

பணிகளுக்குரிய கட்டணத்தை செல்லிடைபேசி வாயிலாக செலுத்த இயலும்.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, போக்குவரத்துத் துறையின் பயன்பாட்டிற்காக ரூபாய் 5 இலட்சம் செலவில் ஆன்டிராய்ட் செயலி (Android App) ஒன்று உருவாக்கப்படும்.

**10. மாவட்டம் தோறும் சாலை பாதுகாப்புப் பிரிவு ஏற்படுத்துதல்.**

**Formation of District wise Road Safety Cell.**

சாலை பாதுகாப்பின் முக்கிய அம்சமாக சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு திகழ்கிறது. சாலை விபத்துக்களை 2020ஆம் ஆண்டிற்குள் 50 விழுக்காடாக குறைக்கும் நோக்குடன், சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில் மாவட்டங்கள் தோறும் சாலை பாதுகாப்புப் பிரிவு அமைத்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் மூலம் தீவிரமாக கண்காணிப்பது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாவட்டந்தோறும் சாலை பாதுகாப்புப் பிரிவு ரூபாய் 57.60 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**11. பள்ளிகளில் சாலை பாதுகாப்பு மன்றம் உருவாக்குதல்.**

**Formation of Road Safety Club in Schools.**

உச்சநீதிமன்ற சாலை பாதுகாப்பு குழுவின் வழிகாட்டுதலின்படி, சாலை பாதுகாப்பு குறித்த பொருள் மாநில பாடத்திட்டத்தில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை இடம் பெற்றுள்ளது. சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வினை இளம் வயதிலேயே மாணவர்களிடையே ஏற்படுத்தும் வகையில், அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சாலை பாதுகாப்பு மன்றம் அமைப்பது இன்றியமையாததாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சாலை பாதுகாப்பு மன்றங்கள் 7,870 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பள்ளிக்கல்வித் துறையுடன் இணைந்து உருவாக்கப்படும்.

**12. போக்குவரத்து அலுவலகங்களில் ஓட்டுநர் உரிமங்கள் தொடர்பான பணிகளுக்கு செலுத்தும் அனைத்து கட்டணங்களும் பணமில்லா பரிவர்த்தனையாக (Cashless transaction) இணையதளம் வாயிலாக வசூலித்தல்.**

**Cashless transaction for collection of fees through Web Portal for Driving Licence related works in Transport Offices.**

போக்குவரத்துத் துறையில், 01.03.2018 முதல் சாரதி (பெயர்ப்பு–4) மூலம் ஓட்டுநர் உரிமங்கள் தொடர்பான மனுக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, அதற்கான கட்டணங்கள் அலுவலகத்திலேயே வசூல் செய்யப்பட்டு

வருகிறது. ஆகையால், இணையதளம் வாயிலாக பொதுமக்கள் தங்கள் இல்லங்களில் இருந்தபடியே ஓட்டுநர் உரிமம் தொடர்பான பணிகள் அனைத்திற்கும் கட்டணங்கள் செலுத்தும் வசதியினை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஓட்டுநர் உரிமங்கள் குறித்த பணிகளுக்கு இணையதளம் வாயிலாக பணமில்லா பரிவர்த்தனையாக (Cashless transaction) கட்டணம் வசூலிக்கும் வசதி ஏற்படுத்தப்படும்.

**13. இணையதளம் வாயிலாக நடத்துநர் உரிமம் வழங்குதல்.**

**Issue of Conductor Licence through Web Portal.**

நடத்துநர் உரிமம் பெற விரும்பும் மனுதாரர், அலுவலகம் செல்லாமல் இணைய தளம் வாயிலாக மனு செய்து அதற்குரிய கட்டணத்தை செலுத்தி ஆவணங்களை பதிவேற்றம் செய்து, அவை அதிகாரிகளால் சரி பார்க்கப்பட்டு ஒப்புதல் அளித்த பின்னர், மனுதாரர் தம் இல்லத்திலிருந்தபடியே அச்சிட்டு உரிமத்தை பதிவிறக்கம் செய்யும் வசதியினை ஏற்படுத்துவது அவசியமாகிறது.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இணையதளம் வாயிலாக நடத்துனர் உரிமம் வழங்கும் வசதி ஏற்படுத்தப்படும்.

**14. பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல், மேற்குறிப்பு செய்தல், ஓட்டுநர் உரிமத்தில் பெயர் மாற்றம் மற்றும் முகவரி மாற்றம் போன்ற பணிகளை பொதுமக்களுக்கு ஒரு மணி நேரத்தில் செய்து கொடுத்தல்.**

**Issue of Leaner's Licence, Renewal of Driving Licence, Endorsement, Name and Address Change in Driving Licence etc., to the public within one hour.**

பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல், மேற்குறிப்பு செய்தல், ஓட்டுநர் உரிமத்தில் பெயர் மற்றும் முகவரி மாற்றம் போன்ற பணிகளுக்காக பொதுமக்கள் தங்கள் இல்லங்களில் இருந்தபடியே சம்பந்தப்பட்ட படிவங்களை இணையதளம் வாயிலாக உரிய ஆதாரங்களுடன் பதிவேற்றம் செய்து, அதற்கான கட்டணத்தைச் செலுத்தி, அலுவலகம் வந்து புகைப்படம் எடுத்த பின்னர், ஒரு மணி நேரத்திற்குள் ஓட்டுநர் உரிமம் வழங்கலாம்.

எனவே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பழகுநர் உரிமம், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல், மேற்குறிப்பு செய்தல், ஓட்டுநர் உரிமத்தில் பெயர் மற்றும்

# தகவல் தொழில் நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண் 31

### 1. இராமநாதபுரம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா

தமிழகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்களின் முதலீட்டினைப் பெறுக்கிடும் நோக்குடனும், தகவல் தெழில்நுட்பவியல் நிறுவனங்களின் தேவைகேற்பவும், இராமநாதபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களை உருவாக்கிட தேவையான சாத்தியகூறுகள் கண்டறிந்து அதற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2. சென்னையில் நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் (Centre of Excellence of FinTech in Chennai) அமைத்தல்

நிதி துறையில் போட்டி, புதுமை, உற்பத்தி திறன் உருவாக்கிடவும் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும் ஒரு நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் சென்னையில் அமைக்கப்படும் (Centre of Excellence of FinTech in Chennai). இந்த நிதி தொழில்நுட்பம் பணம் இலக்கமாக்குதல் (Digitising money) மட்டுமல்லாமல் நாணய தரவையையும் (Monetising Data) ஏற்படுத்தும்.

இந்த நிதி தொழில்நுட்பம் அனைத்து வணிகத்தில் உதவிடும் வகையிலும் முக்கியமாக சிறு தொழில் வணிகத்திற்கு, சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களின்

பொருளாதார வளர்ச்சிக்கு மற்றும் வேலை வாய்ப்பினை மேம்படுத்திடவும் நிதி உதவி அளிக்கும்.

மத்திய அரசு, தமிழக அரசு மற்றும் துணிகர மூலதன நிதியம் (Venture Capital Fund) ஆகியவைகள் இணைந்து முறையே ரூ.5.75 கோடி, ரூ.5.75 கோடி மற்றும் ரூ.11.50 கோடி முதலீட்டில் ஒரு நிதி தொழில்நுட்பம் முதன்முறையாக சென்னையில் அமைக்கப்படும்.

**3. முதலமைச்சர் முகப்புப் பக்கம் (CM DASH BOARD)**

பல்வேறு துறைத் திட்டங்களின் வகையிலான முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளின் காட்சித் தோற்றத்திற்கு முன்முயற்சிக்கான முதலீட்டுத் திட்டமாக முதலமைச்சர் முகப்பு பக்கம் (CM DASH BOARD) உள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம், அனைத்து முக்கிய துறைகளிலும் செயல் திறனை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் திறம்பட கண்காணிக்க இயலும்.

இந்தத் திட்டமானது அனைத்து மாண்புமிகு அமைச்சர்களுக்கும் செயலாளர்களுக்கும் துறைத் தலைவரின் செயலாற்றலுக்கும் கோரிக்கை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டம் ரூ.122 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

**4. எல்காட் இ–மார்க்கெட் (ELCOT e-Market)**

“எல்காட் இ–மார்க்கெட்” (ELCOT e-Market), அரசுத் துறைகளுக்கு ஆன்லைன் வாயிலாக அனைத்து தகவல்

தொழில்நுட்பவியல் சார்ந்த வன்பொருள், மென்பொருள் மற்றும் சேவைகளை வழங்குகிறது. அரசுத் துறைகள் இந்த இணையவழி கொள்முதல் முறையைப் பயன்படுத்தி, எல்காட்டின் பதிவு பெற்ற விற்பனையாளர்கள் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளைத் தெரிவு செய்து, அதன் விபரங்களை அறிந்து, ஒப்பிட்டுப் பார்த்து, தங்களுக்குத் தேவையான பொருட்களின் விபரம் மற்றும் விலை அடிப்படையில் தெரிவு செய்து கொள்ளலாம். மேலும் உத்தேச விலைப் பட்டியல் (Proforma Invoice) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

எல்காட் இ–மார்க்கெட் மூலம் அரசுத் துறைகள் மற்றும் ஒப்பந்த விற்பனையாளர்கள் முன்னணி இ–காமர்ஸ் நிறுவனங்களுக்கு நிகரான சேவையைப் பெற்று பயன்பெறுவர்.

இத்திட்டம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் எல்காட் மூலம் செயல்படுத்தப்படும்.

**5. செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையதள பொருள் கருத்துக்களம்** (Artificial Intelligence (AI) and Internet of Things (IoT)-Tech Forum)

தமிழகத்தில், தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் துறையில் நூதன தொழில்நுட்பத்தை நிறுவனங்கள் மிகுந்த அளவில் பயன்படுத்த வேண்டியுள்ளதால் ஒரு தொழில் நுட்ப கருத்துக்கள வசதி (Tech Forum Facility) தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படும்.

இந்தத் தொழில் நுட்ப கருத்துக்கள வசதியினை உருவாக்குவதன் மூலம் தமிழகத்தில் செயற்கை நுண்ணறிவு

(Artificial Intelligence), இணைய தள பொருள் (Internet of Things), எந்திர கற்றல் (Machine Learning) மற்றும் மின்னனு வன்பொருள் தயாரித்தல் (Electronic Hardware Manufacturing) துறைகளில் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன் மிகுந்த அளவில் வேலை வாய்ப்புகளையும் அளிக்கும்

## 6. இணையவழியில் அனைத்து இ–சேவைகளை வழங்குதல்

மின் சேவைகள் பொதுச் சேவை மையங்கள் மூலமாக மட்டுமே வழங்கப்படுகின்றன. இந்தச் சேவையைப் பெற பொதுமக்கள் CSC மையங்களுக்கு வரவேண்டும்.

இப்போது நேரடியாக பொதுமக்களுக்கு கூடுதலாக ஆன்லைன் சேவையை வழங்குவதற்கு வழிவகை செய்யப்படும்.

இந்த வசதி மூலம் பொதுமக்கள் எந்தவொரு இடத்திலும் எந்த நேரத்திலும் (24x7) இச் சேவைகைளைப் பெற முடியும்.

## 7. இணைய வழி கணினித் தமிழ்ப் பாடத்திட்டம் (Online Tamil Computing Course)

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் தமிழ் மொழியைக் கணினிக்குக் கொண்டுசெல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ் இணையக் கல்விக்கழகம் கணினித்தமிழ்ப் பாடத்திட்டத்தினைப் பட்டயப் படிப்பாக (Diploma Course) இணைய வழியில் பயிற்றுவிக்கும். இதனால் மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் பயன்பெறுவார்கள். இப்பாடத்திட்டம் ரூ.20 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

## 8. அரசுத் துறைகளுக்கான தொழில்நுட்ப உதவி

தகவல் தொழில்நுட்பம், அரசு துறைகள் சிறந்த முறையில் இயங்குவதற்கான முதுகெலும்பாக விளங்குகிறது. இதற்காக தகவல் தொழில்நுட்பத் திறமை வாய்ந்த மனிதவளம் தேவைப்படுகிறது. இதனை நிறைவேற்றிடும் வகையில் மின் ஆளுமை இயக்குநரகம் தகவல் தொழில்நுட்பத் திறமை வாய்ந்த மனிதவளம் தேவைப்படும் அரசுத் துறைகளுக்கு தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பிலிருந்து (IT Cadre) பணியாளர்கள் வழங்கப்படும்.

## 9. மாவட்டங்களின் இணையதளங்களைத் தர நிலைப்படுத்துதல்

மாவட்டங்கள் தற்போது பயன்படுத்தி வரும் இணையதளங்களைத் தரநிலைப்படுத்தி அனைத்து மாவட்டங்களுக்கும் ஒரு சரிபார்க்கப்பட்ட உள்ளடக்க மேலாண்மை முறையுடன் ஒரு வலை தளத்தைச் செயல்படுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (TNeGA) வாயிலாகச் செயல்படுத்தப்படும்.

## 10. அனைத்து வலைத்தளங்களுக்கான பாதுகாப்பு தணிக்கை

அரசு துறைகளின் இணையதளங்களை உரிய கால இடைவெளியில் தணிக்கை செய்வது மிக அத்தியாவசியமாக உள்ளது. இதனால் சைபர் அட்டாக்கிலிருந்து வலை தளங்கள் பாதுகாக்கப்படும். எனவே, அனைத்து அரசு வலைத்தளங்களுக்கும் பாதுகாப்பு தணிக்கை செய்யப்படும்.

**11. பொதுமக்கள் விரும்பும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை உலகெங்கிலும் இருந்து பார்வையிட OTT (Over The Top) சேவை அறிமுகப்படுத்தப்படும்**

தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சந்தாதாரர்களுக்கு கூடுதலாக OTT (Over The Top) சேவை மூலம் தாங்கள் விரும்பும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், அரசின் பல்துறை சார்ந்த நிகழ்ச்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளை உலகில் எங்கிருந்தபடியும் மேக கணினியம் (Cloud Computing), அலைபேசி (Mobile), தொடுபலகை (Tablet), கணினி (Desktop Computer), மடிக்கணினி (Laptop) போன்ற பல்திரைகருவிகள் மூலம் கண்டுகளிக்கும் வசதி வழங்கப்படும். இச்சேவையின் மூலம், துவக்கத்தில் 50 முதல் 100 தொலைக்காட்சி சேனல்கள் வழங்கப்படும்.

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

### மானியக் கோரிக்கை எண் 4

**1. பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோ மூலம் செயல்படுத்துதல்.**

அரியலூர், கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, ஈரோடு, கன்னியாகுமரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், சேலம், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வாழும் பழங்குடி இன மக்கள் அவர்களின் திறனுக்கேற்ற வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிய ஏதுவாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சுய உதவிக் குழு பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், தொழில் முனைவோர் திட்டம், நில மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ரூ.10 கோடி மானியத்தில் 2018–2019 ஆம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

மேற்படி திட்டங்களை செயல்படுத்த ரூ.10 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

## 2. ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு பயோமெட்ரிக் வருகை முறையை அறிமுகப்படுத்துதல் (1,324விடுதிகள்).

இத்துறையின் கீழ் 1,324 ஆதி திராவிடர் நல விடுதிகள் இயங்கி வருகின்றன. ஆதி திராவிடர் நல விடுதிகளில் மாணாக்கர் தங்கி கல்வி பயில்வதை உறுதி செய்யும் பொருட்டும், உணவுக் கட்டணச் செலவு கோரிக்கை (claims) மாணாக்கரின் வருகையின் அடிப்படையில் உள்ளதா என்பதை உறுதி செய்திட ஏதுவாகவும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1,324 ஆதி திராவிடர் நல விடுதிகளிலும் பயோ மெட்ரிக் கருவிகள் ரூ.4.50 கோடி செலவில் பொருத்தப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.4.50 கோடி மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

## 3. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை நிலை உயர்த்துதல்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்டம் அரசமரத்துக் கொல்லை மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் சேராமரத்தூர் ஆகிய 2 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நீலகிரி மாவட்டம் தேவாலா, விழுப்புரம் மாவட்டம் கிளாக்காடு மற்றும் தருமபுரி மாவட்டம் கலசப்பாடி ஆகிய 3 அரசு பழங்குடியினர்

உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் ரூ.3.79 கோடி செலவில் நிலை உயர்த்தப்படும்.

மேற்படி திட்டத்தினை செயல்படுத்த ரூ.3.79 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**4. வேலூர் மாவட்டம், ஏலகிரி வட்டத்தில் பழங்குடியினர் நல மாணவியர் விடுதி கட்டுதல்.**

பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 12 மாவட்டங்களில் 18 பழங்குடியினர் நல மாணவியர் விடுதிகள் தற்போது இயங்கி வருகின்றன. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளை உள்ளடக்கிய வேலூர் மாவட்டத்தில் தற்போது இரண்டு பழங்குடியினர் நல மாணவர் விடுதிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. பழங்குடியின மாணவிகளுக்கென தனியாக இம்மாவட்டத்தில் விடுதிகள் ஏதுமில்லை. எனவே, பழங்குடியினப் பெண் குழந்தைகள் கல்வி கற்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்டம் ஏலகிரி மலை, அத்தனாவூரில் 50 பழங்குடியின பள்ளி மாணவியர் பயன்பெறும் வகையில் புதிய பழங்குடியினர் நல மாணவியர் விடுதி ரூ.1.35 கோடி செலவில் துவங்கப்படும்.

மேற்படி திட்டத்தினை செயல்படுத்த ரூ.1.35 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**5. மெய்நிகர் கலந்தாய்வு (Virtual Interactive Class Room) வகுப்புகள் நடத்திட நந்தனம் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப்பள்ளியில் காணொலி மையம் தொடங்குதல்.**

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வி மேம்பாட்டிற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 57 பள்ளிகளில் ஏற்கனவே இருக்கின்ற Smart Class வகுப்புகளை Virtual Interactive Class Room (VICR) ஆக மேம்படுத்தி, சென்னை மாவட்டம் நந்தனம் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடத் தொடக்கப் பள்ளியில் Master Virtual Class Room வகுப்புகள் நடத்துவதற்கான மையம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.1கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**6. பழங்குடியினப் போட்டித் தேர்வாளர்கள் அனைத்துப் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையில் பத்து மாவட்டங்களில் இலவச பயிற்சி மையம் அமைத்தல்.**

வேலைவாய்ப்பற்ற பழங்குடியின மக்கள் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் வேலையில் சேர்வதை ஊக்குவிக்கும் பொருட்டு TNPSC, UPSC, SSC, Railway, Bank, TRB ஆகியவற்றால் நடத்தப்படும்

போட்டித் தேர்வுகளுக்கு தங்களை தயார்படுத்திட ஏதுவாக, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, விழுப்புரம், நாமக்கல், திருவண்ணாமலை, தருமபுரி, வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய 10 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு தலா ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு இலவச பயிற்சி மையம் வீதம் 10 இலவச பயிற்சி மையங்கள் ரூ.1 கோடி செலவில் துவங்கப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.1 கோடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**7. ஆதி திராவிடர் நல உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி மற்றும் விளையாட்டை மேம்படுத்த அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல்.**

இத்துறையின் கீழ் இயங்கும் ஆதி திராவிடர் நல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர் கல்வி மற்றும் விளையாட்டில் முன்னேற்றம் அடைவதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக திருநெல்வேலி மற்றும் சேலம் மாவட்டங்களிலிருந்து தலா ஒரு ஆதி திராவிடர் நலப் பள்ளியை தெரிவு செய்து திருநெல்வேலி மாவட்டத்தில் அறிவுத்திறன் வளர்ச்சி சிறப்பு மையமும்

(Centre of Excellence in Academic), சேலம் மாவட்டத்தில் விளையாட்டுத் திறன் மேம்பாட்டு சிறப்பு மையமும் (Centre of Excellence in Sports) ஏற்படுத்தி, அப்பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் தலா ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.50 இலட்சம் மாநிலத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**8. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி மற்றும் விளையாட்டை மேம்படுத்த அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல்.**

இத்துறையின் கீழ் இயங்கும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர் கல்வி மற்றும் விளையாட்டில் முன்னேற்றம் அடைவதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முதற்கட்டமாக திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து தலா ஒரு பள்ளியை தெரிவு செய்து, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விளையாட்டு திறன் மேம்பாட்டு சிறப்பு மையமும் (Centre of Excellence in Sports), கோயம்புத்தூர் மாவட்டத்தில் அறிவுத்திறன் வளர்ச்சி சிறப்பு மையமும் (Centre of Excellence in Academic) ஏற்படுத்தி அப்பள்ளிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் தலா ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.50 இலட்சம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**9. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி மாணாக்கரிடையே பள்ளி, மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 106 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கிடையே பல்வேறு விளையாட்டு போட்டிகள் பள்ளி / மாவட்ட / மாநில அளவில் நடத்திடவும், கலந்து கொள்ளும் ஆசிரியர் மற்றும் மாணாக்கருக்கு விளையாட்டு உபகரணங்கள், போக்குவரத்துச் செலவினம், சிற்றுண்டி, ஆசிரியருக்கு ஊக்கத்தொகை, மாணாக்கருக்கு பரிசு மற்றும் இதர செலவினங்கள் ரூ.43.20 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.43.20 இலட்சம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

**10. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளி மாணாக்கரிடையே பள்ளி, மாவட்ட, மாநில அளவில் கட்டுரைப் போட்டி, பேச்சுப்போட்டி, ஒப்புவித்தல் போட்டி, வினாடி–வினா, பகுப்பாய்வுத் திறன் போட்டிகள் நடத்துதல்.**

அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர் கல்வியோடு பிற துறைகளிலும் சிறந்து விளங்குவதற்காக அவர் தம் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, பள்ளி / மாவட்ட / மாநில அளவில் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, ஒப்புவித்தல் போட்டி, வினாடி–வினா மற்றும் பகுப்பாய்வுத் திறன் (Analytical) போன்ற போட்டிகள் நடத்திடவும், பங்குபெறும் மாணாக்கர் மற்றும் ஆசிரியர்களுக்கு போக்குவரத்து செலவினம், சிற்றுண்டி, ஆசிரியருக்கு ஊக்கத்தொகை, மாணாக்கருக்கு பரிசு மற்றும் இதர செலவினங்கள் ரூ.22.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.22.10 இலட்சம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

## 11. பழங்குடியின மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டப் பயன்களைப் பெற Online மூலம் விண்ணப்பிக்க இணையதள வசதி ஏற்படுத்துதல்.

பழங்குடியின மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள் உரிய பயனாளிகளுக்கு கிடைக்கும் வகையிலும், அவர்கள் அரசு அலுவலகங்களுக்கு செல்வதில் ஏற்படும் காலவிரயத்தை தவிர்த்திடவும், பயனாளிகள் தேர்வில் வெளிப்படைத் தன்மையை அறிந்து கொள்ளவும், பொருளாதார மேம்பாட்டிற்கான அவர்தம் முன்னுரிமையினை அறிந்து கொள்ளவும், ஒருவரே பல திட்டங்களின் கீழ் பயனடைவதைத் தவிர்க்கவும், தகுதியின் அடிப்படையிலும், முதுநிலைப்படி பயனாளிகளை தேர்ந்தெடுக்கவும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஓர் இணையதளம் ரூ.8.50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்த ரூ.8.50 இலட்சம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்படும்.

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## தமிழ் வளர்ச்சி

### மானியக் கோரிக்கை எண் 46

**1. தமிழ்நாட்டிலுள்ள ஊர்ப் பெயர்கள் தமிழ் உச்சரிப்பைப் போன்றே ஆங்கிலத்திலும் அமைத்துச் செயற்படுத்த ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாட்டிலுள்ள ஊர்ப் பெயர்கள் தமிழ் உச்சரிப்பைப் போன்றே ஆங்கிலத்திலும் உதாரணமாக திருவல்லிக்கேணி என்பதை ட்ரிப்ளிகேன் எனக் குறிப்பிடாமல் திருவல்லிக்கேணி என்றே அமையவும் மேலும் இதுபோன்ற எண்ணற்ற ஊர்களின் பெயர்கள் ஆங்கிலத்திலும் அமையும் வகையிலும் உயர் நிலைக்குழு அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள கரிகாற்சோழன் கலையரங்கம் ரூபாய் 4 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்திலுள்ள கரிகாற்சோழன் கலையரங்கம்

மின் கட்டமைப்பு வசதியுடன் மேம்படுத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 4 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பழமையான கட்டடங்கள் ரூபாய் 3 கோடியே 50 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் சிறப்பு சீர்காப்பு செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 1981 முதல் 1993ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட கட்டடங்கள் சிறப்பு சீர்காப்பு செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 3 கோடியே 50 இலட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகச் சுற்றுச்சுவர் ரூபாய் 1 கோடியே 65 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழக வளாகச் சுற்றுச்சுவர் மூலிகைப் பண்ணையிலிருந்து சேரன் பெருவாயில் வரையிலும் காவல் நிலையத்திலிருந்து மேற்கு எல்லை வரையிலும் 1,730 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5. தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகளார் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தனித்தமிழில் படைப்புகள் அருகிவரும் நிலையில், தனித்தமிழில் படைப்புகளை உருவாக்கும் படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழறிஞர் ஒருவருக்கு மறைமலையடிகளார் பெயரில் விருது வழங்கப்படும். விருதுக்கான தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச் சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும். இவ்விருதிற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

## 6. தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரில் புதிய விருது தோற்றுவித்து ஆண்டுதோறும் வழங்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சமத்துவம், பொதுவுடமை, தமிழியல் ஆகியவற்றில் தனக்கெனத் தனிமுத்திரை பதித்த தகைமையாளர் தமிழறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் பெயரில் அவர்தம் இலட்சிய நோக்கோடு செயன்மையாற்றும் ஒருவருக்கு ஆண்டுதோறும் விருது வழங்கப்படும். விருதுக்கான தொகையாக ரூபாய் ஒரு இலட்சமும் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் தகுதிச் சான்றும் பொன்னாடையும் வழங்கப்பெறும்.

இவ்விருதிற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. எல்லைக் காவலர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூபாய் 4,000த்திலிருந்து ரூபாய் 4,500ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், தற்பொழுது திங்கள்தோறும் ரூபாய் 4 ஆயிரம் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூபாய் 4 ஆயிரத்து 500ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 12 இலட்சத்து 36 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 3,000த்திலிருந்து ரூபாய் 3,500ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், தற்பொழுது திங்கள்தோறும் ரூபாய் 3 ஆயிரம் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூபாய் 3 ஆயிரத்து 500ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக

ரூபாய் 41 இலட்சத்து 40 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. எல்லைக் காவலர்களின் மரபுரிமையருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூபாய் 2,000த்திலிருந்து ரூபாய் 2,500ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், அவர்தம் மரபுரிமையர்களுக்குத் தற்பொழுது திங்கள்தோறும் ரூபாய் 2 ஆயிரம் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை ரூபாய் 2 ஆயிரத்து 500ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 6 இலட்சத்து 36 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**10. தமிழறிஞர்களின் மரபுரிமையருக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூபாய் 1,500லிருந்து ரூபாய் 2,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், அவர்தம் மரபுரிமையர்களுக்குத் தற்பொழுது திங்கள்தோறும் ரூபாய் 1,500 உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இத்தொகை ரூபாய் 2,000ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 35 இலட்சத்து 16 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**11. தமிழ்ப் பல்கலைக்கழகச் சிறப்புத் துறையின்வழி ரூபாய் 50 இலட்சம் செலவில் சிறப்பக்கலைப் பயிற்சிக் கூடம் சுவாமி மலையில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக சிறப்புத் துறையின் வாயிலாகச் சிறப்பக் கலைப் பயிற்சிக் கூடம் சுவாமி மலையில் அமைக்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 20 இலட்சமும் தொடராச் செலவினமாக ரூபாய் 30 இலட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**12. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம் மின்னணு நூலகமாக (Digital Library) ரூபாய் 50 இலட்சம் செலவில் மாற்றி அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் மின்னணு நூலகமாக மாற்றம் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**13. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள அரிய நூல்களை மின்எண்மம் (Digitalize) செய்வதற்காக ரூபாய் 39 இலட்சத்து 34 ஆயிரம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள அரிய நூல்கள் கணினி அச்சாக்கம் மற்றும் மெய்ப்புத் திருத்தம் செய்யப்பட்டு ஒருங்குறி எழுத்து வடிவில் இணையத்தில் மின்எண்மம் செய்யப்படும். இதற்கென உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்குத் தொடராச் செலவினமாக ரூபாய் 39 இலட்சத்து 34 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**14. உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அளிக்கப்படும் தமிழ் ஆய்வேடுகளைத் தமிழாய்வு வலைத்தளத்தில் தொகுக்கும் பணிக்குத் தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சத்து 30 ஆயிரமும் தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சமும் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழியலில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டப் படிப்பு பயிலும் மாணவ, மாணவியர் பயன்பெறும் பொருட்டு உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அளிக்கப்படும் தமிழ் ஆய்வேடுகளைத் தொகுத்து தமிழாய்வு வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யும் பணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 7 இலட்சத்து

30 ஆயிரமும் தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. தமிழ் வளர்ச்சித் துறை சார்ந்த அலுவலகங்களுக்கு ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு பணிகளுக்காக ரூபாய் 1 கோடியே 54 இலட்சம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சித் துறை சார்ந்த அலுவலகங்களான தலைமைச் செயலகத்தின் தமிழ் வளர்ச்சி அலுவலகம், தமிழ் வளர்ச்சி இயக்ககம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மற்றும் அகர முதலித் திட்ட இயக்ககத்திற்கு உள்கட்டமைப்பு, தளவாடங்கள் மற்றும் பிற கருவிகள் வாங்குவதற்குத் தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**16. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகப் பனுவல் அரங்கம் ரூபாய் 40 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழக நூலகப் பனுவல் அரங்கம் மேம்படுத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**17. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நூல்கள் ரூபாய் 2 கோடி செலவில் மறுபதிப்பு செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ள நூல்களான களஞ்சியங்கள், சொல்லகராதிகள், கலை, இலக்கியம் சார்ந்த நூல்கள் மறுபதிப்பு செய்யப்படும். இதற்கென ரூபாய் 2 கோடி வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

**18. தமிழ் இலக்கிய வளம் குறித்து கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ள தமிழ்க்கூடல் எனும் பெயரில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் வாரந்தோறும் தமிழாய்வுக் கூட்டம் நடத்திட ஆண்டுக்கு ரூபாய் 6 இலட்சம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் ஒன்றுகூடி தமிழ்க்கூடல் எனும் பெயரில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் வாரந்தோறும் தமிழ் இலக்கிய வளம் குறித்து கருத்துப் பரிமாற்றம் மேற்கொள்ள தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. அயலகத் தமிழ்ப் படைப்புகள் ரூபாய் 5 இலட்சம் செலவில் மதுரை, உலகத் தமிழ்ச் சங்கத்தில் ஆவணப்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அயலகத் தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்புத் திறனை வெளிக்கொணரும் வகையில் அவர்களிடம் தொடர்பு கொண்டு அவர்தம் படைப்புகளை ஆய்வு செய்து தகவல்கள் திரட்டப்பட்டு ஆவணப்படுத்தப்படும். இப்பணி மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் மூலமாக மேற்கொள்ளப்படும். இதற்கென மூன்றாண்டிற்கான செலவினத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**20. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ரூபாய் 10 இலட்சம் செலவில் யோகா பயிற்சி மையம் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழக மெய்யியல் துறையின் வழி 400 மாணவர்கள் பயன்பெறும் வகையில் யோகா மையம் அமைக்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் தொடராச் செலவினமாக ரூபாய் 5 இலட்சமும் ஆக மொத்தம் ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**21. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மூலம் ரூபாய் 22 இலட்சம் செலவில் மியான்மர், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் தமிழ்ப் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், மியான்மர், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களுக்குத் தமிழ் மொழியில் பேச, எழுத கற்பித்தல் மற்றும் இளம் மாணவர்களுக்கான தமிழ்ப் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**22. தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாளான ஆகத்து 26ஆம் நாளன்று மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார் அவர்களின் தமிழ்ப் பணியைப் போற்றும் வகையில் அவருடைய பிறந்த நாளான ஆகத்து 26ஆம் நாளன்று (பிறந்த நாள் 26.08.1883) திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டத்தில் உள்ள அவர் பிறந்த ஊரான துண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு

ஆண்டுதோறும் மாலை அணிவித்து சிறப்பு செய்யப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**23. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் அவருடைய பிறந்த நாளான சூலை 15ஆம் நாளன்று மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகளார் அவர்கள் தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்துக்கும் ஆற்றிய பணியைப் போற்றும் வகையில் அவருடைய பிறந்த நாளான சூலை 15ஆம் நாளன்று காஞ்சிபுரம் மாவட்டம் பல்லவபுரத்தில் உள்ள அவரது நினைவு இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலை அணிவித்துச் சிறப்பு செய்யப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 20 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**24. பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் குறும்படங்கள் ரூபாய் 25 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ்த்தாய் ஊடக அரங்கில் காட்சிப்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பழந்தமிழர்களின்

சிறப்புகளை எடுத்துக்காட்டும் வகையில் பல்வேறு பொருண்மைகளில் 5 குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடத்தில் அமைந்துள்ள தமிழ்த்தாய் ஊடக அரங்கில் காட்சிப்படுத்தப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**25. சென்னைப் பல்கலைக்கழக இணைவகமான மெரினா வளாகத்தில் தொல்காப்பியர் சிலை நிறுவப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொல் தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தை யாத்த புலவர் பெருந்தகை தொல்காப்பியரை நினைவுகூரும் வகையில் அவருக்கு சென்னைப் பல்கலைக்கழக இணைவகமான மெரினா வளாகத்தில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் சிலை நிறுவப்படும்.

**26. முனைவர் மு. தமிழ்க் குடிமகன், முனைவர் மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, முனைவர் மு. தமிழ்க் குடிமகன், முனைவர் மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன். சவுரிராசன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள்

நாட்டுடைமையாக்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**27. குறள் பரிசு திட்டத்தின்கீழ் பரிசு பெறும் மாணவர் எண்ணிக்கை 50லிருந்து 70ஆக உயர்த்தி புதுப்பொலிவுடன் தொடர்ந்து நடைமுறைப்படுத்த ஆண்டுக்குக் கூடுதலாக ரூபாய் 5 இலட்சத்து 10 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, குறள் பரிசுத் திட்டத்தின்கீழ் பரிசு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 50லிருந்து 70ஆக உயர்த்தப்படும். இதற்கென ஆண்டுக்குக் கூடுதல் செலவினமாக ரூபாய் 2 இலட்சம் மற்றும் குறள் பரிசு, மாணவர்களைத் தெரிவு செய்யும் பணிக்குச் சில்லரைச் செலவினம், பரிசு வழங்கும் நிகழ்ச்சிச் செலவினம் சேர்த்து ஆண்டுக்கு ரூபாய் 3.10 இலட்சம் என மொத்தம் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சத்து 10 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**28. தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்கள் ஈமச்சடங்குத் தொகை ரூபாய் 1,000த்திலிருந்து ரூபாய் 5,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இந்திய விடுதலை போராட்டத்

தியாகிகளுக்கு வழங்கப்படுவதைப் போல தமிழறிஞர்கள் / எல்லைக் காவலர்களுக்கு ஈமச்சடங்குத் தொகை ரூபாய் 1,000/–த்திலிருந்து ரூபாய் 5,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**29. எல்லைக் காவலர், தமிழறிஞர், அகவை முதிர்ந்த தமிழறிஞர், மரபுரிமையர் மருத்துவப்படி ரூபாய் 100/–லிருந்து ரூபாய் 500/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, எல்லைக் காவலர், தமிழறிஞர், அகவை முதிர்ந்த தமிழறிஞர் மற்றும் அவர்தம் மரபுரிமையர்களுக்குத் திங்கள்தோறும் உதவித் தொகையுடன் வழங்கப்பட்டு வரும் ரூபாய் 100/– மருத்துவப்படி இவ்வாண்டு முதல் ரூபாய் 500/–ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 93 இலட்சத்து 60 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**30. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு வசதியாகத் தமிழ்த்தாய் நூல் விற்பனை ஊர்தி வாங்குவதற்கு ரூபாய் 9 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வெளியீடுகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு வசதியாகத் தமிழ்த்தாய் நூல் விற்பனை ஊர்தி வாங்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 9 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**31. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்திலுள்ள கட்டடங்கள் மற்றும் மின் பராமரிப்பு பணிக்காக ரூபாய் 8 இலட்சம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் உள்ள புதிய அலுவலகக் கட்டடம், விடுதிகள், பழைய கட்டடம், நூல் இருப்புக்கூடம், நூலகம் மற்றும் இணைப்புக் கட்டடங்கள் ஆகியவற்றிற்கான கட்டடம் மற்றும் மின் பராமரிப்புக்கு ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 8 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**32. சென்னை மாவட்ட ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பயிற்சிக்கு வழங்கப்படும் செலவினத் தொகை ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மாவட்ட அரசுப் பணியாளர்களுக்கு ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் குறித்து ஆண்டுதோறும் நடத்தப்பட்டு

வரும் 5 பயிற்சி வகுப்புகளுக்கான செலவினத் தொகை ரூபாய் 1 இலட்சத்திலிருந்து 1 இலட்சத்து 50 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 50 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**33. தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடுகளை இணையத்தில் சேர்க்க ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் வளர்ச்சித் துறையின் வெளியீடுகளான ஆட்சிச் சொல்லகராதி, அயற் சொல்லகராதி, இணைச் சொல் எதிர்ச்சொல் அகராதி ஆகியன தேடுதல் வசதியுடன் இணையத்தில் சேர்க்கப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**34. ஆசியா உள்ளிட்ட பிற பகுதிகளிலிருந்து அறிஞர் பெருமக்களால் வெளியிடப்பெறும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குவதற்கென்று ரூபாய் 2 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அமெரிக்கா, ஆசியா, ஐரோப்பா மற்றும் பிற பகுதிகளிலிருந்து அறிஞர் பெருமக்களால் வெளியிடப்பெறும் நூல்களுள் சிறந்தவற்றிற்கு

வெளிநாட்டுப் படைப்பிலக்கியங்கள் தலைப்பில் உலகத் தமிழ்ச் சங்கம் வாயிலாகப் பரிசுத் தொகை வழங்கப்படும் இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 2 இலட்சத்து 40 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**35. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள அரியவகை ஓலைச் சுவடிகளை மின்எண்மம் செய்திட ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சுவடி பாதுகாப்பு மையத்திலுள்ள அரியவகை சுவடிக் கட்டுகளும், தாள் சுவடிகளும், அரிய நூல்களும் மற்றும் களப்பணி வாயிலாகத் தொடர்ந்து தேடித்திரட்டும் சுவடிகளும் மின்எண்மம் செய்யப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**36. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்திற்குக் கருவி நூல்கள் வாங்குவதற்கு ரூபாய் 2 இலட்சம் வழங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டப் பணிகளின் பயன்பாட்டிற்குக் கருவி நூல்கள் வாங்கப்படும். இத்திட்டத்திற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**37. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட தமிழ்க் கலைக்கழகம் ரூபாய் 1 இலட்சத்து 56 ஆயிரம் செலவில் புதுப்பிக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தில் செயல்பட்டுவரும் தமிழ்க் கலைக்கழகத்தைப் புதுப்பித்தும் ஆயிரம் தமிழ்க் கலைச் சொற்களை வடிவமைத்தும் வெளியிடுவதற்குத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 1 இலட்சத்து 56 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**38. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்தில் உள்ள அரிய நூல்கள் ரூபாய் 10 இலட்சம் செலவில் மின்னாக்கம் (Digitalization) செய்யப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத்திலுள்ள அரிய நூல்கள் மின்னாக்கம் செய்யப்படும். இதற்கெனத் தொடராச் செலவினமாக ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**39. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி உருவாக்கப்பட்டு இணையத்தில் வெளியிடப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சங்க இலக்கியங்கள் முதல் இக்கால இலக்கியங்கள், உரைநடைகள் வெளியீடுகளிலுள்ள சொற்களைப் பிறர் உதவியின்றி பள்ளி, கல்லூரி மாணவர்கள் தனித்துப் படித்துப் புரிந்துகொள்ளத்தக்க வகையில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக மூலம் மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

**40. அன்றாட பயன்பாட்டில் உள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் தொகுக்கப்பட்டு நூலாக வெளியிடப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அன்றாட வழக்கில் பயன்பாட்டிலுள்ள பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வாயிலாகத் தொகுக்கப்பட்டு நூலாக எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

**41. அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை 50–லிருந்து 100 –ஆக உயர்த்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் தற்பொழுது, ஆண்டுதோறும் 50 பேர் தெரிவு செய்யப்பட்டு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு 50 பேர் என்பதை 100 பேராக உயர்த்தப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ரூபாய் 15 இலட்சத்து 60 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

**42. அயலகத் தமிழ் இதழ்களும், மின்னிதழ்களும் ரூபாய் 5 இலட்சம் செலவில் ஆவணப்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அயலகத் தமிழர்களால் வெளியிடப்பட்ட, வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் இதழ்களும், மின்னிதழ்களும் கண்டறியப்பட்டு மதுரை, உலகத் தமிழ்ச் சங்கம் மூலமாக ஆவணப்படுத்தப்படும். இதற்கென மூன்றாண்டிற்கான செலவினத் தொகையாக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**43. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் நடைமுறைத் தமிழ்ப் பேரகரமுதலி உருவாக்கப்பட்டு அச்சிட்டு வெளியிடப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ் மக்களின் இல்லங்கள், அலுவலகம், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், சிறுகதை, புதினம், இலக்கியம் மற்றும் புதுப்பாடல்களில் பயன்படுத்தப்பெறும் நடைமுறைச் சொற்கள் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வாயிலாத் தொகுக்கப்பட்டு 400 பக்கங்களைக் கொண்ட தொகுதியாக நடைமுறைத் தமிழ்ப் பேரகரமுதலி உருவாக்கப்பட்டு எழுதுபொருள் அச்சுத் துறையின் மூலம் அச்சிட்டு வெளியிடப்படும்.

**44. இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை மாணவர்களுக்குத் தமிழ் இலக்கிய வினாடி வினா நடத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஆண்டுதோறும் நடத்தப்பெறும் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களிடையே தமிழ் இலக்கிய வினாடி வினா நடத்தி பரிசுகள் வழங்கப்படும். இதற்கெனத் தொடர் செலவினமாக ஆண்டுக்கு ரூபாய் 30 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## கலை மற்றும் பண்பாடு அருங்காட்சியகங்கள் தொல்லியல்

### மானியக் கோரிக்கை எண் 29

**1. கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

கோயம்புத்தூர், ஈரோடு திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களை உள்ளடக்கி கோயம்புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மண்டலக் கலை பண்பாட்டு மையத்திற்கு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோயம்புத்தூர் மாவட்டம் மலுமிச்சம்பட்டியில் அமைந்துள்ள, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் புதிய கட்டடம் கட்டுவதற்கு, தொடராச் செலவினமாக ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. மதுரை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்**

மதுரை, பசுமலையில் இயங்கி வரும் தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில், குரலிசை, நாதசுரம், வயலின், வீணை, மிருதங்கம், புல்லாங்குழல், பரதநாட்டியம், நாட்டுப்புறக்கலை, தவில் மற்றும் இசை ஆசிரியர் பயிற்சிக்கான பட்டயப் படிப்புகளும், குரலிசையில் இளங்கலை பட்டப்படிப்பும்

பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் மற்றும் இடவசதியினை கருத்தில் கொண்டு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மதுரை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுதல்**

வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் புதுக்கோட்டை மாவட்ட அரச இசைப் பள்ளியில், குரலிசை, நாதசுரம், தவில், தேவாரம், பரதநாட்டியம், வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய பிரிவுகளில் மூன்றாண்டு சான்றிதழ் பயிற்சியும், மாவட்ட ஜவகர் சிறுவர் மன்ற வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. இசைப்பள்ளி மற்றும் ஜவகர் சிறுவர் மன்றத்தில் பயிலும் மாணாக்கர்களின் கல்வி நலன் கருதி, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வட்டத்தில் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு, தொடராச் செலவினமாக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. தமிழக பாரம்பரியக் கலைகளை பாதுகாத்து வளர்த்திடும் வகையில் மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு நிதியுதவி வழங்குதல்**

தமிழகத்தின் பல்வேறு கலை வடிவங்களை வளர்க்கவும், தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையான

கலைஞர்கள் மற்றும் இளைஞர்களை கண்டறிந்து ஊக்கப்படுத்தவும், மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்படும் மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திடவும், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒரு மாவட்டத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம், 32 மாவட்டங்களுக்கு தொடரும் செலவினமாக ரூ.64 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

**5. நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் ஒரு மொத்த நிதியொதுக்கத்தினை ரூ.100 இலட்சத்திலிருந்து ரூ.300 இலட்சமாக உயர்த்தி வழங்குதல்.**

தமிழக பாரம்பரியக் கலைகளை பாதுகாக்கவும், கலைஞர்களை ஊக்குவிக்கவும், மக்களிடையே பண்பாடு சார்ந்த விழிப்புணர்வை மேம்படுத்திடவும், பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் தமிழ் பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்திடவும், கிராமியக் கலைஞர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில் கிராமியக் கலை விழாக்களை அனைத்து மாவட்டங்களில் நடத்திடவும் முயற்சிகளை எடுத்துவரும் கலை பண்பாட்டுத் துறையின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் வகையில், 2013–2014ஆம் ஆண்டு வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு மொத்த நிதியொதுக்கமான ரூ.100 இலட்சத்தினை, இதயதெய்வம்

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.300 இலட்சமாக உயர்த்தி வழங்க, தொடரும் செலவினமாக ரூ.200 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. ஓவிய நுண்கலைக்குழு மூலம் நடத்தப்படும் தனிநபர் கலைக்காட்சி மற்றும் கூட்டுக் கலைக்காட்சிக்கு வழங்கப்படும் நல்கையினை உயர்த்தி வழங்குதல்.**

தமிழ்நாட்டில் உள்ள ஓவிய, சிற்பக் கலைஞர்களின் கலைத்திறமைகளை வெளிப்படுத்த, அவர்களின் கலைப் படைப்புகளை காட்சிப்படுத்தி, தனியாக கலைக்காட்சி நடத்திட, தற்போது 4 கலைஞர்களுக்கு தலா ரூ.7,500 வீதமும், கூட்டுக் கலைக்காட்சி நடத்திட, இரண்டு கலைக்குழுக்களுக்கு தலா ரூ.15,000 வீதமும் என மொத்தம் ரூ.60,000 தொடரும் செலவினமாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வரும் நல்கைத் தொகையினை, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். அதன்படி, தனிநபர் கலைக்காட்சி நடத்திட 10 கலைஞர்களுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.2.50 இலட்சமும், கூட்டுக் கலைக்காட்சி நடத்திட 5 கலைக் குழுக்களுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.2.50 இலட்சமும் வழங்கப்படும். இதற்கென கூடுதலாக, தொடரும் செலவினமாக, ரூ.4.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. உலக நாட்டிய தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் செவ்வியல், நாட்டுப்புற நடனக் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்**

உலக நாட்டிய தினம் (International Dance Day) ஏப்ரல் 29 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாடும் விதமாக, மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம் வாயிலாக, செவ்வியல் மற்றும் கிராமிய நடனங்கள் (Classical and Folk Dance) ஆண்டுதோறும் நடத்த, தொடரும் செலவினமாக, ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. உலக இசை தினத்தை முன்னிட்டு இசை நிகழ்ச்சிகள் மற்றும் இசைப்போட்டிகள் நடத்துதல் மற்றும் படைப்பாற்றல் மிக்க இசை நகரமாக சென்னை மாநகரை, யுனெஸ்கோ அறிவித்ததை முன்னிட்டு சென்னையில் இசை விழா நடத்துதல்**

உலக இசை தினம் (World Music Day) ஜூன் 21 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாடும் விதமாக, அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் மாவட்ட அரசு இசைப்பள்ளிகள்

வாயிலாக, ஆண்டுதோறும் இசை நிகழ்ச்சிகள் மற்றும் இசைப்போட்டிகள் ரூ.11.50 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

யுனெஸ்கோ, படைப்பாற்றல் மிக்க இசை நகரமாக சென்னை மாநகரை அறிவித்ததை முன்னிட்டு, கலை பண்பாட்டுத் துறை சார்பாக, ஆண்டுதோறும் ரூ.10 இலட்சம் செலவில் சென்னையில் இசை விழா நடத்தப்படும்.

இதற்கென தொடரும் செலவினமாக ஒட்டுமொத்தமாக ரூ.21.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. உலக நாடக தினத்தை முன்னிட்டு நாடகங்களை மேடையேற்றம் செய்தல்**

உலக நாடக தினம் (World Theatre Day) மார்ச் 27 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாடும் விதமாக, மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் மற்றும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தில் மூலம் புராண, இதிகாச, தமிழ் காப்பியங்கள், இலக்கியம், வரலாறு, சமூக, நாட்டுப்புற, மவுன மற்றும் இசை நாடகங்களை மேடையேற்றம் செய்திட, ஆண்டுதோறும் தொடரும் செலவினமாக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 10. கலை பண்பாட்டு இயக்ககம் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களின் அலுவலகப் பயன்பாட்டிற்கு உபகரணங்கள் வாங்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு அலுவலகத் தளவாடங்கள் ரூ.4 இலட்சம் செலவிலும், கணினிகள், பிரிண்டர்கள் ரூ.4 இலட்சம் செலவிலும், மண்டலக் கலை பண்பாட்டு மையங்களுக்கு கணினிகள், பிரிண்டர்கள் ரூ.7 இலட்சம் செலவிலும், சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக்கல்லூரிகள், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம், நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய அலுவலகப் பயன்பாட்டிற்கு ஒளியச்சு இயந்திரங்கள் ரூ.4 இலட்சம் செலவிலும் புதிதாக வாங்கிட, தொடராச் செலவினமாக ஒட்டுமொத்தமாக ரூ.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 11. சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியின் சுடுமண் வடிவமைப்பு (Industrial Design in Ceramic) பிரிவிற்கு புதிய மின்சூளை (Electric Kiln) வாங்குதல்

கலை பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கும் சென்னை, அரசு கவின்கலைக் கல்லூரியின் சுடுமண் வடிவமைப்புப் பிரிவில், நான்காண்டு இளங்கலை பட்டப்படிப்பும், இரண்டாண்டு முதுகலை பட்டப்படிப்பும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. சுடுமண் துறை மாணவர்கள் கலைப்படைப்புகளுக்கு முழு வடிவம் கொடுக்கும் வகையில், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, புதிய மின்சூளை (Electric Kiln) வாங்கிட, தொடராச் செலவினமாக ரூ.19.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**12. சென்னை, கும்பகோணம் அரசு கவின் கலைக்கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு பயிற்சிப் பொருட்கள் வாங்குவதற்கான நிதி ஒதுக்கத்தினை இருமடங்காக உயர்த்தி வழங்குதல்**

சென்னை, கும்பகோணம் அரசு கவின்கலைக் கல்லூரிகள் மற்றும் மாமல்லபுரம் அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரியில் பயிலும் மாணாக்கர்களின் வகுப்பறை பயிற்சிக்காகவும், பல்கலைக்கழக தேர்வுக்கான செயல்முறை பயிற்சிக்காகவும், பயிற்சிப் பொருட்கள் வாங்குவதற்காக, ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை முறையே, ரூ.4.75 இலட்சம் மற்றும் ரூ.3 இலட்சத்தினை, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இரு மடங்காக உயர்த்தி வழங்கிட, தொடரும் செலவினமாக, கூடுதலாக ரூ.7.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**13. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்படும் கலைப் பரிமாற்றத் திட்டத்திற்கான நல்கையினை உயர்த்தி வழங்குதல்**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்படும் மாநிலங்களுக்கிடையேயான கலைக்

குழுக்கள் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், பல்வேறு மாநிலங்களின் கலைஞர்கள் தமிழகத்திற்கு வந்து கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்துவதற்கும், தமிழக பாரம்பரியக் கலைகளான இயல், இசை, நாட்டியம், நாடகம் மற்றும் கிராமியக் கலைகளில் ஈடுபட்டுள்ள தமிழகக் கலைஞர்கள் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்துவதற்கும் ஆண்டுதோறும் வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நல்கைத் தொகையான ரூ.2 இலட்சத்தினை, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.15 இலட்சமாக உயர்த்தி வழங்கிட, தொடரும் செலவினமாக, கூடுதலாக, ரூ.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 14. அரிய கலை நூல்களை பதிப்பித்து வெளியிடுவதற்கு இயல், இசை, நாடக மன்றத்திற்கு நல்கை வழங்குதல்

தமிழகத்தில் கலை சார்ந்த நூல்களை எழுதும் நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கலைகள் சார்ந்த, கருத்தாழமிக்க, தகுதியுள்ள அரிய கலை நூல்களை, தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் பதிப்பித்து வெளியிட, தொடராச் செலவினமாக, ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. ஜவகர் சிறுவர் மன்றம் (Jawahar Bal Bhavan) மூலம் நடத்தப்படும் மாவட்ட, மாநில அளவிலான கலைப் போட்டிகளுக்கான நல்கையினை உயர்த்தி வழங்குதல்**

தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் 5 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட சிறார்களிடையே கலை ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையில், குரலிசை, ஓவியம், பரதநாட்டியம் மற்றும் நாட்டுப்புற நடனம் ஆகிய கலைப் பிரிவுகளில் நடத்தப்படும் மாவட்ட, மாநிலக் கலைப் போட்டிகளுக்கு, ஆண்டு வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் நல்கைத் தொகையான ரூ.5.70 இலட்சத்தினை, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ரூ.14 இலட்சமாக உயர்த்தி வழங்கிட, தொடரும் செலவினமாக, கூடுதலாக ரூ.8.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**16. தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் மாநில அளவிலான கோடைக்கால மற்றும் குளிர்கால கலைப்பயிற்சி முகாம் மற்றும் மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாம் நடத்துவதற்கான நல்கையினை உயர்த்தி வழங்குதல்**

தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் ஆண்டுதோறும் கோடைக்கால மற்றும் குளிர்கால விடுமுறைகளில் நடத்தப்படும் மாநில அளவிலான முகாம்களில் பரதநாட்டியம், குரலிசை, ஓவியம், கைவினை, நாட்டுப்புறக்கலை, யோகா, தற்காப்புக்கலை, சிலம்பம் ஆகிய கலைப்பயிற்சிகளை இளம் சிறார்கள் 10 நாட்கள் தங்கி

கற்றிட, ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நல்கைத் தொகையான ரூ.4 இலட்சத்தினை ரூ.8 இலட்சமாகவும், மாநில அளவிலான கைவினை கலைப்பயிற்சி முகாமில் இளம் சிறார்கள் 10 நாட்கள் தங்கி கற்றிட, ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் நல்கைத் தொகையான ரூ.2.40 இலட்சத்தினை ரூ.4 இலட்சமாகவும், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி உயர்த்தி வழங்கப்படும்.

இதற்கென தொடரும் செலவினமாக, கூடுதலாக ரூ.5.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**17. உலக ஓவிய தினத்தை முன்னிட்டு ஜவகர் சிறுவர் மன்றம் வாயிலாக ஓவிய கலைக்காட்சி மற்றும் முகாம் நடத்துதல்**

உலக ஓவிய தினம் (World Art Day) ஏப்ரல் 15 அன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாடும் விதமாகவும், படைப்பாற்றல் திறனை மேம்படுத்திடும் நோக்கத்திலும், ஜவகர் சிறுவர் மன்றம் வாயிலாக, ஓவியப் பயிற்சி முகாம்கள் மற்றும் ஓவிய கலைக்காட்சிகள் நடத்திட, தொடரும் செலவினமாக, ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

# அருங்காட்சியங்கள் துறை

**1. சென்னை அரசு அருங்காட்சியகத்தில், வளர்கலைக் கூடத்தின் தரைத் தளத்தில் நிரந்தர கண்காட்சிக் கூடம் அமைத்தல்**

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியத்தின் வளர்கலைக் கூடத்தின் தரைத் தளத்தில், புதிய காட்சிப் பெட்டிகள், காட்சிப் பலகைகள் மற்றும் நவீன மின்னொளி விளக்குகள் அமைத்து, பல்வேறு பிரிவுகளில், சேகரிப்பில் உள்ள காட்சிப் பொருட்களை காட்சிப்படுத்த, ஒரு நிரந்தர கண்காட்சிக் கூடத்தை அமைக்க, தொடராச் செலவினமாக ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. சென்னை அரசு அருங்காட்சியக மானிடவியல் பிரிவில் இசைக் கருவிகளுக்கான தனித்த காட்சிக் கூடம் அமைத்தல்**

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்தின் மானிடவியல் பிரிவில், சேகரிப்பில் உள்ள பண்டைய இசைக் கருவிகளை தனித்த காட்சிக் கூடமாக காட்சிப்படுத்த, தொடராச் செலவினமாக ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3. சென்னை மற்றும் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில் கருத்தியலான சிறப்பு கண்காட்சிகள், ஆய்வரங்கங்கள், சொற்பொழிவுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மற்றும் மாவட்ட அரசு அருங்காட்சியகங்களில், காட்சிப்படுத்தப்பட்டுள்ள சுட்டுப்பொருட்கள் பற்றிய தகவல்களை, அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், கருத்தியலான சிறப்புக் கண்காட்சிகள், ஆய்வரங்கங்கள், சொற்பொழிவுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்திட, தொடரும் செலவினமாக ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 4. சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு வரும் பார்வையாளர்கள் பயன்பெற காணொளி கேட்டொலியுடன் கூடிய செயலியினை (Audio – Video Museum App.) உருவாக்குதல்

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு வரும் பார்வையாளர்கள், காட்சிக் கூட விவரங்களை முன்னரே அறிந்து பயன்பெற, காணொளி கேட்டொலியுடன் கூடிய செயலியினை (Audio – Video Museum App.) உருவாக்க, தொடராச் செலவினமாக ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5. தேனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் புதிய மாவட்ட அரசு அருங்காட்சியகங்கள் அமைத்தல்

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, அருங்காட்சியகங்கள் துறையின் கீழ், மாவட்டத்திற்கு ஓர் அரசு அருங்காட்சியகம் அமையப்பெற வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடு, தேனி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில், புதிய அரசு அருங்காட்சியகங்கள் அமைக்க, தொடராச் செலவினமாக தலா ரூ.100 இலட்சம் வீதம், ரூ.200 இலட்சமும், தொடரும் செலவினமாக தலா ரூ.30 இலட்சம் வீதம், ரூ.60 இலட்சம் ஆக மொத்தம் ரூ.260 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 6. புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் உதகமண்டலம் ஆகிய நான்கு அரசு அருங்காட்சியகங்களை முழுமையாக மேம்படுத்துதல்

இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்ட அரசு அருங்காட்சியகங்களை முழுமையாக மேம்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு, புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் உதகமண்டலம் ஆகிய நான்கு அரசு அருங்காட்சியகங்களின் பாரம்பரிய கட்டடங்களை முழுமையாக மீட்டுருவாக்கம் செய்தல் மற்றும் காட்சியமைப்புகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.1,116.35 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

# தொல்லியல் துறை

**1. தொல்லியல் துறையின் 91 பாதுகாக்கப்பட்ட சின்னங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள சிறப்பு நிதி வழங்குதல்**

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 91 பாதுகாக்கப்பட்ட சின்னங்களை, தொல்லியல் விதிமுறைகளின்படி, பழமை மாறாமல், பாதுகாத்து அவற்றை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்வதற்கு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது இன்றியமையாததாகும். இந்த உயரிய நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 91 பாதுகாக்கப்பட்ட சின்னங்களை, பாதுகாப்பதற்கும் மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கும், 2018–2019ஆம் நிதியாண்டு முதல், ஆண்டுதோறும், தொடரும் செலவினமாக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களில் காவல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளும் 50 பணியாளர்களுக்கு நிலை ஊதியம் வழங்குதல்**

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட சின்னங்களை தொன்மை மாறாமல் பாதுகாப்பது மிக அவசியமாகும். வரலாற்றுச் சின்னங்களை

சேதப்படுத்துதல், ஊறு விளைவித்தல், ஊனப்படுத்துதல் போன்ற செயல்பாடுகளை தவிர்க்க ஏதுவாக, காவல் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள, 50 பணியாளர்களுக்கு நிலை ஊதியமாக (Fixed Pay) மாதம் ஒன்றுக்கு ரூ.5,000/– வீதம், 2018 –2019 ஆம் நிதியாண்டு முதல் வழங்க, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடரும் செலவினமாக ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3. தொல்லியல் துறையின் கீழ் உள்ள 14 அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் சிறப்பு நூலகம் அமைத்தல்

தொல்லியல் துறையில், 39 வரலாற்று சிறப்பு வாய்ந்த இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டு, பண்டைய தமிழர்களின் கலை, கலாச்சாரம் மற்றும் வளத்தினை பிரதிபலிக்கும் தொல்பொருட்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டின் 14 அகழ்வைப்பகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இந்த 14 அகழ்வைப்பகங்களில் தமிழர்களின் தொன்மையை பறைசாற்றும், வல்லுநர்களின் பழமையான அரிய நூல்களையும், தொல்லியல் துறையின் வெளியீடுகளையும், கொண்ட சிறந்த நூலகங்களை அமைப்பதற்கு தொடராச் செலவினமாக, ரூ.12 இலட்சமும். அகழ்வைப்பகங்களை மேம்படுத்துதல்

மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளுக்காக தொடரும் செலவிமாக, ஆண்டுதோறும் ரூ.8 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மேலும், இந்த சிறப்பு நூலகங்களின் பராமரிப்பிற்காக தொடரும் செலவினமாக, 2019–2020ஆம் நிதியாண்டு முதல், ரூ.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. உலக மரபு நாள் (ஏப்ரல் 18), உலக மரபு வாரம் (நவம்பர் 19 முதல் 25 வரை) சிறப்பாக கொண்டாடுவதற்கு சொற்பொழிவுகள், பயிற்சிப் பட்டறைகள் போன்ற நிகழ்ச்சிகள் நடத்துதல்**

தொல்லியல் துறையில், ஒவ்வோர் ஆண்டும், ஏப்ரல் மாதம் 18 அன்று உலக மரபு நாள் மற்றும் நவம்பர் மாதம் 19 முதல் 25 வரை, உலக மரபு வாரம் கொண்டாடப்படுகிறது. உலக மரபு நாள் மற்றும் உலக மரபு வார விழாக்களில், தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சிப் பட்டறைகள், போட்டிகள், கருத்தரங்குகள், விரிவுரைகள், சிறப்புப் பயிற்சிகள் ஆகியவை, அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர் சமூகம் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடத்திட, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2018–2019ஆம் நிதியாண்டு முதல், ஆண்டுதோறும், தொடரும் செலவினமாக, ரூ.15 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 5. கல்வெட்டுப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு நவீன முறையில் பயிற்சி அளித்திட திறன்மிகு வகுப்பறை அமைத்தல்

தொல்லியல் துறையில் தலைமை அலுவலகத்தில், 1974ஆம் ஆண்டு முதல் இயங்கிவரும், கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில், ஆண்டுதோறும், 8 மாணவர்களுக்கு, “கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்” என்ற ஓராண்டு முதுநிலை பட்டய வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது. இம்மாணவர்களுக்கு, புதிய தொழில்நுட்பத்துடன் செய்முறை விளக்கம் மற்றும் காணொலி விளக்கக் காட்சிகளுடன், நவீன முறையில், பயிற்சி வகுப்புகள் திறம்பட நடத்துவதற்கு, திறன்மிகு வகுப்பறை (Smart Class) அமைத்திட, இதயதெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தொடராச் செலவினமாக ரூ.9 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 6. தொல்லியல் துறையின் வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் அகழ்வைப்பகங்களில் தீயணைப்பு கருவிகள் பொருத்துதல்

தமிழ்நாட்டில் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள தொன்மையான கலை, கட்டடம், ஓவியங்கள், சிற்பங்கள் ஆகிய மரபுசார் வளங்களைக் கொண்ட 91 பாதுகாக்கப்பட்ட சின்னங்களையும், பண்டையத் தமிழர்களின், பண்பாட்டு எச்சங்களாக விட்டுச் சென்ற தொல்பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 14 அகழ்வைப்பகங்களையும், இயற்கை அல்லது செயற்கை விபத்துகளில் இருந்து எந்தவித சேதாரமும் இன்றி பாதுகாப்பது

அவசியம் என்பதால், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களில் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இவ்விடங்களில் தீயணைப்பு கருவிகள் அடைக்க, தொடராச் செலவினமாக ரூ.6.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தின் முதுநிலை பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாதாந்திர ஊக்கத் தொகையினை உயர்த்தி வழங்குதல்.**

தொல்லியல் துறையில் 1974ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில், இதுவரை, 234 மாணவர்களுக்கு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் முதுநிலை பட்டயம் வழங்கப்பட்டுள்ளது. தொல்லியல் துறையில் கல்வெட்டு, அகழாய்வு மற்றும் தொல்லியல் தொடர்பான பாடங்களை கற்பித்தும், கள ஆய்வு மற்றும் நேரடி பயிற்சிகளின் மூலம் சீரிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றது. இம்மாணவர்களின் கல்வி நலன் கருதியும், தொல்லியல் மீதான ஆர்வத்தினை ஊக்கப்படுத்தும் நோக்கிலும், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாதாந்திர ஊக்கத் தொகையினை, ரூ.2,000த்திலிருந்து, ரூ.4,000ஆக உயர்த்தி வழங்கிட, தொடரும் செலவினமாக, ரூ.1.92 இலட்சம், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

# ஊரகத் தொழில்துறை

## பட்டுவளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

### மானியக் கோரிக்கை எண் 18

**1. உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல்**

உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2018–2019ஆம் ஆண்டில், ஒரு ஏக்கருக்கு 10,500 ரூபாய் வீதம் 3,500 ஏக்கரில் மல்பெரி நடவு செய்திட மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 367.50 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

**2. மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க உதவித்தொகை வழங்குதல்**

நீர் ஆதாரங்களை சிக்கனமாகப் பயன்படுத்தி, நீர் நிருவாகத்தை மேம்படுத்தும் வகையில், 2018–2019ஆம் ஆண்டில், 1,000 ஏக்கர் பரப்பிலான மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு உதவிடும் நோக்கில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 250 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 3. பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல்

சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, பட்டுக்கூடு உற்பத்தி செய்யவும், பட்டுக்கூடுகள் தரத்தினை உயர்த்திடவும் தனித்தனி புழுவளர்ப்புக் குடில்கள் அமைப்பதற்கு ஒவ்வொன்றிற்கும், அதன் பரப்பிற்கேற்ப முறையே **63,000** ரூபாய் அல்லது **82,500** ரூபாய் அல்லது **87,500** ரூபாய் வீதம் **2018–2019**ஆம் ஆண்டில், **800** பட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி **648.50** இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 4. நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் / பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல்

வெண்பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம், உற்பத்தி திறன் அதிகரித்திட, **2018–2019**ஆம் ஆண்டில், **1,000** விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்க மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி **525** இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 5. வெண்பட்டு முட்டை தொகுதிகளுக்கு போக்குவரத்து செலவினத் தொகை வழங்குதல்

விவசாயிகளிடையே வெண்பட்டு முட்டை வளர்ப்பினை ஊக்குவிக்கவும், மாநில அரசு உற்பத்தி செய்யும் வெண்பட்டு

முட்டைத் தொகுதி விநியோகத்தினை அதிகரித்திடவும், 2018–2019ஆம் ஆண்டில், 30 இலட்சம் வெண்பட்டு முட்டை தொகுதிகளுக்கு போக்குவரத்து செலவினத் தொகையாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

**6. இருசுழற்சி இன வெண்பட்டு நூலுக்கு ஊக்குதவித் தொகை வழங்குதல்**

வெண்பட்டு நூலின் தரம், உற்பத்தி அதிகரித்திட 2018–2019ஆம் ஆண்டில் தரமான வெண்பட்டு நூல் உற்பத்தி செய்யும் பட்டு நூற்பாளர்களுக்கு கிலோ ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 20,000 கிலோகிராம் வெண்பட்டு நூலுக்கு 20 இலட்சம் ரூபாய் ஊக்குதவித் தொகை வழங்கப்படும்.

**7. சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்**

2018–2019ஆம் ஆண்டில் வெண்பட்டுக்கூடுகள் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பங்களை கடைபிடித்து, 100 பட்டு முட்டைத்தொகுதிகளுக்கு 80 கிலோகிராம் மற்றும் அதற்கு மேல் உற்பத்தி செய்யும் விவசாயிகளில், மாவட்ட அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 25,000 ரூபாய், 20,000 ரூபாய், 15,000 ரூபாய் பரிசு வழங்கவும் மாநில அளவில் மூன்று சிறந்த

பட்டு விவசாயிக்கு முறையே **1,00,000** ரூபாய், **75,000** ரூபாய், **50,000** ரூபாய் பரிசு வழங்கவும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி பரிசுத் தொகையாக **20.85** இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 8. அரசு விதைப் பண்ணைகளை வலுப்படுத்த உதவியளித்தல்

வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைகள் உற்பத்தி செய்ய ஆதார விதைப்பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்யும் ஐந்து ஆதார விதைப் பண்ணைகளை வலுப்படுத்த **2018–2019**ஆம் ஆண்டில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி **25** இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

## 1. நகர்புறக்கண்காட்சித்திடல்பராமரிப்பிற்கு உதவியளித்தல்

மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இரு இடங்களில் நகர்புறக் கண்காட்சித் திடல்கள் அமைக்கப்பட்டன. இந்நகர் புறக் கண்காட்சித் திடல்களை பராமரிப்பு செய்வதற்காக தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இவற்றை பராமரிக்க ஆண்டுத்தோறும் ஒரு நகர்புறக் கண்காட்சித் திடலுக்கு 20 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 2018–2019ஆம் ஆண்டு முதல் இரு நகர்புறக் கண்காட்சித் திடல்களை பராமரிக்க 40 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

## 2. கற்சிற்பங்களுக்கு புதிய உற்பத்தி நிலையங்கள் அமைக்க உதவியளித்தல்

தற்போது மாமல்லபுரத்தில் இயங்கி வரும் கற்சிற்பங்களுக்கான உற்பத்தி நிலையத்தில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால், பொதுப்பயன்பாட்டு மையங்களுடன் இணைந்து செயல்படத்தக்க வகையில் 75 இலட்சம் ரூபாய் செலவில் கற்சிற்பங்களுக்கான ஒரு புதிய உற்பத்தி நிலையத்தை ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

நிறுவுவதற்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 75 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

**3. மலேசியாவில் கண்காட்சி நடத்த நிதியுதவி அளித்தல்**

மலேசியாவில் வசிக்கும் தமிழ் மக்கள் பயன்பெறும் வகையிலும், தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் வகையிலும், பூம்புகார் நிறுவனம் இந்திய வர்த்தக மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து 2018–2019ஆம் ஆண்டில் மலேசியாவில் ஒரு கண்காட்சியை நடத்த உள்ளது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி மலேசியாவில் ஒரு கண்காட்சி நடத்த தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கு 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

# கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப்பொருட்கள்

### மானியக் கோரிக்கை எண் 18

**1. ரூபாய் 50.95 இலட்சம் செலவில் திருப்பூர், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கதரங்காடிகள் புனரமைக்கப்படும்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு கதர் மற்றும் கிராமப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதின் மூலம் அவைகளின் உற்பத்தியினை அதிகரித்து அதன் மூலம் உற்பத்தியாளர்களாகிய கிராமப்புற கைவினைஞர்களுக்கும், ஏழை எளிய தொழிலாளர்களுக்கும் கூடுதல் பலன் கிடைத்திடும் வகையில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருப்பூர், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கதரங்காடிகள் 50.95 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைக்கப்படும்.

**2. ரூபாய் 7 இலட்சம் செலவில் மதுரை மாவட்டத்தில் வாரிய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கோடாங்கிப்பட்டி அலகில் மராமத்து பணிகள் செய்து நவீன தையல் இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவப்படும்**

வாரியத்தில் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் பாலிவஸ்திரா இரகங்களை கொண்டு புதிய வடிவமைப்புடன்

கூடிய ஆயத்த ஆடைகளை தைத்து விற்பனை செய்திடும் பொருட்டு இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டத்தில் வாரிய கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கோடாங்கிப்பட்டி அலகில் உள்ள கட்டடத்தில் 7 இலட்சம் ரூபாய் செலவில் மராமத்து பணிகளை மேற்கொள்ளவும், நவீன தையல் இயந்திரங்கள், ஓவர் லாக் இயந்திரம், பாபின் இயந்திரம், பட்டன் தைக்கும் இயந்திரம், துணி வெட்டும் இயந்திரம் மற்றும் சலவை பெட்டி ஆகிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும்.

**3. ரூபாய் 4 இலட்சம் செலவில் மதுரை மாவட்டம், நாகமலை–புதுக்கோட்டை தச்சுக் கருமார அலகில் நவீன இயந்திரங்கள் நிறுவப்படும்**

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மதுரை மாவட்டத்தில் செயல்படும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு சொந்தமான நாகமலை–புதுக்கோட்டை, தச்சுக் கருமார அலகில் தளவாடங்களை நவீன முறையில் தயாரிக்கவும், உற்பத்தி பொருட்களின் தரத்தினை மேம்படுத்திடும் வகையிலும் 4 இலட்சம் ரூபாய் செலவில் நவீன இயந்திரங்கள் மற்றும் மின் இணைப்பு பொருத்தப்படும்.

**4. ரூபாய் 2 இலட்சம் செலவில் திருப்பூர் தச்சுக் கருமார அலகில் நவீன இயந்திரங்கள் நிறுவப்படும்**

இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, திருப்பூர் மாவட்டத்தில் செயல்படும் தமிழ்நாடு கதர் கிராமத்

தொழில் வாரியத்திற்கு சொந்தமான தச்சுக் கருமார அலகில் தளவாடங்களை நவீன முறையில் தயாரிக்கவும் மற்றும் உற்பத்தி பொருட்களின் தரத்தினை மேம்படுத்திடும் வகையிலும் 2 இலட்சம் ரூபாய் செலவில் நவீன இயந்திரங்கள் மற்றும் மின் இணைப்பு பொருத்தப்படும்.

**5. ரூபாய் 21.79 இலட்சம் செலவில், திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் செயல்பட்டு வந்த தேன் பதப்படுத்தும் அலகு மீண்டும் செயல்படுத்தப்படும்**

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் (ஜமுனாமரத்தூர்) தேனீ வளர்ப்போர் அதிக அளவில் உள்ளதாலும் அப்பகுதியில் தேன் சேகரிப்பு பெருமளவில் உள்ளதாலும் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 21.79 இலட்சம் ரூபாய் செலவில் அவ்வலகில் தற்போது உள்ள இயந்திரங்களை மறு சீரமைத்து, தேன் உற்பத்திக்கு தேவையான தேனீ குடும்பங்கள் கொள்முதல் செய்யப்படும்.

**6. ரூபாய் 3 இலட்சம் மதிப்பில் காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றம் குளியல் சோப்பு அலகில் சோப்பு முத்திரை பதிக்கும் இயந்திரம் நிறுவப்படும்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இயங்கி வரும் திருக்கழுக்குன்றம் குளியல் சோப்பு அலகில் சோப்புகளின் உற்பத்தி முடிவுறும் நிலையில் அவற்றின் அமைப்பு சீராக இருக்க ஏதுவாக முத்திரை பதிக்கும் இயந்திரத்தை இதய தெய்வம் மாண்புமிகு அம்மா

அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**7. கடலூர் மாவட்டம் பண்ருட்டி சோப்பு அலகில் ரூபாய் 2 இலட்சம் மதிப்பில் தானியங்கி சோப்பு மேலுறை மடிக்கும் இயந்திரம் நிறுவப்படும்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் இயங்கி வரும் பண்ருட்டி சலவை சோப்பு அலகில் உற்பத்தி செய்யப்படும் சோப்புகளை விரைவாகவும், நேர்த்தியாகவும் மடிப்பதற்கு ஏதுவாக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் தானியங்கி சோப்பு மேலுறை மடிக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யப்படும்.

**8. சென்னை பிரதான கதரங்காடியில் ரூபாய் 6 இலட்சம் மதிப்பில் தானியங்கி தேன் நிரப்பும் இயந்திரம் ஒன்று கொள்முதல் செய்து நிறுவப்படும்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் சென்னை பிரதான கதரங்காடியில் தற்போது விற்பனை செய்யப்படும் உதிரி தேனை இயந்திரம் மூலமாக நிரப்பி விற்பனை செய்யும் வகையில் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் தானியங்கி தேன் நிரப்பும் இயந்திரம் கொள்முதல் செய்யப்படும்.

**9. ரூபாய் 10 இலட்சம் செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் சமயபுரம் குளியல் சோப்பு அலகில் ஜெனரேட்டர் இயந்திரம் நிறுவப்படும்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் திருச்சி சமயபுரம் குளியல் சோப்பு அலகிற்கு, மின்தடை காலங்களில் சோப்புகளை தடையின்றி உற்பத்தி செய்திட ஏதுவாக இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 10 இலட்சம் ரூபாய் செலவில் ஜெனரேட்டர் இயந்திரம் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

**10. வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் 10 காலணி அலகுகளுக்கு தோல் தையல் இயந்திரங்கள் ரூபாய் 3 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் சித்தோடு, முத்தூர், குப்பிச்சிபாளையம், பாளையங்கோட்டை, திருச்சி, சேந்தமங்கலம், திண்டுக்கல், நாகர்கோவில், மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் செயல்படும் காலணி அலகுகளுக்கு, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தலா ஒரு இயந்திரம் வீதம் 10 புதிய தோல் தையல் இயந்திரங்கள் 3 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

# தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

## 1. ரூபாய் 1.65 இலட்சத்தில் கவர்களில் சுக்கு பவுடர் அடைக்கும் நவீன இயந்திரம் கொள்முதல் செய்யப்படும்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரிய கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மூலம் சுக்குக் காபி பவுடர் தயாரிக்கப்பட்டு கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தற்போது பொதுமக்களிடையே அதிகரித்து வரும் சுக்குக் காபி பவுடரின் தேவையினை கருத்தில் கொண்டு சுகாதாரமான முறையில் சுக்குக் காபி பவுடரை தானியங்கி நவீன இயந்திரத்தின் மூலம் கவர்களில் அடைக்க இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 1.65 இலட்சம் ரூபாய் செலவில் நவீன தானியங்கி இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும்.

## 2. ரூபாய் 3.50 இலட்சம் செலவில் பனை வெல்லம் உலர வைக்கும் நவீன தானியங்கி இயந்திரம் கொள்முதல் செய்யப்படும்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரிய கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும் பனை வெல்லத்தினை நவீன தானியங்கி இயந்திரத்தினை கொண்டு உலர வைத்திட இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 3.50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன தானியங்கி இயந்திரம் கொள்முதல் செய்யப்படும்.

### 3. பனை மற்றும் கதர் பொருட்களை விற்பனை செய்திட ரூபாய் 11 இலட்சம் மதிப்பில் மொபைல் வேன்கள் கொள்முதல் செய்யப்படும்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரிய கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் சுக்குக் காபி, பனை பொருட்கள் மற்றும் கதர் கிராமப் பொருட்களை முக்கிய இடங்களில் விற்பனை செய்திட இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இரண்டு மொபைல் வேன்கள் **11** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## இந்து சமய அறநிலையங்கள்

### மானியக் கோரிக்கை எண் 47

**1. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலில் மூன்று நிலை இராஜகோபுரம் ரூபாய் 52 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியில் அமைக்கப்படும்.

**2. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், நெடுங்குளம் அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 33 இலட்சம் மதிப்பீட்டில் முன் மண்டபம், மதிற்சுவர் மற்றும் புனரமைப்புப் பணிகள் திருக்கோயில் நிதியில் மேற்கொள்ளப்படும்.

**3. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், மேலையூர், பூம்புகார் கல்லூரியில் ரூபாய் 3 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி மேம்பாட்டு நிதியில் 24 வகுப்பறைகள் கட்டப்படும்.

## 4. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

கரூர் மாவட்டம், வெண்ணெய்மலை அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், அம்மாபேட்டை, சன்னியாசிகுண்டு, அருள்மிகு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மலை அடிவாரத்தில் ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயிலில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும், திருமண மண்டபங்கள் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம், மருத்துவம்பாடி, அருள்மிகு சீதாபட்டாபிராமர் திருக்கோயிலில் ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கல்யாண திருமண மண்டபம் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

## 5. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலால் நடத்தப்படும் ஸ்ரீ பர்வதவர்த்தினி அம்மன் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியில் கலையரங்கம் கட்டப்படும்.

## 6. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

வேலூர் மாவட்டம், ஆற்காடு வட்டம், திமிரி, குமரகிரி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு

மலைப்பாதை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி / பொது நலநிதியில் மேற்கொள்ளப்படும்.

**7. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், வெண்குன்றம், அருள்மிகு தவளகிரீஸ்வரர் திருக்கோயில் செல்வதற்கான மலையில் ரூபாய் 64 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநல நிதியில் படிக்கட்டுகள் அமைக்கப்படும்.

**8. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், கூழமந்தல், அருள்மிகு பேசும் பெருமாள் திருக்கோயிலில் இளைப்பாறும் மண்டபம் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி / பொதுநலநிதியில் கட்டப்படும்.

**9. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம் தண்டரை, சேர்ப்பாக்கம், அருள்மிகு மன்னார்சாமி மற்றும் பச்சையம்மன் திருக்கோயிலில் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் 5 பக்தர்கள் தங்கும் அறைகள் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

**10. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், புதுப்பாளையம் அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு

புதிய மரத்தேர் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம் மற்றும் நகர் அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் சுவாமி திருத்தேர் ரூபாய் 98 இலட்சம் மதிப்பீட்டிலும் விநாயகர் திருத்தேர் ரூபாய் 16.50 இலட்சம் மதிப்பீட்டிலும் வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், வடச்சேரி, அருள்மிகு சென்னகேசவப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், சிறுபுலியூர், அருள்மிகு கிருபாசமுத்திரப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், குள்ளம்பாளையம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும் புதிய திருத்தேர்கள் திருக்கோயில் நிதி/தேர்திருப்பணி நிதியில் செய்யப்படும்.

## 11. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், பெருநகர், அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலில் திருத்தேர் கொட்டகை ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி / பொது நல நிதியில் அமைக்கப்படும்.

## 12. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி, கோயில்பதாகை அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயிலின் திருக்குளம் ரூபாய் 32 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி / பொது நலநிதியில் செப்பனிடப்படும்.

## 13. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் கழிவறை, குளியலறைகள் ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயிலில் கழிவறை மற்றும் குளியலறை ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், தமராக்கி அருள்மிகு கலியுக வரத அய்யனார் திருக்கோயிலில் ரூபாய் 7 இலட்சம் மதிப்பீட்டிலும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் திருக்கோயில் நிதியில் செய்யப்படும்.

## 14. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், தேவனாம்பாளையம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் முன் மண்டபம் மற்றும் சுற்றுச் சுவர் ரூபாய் 27 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இடைக்கோடு அருள்மிகு பேரூர் மகாதேவர் திருக்கோயிலில் சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை ரூபாய் 44 இலட்சம் மதிப்பீட்டிலும் திருக்கோயில் நிதி / பொது நலநிதியில் அமைக்கப்படும்.

## 15. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகமும், திருவண்ணாமலை மாவட்டம்,

செய்யாறு வட்டம், முனுகப்பட்டு அருள்மிகு பச்சையம்மன் திருக்கோயிலில் ரூபாய் **64** இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் மற்றும் பக்தர்கள் தங்கும் அறைகள் ஆகியவை திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

**16. இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி**

சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், தமராக்கி, அருள்மிகு ஏழைக்காத்தம்மன் திருக்கோயில் சுற்றுச்சுவர் பாதுகாப்பு கருதி ரூபாய் **4** இலட்சம் மதிப்பீட்டில் பொது நலநிதியில் உயர்த்தப்படும்.

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண் 9

### 1. புதிதாக 5 கல்லூரி விடுதிகள் துவக்குதல்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் நலனுக்காக, ஒரு விடுதியில் 100 மாணவ / மாணவியர் தங்கிப் பயிலும் வகையில் 5 கல்லூரி விடுதிகள் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக துவக்கப்படும்.

### 2. 6 பள்ளி விடுதிகளை கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்துதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் நலனுக்காக மாநிலம் முழுவதும் 1,343 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் 1,112 பள்ளி விடுதிகள் மற்றும் 231 கல்லூரி விடுதிகள் ஆகும். 6 பள்ளி விடுதிகளை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கல்லூரி விடுதிகளாக 4 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

**3. விடுதிகளில் தங்கி 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி அளித்தல்**

விடுதிகளில் தங்கி 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2 கோடியே 51 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் செலவில் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கில பேச்சாற்றல் வளர்க்கும் பயிற்சி அளிக்கப்படும். இதனால் 22,852 மாணவ, மாணவியர் பயன் பெறுவர்.

**4. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்**

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் மனத்திறன் மற்றும் உடல் திறன் வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு 292 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 39 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் விளையாட்டுப் பொருட்கள் வழங்கப்படும்.

**5. அனைத்து மாவட்டங்களிலும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைத்தல்**

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட

தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித்தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லிம் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதேபோன்று, ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான கிறித்துவ மகளிருக்கான வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மாவட்ட ஆட்சித்தலைவர்களை தலைவராகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் உருவாக்கிட ஒரு மாவட்டத்திற்கு 1 இலட்சம் ரூபாய் என மொத்தம் 32 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. ஜெருசேலம் புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்**

ஜெருசேலம் புனிதப் பயணம் செல்பவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் 2011–2012ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டொன்றுக்கு 500 பயனாளிகளுக்கு ஒரு பயனாளிக்கு தலா 20,000 ரூபாய் வீதம் 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

அதிக அளவில் கிறித்துவர்கள் ஜெருசேலம் புனிதப் பயணம் மேற்கொள்ள ஏதுவாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஆண்டொன்றுக்கான புனிதப் பயணம் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கை 500லிருந்து 600ஆக உயர்த்தப்படும். இதில் 50 இடங்கள்

கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு தற்போது அரசால் வழங்கப்பட்டு வரும் ஆண்டு நிருவாக மானியத்தை உயர்த்தி வழங்குதல்**

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு நிருவாக செலவினங்களுக்காக நிருவாக மானியமாக 30 இலட்சம் ரூபாயினை தமிழக அரசு வழங்கி வருகிறது. குழுவின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஆண்டு நிருவாக மானியம் ரூபாய் 30 இலட்சத்திலிருந்து ரூபாய் 50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**8. தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், தையல் இயந்திரங்களில் கூடுதலாக மின்மோட்டார் பொருத்தி வழங்குதல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பை சார்ந்த மக்களின் பொருளாதார மேம்பாட்டு முன்னேற்றத்திற்காக கால்களால் இயக்கப்படும் தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம் ஆண்டுதோறும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இத்திட்டத்தினை மேம்படுத்தி தையல் இயந்திரங்களில் மின்மோட்டார் பொருத்தி 3,000 எண்ணிக்கையிலான தையல் இயந்திரங்கள் வழங்கப்படும். இதற்காக கூடுதலாக 58 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**9. கல்லூரி விடுதிகளுக்கு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டு புத்தகங்கள் வழங்குதல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் UPSC, TNPSC, TRB, RRB போன்ற போட்டித் தேர்வுகள் குறித்தும், அவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெறும் வகையில் தேர்வுகளுக்கு தயாராகும் பொருட்டும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் ரூ.25,000 மதிப்பிலான புத்தகங்கள் வீதம் மொத்தமுள்ள 231 கல்லூரி விடுதிகளுக்கு 57 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில் புத்தகங்கள் வழங்கப்படும்.

**10. மாணவியர் விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்**

விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு சுற்றுச்சுவர் இல்லாத 21 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவியர் விடுதிகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

4 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

**11. விடுதிகளுக்கு சமையலர் பணியிடம் வழங்குதல்**

விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு சமையல் செய்திட விதிகளின்படி இரண்டு சமையலர் பணியிடங்கள் தேவைப்படுகிறது. 209 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு ஒரு சமையலர் பணியிடம் மட்டுமே ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 209 விடுதிகளுக்கும் விதிகளின்படி, கூடுதலாக ஒரு சமையலர் பணியிடம் 4 கோடியே 43 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் செலவில் ஒப்பளிப்பு செய்யப்படும்.

**12. 5 வருடங்களுக்கு மேற்பட்டு பயன்பாட்டில் உள்ள 99 கல்லூரி விடுதிகளுக்கு அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வழங்கப்படும் தொகையினை உயர்த்தி வழங்குதல்**

5 வருடங்களுக்கு முன்னர் சொந்தக் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ள 99 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் கல்லூரி விடுதிகளுக்கு அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வழங்கப்படும் தொகை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 15,000 ரூபாயிலிருந்து

20,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக கூடுதலாக 4 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**13. விடுதிகளுக்கு வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள் வழங்குதல்**

இத்துறையின் கீழ் செயல்படும் 1,343 விடுதிகளில் 1,081 விடுதிகளுக்கு ஏற்கனவே வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 262 விடுதிகளுக்கு வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 262 விடுதிகளுக்கு 41 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள் வழங்கப்படும்.

**14. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்குதல்**

அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உணவு மானியத் தொகை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, நபர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு 650 ரூபாயிலிருந்து

900 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக கூடுதலாக 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**15. சேப்பாக்கத்தில் உள்ள கலசமஹால் பாரம்பரிய கட்டடத்தில் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலகம் அமைய ஒதுக்கப்பட்ட இடத்தில் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல்**

சிறுபான்மையினர் நலத்துறைக்கும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்திற்கும் ஒருங்கே சேப்பாக்கத்தில் உள்ள கலசமஹால் பாரம்பரிய கட்டடத்தின் முதல் தளத்தில் 4,675 சதுர அடி காலியிடம் அரசால் ஒதுக்கீடு செய்து தரப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழக அலுவலகங்கள் செயல்படுவதற்கான உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்வதற்காக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 70 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

**16. பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் / சிறுபான்மையினர் நல இயக்ககங்களுக்கு துணை இயக்குநர் பணியிடம் ஒன்று வீதம் 3 பணியிடங்கள் உருவாக்குதல்**

பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சிறுபான்மையினர் நலன் ஆகிய 3 இயக்ககங்களுக்கும் தலா ஒரு துணை இயக்குநர் பணியிடம் வீதம் 3 துணை இயக்குநர் பணியிடங்கள் மாண்புமிகு இதய

தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 25 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

### 17. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் இயங்கப்பெறும் சிறுபான்மை பிரிவுகளுக்கு இரும்பு அலமாரி வழங்குதல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் இயங்கும் சிறுபான்மை பிரிவில் கையாளப்படும் ஆவணங்களை பாதுகாக்கும் பொருட்டு, ஒரு மாவட்ட அலுவலக சிறுபான்மையினர் பிரிவிற்கு தலா ஒரு இரும்பு அலமாரி வீதம் 32 மாவட்ட அலுவலக சிறுபான்மையினர் பிரிவுகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மொத்தம் 4 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் செலவில் இரும்பு அலமாரிகள் வழங்கப்படும்.

### 18. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் இயங்கப்பெறும் சிறுபான்மையினர் பிரிவிற்கு தலா ஒரு உதவியாளர் பணியிடம் தோற்றுவித்தல் மற்றும் கணினி, உபகரணங்கள் வழங்குதல்

32 மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் உள்ள சிறுபான்மையினர் பிரிவிற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி,

தலா ஒரு உதவியாளர் பணியிடம் என 32 உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும் மற்றும் கணினி, பிரிண்டர், அறைகலன்கள் ஆகியன வழங்கப்படும். இதற்காக 1 கோடியே 14 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**19. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் உள்ள கணினி, நகலிகள் (Copiers), பிரிண்டர்கள் மற்றும் தொடர்புடைய சாதனங்களை மாற்றியமைத்தல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககங்களில் உள்ள கணினி, நகலிகள் (Copiers), பிரிண்டர்கள் மற்றும் தொடர்புடைய சாதனங்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 18 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் மாற்றியமைக்கப்படும்.

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

## மானியக் கோரிக்கை எண் 49

**1. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.1,500 இலட்சம் செலவில் விடுதி வசதிகள் அமைத்தல்.**

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்களின் சேர்க்கை அதிகரித்து வருகிறது. ஆராய்ச்சி படிப்பில் பயிலும் மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிப்பது அத்தியாவசியமாக உள்ளது. தற்போதுள்ள விடுதி வசதிகள் போதுமானதாக இல்லை. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விடுதி வசதிகள், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1,500 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**2. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.160 இலட்சம் செலவில் பாரம்பரிய விளையாட்டுகளான களரிபயட்டு மற்றும் சிலம்பாட்டத்திற்கான பயிற்சி மையம் அமைத்தல்.**

நமது பாரம்பரிய தற்காப்பு கலைகள் உடல் நலம் மற்றும் உடற்தகுதியினை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எனவே, நமது பாரம்பரிய தற்காப்பு கலைகளான களரிபயட்டு

மற்றும் சிலம்பாட்டக் கலையை அழிவிலிருந்து பாதுகாக்கவும் மற்றும் வருங்காலத்திற்கான ஆரோக்கியமான குடிமக்களை உருவாக்குவதற்கும் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய விளையாட்டுகளான களரிபயட்டு மற்றும் சிலம்பாட்டத்திற்கான பயிற்சி மையம், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.160 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**3. விளையாட்டுப் போட்டிகள் குறித்த தகவல்கள் மற்றும் செயல்பாடுகளை இணையம் மற்றும் கைப்பேசி மூலம் பெறுவதற்கும், பதிவு செய்வதற்கும் ஏதுவாக மென்பொருளை ரூபாய் 33 இலட்சம் செலவில் உருவாக்குதல்**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் ஆண்டுதோறும் நடத்தப்படும் மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இந்தப் போட்டிகள் பற்றிய தகவல்கள் மற்றும் செயல்பாடுகளை அனைத்து பிரிவினரும் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூபாய் **33** இலட்சம் செலவில் மென்பொருள் உருவாக்கப்படும்.

**4. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் ரூ.1,000 இலட்சம் செலவில் மேசைப்பந்து விளையாட்டிற்கான முதன்மை நிலை மையம் அமைத்தல்**

சர்வதேச அளவில் மேசைப்பந்து விளையாட்டுப் போட்டியில் தமிழக வீரர்கள் அதிக அளவில் பங்கு பெற்று பதக்கங்கள் பெறுகின்றனர். அவர்கள் பயன்பெறும் வகையில் ஒரு மேசைப்பந்து அகாடமி தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.1,000 இலட்சம் செலவில் துவக்கப்படும்.

**5. தேசிய மாணவர் படை மாணவர்களின் உபயோகத்திற்கு ரூ.20 இலட்சம் செலவில் நகரக்கூடிய பசுமைக் கழிவறைகள் அமைத்தல்**

தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய மாணவர் படை முகாம்களின் போது, குறிப்பாக கிராமப்புறங்களில் நடைபெறும் முகாம்களில் கழிவறை வசதி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஒரு பசுமைக் கழிவறைக்கு (Bio-Toilet) ரூ.1 இலட்சம் வீதம் 20 நகரக் கூடிய பசுமைக் கழிவறைகள், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.20 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**6. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியியலை சிறந்த முறையில் போதிக்க, பரிசோதிக்க மற்றும் பயிற்சி அளிப்பதற்கு ரூ.22.05 இலட்சம் செலவில் கற்பிக்கும் கலை சோதனைக் கூடம் அமைத்தல்.**

பாரம்பரிய வழிமுறைகளை தவிர்த்து நவீன கல்விக்கான தேவைகளை பூர்த்தி செய்ய, அதிக அளவில் அறிவியல் தொழில்நுட்ப ஆதரவு தேவை. எனவே, தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வியியலை சிறந்த முறையில் போதிக்க, பரிசோதிக்க மற்றும் பயிற்சி அளிப்பதற்கு கற்பிக்கும் கலை சோதனைக் கூடம், இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.22.05 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**7. அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியின் தேசிய மாணவர் படை பயிற்சி உள்கட்டமைப்பை நவீனப்படுத்துவதற்காக ரூ.3 இலட்சம் செலவில் .22 துப்பாக்கி சுடுதல் பாவிப்பு கொள்முதல் செய்தல்.**

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி நகரில் செயல்பட்டுவரும் சைனிக் பள்ளியின் முதன்மை நோக்கமானது, மாணவர்களை முப்படைகளில் சேர்வதற்கு உத்வேகபடுத்துவதேயாகும். இப்பள்ளியில் பயிலும் 676 மாணவர்களும் தேசிய மாணவர் படையில் சேர்வது கட்டாயமானது. எனவே, அமராவதி நகரிலுள்ள சைனிக்

பள்ளியின் தேசிய மாணவர் படையினரின் துப்பாக்கி சுடுதல் பயிற்சிக்காக, இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ரூ.3 இலட்சம் செலவில் 22 துப்பாக்கி சுடுதல் பாவிப்பு கொள்முதல் செய்யப்படும்.

சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு அமைதி நிலவும் நாட்டில், தொழில் முதலீடுகள் பெருகி, வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டு, வேலைவாய்ப்புகள் அதிகரித்து, மக்களிடையே மகிழ்ச்சி பொங்கும் நிலை ஏற்படும். எல்லோரும் எல்லாமும் பெறும் வாய்ப்பு ஏற்படும். மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் நீங்கும். சமூக நீதி நிலைநாட்டப்படும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **எடப்பாடி K.பழனிசாமி** அவர்கள்

